மகுடம்

# உயிரோடு நானாக

-கதிர்.திருச்செல்வம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரோடு நானாக...

(நாவல்)

கதிர்.திருச்செல்வம்

மகுடம்

இல.90, பார்வீதி,

மட்டக்களப்பு 30000

இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகுடம் பதிப்பக வெளியீடு - 63**

ISBN : 978-624-5849-21-5

● நூல் - உயிரோடு நானாக - நாவல் ● ஆசிரியர் - கதிர். திருச்செல்வம் ● உரிமை - ஆசிரியருக்கு ● முதல் பதிப்பு - ஆவணி - 2022 ● அளவு - 1/8 ● பக்கங்கள்- 216 ● வெளியீடு - மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 ● தொ.பே. இல. 0774338878 ● வடிவமைப்பு - த.சங்கர் ● அச்சு - வணசிங்க அச்சகம், மட்டக்களப்பு. ● விலை - 750/=

● Book - Uyirodu Naanaaka - Noval ● Author - Kathir Thiruchelvam ● © Author ● First Edition - August - 2022 ● Size - 1/8 ● Pages - 216 ● Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. ● Ph.No. 0774338878 ● Book & Cover Design T. Shankar ● email - magudammichael@gmail.com ● Printing - Wanasinghe Printers, Batticaloa ● Price - 750/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மகுடம் 63வது வெளியீடாக திரு. கதிர் திருச்செல்வம் அவர்களின் 'உயிரோடு நானாக' என்ற இந்நாவலை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

திரு. கதிர் திருச்செல்வம் அவர்கள் திருகோணமலை தம்பலகமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். மிக அண்மைக் காலமாகவே எழுத்துத்துறையில் ஈடுபட்டு வருபவர். குறுகிய காலமேயானாலும் அவரது இரண்டு நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன.

இவரது 50 குறுங்கதைகளின் தொகுப்பான 'உயரப்பார்' 2019லும், 2021ல் பத்து சிறுகதைகளின் தொகுப்பான 'உனக்குள் நீயும்' வெளிவந்தது. இன்று இவரது நாவல் வெளிவருகின்றது.

கலை இலக்கியத்தில் நாவல் என்ற வகைப்பாட்டிற்குள் ஈழத்து நாவல்கள் என எடுத்துக் கொண்டால் திருகோணமலையின் பங்களிப்பு பாரியதும் காத்திரமானதுமாகும். அதிக நாவல்களை ஈழத் தமிழ் நாவல் உலகிற்கு தந்த பெண் எழுத்தாளரான திருமதி. பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கனையும், நாவல் பிதாமகனான திரு. வ.அ. இராசரத்தினத்தினையும், திரு. க. அருள் சுப்பிரமணியத்தையும் கொண்ட மண். ஏன் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பான முதல் நாவலான கோவிந்தனின் 'புதியதோர் உலகம்' என்ற நாவலும் இந்த மண்ணில் இருந்துதான் உருப்பெற்றது.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற் போன்று ஈழத்தின் முதல் சரித்திர நாவல் எழுந்ததும் திருகோணமலை மண்ணில் இருந்துதான்.

இதன் நீட்சியாக இன்று வெளிவரும் 'உயிரோடு நானாக' என்ற நாவலும் எமது திருகோணமலை மண்ணின் தம்பலகாமத்து தமிழ் பிரதேசத்தின் மண்வாசனையையும், தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நகர்வுகளையும் உள்வாங்கி படைக்கப்பட்டுள்ளது.

தமிழ் பற்றாளராகிய கதிர் திருச்செல்வம் தனது நாவலிலும் பாத்திர வார்ப்பிலும் தமிழ் பெயர்களைச் சூட்டியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்றைய சூழலில் தமிழ் பிரதேசங்களை எமது அரசு கபளீகரம் செய்து வருகையில் தமிழ் மக்களாகிய நாமே எமது குழந்தைகளுக்கு அந்நிய பெயர்களைச் சூடி எமது தமிழ் பெயர்களை நாமே மெல்ல மெல்ல அழித்து வருகிறோம். ஆனால் இந்த நாவலில் நாம் சந்திக்கும் பாத்திரங்கள் அழகிய தமிழ் பெயர்களை தாங்கி நடமாடுவது ஓர் புதிய திருப்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2021ல் திருகோணமலையைச் சேர்ந்த வி.மைக்கல் கொலினின் 'வீணையடி நீ எனக்கு' என்ற நாவலும், 2022ல் கதிர் திருச்செல்வத்தின் 'உயிரோடு நானாகவும்' வெளிவருவது மீண்டும் திருகோணமலை மண் மீண்டும் நாவல் துறையில் புதிய சரித்திரத்தை ஆரம்பித்து வைத்துள்ளதான ஒரு முன் முயற்சியாக கொள்ளலாம்.

கதிர் திருச்செல்வம் தொடர்ந்து ஆக்க இலக்கியத்தில் ஈடுபட வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

அன்புடன்

**- மகுடம் வி.மைக்கல் கொலின்**

(ஆசிரியர் - மகுடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்செல்வம்
# ஒரு புலமைத்துவ மரபின் வாரிசு

தமிழில் நாவல் என நாம் பேசுகின்றபோது அதன் வயது நூற்றி யைம்பது ஆண்டுகளை கடந்து நிற்கிறது. ஈழத்திலேயே முதல் தமிழ் நாவல் தோன்றியதாக சில குறிப்புகள் கூறுகின்றன. அதிலும் திருகோணமலையிலேயே முதல் தமிழ் நாவல் உருவாகியது என்ற கதையும் உண்டு. வரலாற்று நாவல் களின் தொடக்கம் திருகோணமலை சரவணமுத்துப்பிள்ளையின் மோகனாங்கி என தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் முன் மொழிந்துள்ளனர்.

ஈழத்து தமிழ் நாவல் இலக்கியத்துக்கு திருகோணமலையின் பங்கு குறிப்பிடத் தக்க தனித்துவ பண்புகளைக்கொண்டது அந்த வகையில் இலக்கிய கலாநிதி வ.அ.இராசரெத்தினம், கலாநிதி கேணிப்பித்தன் ச. அருளானந்தம், தா.பி.சுப்பிரமணியம்.ந.பாலேஸ்வரி க. அருள்சுப்பிரமணியம் என பலரை நாம் குறிப்பிட முடியும்.

இன்று நம் முன் வந்திருக்கும் நாவல் "உயிரோடு நானாக" தம்பலகாமம் கதிர்.திருச்செல்வம் எழுதியிருக்கிறார்.

தம்பலகாமத்தில் பெரும் புலவர்கள் இருந்தமை பற்றி செவி வழிச் செய்திகள் நிறையவே உள்ளன. திருச்செல்வமும் ஒரு புலமைத்துவ மரபின் வாரிசே அவரது இரண்டு நூல்கள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. திருச்செல்வம் கவிதை, சிறுகதை சிறுவர் கதைகள் என ஒரு இலக்கியப் படைப்பாளியாக அறியப் பட்டவர். இன்று நாவல் துறையிலும் காலடி எடுத்து வைத்திருக்கிறார். இது ஒரு கனதியான காலடி என்றுதான் நான் சொல்வேன்.

கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலான போராட்ட யுத்தகாலத்தை பிரதிபலிக்கும் படைப்புகள் அண்மைக்காலத்தில் நிலத்திலும் புலத்திலும் பெருமளவில் வெளிவந்துள்ளன . நூற்றுக்கு மேற்பட்டவர்கள் யுத்தகாலத்தை கவிதைகளில் பிரதிபலித்துள்ளார்கள்.

சிறுகதைகளும் குறிப்பிடத்தக்க வகையில் வெளிவந்துள்ளன. நாவல்கள் பெருமளவில் இல்லையென்றாலும் அண்மைக் காலத்தில் பலர் யுத்தகாலத்தை அதன் அவலங்களை தங்கள் நாவல்களில் வெளிப்படுத்தி யுள்ளனர்.

போராட்ட காலத்தை அதன் ஆரம்ப நாட்களை நமக்கு சொல்லிய நாவலாக அருளரின் "லங்கா ராணியை சொல்ல முடியும். தொடர்ந்து வந்த கோவிந்தனின் "புதியதோர் உலகம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணா கவியழகன், கர்ணன், தீபச்செல்வன், தமிழ்க்கவி முதலான பலரின் அண்மைய எழுத்துக்கள் வட பகுதியில் யுத்தகாலம் தந்த வடுக்களை நாவல்கள் மூலம் வெளிப்படுத்தி நம் வாசிப்பை புதிய களத்துக்கு கொண்டு சென்றன. கிழக்கு மாகாணத்தை பிரதிபலித்த படைப்புகள் மிக அரிதாகவே வெளி வந்துள்ளன .அதுவும் திருகோணமலை அதன் இதயமாகக் கருதப்படும் கிராமங்கள் யுத்த காலத்தில் ஏற்பட்ட வலிகளை சொல்லி மாளாது.குறிப்பாக தம்பலகாமம், மூதூர்,சேனையூர் , கட்டைபறிச்சான், பள்ளிக்குடியிருப்பு, ஆலங்கேணி என அவலங்கள் காலடியில் அழிவின் துயரமாய். இந்த நாவலில் சொல்லப்படும் கிராமங்களின் காலத் துயர் கதைகளாய் எம்முள் புதிய அனுபவங்களைக் கொண்டு வந்து சேர்க்கிறது.

நாவல் இரண்டு தளங்களில் பயணிக்கிறது ஒரே கதை ஆனால் இரு திரைப்படத்தைப் போல மாறி மாறி காட்சிகள் விரிகின்றன. இரண்டு தளங்களும் ஒன்றொடு ஒன்று தொடர்பு படுவது கதை சொல்லும் உத்தியின் அழகியலை பிரதிபலித்து இருப்பது இந்த நாவலின் சிறப்பு என்பேன்.

கதையில் வந்த அனேகமான பாத்திரங்கள் என்னுடனும் தொடர்பு பட்டன கற்பனை அல்லாத உண்மைப் பாத்திரங்களின் கட்டமைவில் கதை நகர்வது உயிர்ப்புள்ளதாக நம் உணர்வில் கலந்து நினைவின் நீள் திரையாய் விரிகிறது.

நம் கிராம பேச்சு வழக்கு பழக்க வழக்கங்கள் கதை கூறலில் இயல்பாகவே வந்து போகின்றன.எழுத வேண்டும் என்பதற்கான ஒரு கட்டாய வலிந்த தேடுதலாக இல்லாமல் கதாசிரியர் தான் பார்த்த அனுபவித்த விடயங்களை ஒரு நவீன நாவலுக்குரிய பண்பு விலகாமல் சொல்லிச் செல்கிறார்.

நாவலை வாசித்து முடிக்கும் போது கதை மாந்தர்கள் நம்மில் ஒருவராக கலந்து விடுவது என்பது நாவல் சொல்ல வந்த கதையின் நோக்கத்தை நிறைவு செய்கிறது என்றே சொல்லலாம்.

வாழ்த்துகள்
மருமகனும் எழுத்தாளனுமாகிய
கதிர்.திருச்செல்வத்துக்கு

**பேரா.பால சுகுமார்,**
சேனையூர்
தலைவர், தமிழ்த் துறை
கிரிபின் கொலிச் லண்டன்
(மேனாள் புல முதன்மையர் கிழக்குப் பல்கலைக்கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்துவமான
# தமிழ் நடையைக் கையாள்பவர் திருச்செல்வம்

ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிற்கு மேலுமொரு புதியவரவு 'உயிரோடு நானாக...'. இது சமூக ஆர்வலனும் தமிழ்ப் பற்றாளனுமாகிய எனது நண்பன் கதிர்.திருச்செல்வத்தின் மூன்றாம் பிரசவம். ஈழத்தவர் அறிந்திருக்க வேண்டிய, தம்பலகமம் ஆதிகோணேஸ்வரர் ஆலயச்சூழல்சார் வரலாற்றுத் தகவல்களையும் தம்பலகமத்தாரின் வேளாண்மையை மையமாகக் கொண்ட விவசாயத் தொழிற்துறைசார் அறிவியலையும் அவரது அரும்பெரும் வாழ்வியலையும் இவற்றோடு தொடர்புற்றுச் செழித்துச் சிதைந்துபோன ஈழ விடுதலைப் போராட்டத்தின் எழுச்சி நிரலையும் தெட்டத்தெளிவாக எடுத்துரைக்கூற முனைந்த முயற்சியின் பயனாகவே இந்நாவல் மலர்ந்துள்ளது.

புனைகதைகளுக்குப் பெயர்போன திருக்கோணமலை மாவட்டத்தின் அண்மைய வீழ்ச்சியைக் கருத்திற்கொண்டு, அதனை மீளக்கட்டமைக்கும் முயற்சியைக் காத்திரமாக முன்னெடுத்துவருபவர் கதிர்.திருச்செல்வம். அவரது முயற்சி வரவேற்கத்தக்கதோடு பாராட்டுக்கும் உரியது. இயல்பான அவரது இலக்கிய தாகம் அவரைத் தொடர்ந்தேர்ச்சியாக இயங்கச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆகையினால், அவரை ஆற்றுப்படுத்தி அவரது முழுமையான ஆளுமையை வெளிக்கொண்டு வருவதற்கான அரிய முயற்சியை அறிஞர் பெருமக்கள் செய்யவேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகவுமுள்ளது.

தமக்கெனவொரு தனித்துவமான தமிழ்நடையைக் கையாண்டு கதைபுனையும் ஆற்றலுடையோர் பலர் ஈழத்துப் புனைகதைத் துறைக்குப் பங்காற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் தனித்துவமான தமிழ்நடையொன்றைக் கையாண்டு தமிழ்ப் புனைகதைத் துறையில் தடம்பதிக்க முனையுமொரு புதிய வரவாகக் கதிர்.திருச்செல்வம் விளங்குகிறார். அதற்கு அவரது முன்னைய இரு படைப்புகள் உட்பட 'உயிரோடு நானாக...' எனும் இப்படைப்பும் தக்க சான்றாக அமைந்துள்ளன.

கதிர்.திருச்செல்வம் வழமையாகத் தனது படைப்புகளில் கையாள்வதைப் போலவே இப்படைப்பிலும் தனது பாத்திரங்களைப் படைத்துப் பணியாற்ற விட்டுள்ளார். இக்கதையில் அவர் கையாண்டிருக்கும் 'சின்னத்தம்பி',



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மகிழ்செனனி', 'ஆபரன்', 'உத்தமன்', 'மாதுளன்', 'கதிரழகி', 'சங்கெழில்' முதலான பெயர்கள், மேலும் அவர் கையாண்டுள்ள சில தூய தமிழ்ச் சொற்கள் ஆகியன அவர் தன் இனத்தின் மீதும் மொழியின் மீதும் வைத்திருக்கும் அவரது தீராக் காதலைப் புலப்படுத்தி நிற்கின்றன.

திருக்கோணமலை மாவட்டப் பேச்சுத் தமிழை ஆய்வுசெய்ய முனையும் ஆய்வாளருக்கு ஓர் உசாத்துணையாக அமையும் வண்ணம் தம்பலகமத்தை மையப்படுத்தி அவர் கையாண்டிருக்கும் விவசாயத் தொழிற்துறைச் சொற்கள் அடங்கிய பேச்சுவழக்குச் சொற்கள் வெகு யதார்த்தமானவை. 'ஜாடி', 'உமை', 'யாவாரி', 'கிட்டி', 'பதக்கடை', 'காலாவுதல்', 'கன்னாவரம்', 'வரவை, 'கதியால்', 'கடப்படி', 'ஒட்டு', 'உப்பட்டி', 'மாவக்கை', 'கோலத்து', 'அரக்குக் கதிர்', 'மால்', 'மட்டக் கம்பு', 'பொலி', 'அவிரி', வைக்கல்புரி' என அவர் கையாண்டிருக்கும் பேச்சு வழக்குச் சொற்கள் அவர் பிறந்து வளர்ந்த பிரதேசத்தின் மீதான ஆழமான பற்றையும் அவரது ஆழமான அவதானிப்பியல்பையும் புலப்படுத்தி நிற்கின்றன.

அதேபோன்று, திருக்கோணமலை மாவட்ட நாட்டாரியல் குறித்த ஆய்வினைச் செய்ய முனைவோருக்கும் இந்நாவல் ஒரு சிறந்த உசாத்துணையாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. நாட்டார் தொழில்முறை, உணவுமுறை, நம்பிக்கைகள், சடங்குகள் - சம்பிரதாயங்கள், அவரது நடை - உடை - பாவனை சார்ந்த பண்பாட்டுக் கோலங்கள் முதலானவற்றை இரசனை யோடும் ஒலிக்குறிப்புக்களோடும் முன்வைக்கும் பாங்கு மிகுந்த அவதானிப்புக் குரியது. பழஞ் சோறுண்ணல், மட்டித் தேங்காய்ப் பால் பொரியல், முற்றத்தில் பாலும் பழமும் பிசைந்த சோறுண்ணல், மீன் பிடிக்கத் தூண்டில் கட்டுதல், மீன் பிடித்தல், உழவு, விதைப்பு, அறுவடை, சூடு முதலானவற்றோடு தொடர்புடைய விவரணங்களைத் தரும்போது, புனைவுகளுக்கு அப்பால் யதார்த்தத்தையும் உண்மைகளையும் முன்னிலைப்படுத்திக் கதையை நகர்த்திச் செல்லும் அவரது போக்கு ஈர்ப்புக்குரியது.

இயல்பாகவே கதிர்.திருச்செல்வம் ஒரு புரட்சிகர மனநிலை கொண்ட மனிதாபிமானி. போலி ஆசாரங்களையும் மூடநம்பிக்கைகளையும் தகர்த்தெறியும் சிந்தனைத்தளத்தில் இயங்குபவர். மாற்றுச் சிந்தனைகளை மாற்றுரையாடல்கள் முன்வைக்கும் அவரது நடை இயல்பூக்கம் சார்ந்தது. இவ்வடிப்படை அம்சங்களை அவரது கதையோட்டத்தின் அடிநாதமாகத் தரிசிக்க முடிகிறது. ஈழ விடுதலைப் போராட்டத்தின் எழுச்சி நிரல் குறித்து உரையாடும் பகுதிகள் அவரது இயல்பூக்கத்ததைச் சிறப்பாகப் புலப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கின்றன. தமிழர் விடுதலைப் போராட்டத்தின் எழுச்சி இலங்கைத் திருநாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் அடிப்படைகளின் முரனிலைகளால் விளைந்தது என்பதைப்பல இடங்களிலும் அவர் அழுத்தமாகப் பதிவுசெய்ய முனைந்திருக் கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக, தனது படைப்பால் பல்வகையிலும் கவனஈர்ப்புப் பெறும் கதிர். திருச்செல்வத்தின் பழைமையைப் புதுமையால் அணுகும் போக்கும் எள்ளல்சுவையோடு பாத்திரங்களின் பரவலை முன்வைக்கும் நோக்கும் வாசகரை வசீகரிக்கும் இயல்புடையன. ஆகையினால், மேலும் வாசகரைத் தடுக்காமல் உள்நுழைய வழிவிடுகிறேன்.

நீடூழி வாழ்ந்து நும் பணி தொடர வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன்,

**கலாநிதி அ.ப.மு. அஷ்ரஃப்**
மொழித்துறை,
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
ஒலுவில் # 32360
0773081120
afmashraff@seu.ac.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எனது மூன்றாவது எழுத்தாக்கம் உயிரோடு நானாக.

இந்த நெடுங்கதையில் எனது ஊரினதும் எனது அடிமனது கிடைக்கை களையும் எனது சிற்றறிவுக்குத் தெரிந்த வகையில் சொல்லியிருக்கிறேன்.

வரலாற்றுத் தகவல்களையும் சில அறிவியல்சார் தகவல்களையும் அழிந்துபோன அல்லது அழிந்து போய்க்கொண்டிருக்கிற தம்பலகமத்தின் வாழ்வியல் முறைகளையும் என்னால் இயலுமானவரை சொல்ல எத்தனித் திருக்கிறேன்.

திருக்கோணமலையில் நாவல், நெடுங்கதைகள் வெளிவருவது அண்மைக்காலத்தில் குறைந்திருப்பது கவலை தருகின்றது.

திருக்கோணமலையின் எழுத்து வல்லுநர்களான அமரர் வ.அ.இராசரெத்தினம் ஐயா, திரு.க.அருள்சுப்பிரமணியம் ஐயா போன் றோரின் எழுத்துகளுக்கு நான் என்றும் அடிமையானவன்.

அவர்களின் அளவுக்கு இல்லாவிட்டாலும் எனது எண்ணிதயத்தில் உள்ளதை படிப்போருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையில் "உயிரோடு நானாக" வை உருவாக்கியிருக்கிறேன்.

நான் ஈழப்புரட்சி அமைப்பில்(ஈரோஸ்) இணைந்திருந்த வேளையில் ஒன்றாகப் பயணித்த தோழர் சுதா (தம்பிராசா வரதராஜா- தம்பலகமம்) அவர்களின் கட்டாய கோரிக்கையே இந்த உயிரோடு நானாக.

தம்பலகமத்தில் அந்நாட்களில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை முறையினை எழுத வேண்டும் என்ற இன்னுயிர் ஈந்த ஈரோஸ் தோழர் ராதாரவி (அமரர் கறும்பன் இரவீந்திரன் (சேகர்) - தம்பலகமம்) அவர்களின் கோரிக்கையும்உயிரோடு நானாக.

உயிரோடு நானாக தொடக்கத்தை எழுதி ஜேர்மனிக்கு மின்னஞ்சல் ஊடாக அனுப்பிய போது எப்படி ஒரு நாவல் எழுத வேண்டும் என்பதை வழிநடத்தியவர் முனைவர் கனகசபாபதி சரவணபவன் அவர்கள்.

நாட்டில் நான் இல்லாத போது உயிரோடு நானாகவை வெளியிடு வதற்கு திறமாக ஒழுங்குகள் செய்தவர் மகுடம் வி. மைக்கல் கொலின் அவர்கள்.

அட்டைப்படத்தினை மனங்கவரும் வண்ணம் வடிவமைத்துத் தந்தவர் ரி. சங்கர் அவர்கள். திறமாக அச்சிட்டுத் தந்த வணசிங்கா அச்சகத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரைகள் வழங்கியவர்கள் எனது மாமா போராசிரியர் பால. சுகுமார் அவர்கள், எனது பல்கலைக் கழகத் தோழன் முனைவர் மு.அ.அஷ்ரப் அவர்களையும் இந்நூலை வெளியிடும் மகுடம் பதிப்பகத்தினர் அனைவரையும் நன்றியுடன் மனதில் நிறுத்துகிறேன்.

உயிரோடு நானாக படிப்பவர்கள் அனைவரும் என்னுடன் தொடர்பில் இருக்க வேண்டும் என விரும்புகிறேன்.


அன்புடன்

**கதிர்.திருச்செல்வம்.**

மின்னஞ்சல்: thiruk69@gmail.com
கைப்பேசி, புலனம்:0094772908990.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படையல்

என்னை அறிவியல் ரீதியாகச் சிந்திக்க தூண்டிய
எனது ஆசான் திரு.தா.ஜெயவீரசிங்கம் ஐயாவிற்கு
இந்நாவலை படையலாக்குகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# - 1 -

'அம்மா... அம்மா....'

'அம்மா... அம்மா....'

அழைத்தவன் மகிழ்சென்னி. அம்மா பகவதிப்பிள்ளையின் வயிற்றில் பிறந்த இரண்டாவது பிள்ளை அவன்.

மகிழ்சென்னி துடிதுடிப்பானவன். அப்பாவைப் போல் உயரமானவன். தமிழர்களின் நிறத்திற்குச் சொந்தக்காரன். கை, கால்களில் செம்பட்டையான மயிர்கள் எப்போதும் சிலிர்த்துக் கொண்டிருக்கும். அவன் பெயரில் மாட்டுக்கு குறிசுட்டால் மாடுகள் பெருகும் என்று சொல்வார்கள். எளிதில் உணர்ச்சிவசப்படும் சுபாவம் உடையவன். சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லோரிடத்திலும் அன்பானவன். எப்போதும் மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற மனப்பாங்கும் அநீதிகளுக்கெதிராக சுருக்கென்று எழுந்திடும் பண்பும் அவனுடன் கூடப்பிறந்தவை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் படிக்கும் இரண்டாவதாண்டு மாணவன்.

"சாப்பாடு கோப்பையில போட்டு வச்சிருக்கன் சென்னி, ஆணம் கிண்ணிக்குள்ள இருக்கு, சாப்பிடு வாறன். நீ சாப்பிட்டுமுடிக்க முதலே நான் சோத்தக்கட்டிருவன்"

இன்று இரண்டாவது நாளாக வட்டத்தனைவயலில் வரம்பு கட்டும் வேலை செய்கின்றார்கள்.

பாட்டாளிபுரம், நல்லூர், பள்ளிக்குடியிருப்பு, இத்திக்குளம் ஆகிய ஊர்களிலிருந்து வந்த எட்டுப்பேர் கொண்டகுழு வரம்புகட்டும் வேலையினை வட்டத்தனையில் செய்துகொண்டிருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டத்தனை வயலில் மகிழ்சென்னியின் மாமா சின்னத்தம்பி நெடுங்காலமாக நெற்செய்கை செய்துவருகின்றார்.

மாமா என்றால் மகிழ்சென்னிக்கு உயிர்.

மகிழ்சென்னி சிறுவனாக இருக்கும்போது அவர் பின்னால் திரிவான். அவனை தம்பி என்று சிலவேளைகளிலும் பொடியா என்று அநேகமான வேளைகளிலும் மாமா அழைப்பது வழக்கம்.

சென்னியை சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் காலையில் வயலுக்கு கூட்டிப்போவார், மாலைநேரத்தில் மாட்டுப்பட்டிக்கு அழைத்துப் போவார். எப்ப வார இறுதி நாட்கள்வரும் என காத்திருப்பான் சென்னி.

காலையில் நேரத்துடன் பட்டிக்குச்சென்று பாலைக்கறந்து தம்பலகமம்சந்தியில் வசிக்கும் பால்வியாபாரி 'கறுலோசு முதலாளி' அனுப்பும் பெடியனுக்குப் பாலைக் கொடுத்துவிட்டு மாடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பிவிட்டு வீட்டுக்குச் செல்வது சின்னத்தம்பியின் நாளாந்தச் செயற்பாடு.

"இவ்வளவு மாடுகளின் பெயர்களையும் எப்பிடித்தான் மாமா தனதுமனதில் நினைவாக வைத்திருக்கிறாரோ தெரியாது. எல்லாமாடுகளும் யப்பான், சீனாக்காரனுவள்மாரி ஒரே மாரித்தான் இருக்கு" என மாமாவின் திறனை தன்மனதினுள் மெச்சுவான் சென்னி.

சென்னிக்கு ஆபிரிக்கக்காரர்களை அப்போது தெரிந்திருக்கவில்லை.

கண்டுக்காலையினுள் உள்ள எருமைக்கன்றுகள் தன்தாயின் பெயரைக் கூறி அழைக்கும்போது "தன்னைத்தான் சின்னத்தம்பி அழைக்கிறான்" என புரிந்து கொண்டு கன்றுகள் வெளியே ஓடிவரும் செயலை எண்ணி வியப்பான் சென்னி.

வயலில் வேலையாட்களுடன் வேலைசெய்து கொண்டிருந்தபோது மகிழ்சென்னியின் மாமாவான அந்தச் சின்னத்தம்பியின் ஒருகாலில் பாம்பு கடித்துவிட்டது. வேலை செய்தவர்கள் வெள்ளைமணல் என்ற இடத்திற்குச் கொண்டு செல்வதற்காக சின்னத்தம்பியை தூக்கிச்சென்றனர். அங்குதான் பிள்ளையான்தம்பி இருக்கிறார். திருக்கோணமலை மாவட்டத்தில் அவர் மாத்திரமே பாம்புக்கடி மருத்துவராக இருந்தார்.

இன்னுமொரு கூலியாளாக வயலில் வேலை செய்துகொண்டிருந்த ஆபரன் தகவல் சொல்வதற்காக சுவாமிமலையிலுள்ள மகிழ்சென்னியின் வீட்டுக்கு வேகமாகச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபரன் பள்ளிக்குடியிருப்பை பிறப்பிடமாகக் கொண்டவன். எப்போது பார்த்தாலும் சிறுபிள்ளைபோல் பால்வடியும் முகம் அவனுடையது. சிரித்த முகத்திற்குச் சொந்தக்காரன். சிறுவயதிலிருந்தே யாராவது அவனை அழைக்கும்போது எள் என்றால் எண்ணெய்யாக வந்து நிற்பவன். மற்றவர்களை மதிப்பதில் அவனுக்கு நிகர் அவன்தான். மற்றவர்களின் வார்த்தைகளை அவதானமாகவும் பொறுமையாகவும் நேரமெடுத்துக் காதுகொடுத்துக் கேட்கும் ஆற்றல் அவன் போல் வேறுயாருக்கும் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். அல்லற்படும் மக்களில் அதிகளவுபற்றும் அக்கறையும் கொண்டவன். தன்னலம் என்பது என்னவிலை என்பது அவன் அடிமனதுக்கொள்கை.

உடல்நிறை எப்படியும் எழுபத்தைந்து கிலோவாவது இருக்கும். கைகளிலும் கால்களிலும் தசைப்பகுதிகள் திட்டுத்திட்டாக இருக்கும். சிறுபிள்ளைகள் அவற்றை பிடித்துப் பிடித்து விளையாடும் போது ஆபரனின் மனது மகிழ்வடையும். சுருங்கியிருக்கும் கண்கள் கூர்மையான கழுகுபோன்ற பார்வையுடையன. பாம்புக்காது அவனுக்கு. நாயைவிட கேட்கும் ஆற்றல் கொண்டவன் என அவன் நண்பர்கள் சான்றிதழ் கொடுத்திருக்கிறார்கள்.

ஆபரன் எங்கிருந்தாலும் ஒவ்வொருநாளும் ஐந்துமணிக்கு எழுந்து உடற்பயிற்சி செய்வதை மறக்கமாட்டான். கடல், குளம், ஆறு போன்ற நீர் நிலைகளைக் கண்டால் நீந்துவது அவனுக்குப் பிடித்த பொழுதுபோக்கு. கடலில் குளிப்பதென்றால் அதைப்போல் மகிழ்ச்சி வேறில்லை அவனுக்கு.

கண்ணில் படுகின்ற புத்தகங்களைப் படிப்பதில் ஆர்வமுள்ளவன். கையில் கிடைக்கும் புத்தகங்கள் அனைத்தையும் படிப்பவன். கார்ல்மார்க்ஸ், லெனின், ஏங்கல்ஸ், சாண்டில்யன், ஜெயக்காந்தன், அ.முத்துலிங்கம் என நீளும் அவன் படிக்கும் புத்தகங்களின் விருப்புக்குரிய நூலாசிரியர்கள் பட்டியல்.

சோவியத் ஒன்றியத்தின் நாவல்களை விரும்பிப்படிப்பான். வரலாறு, அறிவியல், பொருண்மியம், அரசியல் போன்றவற்றை படிப்பதில் அலாதி விருப்பம் அவனுக்கு. கடவுள்நம்பிக்கை அவனுக்கு அறவே கிடையாது. பொருள்முதல்வாதம் தொடர்பான புத்தகங்களை வாசித்தபின்னர் கடவுள் பற்றிய தனது சிறுவயது நிலைப்பாட்டினை மாற்றிக்கொண்டான். சிறுவயதில் கோவிலுக்குப் போனால் மூன்றுமுறை கோவிலைச் சுற்றிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பிடாமல் கோவிலைவிட்டு வெளியேறமாட்டான். கண்ணால் காணுபவற்றை மாத்திரம் நம்புபவன். தீர விசாரித்து அறிவியல் ரீதியில் தனது செயற்பாடுகளை நடைமுறைப் படுத்துபவன்.

தவறு எங்கிருந்தாலும் அதனை தனியாளாகவேனும் துணிந்து தட்டிக் கேட்பதற்கு ஆபரன் பின்னிற்பதில்லை. எந்தவிடயமானாலும் யாராகிலும் ஒருதடவை கூறினால் போதும் லபக்கென்று பற்றிப்பிடித்து நினைவில் பதித்துவிடும் ஆற்றல் அவனுக்கேயான தனிப்பண்பு. வன்முறையற்ற சொற்களே அவனது வாயில் இருந்து வெளிவரும். அவனது வார்த்தைகள் யாரையும் புண்படுத்தாதவை. அன்பினால் எதனையும் சாதிக்கலாம் என்பது ஆபரனது அடிமனது எண்ணம்.

தனக்கு காத்திருக்கும் ஆபத்தினை தெரிந்திராத ஆபரன் பரபரப்பான மனநிலையுடன் வேகமாக ஈருருளியை உழக்கிக்கொண் டிருந்தான்.

வட்டத்தனையிலிருந்து ஆற்றோரமாக தன்கால்களால் ஓடி மாக்கை என்று எல்லோராலும் அழைக்கப்படும் மாக்கைத் திடலில் ஆற்றைக் கடந்து சுப்பையா அண்ணன் வீட்டில் இருந்த ஈருருளியை எடுத்துக்கொண்டு அசுர வேகத்தில் ஐயனார் திடல்கடந்து நாயன்மார் திடலை தாண்டி குஞ்சடப்பன்திடலில் அழகரெத்தினம் ஐயா வீட்டில் தாகம்தீர அவசர அவசரமாக நீர் கேட்டுவாங்கிக் குடித்துவிட்டு சின்னத்தம்பிக்கு பாம்பு கடித்தது தொடக்கம் வெள்ளைமணலுக்குக் கொண்டு செல்வதுவரை வேகமாக அவர்களுக்குச் சொல்லிவிட்டு மகிழ்சென்னியின் வீட்டைநோக்கிப் புறப்பட்டான். கோவிலடியில் உள்ள ஆதிகோணநாயகர் கோவில் முன்பாகச் செல்லும்போது சின்னத்தம்பி கூறியவை நினைவிற்கு வந்தன.

கோவிலடியை வேகமாகக் கடந்தவன் வட்டத்தனையிலிருந்து ஏறத்தாள நாலரைக் கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஆனைவெட்டவான் பாலத்தடி வழியினால் சென்றான்.

தம்பலகமத்தில் ஆனைவெட்டவான் பாலத்தடி முக்கியமானதொரு இடம். கோணேசர் கோவில்த் திருவிழாக்காலங்களில் அதிகளவான மக்கள் புதுக்குடியிருப்பு, பாரதிபுரம், பாலம்போட்டாறு, சுவாமிமலைக் கொலனி, பொக்குறுணி என அழைக்கப்பட்ட பொற்கேணி ஆகிய ஊர்களில் இருந்தும் கோணேசர் கோவில்த் திருவிழாவினைப் பார்க்கச்செல்வார்கள்.

கோவில்த் திருவிழாவிற்கு ஆனைவெட்டுவான் பாலத்தினால் செல்பவர்கள் திருவிழா முடிந்ததும் அவ்வழியால் வீடு திரும்பமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலடியிலிருந்து கூட்டாம்புளிச்சந்தி ஊடாகப் பட்டிமேடு சென்று பட்டிமேட்டுச் சந்தியால் வலதுபக்கமாக திரும்பி இலங்கைநேசன் அரிசிஆலையினைக் கடந்து தத்தமது வீடுகளுக்குச் செல்வார்கள்.

சூரியன் மறையத்தொடங்கினால் ஆனைவெட்டுவான் பாலத்தடி வழியினை மக்கள் பயன்படுத்தமாட்டார்கள். அந்தப்பாலத்தடியில் இருக்கிற மருதமரங்களில்தான் கோவிலடி சுடுகாட்டில் இருந்து பேய்கள் வந்து குடியிருப்பதாக தம்பலகமத்தில் பேசிக்கொண்டார்கள்.

இந்தப்பேய்களுக்குப் பயத்தில்தான் அந்தவழியால் யாரும் செல்வதில்லை. பட்டிமேட்டுச் சந்தியிலிருந்து கோவிலடி ஒருகிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது. இந்தப் பேய்க்கதையினால் மேலும் ஒருகிலோமீற்றர் தூரம் மேலதிகபயணம் மேற்கொள்வார்கள் அவ்வூர் மக்கள்.

கோவிலடி, கூட்டாம்புளி, பட்டிமேடு ஆகிய ஊர்களில் வாழ் கின்ற மக்களில் யாராவது சாவடைந்த பின்னர் அவரை கோவிலடியிலே உள்ள சுடுகாட்டில் எரிப்பார்கள். வசதி குறைந்தோர் புதைப்பார்கள்.

முள்ளியடி, வர்ணமேடு, கரைச்சைத்திடல், கள்ளிமேடு, குஞ்சடப்பன்திடல், நாயன்மார்திடல், ஐயனார்திடல், மாக்கைத்திடல், நடுப்பிரப்பன்திடல் ஆகிய ஊர்களில் வாழும் மக்களில் யாரேனும் சாவடைந்தாலோ பொற்கேணி மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய ஊர்களில் வசிக்கும் மக்களில் ஒரு பகுதியினரில் யாரேனும் சாவடைந்தாலோ முள்ளியடி இடுகாட்டில் புதைப்பார்கள்.

பொற்கேணி மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய ஊர்களில் வசிக்கும் மக்களில் ஒரு பகுதியினரும் பாலம்போட்டாறு, சிப்பித்திடல் முன்மாரித்திடல் ஆகிய ஊரில் வசிக்கும் மக்களிலும் யாரோனும் சாவடைந்தால் அவர்களை புதுக்குடியிருப்பு இடுகாட்டில் புதைத்தார்கள் அல்லது எரித்தார்கள்.

தம்பலகமத்தில் வசித்த மக்கள் இந்த நடைமுறையினை நெடுங் காலமாக பேணி வந்தனர். தம்பலகமத்தில் உள்ள மக்களின் இறுதிநாள் நிகழ்வில் இருந்து அவர் என்ன சாதியைச் சேர்ந்தவர் என்பதனைக் கண்டுபிடித்து விடலாம்.

ஆனால் நாட்டில் ஏற்பட்ட சிக்கல்கள் கரணீயமாக இறுக்கமான இந்தநடைமுறைகள் பல தளர்ந்துவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமாகவிரைந்து சென்றுகொண்டிருந்த ஆபரன் மூச்சிரைக்க மூச்சிரைக்க மகிழ்சென்னியின் வீட்டிற்கு வந்தடைந்தபோது சென்னியின் வீட்டின் நிலை தூக்கிவாரிப்போட்டது அவனுக்கு. எதுவும் செய்யமுடியாத நிலையில் ஈருருளியிலிருந்து மெதுவாக இறங்கினான்.

மகிழ்சென்னியின் இரண்டுகைகளும் பின்பக்கமாக கட்டப்பட்டிருந்தது. நடுப்பகல் வேளையில் வீட்டுமுற்றத்தில், வெயிலில் முழந்தாளிட்டு இருத்தி வைக்கப்பட்டிருக்கிறான். கடைவாயினால் இரத்தம் வழிந்து கொண்டிருக்கிறது. அம்மா சமயலறைக்கு வெளியே ஓரமாகநின்று தொங்கல்சீலையால் துடைத்தவாறு அழுது கொண்டிருக்கிறாள், அவர்கள் இருவரையும் சூழ இராணுவத்தினர் நிற்கின்றார்கள். வீட்டு வளவினைச் சுற்றியும் படையினர் முற்றுகையிட்டிருந்தனர்.

ஆபரன் ஈருருளியால் மெதுவாக இறங்கும்போது தன்கண்களால் கண்ட நொடிப்பொழுது சம்பவங்கள் இவை.

என்ன செய்வதென ஆபரனுக்குத் தெரியவில்லை.

"நீ ஏன் அண்ண இப்ப வந்தா" என மகிழ்சென்னி தன்மனதில் நினைத்தது அவன் முகத்தில் தெரிந்தது ஆபரனுக்கு.

மகிழ்சென்னி அருகிலே நின்ற அதிகாரி ஆபரனைக் கண்டதும் சென்னியைப் பார்த்து ஏதோ கேட்டான். அந்தஅதிகாரி கேட்டது சென்னிக்கு புரியவில்லைப் போலும். சென்னி பதில் கூறவில்லை. ஆத்திரமடைந்த அந்த உயரதிகாரி தனது கைவிரல்களை மடித்து சென்னியின் கன்னப்பக்கமாக இடித்தான்.

"அம்மா" என்றலறினான் மகிழ்சென்னி. மகனின் 'அம்மா' என்ற அழுகையொலி அம்மாவை 'சென்னிய்ய்ய்....' என வாய்விட்டு வீரிட்டு அலறவைத்தது.

"மகனுக்கு அடிக்க வேண்டாம் ஐயா...." என அம்மா படையினரிடம் கெஞ்சினாள்.

ஆபரனை தன்னருகே வருமாறு கைவிரல்களால் சைகை செய்தான் அந்த அதிகாரி. 'வந்தவன் யாரென தன்னிடம் கேட்டிருப்பான் போல' என புரிந்து கொண்டான் சென்னி. ஈருருளியை வேலிக்கட்டையில் சாத்திவைத்தவிட்டு, ஆபரன் அந்த அதிகாரியை நேக்கிச்சென்றான்.

"என்ன பெயர்?" அதிகார அதட்டலுடன் அந்த அதிகாரி கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உத்தமன்"

"எந்த இடம்?"

"மூதூரில இருக்கிற நல்லூர்"

"ஏன் இஞ்ச வந்தனி?"

"வயல் வேல செய்ய வந்தனாங்க, இவங்கட மாமா..." சொல்லி முடிப்பதற்கு முன்

"ஆபரன் எண்டு ஆரும் வயல்ல வேல செய்யிறாங்களா?"

"இல்ல" நேரத்திற்குத் தேவையான ஆபரனின் பொய்யான பதில் அது.

ஆபரனின் பதில் மகிழ்சென்னிக்கு வேதனையிலும் மனதில் ஓரளவு மகிழ்ச்சி உண்டாகியது.

அந்த மகிழ்ச்சி ஒருசில நிமிடயங்களே நீடித்தது.

அக்கணத்தில் சென்னியின்வீட்டு வாசலில் இராணுவவாகனம் ஒன்று வந்து நின்றது.

அதிலிருந்து முகம் முழுவதும் அரைவாசி வெட்டப்பட்ட நெல்லுச்சாக்கினால் மூடப்பட்டு கண்களிரண்டும் பார்பதற்கு வசதியாக இரண்டு துவாரங்கள் இருக்க ஒருவர் இறங்கினார்.

தன்னைப் பிடிப்பதற்கு 'முகமூடி' கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதனை ஆபரன் புரிந்துகொண்டான்.

முகமூடி அருகே உயரதிகாரி சென்றது. உயரதிகாரியின் காதருகில் தன் வாயை கொண்டுசென்று முகமூடி ஏதோ மெதுவாகச்சொன்னது.

முகமூடி என்ன சொல்லியிருக்கும் என்பதனை உணர்ந்த ஆபரன், ஒரு கணம் தாமதித்தால்க் கூடத் தனக்கு ஆபத்து ஏற்படும் என்பதனை உணர்ந்தான். தப்பிப்பதற்கு ஏற்றநிலை அங்கு இல்லை. தப்பிக்காமல் இருப்பது சாவதற்குச் சமன் என்பதும் புரிந்தது. எப்படித் தப்பிப்பது என்பது புரியவில்லை. இருதலைக் கொள்ளி எறும்பாக நின்றான் அவன். சுற்றும்முற்றும் பார்த்தான். வளவின் ஒரு பகுதியில் இராணுவம் இல்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொண்டான். அந்த மூலையினால் ஓடித்தப்புவதே அக்கணத்தில் தனக்கு இருக்கும் ஒரே வழியென்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானித்தான். அங்கிருந்த யாருமே எதிர்பார்க்காத கணத்தில் திடீரென இராணுவம் நிற்காத அந்த மூலையை நோக்கி ஓடினான்.

"ஓட வேணாம்... ஓட வேணாம்.... ஓடினாச் சுடுவம்" என உரத்த சத்தமாகக் கூறிக்கொண்டு ஆபரனின் பின்னால் ஓடிய அந்த படையதிகாரி தனது இடுப்பில் சொருகியிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து ஆபரனைக் குறிபார்த்தான்.

அதேநேரம் சுற்றிநின்ற படைவீரரில் இருவர் ஆபரனைப் பிடிப் பதற்காக அவன் பின்னால் துரத்திச்சென்றனர். ஆபரன் வேகமாக ஓடினான். ஐந்துபட்டு முட்கம்பி வேலி அது. அந்த வேலியிலிருந்து ஆறடி தூரத்திற்கு சென்றுவிட்டான். ஆபரன் உயரம்பாய்தலில் கெட்டிக்காரன். ஓடிச்சென்ற வேகத்தில் பாய்வதற்கு எத்தனித்தபோது, வேலியால் பாய்ந்து விட்டால் ஆபரனைப் பிடிப்பது சிக்கலாகி விடும் என உயரதிகாரி நினைத்திருக்க வேண்டும்.

அவ்வளவு பதற்றமான நிலையிலும் துப்பாக்கி பிடித்தகை பதற்றமெதுவுமின்றி நிதானமாக இருந்தது. ஆறுகுண்டுகளை தன்னத்தே வைத்திருந்த அந்த சிறிய கைத்துப்பாக்கி சிறிய ஆட்டமுமின்றி வலதுகையின் பிடிக்குள் மகுடிக்கு கட்டுப் பட்ட பல்கழற்றிய நாகம்போல் அசைவின்றி இருந்தது. துரத்திச்சென்ற இராணுவத்தினரை படுக்கச்சொல்லி சிங்களத்தில் உரத்த சத்தமாக கூவினான். அவர்கள் தொப் தொப் என நிலத்தில் குப்புறப்படுத்து நிலையெடுத்தனர். உயரதிகாரியின் ஆட்காட்டி விரல் சுடுவிசையில் பதிந்த மறுகணம் 'டுமீல்' 'டுமீல்' என்ற இரு சத்தத்துடன் ஓய்ந்து.

குண்டடிபட்ட ஆபரன் ஓடிச்சென்ற வேகத்தில் வேலியில் மோதி தொப்பென்று விழுந்தான். கணப்பொழுதில் எல்லாம் நடந்து முடிந்தன.

சென்னியின் அம்மா "ஐயோ ஐயோ" என அலறினாள்.

சென்னி நடுங்கிக்கொண்டிருந்தான். தன்னையும் அம்மாவையும் என்ன செய்யப் போகின்றார்களோ என பயத்துடன் இருந்தான். இனித் தன்கதையும் முடிந்தது என தனக்குள் எண்ணிக்கொண்டான்.

பின்னால் துரத்திச்சென்ற அந்த இருவீரர்களும் விரைந்து எழுந்துசென்று ஆபரனை தூக்கி இழுத்து வந்தனர். குண்டடிபட்ட இடத்திலிருந்து குருதி குபு குபுவென ஓடிக்கொண்டிருந்தது. காயப்பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரையில் உரசிக்கொண்டு வந்தது. வேதனையில் ஆபரனுக்கு உயிரே போகும்போல இருந்தது. ஆனாலும் அவன் அழவில்லை. பல்லைக் கடித்துக்கொண்டு கண்களைமூடி வெலிக்கடைச் சிறையில் கொல்லப்பட்ட வர்களை நினைத்துக்கொண்டான்.

"அவர்கள் அநுபவித்த சித்திரவதைகளை விடவா இது" என மனதுள் எண்ணிக் கொண்டான்.

தரதரவென இழுத்து வந்து முற்றத்தில் போட்டார்கள்.

தரையில் கிடந்தவாறே தலையைச் சற்று நிமிர்த்தி "அம்மா சின்னத்தம்பி அண்ணன பாம்பு கடிச்சுற்றுது. புள்ளாயான்தம்பியரிட்ட கொண்டு போறாங்க" என தன் வேதனையினைப் பொருட்படுத்தாது சத்தமாக கத்திச்சொன்னான் ஆபரன்.

"ஐயோ கடவுளே" அம்மா வீரிட்ட சத்தம் அந்த ஊர் முழுவதும் கேட்டிருக்க வேண்டும். தலையில் அடித்து வீரிட்டாள்.

"கோணேசா என்னப்பா நடக்குது எங்களுக்கு" என கோணேசரை துணைக்கழைத்து வீரிட்டழுதாள் அம்மா.

ஆபரன் அருகே வந்த உயரதிகாரி என்னைத் தெரியுமா எனக் கேட்டான்.

"சுரேஸ்காசிம்" தெளிவான பதில் வேதனையிலும்.

குண்டடிபட்ட இடத்திலிருந்து விழுப்புண்ணிலிருந்து இப்பவும் "குபு குபு" என இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது. அந்த வலியை அவரவர் தான் உணர முடியும். வேறு யாரும் சொல்வதால் புரிந்துகொள்ள முடியாது என்பதென்னவோ உண்மைதான்.

அவ்வேதனையினை அந்தஅதிகாரி ஓரளவு உணர்ந்தவனாக காயத்திற்கு மருந்து கட்டுமாறு தன்னுடன் வந்திருந்த ஒருவீரனிடம் கூற அவனும் மின்னல் வேகத்தில் தொழிற்பட்டான்.

எழும்பிச் சாப்பாட்டை வயலுக்கு கொண்டுபோகுமாறு மகிழ்சென்னியிடம் அந்த அதிகாரி சொன்னான். அம்மாவை பிள்ளையான் தம்பியர் வீட்ட, தானே தனது வாகனத்தில் கொண்டுபோய் விடுவதாகவும் கடினமான தொனியில் சொன்னான். வந்தவர்களுக்கு ஆபரன் மாத்திரமே தேவைப்பட்டான். அதனால் சென்னியைப் பற்றி அவர்கள் பெரிதாக அக்கறைப்படவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று அச்சமடைந்தாலும் எதுவும் தன்னால் செய்யமுடியாது என்பதை உணர்ந்து 'சரி' என தலையை ஆட்டிவிட்டு சமயலறை சென்றவன், பனையோலைப் பெட்டியில் போட்டு வெள்ளைத் துணியால் மூடிக் கட்டிவைத்திருந்த சோற்றுப்பெட்டியை எடுத்துவந்து ஈருருளியின் பின்னால் இருந்த தாங்கியிருக்கையில் (cycle carrier) வைத்துக் கயிற்றால் கட்டினான்.

கறிகளை அம்மா சட்டிகளில் போட்டு பெரிய பையில் வைத்திருந்தாள்.

தூக்குப்பேணியில் புளிஆணம் இருந்தது.

இரண்டையும் எடுத்துக்கொண்டு "அம்மா நீ போ, நான் பின்னேரமா வாறன்" எனக் கூறிவிட்டு உயரதிகாரிக்கு நன்றி தெரிவித்து விட்டு நண்பன் ஆபரனை கவலையுடன் பார்த்துவிட்டு புறப்பட்டான் வயலுக்கு.

பகவதிப்பிள்ளை சமையலறைக்குள் போய் அடுக்குப் பெட்டியை ஒவ்வொன்றாக எடுத்துப்பார்த்தாள். இரண்டாவது பெட்டியினுள் அறுபது உருபா பணம் இருந்தது. முழுவதையும் எடுத்துத் தொங்கல் சீலையில் வைத்து ஒரு முடிச்சுப் போட்டு இடுப்பில் சொருகினாள். அரிசிப்பானை யினுள் இருந்தபையில் இருந்து அடையாள அட்டையை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

ஆபரனின் கைகள் இரண்டும் பின்னால் பிணைத்துக் கட்டப் பட்டிருந்தது.

வாகனத்தை எடுத்து வருமாறு உயரதிகாரி கூற அடுத்தகணம் அவனருகில் வாகனம் வந்துநின்றது.

தனது சுட்டுவிரலை வாகனத்தின் முன்பகுதியை சுட்டிக் காட்டி பகவதிப்பிள்ளையை முன்னிருக்கையில் ஏறச் சொன்னான். அவள் தயங்கினாள். அந்த அதிகாரியின் அதட்டலுடன் ஓடிப்போய் வாகனத்தின் முன்னிருக்கையில் ஏறிக்கொண்டாள் அம்மா.

ஆபரனை பின்னால் ஏறச்சொன்னான். நொண்டி நொண்டிச் சென்று ஏறினான். அவனருகில் அதிகாரி ஏறியமர்ந்தான். அந்த வாகனத்தில் மேலும் மூன்று வீரர்கள் ஏறினார்கள்.

முகமூடி இன்னுமொரு வாகனத்தில் ஏற்றப்பட்டது. மற்றைய வீரர்கள் அங்கு நின்ற இரு பெரிய வாகனங்களில் ஏறிக்கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் ஒருவாகனம் புறப்பட்டது. அடுத்து ஆபரனை ஏற்றிய வாகனம். அதைத் தொடர்ந்து மூன்றாவது வாகனம் என வாகனஅணி நகர்ந்தது.

சுவாமிமலை கோவில்தாண்டி தம்பலகமம்சந்திகடந்து பாலம் போட்டாறு ஏற்றம் ஏறும்போது "மகனுக்கு அடிச்சிப் போட்டம், அவன் உண்மையச் சொல்லியிருந்தா அடிச்சிருக்கமாட்டம்." அதிகாரி கூற அம்மாவிற்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ஆனால் செயலறுநிலைக் கோபமது.

"என்ன செய்வம், தமிழனா பிறந்திட்டம்" இயலாமையில் பகவதிப்பிள்ளையின் மனம் தன்னைத்தானே நொந்தது.

பாலம்போட்டாறு பாலத்தடியினால் செல்லும்போது "பத்தினி ஆச்சி சின்னத்தம்பிய எப்பிடியெண்டாலும் காப்பாத்திரு தாயே. அடுத்தமுற வைகாசிப் பொங்கலுக்கு தீச்சட்டிஎடுத்து தம்பலகமத்தில இருந்து நடந்து வருவன் அம்மா. இந்தத் தம்பியயும் காப்பாத்திரம்மா" ஆபரனையும் அம்மா மறக்கவில்லை.

வற்றாப்பளை, சம்புக்களி, தம்பலகமம் ஆகிய இடங்களில் கண்ணகியென்றும் பத்தினியம்மனென்றும் அழைக்கப்படும் தெய்வத்திற்கு வைகாசிவிசாகத்தில் வேள்வி நடப்பது வழமை.

தம்பலகமத்தில் பத்தினியம்மன்கோவில் பாலம்போட்டாறு பாலத்தின் கீழ்ப்பகுதியில் உள்ளது.

வாகன அணி வேகமாகச் சென்று கொண்டிருந்தது. குரங்குப் பாலத்தில் (monkey bridge) உள்ள சிறப்புப்படை (Special Force) முகாமினை கடக்கும் போது "எப்படி நான்தான் சுரேஸ்காசிம் என்று தெரியும்?" உயரதிகாரி கேட்டான். தற்போது குரலில் கடுமை இல்லை. மரியாதை இருந்தது.

"ஓடக்கொள்ளயும் குறி தவறாம சுடக்கூடிய தமிழ் கதைக்கக்கூடிய படை அதிகாரி வேறஆர் இஞ்ச இருக்காங்க" ஆபரனின் பதிலான கேள்வி அதிகாரிக்கு மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். உயரதிகாரியின் முகத்தில் மகிழ்ச்சிக் கோடுகள் தோன்றி மறைந்தன.

சுரேஸ் காசீம் கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவன். யாவா இஸ்லாமியன். ஏழைக்குடும்பத்தில் பிறந்தவன். தனது வீட்டு வாழ்வாதாரத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்காக படையில் சேர்ந்தவன். படிக்கும்காலத்தில் இருந்தே படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரன். உளச்சார்பு பாடத்தில் அதிக விருப்பம் உடையவன். நுண்ணறிவு அவனுக்கு அதிகளவு பிடிக்கும். நுண்ணறிவும் அவனுக்கு அதிகமே. மிகத் துரிதமாகச் செயற்படும் திறன் கொண்டவன். துல்லியமான சொற்களை வாயிலிருந்து வெளியேற்றுபவன். அச்சம் என்பது அவனது மனதில் என்றுமே இருந்ததில்லை. எதிலும் தான் முதலாவதாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவன்.

கண்டவரை கண்ட மாத்திரத்திலே கவர்ந்திழுக்கும் கவர்ச்சி அவனிடமிருந்தது. ஆண்களை அழகானவன் என்று சொல்வது குறைவு. ஆனால் சுரேஸ் காசீம் அழகானவன். எவ்வளவு அழகானவன் என்றால். ஜெயக்காந்தன் எழுதிய 'தவம்' என்ற கதையில் வரும் சுவர்ணா அக்கா எவ்வளவு அழகோ அவ்வளவு அழகாக அவன் இருந்தான். படையில் சேராதிருந்திருந்தால் கண்டிப் பெண்களெல்லாம் அவன் பின்னால்தான் திரிந்திருப்பார்கள். இயற்கையை இரசிப்பது அவனுக்குப் பிடிக்கும். மதுப் பிரியனும் கூட.

ஏறத்தாள ஐந்தடி எட்டங்குல உயரமுடையவன். பாகிஸ்தான் ஆண்களின் நிறமுடையவன். திடமான உடற்கட்டுடையவன். சீனர்கள் போன்று சிறிய கண்களையுடையவன். அடிக்கடி கண்ணிமைகளை மூடிமூடித் திறந்து கொண்டிருப்பான். கன்னத்திலே சிறியதொரு கீறல் இருப்பது அவனுக்கு மேலும் அழகு சேர்த்துக் கொண்டிருந்தது. சிரிக்கும் போது கன்னக்கீறல் வளைந்து வானவில் போன்று தோற்றமளிப்பதை காண்பது பாக்கியமாக இருக்கும்.

'குரங்குப்பாலத்தில் உள்ள காணியுடன் கூடிய் கட்டிடங்கள் அனைத்தும் நிலவளவைத் திணைக்களத்திற்குச் சொந்தமானவை. பாதுகாப்பு பந்தோபஸ்து அமைச்சராக இருக்கிற லலித் அத்துலத்முதலிதான் இதனை இராணுவ முகாமாக மாற்றியவர்' என தோழர் ஜபார் கூறியது அவ்விடத்தினால் செல்லும் போது ஆபரனுக்கு நினைவுக்கு வந்தது.

"ஆறு மாதமாக உங்களத் தேடுறன், ஆனா என்னால பிடிக்க முடியல. மக்களோட மக்களாக உங்கடஆக்கள் இருக்கிறதால உங்கட அமைப்பு ஆக்களப் பிடிக்கிறது சரியானசிக்கல் எண்டு எங்களுக்குத் தெரியும்." என்றான். "தன்னை மரியாதையாக விளித்ததும் பேச்சின் இடையிலே குடிப்பதற்கு நீர் கொடுத்ததும் அதற்குச் சற்றுமுன் கட்டியிருந்த கைகளை அவிழ்த்து விட்டதும் ஏதோ ஒன்றிற்கு தூண்டல் போடுகிறான் சுரேஸ்காசிம்" என நினைத்துக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவதிப்பிள்ளையின் மனம் பதறிக்கொண்டிருந்தது. சின்னத் தம்பியை எண்ணியபடி கண்கள் கண்ணீரால் குளமாவதும் அவை துடைக்கப் படாதமையினால் இருகன்னங்களாலும் வழிந்தோடுவதுமாக இருந்தது

குரங்குப்பாலத்தை வாகனம்கடந்து ஐநூறுமீற்றர்கள் சென்றிருக் கும் வீதி ஓரத்திலே பேருந்து ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது.

வாகனத்தை நிறுத்துமாறு சுரேஸ்காசிம் கூற சாரதி தெரு ஓரமாக வாகனத்தை உடனடியாக நிறுத்தினான்.

அம்மாவிடமும் ஆபரனிடமும் "தம்பலகமம் பேருந்து நிற்கிறது. இறங்கிப் பார்த்துவிட்டு வாறன்" என உயரதிகாரி மரியாதையாகக் கூறிவிட்டு இறங்கினான்.

ஆச்சரியத்துடன் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

விளாங்குளம் என தமிழில் மாத்திரமே எழுதப்பட்ட பெயர்ப் பலகையினருகிலேயே பேருந்து நின்றது.

ஆபரன் வாகனத்தின் முன்கண்ணாடியினூடாக பேருந்தைப் பார்த்தான். பேருந்தில் சிலரே இருந்தனர்.

பேருந்தின் நடுப்பகுதியில் கண்ணாடி ஓரத்தில் பட்டிமேட்டு வைராவியார் இருந்தார். அவர் அருகிலே பட்டிமேட்டு "காக்கா கடை" முதலாளி இருந்தார். அவரைக் கண்டவுடன் தனதுகாலில் ஏற்பட்ட காயத்தின் வலியினால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த ஆபரனுக்கு வந்த சிரிப்பை அடக்க முடியாமல் தன்னிலையில் சிரித்தே விட்டான்.

அருகில் இருந்த இராணுவ வீரன் அவனைப் பார்த்தான். முறைத்தான்.

பட்டிமேட்டு காக்காகடை முதலாளியின்பெயர் "காக்கா" என்றே தம்பலகமத்திலுள்ளவர்களுக்குத் தெரியும்.

இந்தியாவிலிருந்து வந்து கடைபோட்டவர். அந்நாட்களில் தம்பலகமத்தில் பட்டிமேட்டு "காக்கா கடை", புதுக்குடியிருப்பு "ஆவன்னா கடை", கோவிலடி "மாத்தளையான் கடை" இவைகளே கடைகள்.

மாத்தளையான் கடை சாப்பாட்டுக்கடை. மற்றைய இரண்டும் பலசரக்குக்கடைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்காகடையில் அனைத்துப் பொருட்களும் இருக்கும். விலையும் மலிவு.

காக்கா திருமணம் முடிக்காத தனிக்கட்டை.

காலை நாலுமணிக்கு எழும்பி முகம்கழுவி தேநீர்குடித்துவிட்டு ஐந்தரை மணியளவில் தனது நன்கு சோடிக்கப்பட்ட "ரளி" ஈருருளியில் கோவிலடியில் உள்ள வயல்வெளிக்குச் சென்று தன்காலைக் கடன்களை முடித்துவிட்டு வருவார்.

தமது ஈருருளிகளை வாலிபர்கள் அந்நாட்களில் சோடித்து வைத்திருப்பார்கள். முன் மற்றும் பின் சில்லுகளின் குடத்தில் கம்பியினாலான பலநிறப்பூக்கள் போடுவார்கள். நடுச்சட்டகத்தில் (வாரில்) பலநிறங்களினாலான றபரினால் சுற்றுவார்கள். அதன் மேலாக பூண் போடுவார்கள். சற்று வசதியானவர்கள் வெளிச்சம் வரக்கூடிய சிறியநிற மின்குமிழ்களைப் பொருத்துவார்கள்.

தான் திருமணமாகாததாலோ என்னவோ நாற்பத்தியிரெண்டு வயதுக்காக்காவும் வாலிபர்கள் செய்வதையெல்லாம் தனதுஈருருளிக்கும் செய்துவைத்தார்.

அப்போது தம்பலகமத்தில் ஒருசிலரின் வீடுகளில்தான் கழிப்பறைகள் இருந்தன. அநேகமானோர் அதிகாலையில் மாத்திரமே தமது கழிப்பறையில் செய்யும் வேலைகளை செய்வர். ஏனெனில் பகல்வேளைகளில் வயல்வெளிகளில் மக்கள் நடமாட்டம் இருக்கும்.

ஏதேனும் அவசரமென்றால் பொழுதுபடத்தான் எதுவும் செய்யலாம். கடும் அவசரமென்றால் தூரத்திலுள்ள வயல்களுக்குச் செல்லவேண்டும்.

வயலும் வாழ்வும் வேதனையிலும் மகிழ்ச்சியாக காலங்கள் கடந்தன.

அந்த ஒரு தடவைதான் காக்க ஊருக்குள் ஒருநாளில் வெளியே வருவார்.

கடைக்குத் திரும்பியபின் கடையினை ஆறரைமணிக்குத் திறந்தால் காலைபத்து மணிக்கு மூடிவிடுவார். புகல்ச்சாப்பாட்டிற்காக திருக்கோணமலை நகரத்திற்குச் சென்று அங்கு "சாவன்னா கடையில்" பொரித்த கோழிக்காலுடன் ஒருபிடி பிடித்துவிட்டு தனதுகடைக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு மூன்றுமணிக்குத் திருக்கோணமலையிலிருந்து புறப்படும் தம்பலகமம் பேருந்தில் ஏறி நான்கரைமணிக்கெல்லாம் வந்து கடையினைத் திறந்துவிடுவார்.

இரவு எட்டுமணிக்கு கடை மூடப்படும். இதுவே காக்காவின் நாளாந்த நடவடிக்கைகள்.

மகிழ்சென்னி இரண்டு நாட்களுக்கு முன்னர் காக்காவைப் பற்றி சொன்னவை நினைவுக்கு வர சிரித்தேவிட்டான் ஆபரன்.

சற்றுநேரத்தில் வந்த சுரேஸ்காசிம் "எரிபொருள் இல்லாமல் நிக்கிறாங்கள், மடையங்கள். நிக்கட்டும்" என கூறிவிட்டு சாரதியான படை வீரனிடம் செல்லுமாறு பணிக்க வாகனம் மின்னல்வேகத்தில் கப்பல்துறையைக் கடந்து ஐந்தாம்கட்டை தாண்டி நாலாம்கட்டைச் சந்திக்குவந்து வலதுபக்கம் திரும்பியது.

அம்மா கள்ளிமேட்டு அம்மாள்ஆச்சியை நினைத்து நேர்த்திக்கடன் வைத்தாள்.

"தாயே என்ரதம்பிக்கு எதுவும் நடக்காமல் காப்பித்திரம்மா, தப்பிரோணும். அடுத்த கும்பத்துக்கு காத்தமுத்துப்பூசாரியாரிட்டச் சொல்லி பொங்கல்பொங்கி பாணக்கம் வைப்பன் அம்மா" என்று தன் குலதெய்வத் திடம் வேண்டினாள். இந்தத் தடவை ஆபரனுக்கு வேண்டுதல் வைக்க வில்லை அம்மா.

வேண்டுதல்கள் எல்லாம் வீணாப்போகும் என்று தெரிந்திருந்தால் இப்படியான நேர்த்திகளை தவிர்த்திருப்பாளோ என்னவோ.

ஐந்தாம்கட்டையினால் வாகனம் வரும்போது ஆபரனுக்கு தோழர் இராசகிளி கூறியவைகள் நினைவுக்கு வந்தன.

"சுமேதங்கபுர என்ற ஊர் புதிதாக உருவாக்கப்பட்டு பிறிமாமா ஆலை மற்றும் மிட்சுயி சீமெந்து தொழிற்சாலையில் பணியாற்றுபவர்கள் தங்கியிருப்பதற்கான ஒழுங்குகளை அரசு செய்கின்றது.

கவாட்டிக்குடா வரை இப்படியான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. இதனை நாடாளுமன்ற உறுப்பினர் சிறில்மத்யூ என்பவர் முன்னின்று செய்து கொண்டிருக்கிறார். இதையிட்டு நமது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் தமிழ் மற்றும் இஸ்லாமிய மக்கள் பிரதிநிதிகள் அக்கறைப்படுவதாக இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மயமாக்கல் எதிர்காலத்தில் அல்லை, கந்தளாய் போல மிகப் பெரிய சவாலாக வரும். அப்ப எதுவுமே செய்யமுடியாத நிலையில் அப்போதைய மக்கள் இருப்பார்கள். நாம் அதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேணும்" என அரசு இயந்திரம் எவ்வாறு தனது இருப்பை நிலையாக நீடித்திருப்பதற்கான வேலைகளைச் செய்துகொண்டிருக்கின்றது என்ற உண்மைகளை விரிவாக ஆபரனுடன் இருந்த தோழர்களுக்கு குறவன்வெட்டுவான் மலையடியில் வைத்து வகுப்பெடுக்கும்போது கூறியவைகளை தற்போது தனது கண்ணால் நேரிடையாகப் பார்த்துக்கொண்டு சென்றான்.

கப்பல்துறையிலிருந்து நாலாம்கட்டை வரை சிங்களமக்கள் புதிதாக குடியேற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

நாலாம்கட்டைச்சந்தியில் வலதுபக்கமாக திரும்பியவாகனம் புகையிரத கடவையினைத் தாண்டி கவாட்டிக்குடாகடந்தது. அங்குதான் விடுதிகள் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அதிகளவான தொழிலாளர்கள் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருப்பதை அவதானித்துக் கொண்டுசென்றான்.

கவாட்டிக்குடா கடக்கும்போது மீண்டும் தோழர் இராசகிளியின் நினைவு வந்தது. பள்ளிவாசல், சைவக்கோயில், வேதக்கோயில், பௌத்த விகாரை என்பன அருகருகே திருக்கோணமலை மாவட்டத்தில் இருக்கும் ஒரே ஓரிடம் அந்தஇடம் தான் என அவர் சொன்னவைகள் ஒவ்வொன்றாக நினைவிற்கு வந்தன.

முன்னைய நாட்களில் தமிழ்மக்கள் சீனன்குடாவில் அதிகளவில் வசித்தார்கள். ஆனால் இனமுறுகல் கரணீயமாக அவர்கள் அவ்விடத்தை விட்டு பலர் வெளியேறிவிட்டார்கள். கோவிலை நிர்வகிப்பதற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என அந்த இடத்தைப் பற்றிய குறிப்புகளை சொன்னார் தோழர் இராசகிளி. புதிய தகவல்களாக இருந்தாலும் தெரிந்திருக்க வேண்டிய விடயங்கள் என்பதால் அதிக கவனம்கொடுத்து கிரகிப்பான் ஆபரன். அதனால் தானோ என்னவோ ஆபரனில் தோழர் இராசகிளிக்கு அதிகளவான விருப்பம்.

மகிழ்சென்னியின் வீட்டை இராணுவம் சுற்றி வளைத்தது, சின்னத்தம்பிக்கு பாம்பு கடித்தது பற்றியே தம்பலகமம் முழுவதும் பேச்சாக இருந்தது.

பொற்கேணி, சுவாமிமலைக்கொலனி, புதுக்குடியிருப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிபுரம், பத்தினிபுரம் ஆகிய ஊர்களில் வசிக்கும் இளைஞர்கள் என்று கூறக்கூடிய மீசைமுளைத்த எல்லோரும் கண்ணாக்காட்டிற்குப் பக்கத்தி லுள்ள உமிரிக்காட்டு பிள்ளையாரடியிலும் நீனாமோட்டை ஆற்றடியிலும் நின்றனர்.

உமிரிக்காட்டுப் பிள்ளையார் வரலாற்றில் பழமையானது. ஒல்லாந்தர் ஆட்சி புரிந்த காலத்தில் அந்தக்கோயில் எல்லா இடமும் புகழ்பரப்பி இருந்திருக்கிறது என வரலாற்றறிஞர்கள் கூறியுள்ளதாக உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அந்த இடத்திற்கு வந்துநின்றவர்கள் பேசிக்கொண்டார்கள்.

ஊரில் படையினர் வருகின்றார்கள் என்று தகவல் கிடைத்தால் அப்பகுதிவாலிபர்கள் தமதுயிரைப் பாதுகாத்துக்கொள்ளுகின்ற இடமாக உமிரிக்காட்டுப் பிள்ளையாரடியைச் சுற்றியிருக்கும் கண்ணாக்காடுதான் தஞ்சமாக இருந்தது.

## - 2 -

தம்பலகமத்திலுள்ள மக்களின் வாழ்நிலை ஊரகசூழலுடன் வயல்வெளிகள் எப்போதுமே நீரினால் நிரம்பியிருப்பதால் குளிர்மையுடனும் மாலைநேரம் கரப்பந்து, ஜாடிபாய்தல், உதைபந்து போன்ற விளையாட்டு களுடன் மகிழ்ச்சிகரமாகவே கரையும்.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான கிளித்தட்டு தம்பலகமத்தில் ஜாடி என்றே அழைக்கப்படுகின்றது.

கள்ளிமேட்டில் உள்ள வெள்ளைப்பிள்ளையார் கோவிலடி யிலுள்ள விளையாட்டுத் திடலில் மாலை ஐந்துமணிக்கு வாலிபர்கள் கூடுவார்கள்.

இரவு ஒன்பதுமணிவரை விளையாடி மகிழ்வார்கள்.

ஓர் அணிக்கு ஏழுபேர் என அணியாகுவார்கள். ஒருவர் தாச்சி.

தாச்சிதான் அணியின் தலைவர். ஏனையோர் கோடுகளை மறிப்பார்கள்.

முதல்நாள் மகிழ்சென்னியும் ஆபரனும் இங்குதான் விளையாடி னவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுநிலா என்பதால் ஏழுமணியுடன் விளையாட்டினை முடித்து விட்டார்கள். ஏழு மணிக்கு சண்முகலிங்கம் ஐயாவின் பாட்டுக்கச்சேரி நடந்தது.

பட்டிமேட்டு சண்முகராசா அண்ணன் மிருதங்கம் வாசிப்பார். சண்முகலிங்கம் ஐயாவின் தம்பி மகாலிங்கமும்ஐயாவும் பாடுவார்.

ஒவ்வொரு முழுநிலாவுக்கும் புதியபாடகர் ஒருவர் அறிமுகம் செய்யப்படுவார்.

தம்பலகமத்தின் ஏனைய ஊர்களில் இருந்தும் மக்கள் கள்ளிமேட்டுக்கு வந்து கச்சேரி பார்ப்பார்கள்.

கச்சேரியில் கலந்து கொள்பவர்கள், பார்வையாளர்கள் எல்லோரும் இரண்டு உருபா அங்கு வைக்கப்பட்டிருந்த பெட்டியில் போடுவார்கள். எனினும் சிறுவர்கள் விலக்களிக்கப்படுவார்கள்.

சேரும் பணத்தினை சின்னத்தம்பி எடுத்துச்சென்று சவ்வரிசி, சீனி, ஏலக்காய், சேமியா, முந்திரிகை வற்றல், உடைத்த கச்சான் ஆகிய உள்ளீடுகளை வாங்கிவருவான்.

கோயிலுக்கு அருகில் இருக்கும் நடேசுப்போடியார் தனது பங்களிப்பாக தனது வளவில் இருக்கும் தென்னையிலிருந்து தேவையானளவு தேங்காய்கள் பறிந்துக் கொடுப்பார்.

சின்னத்தம்பி சவ்வரிசிக்கஞ்சி காய்ச்சுவான்.

சவ்வரிசிக் கஞ்சிதான் பாயாசம் என்பது அங்குள்ளவர்களுக்கு தெரியாது என்பது நகைச்சுவையான உண்மை.

சரியாக ஏழு மணியாகியது. "புல்லாங்குழல் கொடுத்த மூங்கில் களே" என தனது மதுராந்தகக் குரலால் மயக்கினார் சண்முகலிங்கம் ஐயா.

வழக்கமாக "மண்ணானாலும் திருச்செந்தூரில் மண்ணாவேன்" என்ற பாடல்தான் பாடுபவர் இன்று அதைப்பாடவில்லை. ஏனோவென பார்வையாளர்கள் தமக்குள் பேசிக்கொண்டனர்.

கச்சேரி தொடங்கும் முன்னர் ஐயாவிடம் சென்ற சின்னத்தம்பி இரு கோரிக்கைகளை முன்வைத்தான்.

முதலாவது பாடலாக தனக்கு விருப்பமான பாடலைப் பாடவேண்டும். இரண்டாவது தான் பாடுவதற்கு இன்றுஒரு வாய்ப்புத் தரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பியை ஏறஇறங்கப் பார்த்தார் சண்முகலிங்கம் ஐயா.

'ஏண்டா சின்னத்தம்பி நீ பாடுவியாடா?'

'ஓரளவு பாடுவன் ஐயா.'

'நான் ஒருநாளும் நீ பாடினதக் கேக்கவே இல்லையேடா.'

'தெருக்கள்ல நான் ஒருநாளும் பாடுறல்ல ஐயா'

'என்னடா... எனக்கு நக்கலா. சரி சும்மா ரெண்டுவரி பாடன் பாப்பம்.'

'இப்ப வெக்கமா இருக்கு ஐயா. நான் பாடுவன் ஐயா. நம்புங்க. நீங்க கூப்பிடுங்களன். நான் பாடுறனா? இல்லையா? எண்டு பாருங்களன்'

'அடேய் தம்பி என்ர மானத்த வாங்கிப் போடாதடா. எல்லாரும் சிரிப்பாங்களடா'

'ஆருமே சிரிக்காம நான் பாத்துக்கொள்ளுவன் ஐயா. நீங்க ஒண்டுக்கும் கவலப்படாதீங்க ஐயா'

'ஒண்டுக்குப் போறதுக்கு நான் ஏன்டா பயப்பிடோணும். நீ என்ன சொன்னாலும் எனக்குப் பயமாத்தாண்டா இருக்கு. சரி என்ன பாட்டுப் பாடப்போறா எண்டாவது சொல்லன் தம்பி'

'இரவைக்குப் பாடுறனே ஐயா'

'பாட்டையும் சொல்ல மாட்டன் என்றா. சரி.. இரவைக்குப் பாடு பாப்பம்'

ஒவ்வொரு முழுநிலாவுக்கும் சவ்வரிசிக்கஞ்சி மனமுவந்து காய்ச்சுபவனின் கோரிக்கையை சண்முகலிங்கம் ஐயாவினால் மறுக்க முடிய வில்லை. அவனது கோரிக்கைகள் இரண்டையும் அன்று நிறைவேற்றினார்.

ஆறாவது பாட்டு மகாலிங்கம் ஐயா பாடிமுடிந்த போது சவ்வரிசிக் கஞ்சி காய்ச்சி முடிந்திருந்தது.

"சின்னத்தம்பி இஞ்சவா. கஞ்சி கொஞ்சம் ஆறட்டும், அதுவரைக் கும் இண்டைக்கு நீ ஒரு பாட்டுப்படி"

சின்னத்தம்பியை பாட அழைத்தவுடன் கச்சேரி பார்த்துக்கொண்டு இருந்தவர்கள் எல்லோருக்கும் ஆச்சரியம். சின்னத்தம்பி பாடுவானா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாளும் எங்கேயும் பாடவேயில்லையே சின்னத்தம்பி என்று எல்லோர் மனங்களும் சொல்லின.

மகிழ்சென்னிக்கும் ஆச்சரியம் தான். மாமா பாடப்போறார் என்று மகிழ்ந்தான்.

மடித்துக் கட்டியிருந்த வேட்டியைக் கீழே எடுத்துவிட்டு நடுவே வந்தான் சின்னத்தம்பி.

சண்முகராசா அண்ணன் மிருதங்கத்துடன் தயாரானார்.

மிருதங்கம் மாத்திரமே இசைக்கருவி. ஒத்திகை எதுவும் கிடையாது.

சின்னத்தம்பி ஒலிவாங்கியைத் தன்கையில்வாங்கி வாயினருகில் கொண்டு சென்று தன்குரலைச் சிறிதாகச் செருமிக்கொண்டு முதன்முதலாய் பாடப் போகிறோமே என்ற எதுவித பதற்றமுமின்றி பாடத்தொடங்கினான்.

"கண்ணிலே என்ன உண்டு கண்கள்தான் அறியும்

கண்ணிலே என்ன உண்டு கண்கள்தான் அறியும்

கல்லிலே ஈரம் உண்டு கண்களா அறியும்

என் மனம் என்னவென்று என்னையன்றி யாருக்குத் தெரியும்

கண்ணிலே என்ன உண்டு கண்கள்தான் அறியும்

கல்லிலே ஈரம் உண்டு கண்களா அறியும்....."

பாடல் முடிந்த பின்பு நீண்ட நேரமாகியும் கைதட்டல் நிற்கவே இல்லை.

சின்னத்தம்பியின் கண்கள் அவனை அறியாமலேயே நீரால் நிரம்பியது.

சின்னத்தம்பியின் வெண்கலக்குரல் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்திருக்க வேண்டும். இதுவரை சின்னத்தம்பிபோல் இனிமையாக அந்த இடத்தில் யாருமே பாடல் பாடியிருக்கவில்லை என்பதே உண்மை.

சின்னத்தம்பிபோல் எத்தனையோ பேர் தங்களது திறமைகளை வெளிக்காட்டாமல் இலைமறை காய்களாக இருக்கின்றார்கள்.

சண்முகலிங்கம் ஐயா எழும்பி சின்னத்தம்பியை கட்டிப்பிடித்து இறுகவணைத்து "இவ்வளவு நாளும் எங்கடாதம்பி வச்சிருந்தா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவையும்" என கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தவராக தளுதளுத்த குரலில் வாழ்த்தினார். இனி ஒவ்வொரு முழுநிலாவிற்கும் சின்னத்தம்பி பாடுவான் என்று அறிவித்தார் சண்முகலிங்கம் ஐயா.

மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினான் சின்னத்தம்பி.

அந்நேரத்தில் தனது முதலும் கடைசியுமான பாட்டுஇது என்றோ அன்றுதான் கடைசியாக கஞ்சிகாச்சுகிறோம் என்றோ அவனும் அறிந்திருக்கவில்லை, சண்முகலிங்கம் ஐயாவிற்கும் தெரிந்திருக்கவில்லை.

தம்பலகமத்தில் சுவாமிமலை சின்னத்தம்பி என்றால் சின்னப்பிள்ளைக்கும் தெரியும். ஊரில் எங்கு பொதுவேலை நடந்தாலும் சின்னத்தம்பி இல்லாமல் நடக்காது.

தனது பறக்கும்புறா (flying Pigeon) ஈருருளியில் பறந்துபோய் நிற்பான்.

ஊரில் அனேகர் லுமாலா (Lumala) ஈருருளிதான் வாங்குவார்கள். அதிலும் வாலிபர்கள் நீலநிற லுமாலா வாங்குவார்கள். லுமாலா ஈருருளி வைத்திருந்தால் அவர்களுக்கு தனி மரியாதை ஊரில் இருந்தது.

அதேநேரத்தில் ரளி (Raleigh) ஈருருளி வைத்திருப்பவர்கள் கொஞ்சம் பணம் வைத்திருந்தவர்களாக இருந்தனர், இங்கிலாந்திலிருந்து வருவதனால் விலை அதிகம் என்பார்கள்.

பறக்கும்புறா விலையும் குறைவு, பாரமும் அதிகளவில் ஏற்றலாம் என்பதால் சின்னத்தம்பி அதனை வாங்கியிருந்தான்.

அந்த ஈருருளியில்தான் அவன் வயலுக்கும் செல்வது வழக்கம். அன்று வயல்விதைப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. காலையிலேயே வேலையாட்கள் வயலுக்கு வருவதற்கு முன்பே வேலையாட்களுக்குத் தேவையான காலைச் சாப்பாட்டிற்காக வீட்டில் செய்துகொடுத்த கந்தளாய்ச் சந்தையில் வாங்கி வந்த கூனிக்கருவாடு போட்டு இடித்த தேங்காய்ப்பூச் சம்பலையும் 'ஆவன்னா' கடையில் வாங்கிய ஐந்து இறாத்தல் பாணையும் எடுத்துக்கொண்டு வயலுக்கு வந்துவிட்டான் சின்னத்தம்பி.

வயலில் ஆட்கள் வேலை செய்து கொண்டிருக்கும் போது அவர்களை கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும் பழக்கம் சின்னத்தம்பி யிடம் என்றுமே இருந்ததில்லை. அவனும் அவர்களுடன் சேர்ந்து வேலைசெய்வான். அன்றும் அப்படித்தான் வரம்பு கட்டிக் கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனுக்கு தாகம் ஏற்பட களத்தடியிலே வைக்கப்பட்டிருந்த குடத்தில் குடிநீர் இருந்ததனால் களத்தடிக்குப் போனான்.

அந்தக் களத்தில்த்தான் அறுவடைசெய்கின்ற நெற்கதிர்களை சூடுவைத்து வசதியான நேரத்தில் சூடடிப்பார்கள். வேலைக்கு ஆட்கள் கிடைத்தால் உடனேயேயும் சூடடிப்பார்கள். வட்டமாக உயர்ந்த மேடான இடத்தில் களம் இருந்தது.

அனேகமான வயல்களில் களம் இருக்கும். களம் இல்லாவிட்டால் பக்கத்து வயல் களத்தில் சூடுவைப்பார்கள். அப்படி இல்லாவிட்டால் ஒரு வரவையினுள் களத்தினை தற்காலிமாக அமைப்பார்கள். வேளாண்மை வெட்டியவுடன் நெற்கதிர்களை எடுத்து வரம்பில் வைத்துவிட்டு வட்டமாகச் செருக்கி கோலத்தினால் கூட்டி உடனடிக் களம் அமைப்பார்கள்.

பக்கத்து வயல்காரர்கள் எப்பவுமே உறவாக இருப்பது வழக்கம். ஆனால் சில இடங்களில் நீர் பாய்ச்சும் நேரங்களில் அயல் வயல்காரர் களுக்கிடையே சண்டை வந்துவிடும். தம்பலகமத்தில் தண்ணீருக்கு எப்பவுமே சிக்கலில்லை. 'குளக்கோட்டன் கட்டிய கந்தளாய்க்குளம் இருப்பதால் வயலுக்கு தண்ணீர்ச் சிக்கலே இல்லை' என்பார்கள் வயல் செய்பவர்கள்.

குளக்கோட்ட மன்னனை தம்பலகத்திலுள்ள மக்களில் ஒருவ ரேனும் ஒவ்வொரு நாளும் ஏதோவொரு கரணீயத்திற்காக நினைத்துக் கொள்வார்கள்.

அவன் கட்டியதாகக் கூறப்படும் ஆதிகோணநாயகர் கோவில் ஊரில் நிமிர்ந்து நின்று ஆனிஉத்தரத்தில் கொடியேறினால் பதினெட்டு நாட்களும் தம்பலகமம் முழுவதுமாக விழாக்கோலம் பூணும். எல்லோர் வீட்டிலும் மரக்கறி உணவுதான். அனைவரும் மச்சம், மாமிசத்தை மறந்திருப்பார்கள்.

சின்னத்தம்பி களத்திற்குச் சென்று குடத்திற்கு மேலே மூடியிருந்த சிரட்டையில் நீர்எடுத்துக் குடித்தபின்பு மூடிவிட்டு திரும்பி வரம்பு கட்டுவதற்கு செல்வதற்கு நாலு அடிகள் எடுத்து வைத்திருப்பான் காலில் ஏதோ கீறியது போல் இருந்தது.

குனிந்து பார்த்தான். புடையன் பாம்பு ஒன்று நெளிந்து நெளிந்து வரம்பு ஓரத்தில் சென்றுகொண்டிருந்தது. அந்தப் பாம்பைத்தான் சின்னத்தம்பி மிதித்துவிட்டான். அது அவனதுகாலை பதம்பார்த்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெண்டைக்காலால் இரத்தம் வழிந்தோடியது.

சின்னத்தம்பி பதற்றப்படவில்லை. வேலை செய்தவர்களிடம் விடயத்தைக்கூற உடனேயே இருவர் சின்னத்தம்பியைத் தூக்கிக் கொண்டுசெல்ல அவர்களுடன் ஆபரனும் பின்னால் சென்றான்.

இடைக்கிடை ஆபரனும் தூக்கினான். விரைவாக செல்ல வேண்டும் என்பதற்காக ஓடிஓடியே போனார்கள். மாக்கையில் ஈருருளி இருக்கு, அதில பிள்ளையான்தம்பியருட்ட போவம் என சின்னத்தம்பி சொன்னான். மாக்கையை அடைந்த போது கொஞ்சம் களைப்பான நிலையினை உணர்ந்தான் சின்னத்தம்பி.

தம்பலகமத்தில் உள்ள மக்களின் பிரதான சொத்து என்றால் அது ஆதி கோணநாயகர் கோயில்தான்.

சின்னத்தம்பிக்கு சிறிதாக மயக்கம்வருவது போல் இருந்தது "தம்பி நீ போய் வீட்ட சொல்லிவிடு. கோவிலடியால போகக்கொள்ள எனக்காக கோணேசரையும் ஒருதரம் வேண்டிக் கொள்ளப்பா" என ஆபரனிடம் சின்னத்தம்பி கோரினான்.

உண்மையில் ஆபரனுக்கு கடவுள் நம்பிக்கையெல்லாம் சிறு வயதில்தான் இருந்தது, இப்பவெல்லாம் கடவுள் பக்தி, இறைநம்பிக்கை யெல்லாம் துளியும் அவன் மனதில் இல்லை. தோழர் இராசகிளியின் வழிநடத்தலில் வளர்க்கப்பட்டதன் விளைவு அது.

கார்ல்மார்க்சின் மூலதனம் எனும் நூலை தனது சிந்தனை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டவன். ஏங்கல்ஸ், லெனின் ஆகியோரின் நூல்கள் படிப்பதில் அலாதி விருப்பம் கொண்டவன். இவர்களது நூல்களை அனைவரையும் வாசிக்க வைக்க வேண்டுமென்பது அவனது அவா.

பொருண்மிய ஏற்றத் தாழ்வுகளுக்கான கரணீயங்களை அறிந்து கொள்வதற்கும் கருத்துருவாக்கங்கள் கருத்துமுதல்வாதத்தின் அடிப் படையிலா பொருள்முதல் வாதத்தின் அடிப்படையிலா உருவாக்கப்பட வேண்டும் போன்ற விடயங்களை அறிந்து கொள்வதற்கும் இவைபோன்ற எண்ணற்ற விடயங்களை அறிந்து கொள்வதற்குமான வழிகாட்டிகளே அந்தநூல்கள் என்ற உண்மையை அறிந்தவன்.

சுப்பையா அண்ணனது வீட்டில் பாதுகாப்பிற்காக வைக்கப் பட்டிருந்த ஈருருளியை எடுத்துக்கொண்டு வீதிக்குவந்தான் ஆபரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி ஐயனார்திடல்ல கனகசிங்கம் மச்சான் இருக்கிறார். அவரிட்ட வாகனம் இருக்கு. எனக்கு நடந்ததச் சொல்லு." என நூறு மீற்றர் தூரத்தில் இருக்கும் வீட்டின் அடையாளத்தை சொன்னான் சின்னத்தம்பி.

ஆபரன் கனகசிங்கத்தாரிடம் போய் விபரத்தைச் சொல்லிவிட்டு சுவாமிமலை நோக்கி நகர்ந்தான்.

கோணேசர் கோவில் முன்னால் போகும்போது சின்னத்தம்பி சொன்னவை நினைவிற்கு வந்தன.

"தன் சிந்தையை, தன் செவிகளை, தன் கண்களை நம்ப மறுக்கும் போது தனக்கு மேலான ஒரு சக்தி உண்டென மனிதன் எண்ணத் தலைப் படுகிறான்" என தனக்குத்தானே நினைத்துக் கொண்டான்.

கனகசிங்கம் சற்றும் சுணங்காமல் தனது சிற்றூர்தியில் புறப்பட்டு சின்னத்தம்பியையும் வந்தவர்களில் ஒருவனான மாதுளனையும் ஏற்றிக் கொண்டு மின்னலாக பறந்தார்.

நாயன்மார்திடல், நடுப்பிரப்பன்திடல் தாண்டி குடமுருட்டி பாலத்தைக் கடந்தவுடன் இருக்கிற பத்தரின் கடையில் சிற்றூர்தியை நிறுத்தி, திறிறோஸ் பத்து சிகரட் உள்ள ஒரு பெட்டியும் பெரியயானைத் தீப்பெட்டி ஒன்றும் வாங்கிக் கொண்டு பறந்தார்.

"உனக்கு இந்த நேரத்திலயும் இது தேவ என" சின்னத்தம்பியின் உரிமையான அதட்டல்

"இல்லமச்சான் உனக்குத் தெரியுந்தானேடா வாகனம் ஓடக் கொள்ள ஒரு திறிறோசெண்டாலும் அடிக்கோணும், இல்லாட்டி என்னவோபோல இருக்கும்டா"

கனகசிங்கத்தாரின் கரணீய நியாயப்படுத்தல் அது.

தம்பலகமத்தில் ஒரு தடவை வெள்ளம் வந்தநேரத்தில முள்ளியடி நீரில் மூழ்கிவிட்டதாம். முள்ளியடியிலுள்ள கிணறுகள் எல்லாம் வெள்ள நீரால் நிரம்பிவிட்டன. குடிப்பதற்கு நீர் முள்ளியடியில் இருக்கவில்லை. ஆகையினால் குடிப்பதற்கு நீர் எடுப்பதற்காக முள்ளியடியில் வசிக்கும் பெண்கள் சின்ன வர்ணமேட்டுக்குச் சென்று மண்குடத்தில் குடிநீர் எடுத்து திரும்பிவரும்போது கல் ஒன்று ஒரு பெண்ணின் காலில் தட்டுப் பட அந்தப்பெண்ணின் இடுப்பிலே இருந்த குடம் வழுகி கீழே விழுந்து உருண்டு உடைந்து விட்டதாம். இதை வெள்ளம் பார்ப்பதற்குச் சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிறுவால்' என்பவர் கண்டுவிட்டார். அந்தப் பெண்ணிடம் "என்ன குடத்த உருட்டியா விளையாடுறா" என்று கேட்டாராம். அன்றிலிருந்து குடமுருட்டிப் பாலமானதாம் அந்தப் பாலம்.

முள்ளியடி தாண்டி சிவத்தப் பாலத்தில் வேகத்தைக் கொஞ்சம் குறைத்து பாலம் கடந்தவுடன் எண்பது கிலோமீற்றர் வேகத்தில் காலிபாஞ்சான் வயல்வெளியில் வளைந்து நெளிந்து போகும் கிரவல் வீதியால் பறந்தது மூவரையும் தாங்கிச்செல்லும் அந்தச்சிற்றூர்தி.

தூரங்கல் கடக்கும்போது லொகருக்கு வாங்கு ஓதுவது கேட்டது.

குறிஞ்சாக்கேணிச்சந்தியையும் முனைச்சேனையும் கடந்து குட்டிக்கரைச்சைப் பாலத்தில் மீண்டும் வேகம் குறைக்கப்பட்டு புகாரியடிச் சந்தியால் வலது பக்கமாக திரும்பி கிண்ணியா துறையடிக்கு வந்தபோது பாதை மற்றைய பக்கத்தில் நின்றது. அது கனகசிங்கத்தாருக்கு ஏமாற்றத் தையும் கவலையையும் கொடுத்தது.

இவ்வளவு வேகமாக தன் வாழ்நாளில் கனகசிங்கம் தன் வாகனத்தை ஓட்டியிருக்கவில்லை.

துறையடியில் காத்திருந்தவர்களிடம் அவசரநிலையைப் பகிர்ந்துகொண்டு ஊற்றடிப்பிள்ளையார் கோவிலுக்கு வெளியே கிடந்த ஒருகல்லின்மேல் அமர்ந்திருந்து இன்னுமொரு திறிறோசுக்கு விடை கொடுத்தார்.

சிற்றூர்தியில் கண்மூடிப் படுத்திருந்த சின்னத்தம்பியை இடையிடையே எட்டி எட்டிப் பார்த்துவந்தார்.

சின்னத்தம்பி மயக்கமான நிலையில் இருந்தாலும் இடைக்கிடை வாந்திஎடுத்த போது அதனை தன்கையால் பிடித்து வெளியே போட்டுவிட்டு சின்னத்தம்பியின் வாயை அருகிலிருந்த தேநீர்கடையில் நீர் வாங்கிவந்து கழுவித்துடைத்து விட்டார்.

ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு யுகமாக நகர்ந்தது அவருக்கு. முகத்தில் சோக ரேகைகள் மெதுமெதுவாக உருவாகத் தொடங்கியிருந்தன. கனகசிங்கத்தாரின் மனம் நிலையில்லாமல் பதற்றப்பட்டுக் கொண்டிருந்தது. இருதயம் வேகமாக அடிக்கத்தொடங்கியது.

தனக்கு மச்சான் முறையென்றாலும் சின்னத்தம்பி சிறுவயதி லிருந்தே அவரது நெருங்கிய நண்பனாகவும் இருக்கிறான். கனகசிங்கத்தாரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல்வேலை நேரங்களில் சின்னத்தம்பிதான் அவருக்கு வலதுகையாக இருப்பான்.

கனகசிங்கத்தாரின் வீடு, தென்னை ஓலையால்தான் கூரையிடப் பட்டிருந்தது. ஒவ்வொரு ஆண்டும் பத்தாம்மாதம் புதிய கீடுகுகளால் கூரைவேயப்படும். சின்னத்தம்பிதான் சின்னக்கிண்ணியா போய் சம்சுதீனின் கடையில் கிடுகு வாங்கி வந்து அயலிலுள்ள வாலிபர்களை மாலை நேரத்தில் அழைத்துவந்து கூரையை வேய்கின்ற பணியினைச் செய்வது வழக்கம்.

கூரை வேய்கின்ற வேளைகளில் வேலை செய்பவர்களுக்கு தொண்ணூற்றி யெட்டாம் கட்டையிலிருக்கும் கட்டையனின் வெதுப் பகத்தில் பாண் வாங்கிவந்து மாசிபோட்ட தேங்காய்ப்பச் சம்பலுடன் கனகசிங்கத்தார் கொடுப்பார். சூடான சுவையான இஞ்சிபோட்டதேநீர் மேலும் சுவைசேர்க்கும்.

முக்கால் மணி நேரத்தின்பின் பாதை வந்தது. நின்றவர்கள் சிற்றூர்திக்கு வழி விட்டார்கள். ஒன்பதுநிமையப் பயணத்தில் அக்கரையை அடைந்தது பாதை.

சின்னத்தம்பி நித்திரையாக இருந்தானா மயங்கிவிட்டானா என்பது வந்த இருவருக்கும் தெரியவில்லை.

பாதையால் இறங்கியதும் அதேவேகம். வெள்ளைமணலில் இருக்கும் சீனன்குடா காவல்துறை கடந்து இருவளைவுகள் கடந்தபின் நாச்சிக்குடா பள்ளிவாசலைத் தாண்டியவுடன் வீதியின் வலதுபக்கமாக சிற்றூர்தி நின்றது.

கனகசிங்கமும் மாதுளனும் சிற்றூர்தியில் அறிவற்ற நிலையில் வாயில் நுரை வந்தவாறு கிடந்த சின்னத்தம்பியைத் தூக்கிக்கொண்டுபோய் பிள்ளையான்தம்பி ஐயாவிடம் ஒப்புவித்தனர்.

செந்தளிப்பான முகம். பதற்றமில்லாத தெளிந்த பார்வை குடிகொண்டிருந்தது பிள்ளையான் தம்பியரிடம்.

பாம்பு கடித்த இடத்தை உற்றுப்பார்த்தவர் சின்னத்தம்பியின் வலதுகையைப் பிடித்து நாடித்துடிப்பைப் பார்த்தார்.

"சே, ஒரு மணித்தியாலத்துக்கு முதல் கொண்டுவரேலாம போய்டே. இது காலக்கடி. எட்டடிப் புடயன் கடிச்சிருக்கு. பயப்பிடாதீங்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்பம்....." என நம்பிக்கையற்ற விதமாகக் கூறினார். வார்த்தைகளில் வெறுமை தெரிந்தது. கொண்டு சென்றவர்களின் கண்களில் ஏமாற்றம் தெரிந்தது.

தன்னிடம் வந்தவர்களை நம்பிக்கையிழக்க வைக்க அவர் எப்போதும் விரும்பியதில்லை. தன்னால் முடிந்தளவு முயற்சிப்பார். "எதற்கும் கவலைப்படாமல் இருங்க" என்று கூறிக்கொண்டு தன்கடைக் குட்டியை அழைத்தார்.

"ஜீவா பெட்டியத் துறந்து பேர்மசாப் பிளேற் ஒண்டு எடுத்துவா"

ஜீவா என்று செல்லமாக அழைக்கும் பிள்ளையான் தம்பியரின் கடைக்குட்டி ஜீவலக்சுமி கையில் பேர்மசார்ப் பிளேட்டுடன் அவரருகில் நின்றாள்.

யாரும் விடம்தீண்டி வந்தால் பம்பரமாக ஜீவா சுழல்வாள். 'எப்படியாவது காப்பாத்துங்க அப்பா' என்று கண்கலங்கிக் கெஞ்சுவாள்.

யாரென்றே தெரியாதவர்களைக் கூட காப்பாற்றச்சொல்லி கேட்பதுதான் மனிதமோ என தன்மகளை எண்ணி மனதார பெருமிதப் பட்டுக்கொள்வார் அப்பா.

ஜீவா கொடுத்த புதிய கூரான பிளேற்றால் பாம்பு கடித்த இடத்தைச் சுற்றி மெதுவாகச் சுரண்டி வளித்தார்.

காயத்தைப் பார்த்தார். நாலுபற்களும் கெண்டைக்காலை ஆழமாக பதம்பார்த்திருந்தன.

என்ன நடக்கப்போகிறது என்பதை முழுமையாக தெரிந்து விட்டாலும் சற்றும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் தனது பணிகளைச் செய்யத்தொடங்கினார்.

"பிள்ள எண்ணப்போத்தல எடுத்துவாம்மா"

கூறிவிட்டு முழங்காலுக்குச் சற்றுகீழை கையை வைத்து காயம் நோக்கி அமத்திக் கொண்டுவந்தார் பிள்ளையான் தம்பியார்.

இரத்தம் கடும்கறுப்பு நிறத்தில் குபு குபு என்று வெளிவந்தது.

இப்படி பலதடவைகள் செய்தவர் தூயதுணியால் துடைத்துவிட்டு நாடித் துடிப்பை தனது கையினாலே சின்னத்தம்பியின் இடது கையைப் பிடித்துப் பார்த்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கணிப்பினை நாடித்துடிப்பின் எண்ணிக்கை மெய்ப்பித்தது.

ஜீவா கொண்டுவந்த எண்ணையை தனது வலதுகையின் உள்ளங்கையில் ஊற்றினார். கண்ணைமூடி ஏதோ முணுமுணுத்தார். அவரது குலதெய்வத்தை துணைக்கழைத்தார் போலும்.

கண்ணைத்திறந்து அறிவற்ற நிலையில் மயங்கிக்கிடந்த சின்னத் தம்பியின் தலையில்வைத்துத் தேய்த்தார்.

இருபது நிமையங்கள் கடந்திருக்கும். அருகில் சின்னத்தம்பியை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த மாதுளன் "ஐயா ஐயா சின்னத்தம்பி அண்ணன் கண் திறந்திருக்கிறார்" என்று மகிழ்ச்சி பொங்க உரத்த தொனியில் சொன்னான்.

பிள்ளையான் தம்பியர் அருகில்வர சின்னத்தம்பி கடைவாயால் சிரித்தான்.

சத்தி எடுத்தவரா என கனகசிங்கத்தாரைப் பார்த்துக்கேட்டார் தம்பியர்.

"துறையடியில நிக்கக்கொள்ள மூன்றுதரம் சத்தி எடுத்தவர். பிறகு மயங்கிற்றார்." என்றார்.

"பேதி மருந்துப் போத்தல எடுத்துவா" என கூறி முடிக்கமுன்பே இரண்டு போத்தல்களுடன் அப்பா முன்னால் நின்றாள் ஜீவா.

சின்னத்தம்பியின் தலையை மெதுவாக தூக்கினார். சின்னத்தம்பி எழுந்து இருந்தான்.

ஒருபோத்தலில் இருந்த உருண்டையான குளிகையொன்றை அவன் வாயில்போட்டு இளஞ்சூடான நீரைக்கொடுத்து குடிக்கச்சொன்னார்.

அவர் சொன்னதை சொன்னவாறே சின்னத்தம்பி செய்தான்.

இன்னொரு போத்தலில் இருந்தமருந்தை கரண்டியிலூற்றி குடிக்கக் கொடுத்தார்.

குடித்தான்.

நல்லா மூத்திரமும் பீயும் போகோணும். அப்பதான் விடம்வெளி யேறும் என்று கொடுத்த மருந்துகளுக்கு விளக்கம் கொடுத்தார் பிள்ளையான் தம்பியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரை மணிநேரத்தின் பின் கழிப்பறை நோக்கி நகர்ந்தான் சின்னத்தம்பி.

பிள்ளையான்தம்பியரின் முகம் மலர்ந்தது.

"நான் நினைக்கவே இல்ல. இவர் இவ்வளவு விரைவாக எழும்புவாரென்று. நல்ல திடமான நெஞ்சுரம் கொண்டவர்களுக்குத்தான் இப்படி நடக்கும்" கனகசிங்கத்தாரை மகிழ்ச்சிப்படுத்தினார்.

கழிப்பறையால் வந்தவனை மண்டபத்தில் இருந்த கட்டிலில் படுக்கச்சொன்னார். படுத்தான். நித்திரை கொள்ளாமல் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

கனகசிங்கத்தாருக்கும் மாதுளனுக்கும் இராணியம்மா இஞ்சித் தேநீர் கொடுத்தார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருதுண்டுச் சக்கரையும் கொடுத்தார்.

இராணியம்மா ஜீவாவின் அம்மா. சாவகச்சேரியில் பிள்ளையான் தம்பியருக்காகவே பிறந்தவர்.

தேநீர் குடித்துக்கொண்டே பிள்ளையான் தம்பியரிடம் பேச்சுக் கொடுத்தார் கனகசிங்கத்தார்.

பதிலுரைத்தார் பிள்ளையான் தம்பியார்.

"நாங்க மட்டக்களப்பில துறைநீலாவண. எங்கட அப்புச்சி தம்பிமுத்து அவற்ற அப்பா சுப்பிரமணியத்திட்ட இருந்து இந்த மருத்துவத்த படிச்சவராம்.

அவருக்கு ஆர் சொல்லிக்குடுத்த எண்டு எனக்குத் தெரியா. ஆனா நாங்க பரம்பர பரம்பரயா செய்துவாறம்.

எனக்கு பதின்னாலுவயசில என்ரஅண்ணன் கோவிந்தபிள்ளை யண்ணனுக்கு சீனன்குடாவில இருந்த கடற்படையில வேலகிடைக்க நாங்க கிண்ணியாக்கு வந்தனாங்க"

"கிண்ணியாவில எங்க இருந்தனீங்க?" மாதுளன் ஆவலாக கேட்டான்.

"கிண்ணியாதுறையடியில இருக்கே ஊத்தடிப் பிள்ளையார்கோயில், அதுக்குப் பின்னாலதான், நாங்க இருந்தனாங்க. அப்பா இந்தமருத்துவத்த கிண்ணியாவில தொடங்கிற்றார். அப்பாக்கு பதினொரு பிள்ளகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரும் பெடியனுகள். அவ்வளவுபேரையும் எப்பிடித்தான் அம்மா வளத்தெடுத்தாவோ தெரியாது" என பெருமூச்சு விட்டார்.

"கிண்ணியாட கல்வித்தந்தை எண்டுசொல்ற காசிநாதர்ஐயாவும் எங்களுக்குப் பக்கத்திலதான் இருந்தவங்க. என்னைப்படிக்கச் சொல்லிப் பாத்தார். நான் பள்ளிகூடம் போகல்ல. ஆனா ஐயா எனக்கு இரவில முட்டாசியெல்லாம் தந்து படிப்பிச்சவர். எண்டாலும் எனக்குப் படிப்பு ஏறல்லப்பா."

"அண்ணன்ர சிபாரிசில எனக்கும் சிலோன்நேவியில வேல கிடச்சிது. நாப்பத்திரெண்டாம் ஆண்டு உலக யுத்தம் நடக்கக்கொள்ள யப்பான்காரன் குண்டு போட்டவனுள்" கூறிக்கொண்டிருக்க

"ஐயா சின்னத்தம்பி அண்ணன்ர கடவாயலா நுரவருது" என்று பதறினான் மாதுளன்.

விபரீதத்தை உணர்ந்தவராக மகளை கவலையுடன் பார்த்தார் பிள்ளையான் தம்பியார்.

இங்கு இப்படியான நிலையிருக்க தம்பலகமத்தில் என்னநடக்கிறது என்பதைப் பாரத்துவிட்டு வருவோம்.

மகிழ்சென்னி சாப்பாட்டை எடுத்துக்கொண்டு விரைவாகச் செல்ல வேண்டும் என்ற நோக்கோடு விரைந்து சென்றான். மாக்கைத்திடலில் சுப்பையா அண்ணன் வீட்டில் ஈருருளியை வைத்து விட்டு மாக்கையாற்றினை கடந்து எவ்வளவு வேகமாக செல்ல முடியுமோ அவ்வளவுவேகமாக நடந்தான். மாக்கையாற்றில் முழங்காலுக்குக் கீழ்த்தான் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது.

தலையில் சோற்றுப்பெட்டி. வலதுகையில் கறிவாளியும் இடது கையில் ஆணம் நிரம்பிய தூக்குப்பேணியும் தாங்கியவனாக நடந்தான். சின்னத்தம்பி அப்படித் தூக்குவதற்கு மகிழ்சென்னியை சிறுவயதிலிருந்தே பழக்கி வந்திருக்கிறான்.

வட்டத்தனை வயலைச் சென்றடையும்போது மணி மூன்றாகி யிருந்தது. வேலை செய்தவர்கள் பசியினால் ஓய்வெடுப்பார்கள் என்றே மகிழ்சென்னி நினைத்துக் கொண்டுசென்றான். ஆனால் வேலைக்குவந்த ஆறுபேரும் வரம்பு கட்டிக்கொண்டு நின்றார்கள். அவர்களின் தொழில் நேர்மையை எண்ணி வியந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோற்றை களத்திலுள்ள மாலுக்குள் வைத்தான். வயலில் கிடுகினால் வேயப்பட்ட சிறியகுடிசையை மால் என்றுதான் அழைக் கின்றார்கள்.

எல்லோரையும் சாப்பிடவருமாறு அழைத்தான். வேலை செய்த வர்கள் வரவையினுள் கிடந்த தண்ணீரில் கால், கைகளைக் கழுவிக்கொண்டு மாலடிக்கு வந்தனர்.

'ஆபரன் எங்க தம்பி?' வேலாயுதம் அண்ணன் கேட்டார். சென்னி பதில் சொல்லவில்லை.

மகிழ்ச்சென்னியின் கடைவாயினால் வந்த இரத்தம் காய்ந்திருந்தது. கன்னத்தில் சிறியகாயம். வேலை செய்பவர்களின் தலைவராக வந்திருந்த வேலாயுதம் அண்ணன் "என்னதம்பி வரக்கொள்ள எங்கயாச்சும் விழுந்திற் றீங்களா?" என் இரத்தத்தினையும் கன்னக்காயத்தையும் பார்த்துக்கேட்டார். அதற்கும் பதிலில்லை.

சில நிமையங்களின் பின்னர் "எல்லாரும் முதல்ல சாப்பிடுங்க பிறகு சொல்றன்" என கூறிக்கொண்டே மாலில் இருந்த சாப்பாட்டுத்தட்டு களில் சோற்றை வைத்தான். வேலாயுதம் அண்ணன் கறிகளை வைத்தார்.

"ஆணம் தூக்குப்போணியில இருக்கு விட்டுச்சாப்பிடுங்க" என்றவன் நடந்தவற்றை விரிவாகக் கூறினான். சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் களின் விழி பிதுங்கியதை அவதானித்தான் சென்னி. அச்சத்துடன் கவலையும் அடைந்தனர்.

மகிழ்சென்னிக்கு தட்டில் சாப்பாட்டை வேலாயுதம் அண்ணன் போட்டுக்கொடுத்து "நீயும் சாப்பிடுதம்பி" என்றார். கையைநீட்டி சோற்றுத் தட்டை வாங்கிச் சாப்பிட்டான்.

"அண்ணன் வேலமுடிய இண்டைக்கு சுப்பையாஅண்ணன் வீட்ட நில்லுங்க. சாப்பாட்டுக்கும் நான் அங்க சொல்லிவிடுறன். நான் நாச்சிக்குடாவுக்குப் போறன். மாமாவுக்கு என்னமாரியோ தெரியாது. அதான் கவலயாக்கிடக்கு." மகிழ்சென்னி கவலையுடன் கூறினான்.

"சின்னத்தம்பிக்கு ஒண்டும் ஆகாதுதம்பி. அவர் நல்லாத்தான் போறார். அவர் நல்ல திடமான ஆள்தானே. பாம்பு கடிச்ச உடனேயே நான் கெண்டக் காலுக்கு மேல என்னட்டக்கிடந்த நூலால கட்டினனான். விடம் மேல போயிருக்காது. மாக்கயில இருந்து வாகனத்திலதானே போனவங்களாம்" என்றார் வேலாயுதம் அண்ணன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆற்ற வாகனமாம் அண்ண" மகிழ்சென்னி.

"ஐயனார்திடல் கனகசிங்கம் எண்டு உங்கடமாமா சொன்னவராம்" வேலாயுதம் அண்ணன்.

"மாமாட மச்சான் மட்டுமில்ல அண்ண அவர் மாமாட நெருங்கிய கூட்டாளியும் அவர்தான் அண்ண. அவரெண்டா எல்லாத்தையும் பாப்பார்." சென்னி ஓரளவு நிம்மதியடைந்தான்.

எனினும் அவனால் சாப்பிட முடியவில்லை மகிழ்சென்னியால். மாமா திடமாகவே மகிழ்சென்னியை வளர்த்திருந்தாலும் மாமாவிற்கு பாம்பு கடித்து விட்டதனால் சற்று தளர்வடைந்தே போனான். அவனது மனதில் ஏதோ புரியாத அச்ச உணர்வு ஏற்பட்டதை உணர்ந்தான். மாமாவிற்கு எதுவும் நடக்காது என நினைத்துக்கொண்டே பிள்ளையான் தம்பியரின் வீட்டைச் சென்றடைந்தான்.

சின்னத்தம்பியை உள்ளே சென்றுபார்த்த சென்னி சிறிது நேரத்தில் கவலைதோய்ந்த முகத்துடன் முற்றத்திலிருந்த இருக்கையில் வந்தமர்ந்தான்.

பிள்ளையான்தம்பியார் நம்பிக்கையிழந்து கவலையடைந்தவராக தனது திறமைகளை எல்லாம் பயன்படுத்தி, தான்படித்த படிப்புகளை யெல்லாம் முழுமையாகப் பயன்படுத்த தீர்மானித்தார்.

சின்னத்தம்பிக்கு வாயினால் நுரைவந்துகொண்டிருந்தது. கடைக் குட்டியை கவலையுடன் பார்த்த பிள்ளையான்தம்பியார் ஏதோ மனதில் நினைத்தவராக நுரையைத் துடைத்த பின்னர் வீட்டினுள் சென்று உடனடியாக மருந்துஒன்றை தயாரித்தார். தனது வளவின் பின்பக்கம் இருக்கும் ஒரு மருத்துவச்செடியின் பெயரை தனது மகளிடம் யாருக்கும் கேட்காதவாறு மெதுவாகக்கூறி எடுத்து வரும்படி கூறினார். அதனை இடதுகையின் உள்ளங்கையில் வைத்து வலது கையின் பெருவிரலால் கசக்கி சாறாக்கினார். சாற்றினை ஏற்கனவே தயாரித்த மருந்துடன் சேர்த்துக் கலந்தார்.

சின்னத்தம்பியின் மூக்கருகே கொண்டு வந்து பிடித்தார். சின்னத் தம்பி விருட்டென எழும்பி இருந்தான். இருமினான். தயாராக வைத்திருந்த மருந்தை உடனடியாகச் சின்னத்தம்பிக்குக்கொடுத்தார். சின்னத்தம்பியின் முகம் மலர்ந்தது. அதைக்கண்டு கடைக்குட்டியின் முகம் மலர்ந்தது. மகளின் மகிழ்ச்சியைக் கண்ட அப்பா பிள்ளையான்தம்பி உண்மையில் நீண்டநாட்களின் பின்னர் உளமார மகிழ்வடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனஉயிரை மீட்ட மகிழ்ச்சியது. பிள்ளையான் தம்பியருக்கு மாத்திரமே தெரிந்த உண்மையது. கடைசியாகக் கொடுத்தமருந்து இன்று தான் முதல் தடவையாக அவர் கொடுத்திருக்கிறார். உடல் நல்ல திடகாத்திர மானவர்களுக்கே கடைசி முயற்சியாக செய்யும் மருந்துஅது. யாருக்கும் இதுவரை அவர் பயன்படுத்தியதில்லை. நமதுமக்கள் அந்த மருந்தினாலேயே சாவடைந்து விட்டார் என சொல்லி விடுவார்கள் என்ற நியாயமான பயம் அவரிடம் இருந்தது. ஒருவர் சாகப்போகின்றார் என்று தெரிந்தால் அதனைப் பயன்படுத்த வேண்டிய தேவையில்லை என்பதே அவரது எண்ணமாக இருந்தது.

ஆனால் இன்று சின்னத்தம்பிக்கு கொடுக்கவேண்டும் என்ற எண்ணம், தனது கடைக்குட்டியின் கெஞ்சுதலால் "வாறது வரட்டும்" என்று துணிந்தே செய்தார்.

உரிமையாளர்கள் யாரும் இல்லாத நிலையில் அப்படிச்செய்வது தவறென உணர்ந்தவர் சாகப்போகின்ற ஒருவருக்கு செய்வதில் தவறில்லை என்ற முடிவுக்கு வந்ததனால் செய்தார். வெற்றியும் கண்டார்.

ஐந்து நிமையங்களில் கழிப்பறையினை நோக்கி நடந்த சின்னத் தம்பியிடம் "கூட மூத்திரம் பெய்யுங்க தம்பி" என்று பிள்ளையான் தம்பியர் கோரிக்கை வைத்தார்.

கழிப்பறைக்குச் சின்னத்தம்பி போனவுடன் கனகசிங்கத்தாரிடம் "இக்கட்டான நிலையைத் தாண்டிற்றம். ஆனால் இப்பவும் உயிருக்கு உத்தரவாதம் இல்லை" என பெரியதொரு குண்டைத் தூக்கிப்போட்டார் பிள்ளையான் தம்பியார்.

"என்ன மருந்து குடுத்தனீங்க" மாதுளன் அறியும் நோக்கில் கேட்டான்.

"மருந்துகளின் பெயரைச் சொன்னால் அது பலிக்காது என்று எனக்குச் சொல்லித் தந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையோ இல்லையோ ஆனால் நான் அவர்களிடம் சத்தியம்செய்த பின்னர்தான் இந்தப்பணியை செய்கின்றேன். அதனால சத்தியத்தை என்னால் மீறமுடியாது தம்பி" என மருத்துவ இரகசியத்தைக் கூற மறுத்துவிட்டார்.

இந்த மருந்துகளையெல்லாம் தயாரிக்கிறதுக்கான மூலிகைகளை தம்பலகமம், சல்லி, சாம்பல்தீவு, மாங்கணாய். மூதூர், பூவரசந்தீவு, கச்சக்கொடித்தீவு போன்ற இடங்களுக்குப் போய் பிச்சுவாறனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈருருளியிலதான் போவன். சிலநேரம் ரெண்டு, மூணு நாள் அந்த இடங்கள்ல தங்கியிருக்க வேண்டியும் வரும்.

சிலமருந்துகள் கிண்ணியாவில இருக்கிற அஹமது லெப்பையிர மருந்துக் கடையில வாங்குறனான். அவர் மருதமுனையில இருந்து கிண்ணியாவில மருந்துக்கடை போட்டவர். இப்பவும் அந்தக்கட இருக்கு. சில மருந்துகள மலயில இருக்கிற பரஞ்சோதிகடயில வாங்குவன்."

"கேட்கிறன் எண்டு பிழயா நினைக்காதீங்க ஐயா, எவ்வளவு காசு எடுக்கிறனீங்க?"

மாதுளனின் கேள்வியைக் கேட்டவர் கொல்லெனச் சிரித்துக் கொண்டே தனது கடைக்குட்டியை அழைத்து தனது மடியில் இருத்திக் கொண்டு "தம்பி நான் செய்யிறது உழைப்பு இல்ல. உயிரக்காக்கிற பணி. நாங்க காசுக்கு இத செய்யிற இல்ல. எனக்கு கடற்படயிலவேல கிடைக்க முதல் சரியான நிதிநெருக்கடி. அப்பகூட நான் ஆரிட்டயும் எதுவும் வாங்கிறல்ல. மருத்துவத்துக்கு வாற ஆக்களுக்கு நாங்கதான் சாப்பாடும் குடுப்பம். அதுவும் சும்மாதான் குடுப்பம். நான் அப்ப கூலி வேலைக்குப் போறனான். அந்தக் காசத்தான் என்ர குடும்பம் செலவு செய்யவேணும். மருத்துவத்துக்கு வாற ஆக்களுக்கும் தேவையான மருந்து சாப்பாடு செலவும் செய்யவேணும்." என தனது உண்மை நிலையினை சொன்னார் பிள்ளையான்தம்பியார்.

கனகசிங்கத்தாரும் மாதுளனும் வியந்தே போனார்கள் இப்படியான மனிதர்களும் இந்த நாட்களில் வசிக்கின்றார்களா என்று.

"ஆனா தம்பி இப்ப விலவாசி எல்லாம் கூடிற்று. இந்த ஊர்க்காற தலைவர் வந்து என்னட்ட சொன்னார். யாரும் காசுதந்தா அத வாங்குங்க. சில நேரத்தில உங்கட வீட்டில அடுப்பு எரியாம இருக்கிறதப் பாக்க எங்களுக்கு கவலையா இருக்கு. அதால யாரும் ஏதாவது தந்தா மறுக்க வேணாம் எண்டு. அதால இப்ப யாரும் பத்தோ இருபதோ தருவாங்க. அத வாங்குவன். ஆனா மனசுக்கு சங்கடமாத்தான் இருக்கும்" என்று அவர் கூறும்போது அவரது கண்கள் கலங்குவதை கனகசிங்கத்தார் கவனித்தார்.

"இப்படியானவர்களுக்கு உயிரோட வாழ்ற காலத்தில அல்லவா சிலைவச்சுக் கும்பிடோணும்" என மனதில் நினைத்துக் கொண்டான் மாதுளன்.

கழிப்பறையால் வந்த சின்னத்தம்பியிடம் "உனக்குக் கடிச்சது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டடிப் புடையன். எட்டடி எண்டா நீளத்தில எட்டடி இல்ல. அது இரண்டரை அடிதான் நீளம் இருக்கும். ஆனா ஒருபுடையன் எட்டடி நீளமா இருந்தா எவ்வளவு விடம் இருக்குமோ அவ்வளவு நஞ்சு இந்த எட்டடிப்புடையனில இருக்கும். நாலுபல்லும் உன்ர கால்ல பதிஞ்சிருக்கு. நீ திடமா தன்னம்பிக்கையோட இருந்தா மட்டும் தான் நீ பிழைப்பா. என்னால முடிஞ்ச அவ்வளவும் நான் செய்திருக்கிறன். இனியும் செய்வன். விளங்குதா" எனக் கேட்க கோவில்மாடு தலையாட்டுவது போல் தலையாட்டினான் சின்னத்தம்பி.

இரண்டுமணி நேரத்தில் ஆறுதடவைகள் மூத்திரம் பெய்தான். உடல் சோர்வடைந்து செல்வதை பிள்ளையான் தம்பியார் அவதானித்தார். சின்னத்தம்பியை கூர்ந்துபார்த்த அவரின் முகத்தில் சோர்வு ஏற்பட்டது. கவலையும் தோன்றியது.

"கண்பார்வை எப்படி இருக்குது தம்பி என்று" கேட்டார் சின்னத்தம்பியிடம்.

"ஐயா எனக்கு நீங்க இருக்கிறதே தெரியல்ல. ஓர் உருவம் மட்டும்தான் ஐயா தெரியுது. உங்கட சத்தம்மட்டும்தான் கேட்குது. நான் இனி தப்பமாட்டன் போல இருக்கு ஐயா." என கண் ஓரங்களில் நீர் கசிய சொன்னான்.

அந்தநேரத்தில் முற்றத்தில் இருந்து வேகமாக உள்ளே வந்த மருமகன் மகிழ்சென்னி "மாமா... நீங்க சாகமாட்டீங்க மாமா, சாகமாட்டீங்க" என்று உரத்த சத்தத்தில், கண்களில் நீர் தாரைதாரையாக ஓடிக்கொண்டிருக்க, அழுதழுது சொன்னான். அங்கிருந்த எல்லோரும் சென்னியின் அழுகையினால் உறைந்து போனார்கள்.

பிள்ளையான்தம்பியர் தனது கடைக்குட்டியை அருகேயழைத்து அணைத்துக்கொண்டார். பிள்ளையான்தம்பியார் தனது வாழ்நாளில் தனது நினைவுகள் தெரிந்த நாளிலிருந்து என்றுதான் சொல்லவேண்டும், இன்று முதன் முதலாக அவரது கண்கள் நீரால்நிரம்பி கடைக்கண்களால் வழிந்தோட துடைக்க மனமின்றி அழுதார்.

கடைக்குட்டி அப்பாவை வியப்பாகப் பார்த்தாள். "அப்பா அழுது அவள் என்றுமே பார்க்கவில்லை."

"எந்த நேரத்திலும் நமது உறுதிநிலையினை நாம் இழக்கக்கூடாது, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் அழக்கூடாது. தேவையில்லாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுவது கோழைகளின் செயல் என்பவர் இன்று அழுகிறாரே" என சிந்தித்தாள்.

என்ன நடக்கப்போகிறது என்பது கனகசிங்கத்தாருக்கு ஓரளவு புரிந்துவிட்டது. மகிழ்சென்னியை அழைத்துக்கொண்டு வீதியருகிற்கு அழைத்துச்சென்றார். வீதியின் மறுபக்கத்திலே இருக்கும் பள்ளிவாசல் அருகேயுள்ள வதூர்நானாவின் தேநீர்க்கடைக்கு அழைத்துச் சென்றார்.

மாலைஆறுமணிச் செய்திகள் இலங்கை வானொலியில் தொடங்கியது. காலையில் ஒரு பயங்கரவாதியை தம்பலகமத்தில் சுட்டுப் பிடித்ததாக சொன்னார்கள். உண்மையும் செய்தியில் சொல்கிறார்கள் என எண்ணிக்கொண்டான்.

மக்களின் விடுதலைக்காய் போராடுபவர்களை எப்படி பயங்கர வாதிகள் என்று அரசு அழைக்கிறது? இதில் என்ன நியாயம் இருக்கிறது? என மாமா பற்றிய கவலைகளுக்குள்ளும் மனதினுள் தனக்குத்தானே கேட்டுக்கொண்டான்.

கனகசிங்கத்தாரின் வற்புறுத்தலால் புலோலிப் பனங்கட்டியுடன் தேநீர் சுவைத்தான். கனகசிங்கத்தார் நிதானமாக தெளிவாகச் சொன்னார்.

"தம்பி மகிழ், பிறக்கிற ஆக்கள் எல்லாரும் ஒருநாள் சாகத்தான் போறம். சின்னத்தம்பி மச்சான் அவற்ற மனஉறுதியால இவ்வளவு நேரமும் தப்பியிருக்கிறார். ஆனா இனி தாக்குப்பிடிக்கிறது ஏலாது. நீ மாமாவில எவ்வளவு அன்பும் பாசமும் வச்சிருக்கிறா எண்டது ஊருக்கே தெரியும். ஆனா மனதத் திடப்படுத்திக்கொள். நடக்க வேண்டியத நாமதான் பாக்கோணும். இனி கனநேரம் சின்னத்தம்பியிர உயிர் இருக்காது."என கூறுக்கொண்டிருந்த போது அவனுக்கு நெஞ்சு அடைத்துவிடும்போல் இருந்தது அந்த வார்த்தைகள். தொண்டைக்குழியினால் தேநீர் இறங்க மறுத்தது. கண்ணீர் கண்களை நிரப்பியது. தேநீர் குடிப்பதை நிறுத்திக் கொண்டு வந்தஅழுகையை அடக்க முடியாமல் தன் ஒருகையால் வாயைப் பொத்திக்கொண்டு விம்மி விம்மி அழுதான்.

அவனால் அழுகையினை அடக்க முடியவில்லை. அதற்குமேல் தேநீரும் குடிக்க முடியவில்லை.

தேநீருக்கான பணத்தை கனகசிங்கத்தார் கொடுத்தார். இருவரும் பிள்ளையான் தம்பியரின் வீட்டினுள் வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்செனி, சின்னத்தம்பி படுத்திருந்த கட்டிலுக்கு அருகில் சென்று "மாமா, மாமா..." என அழைத்தான். சின்னத்தம்பி மெதுவாக கண்களைத் திறந்து பார்த்தார். விழியோரத்தில் நீர் சுரந்தது. சின்னத்தம்பிக்கு பேச்சு வரவில்லை. ஏதோ சொல்ல வாயை அசைப்பதற்கு முயன்றான். சத்தம் வரவில்லை. மகிழ்செனி வேதனையின் உச்சத்தில் உழன்று கொண்டிருந்தான். அக்கணத்தில் செனியின் மனம்பட்ட வேதனை அவனையன்றி யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை.

இரண்டு நிமையங்கள் சென்றிருக்கும். விழித்தகண்கள் அப்படியே இருந்தன. மூடவில்லை. பிள்ளையான்தம்பியர் கடைக் குட்டியைப்பார்த்து "என்னால முடியாமல் போய்விட்டதேயம்மா, முடியாமல் போய்விட்டதம்மா" என சிறுகுழந்தை போல் ஆனால் உரத்த சத்தத்தில் அழுதார்.

அவரது துணைவியாரும் மகள்மார், மகன்மார் எல்லோரும் மண்டபத்தினுள் ஓடி வந்தனர்.

அப்பா அழுவதை முதன்முறையாக காணும் பிள்ளைகள் எல்லோரும் அழுதனர்.

மகிழ்செனி "மாமா... மாமா.... எங்கள விட்டிற்றுப் போயிற்றியே மாமா, இது நியாயமா மாமா.. என்ன மாமா... இப்பிடிச் செய்திற்றீயே மாமா.... எங்களத் தவிக்க விட்டிற்றுப் போயிற்றியே மாமா..... ஐயோ இனி நான் என்ன மாமா செய்யப் போறன். அம்மாவ எப்பிடி மாமா நான் பாக்கப்போறன்." தனக்கு வாயில் என்ன கூற வேண்டும் என தோன்றியதோ அவற்றையெல்லாம் சொல்லிச் சொல்லி வீரிட்டழுதான்.

மாதுளன் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. விறைத்துப் போயிருந்தான்.

கடைக்குட்டி மாத்திரம் அழாமல் அமைதியாக அழுது கொண்டி ருக்கின்ற அனைவரையும் ஒவ்வொருவராக தனது பார்வையினால் மேய்ந்து கொண்டிருந்தாள்.

"நான் நன்றாக அப்பாவின் மருத்துவத்தினைப் பயிலவேண்டும். அப்பாவை விட சிறப்பாக மக்களுக்கு பணியாற்ற வேண்டும்" என தனது மனதைத் திடப்படுத்திக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா கோழையாகி விட்டார்." என்பதை அவள் உறுதியாக நம்பினாள். அப்பா தேவையில்லாமல் அழுவதாக கடைக்குட்டி உணர்ந்தாள்.

கனகசிங்கத்தார் அழுது கொண்டேயிருந்த சென்னியை ஆறுதல்படுத்துவதில் சில நிமையங்களில் ஒருவாறு வெற்றிகண்டார். மாமாவின் இழப்பு சென்னியை வெறுமையாக்கியிருந்தது. அவனுக்கு உலகே இருண்டது போலாகிவிட்டது. என்ன வாழ்க்கையிது என்ற ஏக்கம் அவன் மனதில் மேலிட்டது.

கனகசிங்கத்தார் நடக்க வேண்டியதை தெளிவுபடுத்திக் கொண்டே யிருந்தார். மகிழ்சென்னியை வீட்டிற்குப்போய்ச் செய்ய வேண்டிய வேலை களைச் செய்யும்படி கூறினார். மாதுளனின் உதவியுடன் சின்னத்தம்பியின் வெற்றுடலை பிள்ளையான்தம்பியரின் ஆலோசனைப்படி இரண்டு மணிநேரத்தின் பின்னர் நாச்சிக்குடாவிலிருந்து கொண்டு செல்லத் தேவையான ஒழுங்குகளைச் செய்தார் அவர்.

மகிழ்சென்னி ஈருருளியில் கிண்ணியாத்துறையடிக்குப் போன போது அவனுக்காகவே காத்திருந்தது போல் பாதை அக்கரைக்குப் புறப்படுவதற்குத் தயாராக இருந்தது.

ஆனால் மாமாவை கொண்டு வரும்போது அந்தப்பாதை இப்படி ஆயத்தமாக இல்லாமல் போய்விட்டதும் சின்னத்தம்பி சாவடைவதற்கு கரணீயம் என கனகசிங்கத்தார் கூறியது நினைவுக்குவர அழுகை தொண்டையைப் பிய்த்துக்கொண்டு வந்தது மகிழ்சென்னிக்கு.

மாமா தன்னைப் பார்ப்பதற்காகவே சாகாமல் இருந்திருக்கிறார் என எண்ணினான். துக்கம் தாங்க முடியாமலிருந்தது அவனுக்கு. பாதையோரத்தில் கடலைப் பார்த்தவாறு தன்னை யாருமே பார்க்காதவாறு முகத்தை வைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதான்.

பாதை கரையைத் தட்டியவுடன் ஈருருளியை பாதையிலிருந்து இறக்கி வேகமாக ஓட்டினான். கிண்ணியாவில் குடியிருக்கும் தம்பிராசா ஐயாவிற்கும் சொல்லி விட்டுப் போவம் என்ற எண்ணத்தில் கிண்ணியா பள்ளிவாயலுக்கு அருகில் இருக்கும் அவரது வீட்டடியில் ஈருருளியை நிறுத்தி அவர்கள் வீட்டிற்குச் சென்றான். அவரின் துணைவிதான் இருந்தார். அவரிடம் மாமா பற்றிய செய்தியைக் கூறிவிட்டு மீண்டும் பயணத்தைத் தொடங்கியவன் சுவாமிமலையிலிருக்கும் அவனதுவீடு செல்லும்வரை யாரையும் சந்திக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு ஒன்பதரைமணிக்கு வீட்டையடைந்தான். அவனது வீட்டில் ஊர்மக்கள் கூடியிருந்தனர். சின்னத்தம்பிக்கு பாம்பு கடித்துவிட்டது என்று கேள்விப்பட்டவுடன் ஊரார் எல்லோரும் அவனது வீட்டிற்குவந்து கவலை பகிர்ந்து கொண்டிருந்தனர். சின்னத்தம்பியின் அருமை பெருமையெல்லாம் பேசிக்கொண்டிருந்தனர்.

## - 3 -

ஆபரனையும் அம்மானையும் ஏற்றிக்கொண்டு வந்த வாகனத்தை சீனன்குடா விமானத்தளத்தினுள் திருப்புமாறு சுரேஸ்காசிம் கட்டளையிட விமானநிலைய வளாகத்திற்குள் நுழைந்து கொண்டிருந்தது அவர்கள் வந்தவாகனம்.

சீனன்குடா விமானநிலையத்தின் விமானஇறங்குதரையில் ஓர் உலங்கு வானூர்த்தி தரித்து நின்றது. சிறிய விமானங்கள் இரண்டும் நின்றன. யாரோ பெரிய ஆட்கள் வந்திருக்கிறார்கள் போல என எண்ணிக் கொண்டான் ஆபரன்.

விமானநிலைய வளாகத்தினுள் தரித்துநின்ற வாகனத்திற்கு அருகே ஒருவர் வந்தார். சில மாத்திரைகளை ஆபரனிடம் கொடுத்தார்.

தான் விமானப்படையின் ஒரு மருத்துவர் எனவும் குண்டடிபட்ட காயத்தினால் நீங்கள் வேதனையை அநுபவிப்பதாகவும் நோ குறைய வேண்டும் என்பதற்காக குளிசைகள் கொடுக்கும்படியும் சுரேஸ்காசிம் தன்னிடம் கோரியதன் அடிப்படையில் குளிசைகளை கொடுப்பதாகவும் மாவனல்லையைச் சேர்ந்த மருத்துவர் ஹசன் ஆபரனிடம் ஒப்புவித்தார்.

குளிசைகளை மருத்துவரிடமிருந்து வாங்கியவன் குடிப்பதற்கு நீர் கேட்டான். வாகனத்தில் காவலுக்காக இருந்த ஒருவீரன் தண்ணீர் கொடுத்தான். மூன்று முடல்நீர் குடித்துவிட்டு குளிசைகளைப் போட்டான்.

மருத்துவர் ஹசன் ஆபரனிடம் பேச்சுக் கொடுத்தார். "நீங்கள் முக்கியமான ஆள் என எல்லோரும் நினைக்கிறாங்க. உங்களப் பிடிச்சதுக் காக சுரேஸ்காசிமுக்கு சன்மானங்கள் வழங்குவதற்காக கொழும்பிலிருந்து வந்திருக்கிறார்கள். நீங்கள் உங்கட அமைப்பில முக்கியமான ஆள் என்றத வந்தவர்கள் சொன்னார்கள். பாலஸ்தீனத்தில நீங்கள் பயிற்சி எடுத்திருக்கிறீங்க போல. அநேகமாக சுரேசுக்கு பதவிஉயர்வு கிடைக்கும் போல." என மெலிதான குரலில் ஆபரனிடம் கூறினார் மருத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மருத்துவர் எதற்கு தூண்டில் போடுறார்" என சிந்தித்தான் ஆபரன்.

"இந்தப் போராட்டமெல்லாம் சரிவராது. நீங்க படிச்ச ஒருபட்டதாரி. ஏன் சும்மா வயல்வேலைக்குப் போய் கூலிவேலையெல்லாம் செய்து திரியிறீங்க. சுரேஸ்காசிம் நினைச்சத செய்யிறவர். ஆனா உங்கள்ள நல்ல மரியாதை அவருக்கு இருக்கு என்றத அவற்ற கதையில இருந்து விளங்குது" என்று தொடர்ந்தார் மருத்துவர்.

மருத்துவர் என்ற பெயரில் நன்கு பயிற்றப்பட்டு உளவாளியாக ஹசன் பணியாற்றுகிறான் என்பதனை உணர்ந்து கொண்டான் ஆபரன்.

"காயத்திற்கு மருந்து ஏதாவது போட முடியுமா" ஆபரன் கேட்க "நிட்சயமாக" என ஹசனிடமிருந்து பதில் வந்தது.

உள்ளே சென்றவர் சிறிதுநேரத்தில் கையில் சிறிய மருந்துப் பெட்டியுடன் வந்தார்.

ஆபரன் பள்ளிக்குடியிருப்பைச் சேர்ந்தவன். நான்கு சகோதரங்கள் அவனுக்கு.

மூத்தவன் அகிழவன். அடுத்தது ஆபரன். அவனுக்கு அடுத்ததாக தங்கைகள் கதிரழகி, சங்கெழில் கடைக்குட்டியாக தம்பி இளவளவன்.

மூத்த பிள்ளை பிறந்திருக்கும் போது ஆபரனின் அப்பா கனகரெத்தினம் சேனையூர் மகாவித்தியாலய அதிபராக பணியாற்றிய கதிர்காமத்தம்பி ஐயாவிடம் சென்று தனக்கு மகன் பிறந்திருப்பதாகவும் நல்ல தமிழ்ப்பெயர் ஒன்று சொல்லும்படியும் கேட்டார்.

மகிழ்வடைந்த கதிர்காமத்தம்பி ஐயா "அகிழவன்" என்ற பெயரை தெரிவுசெய்து கொடுத்தார். அகிழவன் என்றால் நிலத்தில் பற்றுறுதி உள்ளவன் என்பது பொருள் எனவும் விளக்கினார். அந்தப் பெயரையே தனது மூத்த பிள்ளைக்கு வைத்தார் கனகரெத்தினம்.

கனகரெத்தினத்திற்கு இரண்டாவதுபிள்ளை பிறந்தபோதும் கதிர்காமத்தம்பி ஐயாவிடமே போய் நின்றார். ஆவன்னாவில் பெயர் வைப்பமா என கேட்க கோயில்மாடு தலையாட்டுவது போல் தலையாட்டிய கனகரெத்தினத்திடம் "ஆபரன்" என்ற பெயரை வைக்குமாறு கூறிவிட்டு "மூனாவது பொடியன் புறந்தா இனாவில பெயர் வை" எனக் கூறி "இளவளவன்" என்ற பெயரையும் எழுதிக்கொடுத்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது பிள்ளை பிறந்தவுடன் சென்றவர் "பொம்புளப்பிள்ளை ஐயா" என்றார். வாய்விட்டுச் சிரித்த கதிர்காமத்தம்பி ஐயா நல்லது தானேடாப்பா.

"ரெண்டு சிங்கக்குட்டிகளுக்குப் பிறகு ஒரு பொம்புளப் புள்ள பிறக்க தவமிருந்திருக்க வேணும்" என்று கூறிவிட்டு கதிரழகி என பெயர் வைத்தார். எல்லாப் பிள்ளைகளுக்கும் பெயர் வைத்தவர் கதிர்காமத்தம்பி ஐயா தான். அவர்தான் நாலாவது பிள்ளைக்கு சங்கெழில் எனவும் பெயர் வைத்தவர்.

கதிர்காமத்தம்பி ஐயாவில் கனகரெத்தினத்திற்கு மாத்திரமல்ல ஊரில இருந்த எல்லோருக்கும் மதிப்பு அதிகமிருந்தது.

"எல்லாரும் பிள்ளகள நல்லா படிக்க வச்சிருங்க. கல்விதான் நம்மட பிள்ளக வாழ வைக்கிற கருவி" என பல அறிவுரைகளை காண்ப வர்களிடமெல்லாம் கூறுவார். தன்னைப் புகழ்வதனை அவர் விரும்ப மாட்டார். அனைவரிடமும் அன்பாகவும் பண்பாகவும் பழகுவார்.

ஒரு தடைவை "கதிர்காமத்தம்பி ஐயா அன்பான மனிதர். தமிழை நேசிக்கும் உத்தமர். தனது மண்ணை மதிக்கின்ற மாணிக்கம் ....." என பெற்றார் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராக இருந்த ஆறுமுகம் பேசி நீட்டிக்கொண்டு போக "ஆறுமுகம் என்ன நடக்குது இஞ்ச? என்ன மாவட்டசபத் தேர்தலா நடக்குது. விடயத் தைக் கதடாப்பா" எனக் கூற கூட்டமே கலீர் என சிரித்து விட்டது.

நிதானமிழந்த ஆறுமுகம் தன்னை நிலைப்படுத்திக்கொண்டு கதைக்க வேண்டிய விடயத்தைச் சுருக்கமாக கூறி அமர்ந்தார்.

கனகரெத்தினம் தமிழ்மேல் அளவுகடந்த பக்தி வைத்திருப்பவர். அதற்கு அவர் பள்ளிக்குடியிருப்பில் பிறந்ததும் காரணமாக இருக்கலாம். பள்ளிக்குடியிருப்பில் இருப்பவர்கள் அநேகர் பாடகர்களாகவும் நடிகர்களாகவும் இருந்தனர். அதற்குப் பிரதான கரணீயமாக இருந்தது "கொம்புமுறி விளையாட்டு" அங்கு நடப்பதாலோ என்னவோ தெரியாது.

தனது பிள்ளைகளை நல்லநிலையில் வளர்த்தெடுக்க வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருந்தார் விவசாயியான கனகரெத்தினம்.

ஆபரன் சிறுவயதிலேயே நன்றாகப்பாடுவான். ஆறாம்தரம் படிக்கும்போது தானாகவே சிறுகவிதை ஒன்று எழுதி விவசாய அறிவுப் போட்டியில் முதல்பரிசும் பெற்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியில நாற்றுமேட போட்டுத்தான் புள்ள
புள்ளிகள் வச்சேதான் பாத்திகள் புடிச்சேனே
கள்ளி சிவகாமிவந்து நீர்ஊற்றி நாளும்
வெள்ளிக் கிழமயில அறுவடை செய்வாளே
பள்ளிக் குடியிருப்பில் பொறந்த உன்பயலோ
சொல்லிக் குடுக்காம வளர்றானே பார்புள்ள.

ஆபரனுக்கு தங்கை சங்கெழில் மீது அன்பு அதிகம். அவளது கீச்சுக்குரல் ஆபரனுக்குப் பிடிக்கும். அவர்களது வீட்டில் ஆபரனும் சங்கெழிலுமே நன்றாகப் பாடுபவர்கள்.

அகிழவன் நன்றாக நாடகம் நடிப்பான். அப்பாவின்பிள்ளை என அம்மா இராசபாக்கியம் சொல்லுவாள்.

கதிரழகி சிறந்த பேச்சாளர். நன்றாகப் பேசுவாள். ஏதாவது நிகழ்வுகள் நடைபெற்றால் கதிரழகிக்குத்தான் முதலிடம் கொடுப்பார்கள் ஊர்க்காரர்கள்.

இளவளவன் அமைதியானவன். கதைக்கும் போது பக்கத்தில் இருப்பவர்களுக்கும் கேட்காது. "இவன் சரியான அமுசடக்கி" என அகிழவன் பகிடி பண்ணுவான். அப்போது மட்டும் முகம்மலர்ந்து சிரிப்பான். ஆப்பாவைப் போல் சிறந்த உதைப்பந்தாட்டவீரன்.

ஆபரன் சாதாரணதரம் படித்து தேர்வில் உயர்தரம் படிப்பதற்கான பெறுபேறுகள் கிடைத்ததனால் உயர்தரத்திற்கு சேனையூர் மகாவித்தியால யத்திற்குப் போனான்.

இரண்டாவது நாள் குறவன்வெட்டுவன் மலையடியில் ஈருருளி யின் முன்சில்லில் உள்ள ரயரில் முள்ளுக் குத்திவிட்டது. காற்றுப்போய் விட்டது. ஈருருளியை உருட்டிக்கொண்டு நடந்தான்.

கும்பம் சொரியிற பாலையடியில் வரும்போது "என்ன தம்பி காத்துப்போயிற்றா" என இராசகிளி கேட்டார்."ஓம் அண்ண" ஆபரனின் பதில்.

"தம்பி பள்ளிக்கூடத்துக்கு இப்பிடி உருட்டிக்கொண்டு போனா இண்டைக்குப்போய்ச் சேரமாட்டா. என்ர ஈருருளிய கொண்டு போயிற்று பள்ளி விட்டு வரக்கொள்ள தந்திற்றுப்போ என" என்றார் இராசகிளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபரனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. தன்னை யாரென்றும் தெரியாது. நான் எடுத்துக்கொண்டு ஓடினால் என்ன செய்வாராம். அதை அவரிடமே கேட்டே விட்டான் ஆபரன்.

"தம்பி ஆபரா நீ கனகரெட்னத்தாற்ற இரண்டாவது பிள்ள எண்டு எனக்குத் தெரியும். உனக்குத்தான் என்னத்தெரியாது. அதைவிட நீ பள்ளிக்குடியிருப்புப் பிள்ளடா. நீ ஏண்டா களவெடுக்கப் போறா? பள்ளிக்குடியிருப்பில இருக்கிற ஒவ்வொருவற்ற வீட்டிலயும் இருக்கிற முத்தத்தில போட்டசாமான் அப்பிடியே போட்டபடியே கிடக்கிற ஊர்ரா தம்பி. அங்க பிறந்து வளந்த நீயா என்ர ஈருருளிய கொண்டு ஓடப்போறா" என்றார் இராசகிளி.

அசந்தே போனான் ஆபரன். தன்னைப்பற்றி எல்லா விபரமும் தெரிந்து வைத்திருக்கிறாரே இவர் என வியப்படைந்தான்.

ஆனால் பலநாட்களாக ஆபரனைப்பற்றிய விபரங்களை இராசகிளி தொடர்ந்து சேகரித்துக் கொண்டிருந்த விபரம் எதுவும் ஆபரனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

அவரது ஈருருளியை எடுத்துக்கொண்டு போனவன் பள்ளி முடிவடைந்த பின்னர் கட்டைப்பறிச்சான் அரசடிப் பிள்ளையார் கோவில டியில இருக்கிற அனிச்ச மரத்துக்கு முன்னால் இருந்த இராசகிளியின் வீட்டில் அவரது ஈருருளியைக் கொடுத்துவிட்டு தனது ஈருருளியைக் கேட்டான்.

அவனது ஈருருளியின் சில்லுகள் செம்மை பார்க்கப்பட்டு காற்று நிரப்பப்பட்டிருந்தது. இராசகிளிக்கு நன்றி கூறிவிட்டு தனதுவீடு நோக்கிப் புறப்பட்டான்.

ஆபரன் இராசகிளியின் வீட்டிலிருந்து புறப்படுகின்றபோது மூதூர் தபாலகத்தில் தபாலதிபராக பணியாற்றும் கோணேஸ்வரன் ஆபரனை நிறுத்தி "தம்பி இராசகிளியின் வீடு எங்க இருக்கு?" எனக் கேட்டார். அவன் சிரித்துக்கொண்டு தன் வலதுகையை நீட்டி தான்வந்த வீட்டினை சுட்டிக்காட்டி "இதுதான் அவற்ற வீடு" என்றவன் "அவரக் கூப்பிடட்டா" என்றான். "உதவியாக இருக்கும் தம்பி கொஞ்சம் கூப்பிட்டு விடப்பா" என்றார்.

ஈருருளியில் இருந்து இறங்கி மீண்டும் இராசகிளியின் வீட்டு முற்றத்திற்குப் போய் முற்றத்தில் நிற்கும் மா மரத்தின் கீழ் சாக்குக் கட்டிலில் சாப்பிட்டபின் சற்று தலை சாய்வதற்கு தயாரான இராசகிளியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் தேடுகின்ற சேதியை ஆபரன் சொன்னான்.

வீதிக்கு வந்தபோது கோணேஸ்வரன் நின்றார். அனிச்சமர நிழலில் போடப்பட்டிருந்த பெரிய மரக்கட்டையில் இருவரும் சென்று அமர்ந்தனர்.

ஆபரனை இராசகிளி அழைத்தார். "பசியோடயா இருக்கா தம்பி" என அவனைப் பார்த்துக் கேட்க "இல்ல பள்ளியில பிஸ்கட் தாறவங்க தானே. பள்ளி விடக்கொள்ளதான் சாப்பிட்டனான். இப்ப பசியில்ல. ஏன் அண்ண" என்றான்.

"கொஞ்ச நேரம் ஏலுமெண்டா இரு. கொஞ்சம் கதைப்பம் எண்டுதான்" என்றார் இராசகிளி.

ஆபரனும் இருவருடன் மூவரானான்.

கோணேஸ்வரன் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த கடிதமொன்றினை கொடுப்பதற்காக இராசகிளியிடம் வந்திருந்தார். அதனை இராசகிளி அறிந்திருந்தான். கோணேஸ்வரனை பற்றி நன்கு அறிந்தமையினால் முன்பு சந்தித்து இருக்காவிட்டாலும் கோணேஸ்வரனது பெயருக்கு கடிதத்தினை அனுப்புமாறு தனது அமைப்பின் தோழர் குகனுக்கு சொல்லி யிருந்தார். அதனை கொடுப்பதற்காகவே கோணேஸ்வரன் வந்திருந்தார்.

நேரடியாக இராசகிளியின் பெயருக்கு கடிதம் தொடர்ச்சியாக வருவது கண்காணிப்பிற்கு இடம் கொடுத்துவிடும் என்பதனால் அடிக்கடி வேறு நபர்களின் பெயர்களுக்கு கடிதங்களை அனுப்பி பெற்றுக்கொள்வது நீண்டகால பாதுகாப்புப் கருதிய ஏற்பாடு.

கடிதத்தைக் கொடுத்தவர் "மூலதனம்" என்ற புத்தகத்தையும் கொடுத்தார். அந்தப் புத்தகத்தைக் கொடுப்பதற்காகவே ஆபரனை அழைத் திருந்தார் இராசகிளி. "தம்பி இந்தப்புத்தகத்தக் கொண்டு போய் படிச்சுப்பார். நீ உயர்தரம் படிக்கிறா. உனக்கு சிலவிடயங்கள் விளங்கும். விளங்காட்டி என்னட்டக்கேள். சொல்லித்தாறன்" என அவனிடம் புத்தகத்தைக் கொடுத்தார் இராசகிளி.

"நன்றி அண்ண, நான் படிச்சிற்று கொண்டுவந்து தாறன்" என்றவன் "அப்ப நான் போயிற்று வாறன்" என இருவரிடமும் கூறிவிட்டுப் புறப்பட்டான்.

கடிதத்தையும் புத்தகத்தையும் கொண்டு வந்து கொடுத்ததற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசகிளி நன்றி தெரிவித்தார் கோணேஸ்வரனுக்கு.

கடிதத்துடன் வேறு ஒரு தாளிள் உறவுமுறைகள் பற்றி எழுதியிருந்த ஒரு தாளும் இருந்தது. "கோணேஸ் இதுவும் கடிதத்தோடயா வந்தது?" என இராசகிளி கேட்க "இல்ல, இல்ல இது நான் எழுதினது. இன்னும் எழுதோணும். நாளேடுகளுக்கு எழுதி அனுப்புவம் எண்டு எழுதினனான்" என கூறிவிட்டு "நீங்களும் படித்துப் பாத்து எப்பிடி இருக்கு எண்டு சொல்லுங்களன்" என்றார் கோணேஸ்வரன்.

"ரெண்டு பேருமே ஒரே வயசாக்கள் தானே. நீங்க, வாங்க போங்க எண்டு மரியாதயெல்லாம் தேவையில்ல. நீ, நான், வா, போ எண்டு கதைப்பம் என. அப்பதான் உறவு நெருக்கமாக இருக்கும்" என்றார் இராசகிளி. சிரித்துக்கொண்டே தலையை ஆட்டி சம்மதம் தெரிவித்தார் கோணேஸ்வரன்.

கோணேஸ்வரன் எழுதிய தாளை இராசகிளி வாசித்தார்.

உறவில் தமிழின் விருந்து.

உறவுமுறைச் சொற்கள் எல்லா மொழிகளிலும் உள. அதுபோல் அவை தமிழ்மொழியிலும் ஆட்சி செலுத்துகின்றன. ஆனால் அவை எந்த உறவைக் குறிக்கத் தோற்றம் பெற்றனவோ அந்தஉறவு முறையுடன் மட்டும் நின்று விடுகின்றனவா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். காலமாற்றத்தாலும் சூழல்மாற்றத்தாலும் அவை தாம் உருவான நோக்கத்துக்கு அப்பாற்சென்று வேடிக்கை காட்டுகின்றன.

அப்பா என்ற சொல் தந்தையைக் குறிக்கும். அப்பா என்ற சொல்லுடன் ஒரு "டா" வையும் இணைத்து விட்டால் "அப்பாடா" ஆசுவாசப்படுத்திக் கொள்கிறது. "இஞ்சேரும் அப்பா உம்மைத்தான்.." என்று பள்ளி மாணவி அழைத்தால் அப்பா தோழியாகி விடுகிறது. "ஏனணை அப்பா நான் சொல்லுறதைக் கேட்க மாட்டியோ?" என்று குடும்பத்தில பேசிக் கொண்டால், பேசுபவர் பெண்ணாக இருந்தால் கணவனை விளிக்கும் சொல்லாகவும், ஆணாக இருந்தால் மனைவியை விளிக்கும் சொல்லாகவும் உருப்பெற்று விடுகிறது.

"அப்பா"வுக்குக் கடைசியில்வரும் "அரவை" நீக்கிவிட்டு "ன்" சேர்த்துவிட்டால் "அப்பனும் நீ அம்மையும் நீ.." என்று இறைவனைத் தேடிச்செல்கிறது. "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே." என்றால், அப்பா இறைவனாகி விடுகிறது. "அப்பனே முருகா!" எனும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பனே"யில் எவ்வளவு ஆனந்தம் கலந்து விடுகிறது... சிறுவர்கள் வயதுமுதிர்ந்த பெரியோரை அப்பா என்றால் மரியாதையும் பண்பும் தெரிகிறது. பெரியோர்கள் சிறுவர்களை "அப்பா இங்கே வா." என்றால் அன்பும் பாசமும் பொங்கி வழிகிறது. என்னதான் சுவைகள் இருந்தாலும் கணவன்மார் மனைவிமாரிடம் கொப்பன் என்று "அ"வுக்குப் பதிலாகக் "கொ" போட்டுவிட்டால், பெண்ணின் தந்தைமேல் இளக்காரமல்லவா ஏறிவிடுகிறது.

அம்மா என்றால் சும்மாவா? கன்றுகூடப் பசுவை அம்மா என்று அழைப்பதாகத்தானே கூறுகிறார்கள். இங்கிலாந்தில் பிறந்தாலென்ன இலங்கையில் பிறந்தாலென்ன ஆவின் கன்றுகள் எல்லாம் தமிழ்தானே பேசுகின்றன? அப்பாமேல் அவைக்கு என்ன கோபமோ தெரியவில்லை எந்தக் கன்றும் இறக்கும்வரை அப்பா என்று ஒப்புக்குத்தானும் அழைக்க வில்லையே.

அம்மா என்றால் தாய். அன்பு பொழியும் ஒரு சிறந்த வார்த்தை. வாசலில் நின்று பிச்சைக்காரன் அழைக்கும்போது வரும் "அம்மா" சில்லறை நோக்கம் கொண்டது. வீட்டில் விறகு கொத்திப் போடுபவன் வேலை முடிந்ததும் தலையை ஒருவிரலாற் சொறிந்தபடி போடும் "அம்மா" கூலியைக் குறைக்காமல் விரைவாகத் தந்துவிடு என்ற கருத்தைக் கொண்டது. வயோதிபர்கள் அம்மா என்றால் "மகளே" என்றாகும். சமவயதுடைய ஆண்கள் அம்மா என்றால் மரியாதை என்று பொருள்.

அலுவலகங்களில் இறுதியில் போடும் அம்மா..." உங்களைத்தான் பார்க்க வந்தேன் அம்மா." தங்கை என்று கூறும் சொல்லாகும். வயதுகூடிய ஆண் சிற்றூழியர்கள் உத்தியோகத்தர்கள் தரத்திலிருக்கும் பெண்களிடம் இந்த "அம்மா" கூறிச் சமாளித்து விடுவார்கள். ஆனாலும் பெண் அதிகாரி களிடம் போடும் "அம்மா" பயம் மரியாதை கலந்து அதிகாரத்துக்கு வணக்கம் செலுத்துகின்ற தன்மையைப் பெற்றுவிடுகிறது. அரசியலில் அம்மா சர்வசக்தி பெற்ற சொல்லாகி விடுகிறது.

அம்மாவில் "மா" போய் "மை" இணைந்து அம்மை தோன்றினால் பயங்கரமான தொற்று நோயல்லவா வந்துவிடுகிறது. என்றாலும் அம்மைக்கு முன் காளி, மாதுமை, துர்க்கை என்று சேர்த்துவிட்டால் சர்வசக்தி படைத்த பெண்தெய்வம் நின்று அருள் புரிகிறது. அம்மாவை சற்றே மாற்றி "ஆத்தா" என்று கூறினால் பல தமிழகக் கிராமங்களில் அன்பான அன்னையைக் குறிக்குமாயினும் காளி மாரி என்ற முன்சொற்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்துக் கொண்டால், குற்றங்களைப் பொறுக்காத சக்தியாக அல்லவா மாறிவிடுகிறது.

பெற்றோர் மகளை அம்மா என்று அழைத்தால் "மகளே" என்று அர்த்தம். அண்ணாமாரோ அக்காமாரோ தங்கையை அம்மா என்ற அழைத்தால் "பாசமுள்ள தங்கை" நிற்பாள். அதற்காக அக்காவை அம்மா என்ற அழைத்தால் கண்களில் தீப்பொறி பறக்கும் அக்காதான் நிற்பாள். என்றாலும் கணவன் மனைவியை அம்மா என்று அழைத்தால் "இன்பப் பெட்டகமே" என்ற பொருள் பொதிவதால் ஏற்காத மனைவியரும் உண்டோ?

வாசித்து முடித்தபின் தன் புருவங்களை உயர்த்தி வியப்புடன் "கோணேஸ் மிக அருமையாக இருக்குது. தொடர்ந்து எழுது. தமிழுக்கும் தமிழ்மொழிக்கும் இப்பிடியான பணியாற்ற ஆக்கள் குறைஞ்சுகொண்டு வாற நேரத்தில இப்பிடி ஒரு எழுத்தைப் பார்த்தது சரியான மகிழ்ச்சி எனக்கு" என தனது மனத்தில் எழுந்த மகிழ்ச்சியைப் பரிமாறிக்கொண்டார் இராசகிளி.

கோணேஸ்வரனுக்கு உண்மையில் மனமடைந்த மகிழ்விற்கு அளவே இல்லை.

"மூலதனம்" புத்தகத்தை தோழர் இராசகிளியிடம் பெற்றுக் கொண்டு ஈருருளியில் புறப்பட்ட ஆபரன் இறால்பாலத்தின்மேல் ஈருருளியை நிறுத்தினான்.

இருபக்கமும் தன்பார்வையால் இரசித்தான். பாலத்தின் இருபக்க மும் உள்ள கண்ணாமரங்களின் அடர்த்தியைப் பார்த்தான். அதன்விழுதுகள் எவ்வாறு பின்னப்பட்டிருக்கின்றன என்பதை ஆழமாகப் பார்த்தான். அவற்றின் பிணைப்பினால் எவ்வளவு உறுதியாக அவை நிலைத்திருக்கின்றன என்பதை சிந்தித்தான்.

சூழல் நாம் வாழுவதற்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நினைத்தான். இந்தக் கண்ணாமரங்களால்தானே இந்த ஆற்றில் எத்தனை யோபேர் தமது வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பெருமைப் பட்டான்.

கண்ணாவினுள் வசதி குறைந்தபெண்கள் அல்லது நாளைய உணவிற்கு கறி தேவைப்படும் பெண்கள் என அங்கு வாழும் எல்லோரும் உடனடியாகச் சென்று கண்ணாவில் உள்ள மட்டிகளை எடுக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாமட்டியின் சுவையை எப்படிச் சொல்லுவது என்பது யாருக்கும் தெரியாது. அதன் சுவையே தனிச்சுவை. வேறு எந்த உணவிலும் இல்லாதசுவை. சாப்பிட்டால் மாத்திரமே அதனை உணர முடியும்.

கண்ணாமட்டியை தனது அம்மா தேங்காய்ப்பால் பொரியல் செய்து தரும்போது வீட்டில் நடைபெறும் கூத்தை எண்ணிப்பார்த்தான் ஆபரன்.

அம்மா கண்ணா மட்டியை தேங்காய்ப்பால், செத்தல்மிளகாய் போட்டு பொரித்துக் கொடுப்பாள்.

அப்பா கட்டைப்பறிச்சான் இறால்பால ஆற்றில் இறங்கி மீன் வீச வருகின்ற சில நாட்களில் பள்ளிக்குடியிருப்பிலிருந்து அம்மாவும் அப்பாவுடன் கூடவந்து மட்டி எடுத்துவந்து சமைப்பாள்.

கொண்டு வந்திருக்கின்ற சிறியகத்தியால் கண்ணாவினுள் உள்ள நிலத்தில் கீறுவாள். தொடர்ந்து கீறும்போது "டக்" என சத்தம் கேட்கும். கையால் அந்த இடத்தைத் தோண்டுவாள். அங்கு மட்டி சிரித்துக் கொண்டிருக்கும் தான் சாகப்போவது தெரியாமல். அதனை எடுத்து இடுப்பில் செருகியிருக்கும் உமலில் போடுவாள்.

சிலஇடங்களில் நீலம், சிவப்பு, பச்சை, கறுப்பு என பல நிறங்கள் சேர்த்து ஊற்றி விட்டது போல் இருக்கும். அந்த இடத்தையும் தோண்டிப் பார்ப்பாள். மட்டி இருக்கும். இதனை பீச்சுமட்டி என்று அழைப்பார்கள். மட்டி பீச்சுவதால் அதனை அவ்வாறு அழைக்கிறார்கள். கோடை காலங்களில் பீச்சுமட்டிகள் அதிகளவில் எடுப்பார்கள்.

சில நேரங்களில் மட்டி மண்ணில் மேலேயே கண்ணிற்குத்தெரியும் வகையில் இருக்கும். அதனை எளிதாக எடுப்பார்கள்.

இப்படியெல்லாம் இரண்டு மணிநேரத்தில் எடுத்த நாற்பது ஐம்பது மட்டியால் வீட்டில் சிக்கல்தான் ஏற்படும்.

அப்பா பிடித்த மீன்களை ஒருகுழம்புக் கறியும், வெள்ளஆணமும் வைப்பாள் அம்மா.

திரளிமீன் அதிகளவில் பிடிபடுகின்ற ஆறு அது. ஆறு என்றால் அது ஏனைய ஆறுகள் போன்று நீர் ஓடுகின்ற ஆறு அல்ல. மூதூரில் வட்டம் என்றழைக்கப்படும் இடத்தில் இருந்து கடல்நீர் சேனையூர் எல்லைவரை ஏறத்தாள ஆறு கிலோமீற்றர் தூரத்திற்கு தொண்ணூறடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலத்திற்கு உள்ளே வந்துபோகும்.

கடல் வெள்ளம் ஏற்படும்போது நீர் அதிகரிப்பதும் வெள்ளம் குறைவடையும் போது நீர் குறைவதுமாக இருக்கும்.

வெள்ளம் இறங்கும் நேரத்தில்தான் ஆபரன் அவ்விடத்தில நின்று இரசித்துக் கொண்டிருக்கிறான்.

குழம்புக்கறிக்கும் ஆணத்திற்கும் இல்லாத மவுசு கண்ணாமட்டி தேங்காய்ப்பால்ப் பொரியலுக்கு இருக்கும். மட்டிக்கறி சமைக்கும் போதெல்லாம் ஆபரன் தனது மட்டியில் ஒரு துண்டையேனும் கடைக்குட்டி சங்கெழிலுக்குக் கொடுப்பான்.

அடுத்தவள் கதிரழகி எனக்கும் தா என அழுவாள். "அண்ணா பாவம் தானே. உனக்கு ஒண்டு கூடத்தானே வச்சனான். கத்தாம சாப்பிடம்மா" என்பாள் அம்மா. அழுவதை கத்துதல் என்றே அங்கு சொல்லுவார்கள் எல்லோரும்.

அக்கா எடுத்துவிடுவாள் என்ற அச்சத்தில் தனது சோற்றுக் கோப்பையினுள் இருக்கும் மட்டிகளை எல்லாம் ஒவ்வொன்றாக தனது வாயினுள் போட்டு சூப்பி விட்டு கோப்பையினுள் எடுத்துவைப்பாள் சங்கெழில்.

தனதுவாயில் வைத்துவிட்டால் யாரும் எடுக்கமாட்டார்கள் என்பது உணவுநேர பாதுகாப்பு உத்தி.

இந்த அமளிதுமளியைப் பார்த்துக்கொண்டிருக்கும் அண்ணன் அகிழவன் தனது மட்டியில் ஒன்றை கதிரழகிக்குக் கொடுத்த பின்னர்தான் அவள் அழுகையை நிறுத்துவாள்.

அதன் பின்னரே எல்லோருமாக சோற்றை நிம்மதியாக உண்ணு வார்கள். இரவு உணவாக பள்ளிக்குடியிருப்பில் அந்நாட்களில் சோறுதான் உண்ணுவார்கள்.

காலையில் இரவு சாப்பிட்டு எஞ்சியசோற்றை நீர் ஊற்றிவைத்து அதனை அடுத்தநாள் காலையில் தண்ணிச்சோறு என உண்பார்கள்.

மூன்று வேளையும் சோறுதான். அதனால்தானோ என்னவோ அவ்வூரில் எல்லோரும் பலசாலிகளாக இருக்கிறார்கள.

இறால்பாலத்திலே இரவுநேரங்களில் இறால் பிடிப்பார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பது பேரளவில் பிடிப்பார்கள். அவர்களது வாழ்க்கையில் இந்த ஆற்றினால்தான் வீட்டில் நெருப்பு எரிந்து கொண்டிருக்கிறது.

ஆபரன் மூலதனம் புத்தகத்தை எடுத்துப்பார்த்தான். இதனை இன்றே வாசிக்க வேண்டும் என நினைத்துக்கொண்டான்.

அந்தப் புத்தகம்தான் தனது வாழ்வியலை மனிதம் நோக்கிய ஒரு மனிதனாக மாற்றப் போகின்றதோ என்றோ உழைக்கும் மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக தனது கைகள் சுடுகலன்கள் தாங்கப்போகின்றன என்றோ அவன் அன்று அறிந்திருக்க வில்லை.

சீனன்குடா விமான நிலையத்தில் மர நிழலில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்திலிருந்து கீழே இறங்குமாறு ஆபரனை அழைத்தார் மருத்துவர் ஹசன்.

அருகில் இருந்த இராணுவவீரன் ஆபரன் இறங்குவதற்கு உதவினான். காலில் ஏற்பட்ட விழுப்புண் அதிகளவில் வலியை ஏற்படுத்தி யிருந்தது. வலியைத் தாங்கிக்கொண்டு நொண்டி நொண்டி மெதுவாக இறங்கினான். இறங்கியவனுக்காகவே மருத்துவர் ஹசனினால் கொண்டு வரப்பட்ட கட்டிலில் அமர்ந்தான்.

மருத்துவர் அவனது விழுப்புண்ணிற்கு மருந்துபோடத் தயாரான போது "வாகனத்தில் இருக்கின்ற அம்மாவின் தம்பிக்கு பாம்பு கடித்து விட்டது. அவரைப் பார்ப்பதற்காகவே அந்த அம்மாவை அழைத்து வந் தார்கள். கன நேரமாகிற்று. அவரக் கொண்டுபோய் விடச் சொல்லுங்களன்" என்றான் ஆபரன்.

இந்த விடயம் அறிந்திராத மருத்துவர் சற்றும் தாமதமில்லாமல் உள்ளே சென்றார். விரைவாகவே வந்தார். வாகனசாரதியிடம் அம்மாவைக் கொண்டு போய் விட்டிற்று வரும்படி சுரேஸ்காசிம் கூறிய விடயத்தைக்கூற அவனும் அம்மாவையும் ஓர் இராணுவ வீரனையும் அழைத்துக்கொண்டு பிள்ளையான்தம்பியரின் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

## - 4 -

ஒரு சில நிமையங்களில் பிள்ளையான்தம்பியரின் வீட்டுவாசலில் படையினரின் வாகனத்தில் பகவதிப்பிள்ளை வந்து இறங்கினார். வீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றத்தில் கவலையுடன் நின்ற கனகசிங்கத்தார் பகவதிப்பிள்ளையைக் கண்டவுடன் இவ்வளவு நேரமும் கவலை என்பதை ஒருதுளியேனும் வெளியே காட்டிக் கொள்ளாது இரும்பு போல் நின்றவர் " சின்னத்தம்பி நம்மளயெல்லாம் விட்டிற்று போயிற்றான் மச்சாள் " என்று தேம்பியழத் தொடங்கியவர் வீரிட்டழுதார்.

இப்பிடியொரு அலறல் ஒலியை தன் வாழ்நாளில் கேட்டிராத பிள்ளையான் தம்பியரின் கடைக்குட்டி வீட்டினுள்ளிருந்து வெளியே ஓடிவந்து பார்த்தாள்.

பகவதிப்பிள்ளை பிள்ளையான்தம்பியரின் மடியில் மயங்கிய நிலையில் கிடக்க அவவிற்கு முகத்தில் தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தார் அப்பா. அவளும் அழுதாள். கடைக்குட்டி ஜீவா எதற்காக அழுதாள் என்று அவளுக்குத்தான் தெரியும்.

மகரிப்த்தொழுகை முடிந்திருந்த நேரம் அது. அருகிலிருந்த பள்ளிவாசலில் தொழுகையை முடித்துவிட்டு வீதியில் மக்கள் வரும் நேரத்தில்தான் கனகசிங்கத்தார் வீரிட்டு அழுதார். இஸ்லாமிய மக்கள் பிள்ளையான்தம்பியரின் வீட்டிற்கு ஓடிவந்து நிறைந்துவிட்டனர்.

சில மணித்துளியில் மயக்கம் தெளிந்த பகவதிப்பிள்ளை வீரிட்டாள்.

"தம்பி" என கூவிக்கொண்டு வீட்டுவிறாந்தையின் நடுவிலே கிடந்த கட்டிலில் உயிரற்ற நிலையில் உறங்கிக்கொண்டிருந்த சின்னத் தம்பியை கட்டிப்பிடித்து அழுதாள்.

"ஐயோ என்னப்பா செய்வன் நான். இந்தக் கோலத்தில உன்னப் பாக்கயாப்பா நான் ஓடிவந்தன். தம்பி... தம்பி.... எழும்புடா, இடேய் கண்ணக் கொஞ்சம் திறந்து பாருடா...உன்ரஅக்கா வந்திருக்கிறன்டா. என்ர செல்லக்குட்டியல்லோ கொஞ்சம் கண்ண திறந்துபாருடா. தம்பி... ஐயோ. கோணேசா இப்பிடிச் செய்து போட்டியே. அம்மாளாச்சியே என்னம்மா இது. என்ன அநாத ஆக்கிற்றியேயம்மா. ஐயோ..." தொடர்ந்து என்னன்னவோ வாயில் வந்த வார்த்தைகள் எல்லாம் சொல்லிச் சொல்லி பகவதிப்பிள்ளை அழுதாள்.

பகவதிப்பிள்ளையை யாரும் தடுக்கவேண்டாம் என பிள்ளையான் தம்பியர் கூறிவிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையான்தம்பியரின் துணைவி இராணியம்மா அழுது களைத்துப் போயிருந்த பகவதிப்பிள்ளைக்கு நீர்க்குவளையில் உள்ள நீரை பருக்கிவிட்டாள். அந்த நேரத்தில் பகவதிப்பிள்ளைக்கு அந்தநீர் தேவையாகவே இருந்தது. பகல் உணவு சாப்பிடவில்லை. களைத்துப் போயிருந்தாள் அவள்.

முற்றத்தில் அழுது கொண்டிருந்த கனகசிங்கத்தார் உள்ளே வந்தார்.

அழுது கொண்டேயிருந்த பகவதிப்பள்ளையிடம் "மச்சாள் மகிழ்ச்சென்னி வீட்ட போயிற்றான். அங்க எல்லாத்தயும் அவன் செய்வான். நாம சவத்தக் கொண்டு போகணும்" என்றவுடன் "தம்பி....தம்பி.... பாத்தியாடா உன்ன சவம் என்றாங்கடா... ஐயோ. கடவுளே. என்ன கொடுமையிது..." அழுதாள்.

தலையை தடவி தட்டிக் கொடுத்து ஆறுதலான சிலவார்த்தைகள் சொல்லி தேற்றித் தேற்றி அமைதியாக்கினார் கனகசிங்கத்தார் மச்சாளை.

நாச்சிக்குடா ஊரின் தலைவர் இபாதுள்ளா ஹாஜியார் உள்ளே வந்து பார்த்தார். சின்னத்தம்பியை நன்கு அறிந்தவர். விவசாயச்சங்க நடவடிக்கைகளில் கந்தளாய்க்கு ஒன்றாக சின்னத்தம்பியுடன் போய்வருபவர்.

அவரும் கவலையடைந்தார். தனதுவீட்டு இழவுவீடு என்ற உணர்வு அவருக்கும் ஏற்பட்டது.

அங்கு கூடியிருந்தவர்களிடம் சின்னத்தம்பியின் அருமை பெருமையெல்லாம் சொன்னார்.

வீதியால் போனவர்கள் வந்தவர்கள் எல்லாம் பிள்ளையான் தம்பியரின் வீட்டில் ஏதோ நடந்து விட்டதோ என்ற எண்ணத்தில் உள்ளேவந்து விபரம் அறிந்து போனார்கள்.

இரவு எட்டு மணியாகிவிட்டிருந்தது. மகரிப்த் தொழுகைக்கு வந்திருந்தவர்களில் அநேகர் இப்பவும் அங்கு நின்றுகொண்டிருந்தனர். தலைவர் அவ்விடத்தை விட்டு அசையவில்லை.

பகவதிப்பிள்ளையை அமைதிப்படுத்த முடியவில்லை.

ஒருவாறு எட்டு மணியளவில் தம்பலகமம் புறப்படுவதற்குத் தயாரானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகசிங்கத்தார் தனது சிற்றூர்தியை இயக்கி வீட்டு முற்றத்தில் நிறுத்தினார்.

எந்தவீதியால் செல்வது என சிந்தித்தார்.

"அண்ண பாத இந்தநேரத்தில வராது. எண்டாலும் நான் பாதய போறதுக்கு ஒழுங்கு செய்றன். வெள்ளமணல்லதான் பாதயஓட்டுற மம்மக்கலின் இருக்கிறான். நான் அவனக் கூட்டிற்று வாறன். நீங்க பாதயடிக்கு வாங்களேன்." தலைவர் இபாதுள்ளா ஹாஜியார் கூற அதுவே சரியெனப்பட்டது கனகசிங்கத்தாருக்கும்.

கண்டி வீதியினால் போனால் சில வேளை நாலாம்கட்டை தாண்டும் போது சிங்களவர்கள் வாகனத்தை மறித்தால் தனக்கும் மாதுளனுக்கும் பகவதிப்பிள்ளைக்கும் சேர்த்து இன்னும் மூன்று பாடைகள் கட்ட வேண்டிய நிலை ஏற்படும் என மனசு சொல்லியது. கிண்ணியாவினால் புறப்படுவதற்குத் தயாரானார்கள்.

மகிழ்சென்னி இரவு ஒன்பதரை மணிக்கு வீட்டையடைந்தான். அவனது வீட்டில் ஊர் மக்கள் கூடியிருந்தனர். சின்னத்தம்பிக்கு பாம்பு கடித்துவிட்டது என்று கேள்விப்பட்டவுடன் ஊரார் எல்லோரும் அவனது வீட்டிற்கு வந்து கவலையும் தங்கள் துயரினையும் பகிர்ந்து கொண்டிருந்தனர்.

சின்னத்தம்பியின் அருமை பெருமையெல்லாம் பேசிக்கொண்டி ருந்தனர்.

மகிழ்சென்னியின் வீட்டார் யாருமே வீட்டில் இருக்கவில்லை. அப்பா மயில்வாகனமும் வீட்டில் இல்லை. அன்று காலையில்தான் மயில்வாகனம் மூத்த மகள் இமையரசியை விடுமுறைக்காக வீட்டிற்குக் கூட்டி வருவதற்காகச் சென்றிருந்தார். இமையரசி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் இறுதியாண்டில் படித்துக்கொண்டி ருந்தாள். வழமையாக அவளைக் அழைத்துவருவதற்கு யாரும் செல்வ தில்லை. ஆனால் இந்தத் தடவை அப்பா சென்றிருந்தார். இன்னும் மூன்று மாதங்களில் இமையரசியின் படிப்பு பேராதனையில் முடிவடைய இருந்த மையினால் அவளது பெட்டி, படுக்கைகளை கொண்டுவர வேண்டியிருந் தமையினால்தான் அப்பா மயில்வாகனம் அங்கு சென்றிருந்தார்.

அவர்கள் இருவரும் வீட்டிற்கு வரும்போது இரவு எட்டரை மணியாகிவிட்டது. வீட்டுவாசலில் வரும்போதே இருவரும் மிரண்டு விட்டனர். வீட்டுவளவு ஊர் மக்களால் நிரம்பிவழிந்தது. அயலவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இருவரையும் பதற்றத்திற்குள்ளாக்காமல் பக்குவமாக நடந்தவற்றை எடுத்துக்கூறினர். மாமாவிற்கு பாம்பு கடித்த செய்தி மருமகளிற்கு கவலை யளித்தது.

இமையரசியின் மீது சின்னத்தம்பிக்கு அலாதி விருப்பம். தங்களது பரம்பரையில் முதல் பட்டதாரி என்று காண்பவர்களிடம் மருமகள் பற்றிப் பெருமைப்படுவான். மருமகளும் மாமா மேல் அன்புதான்.

இரவு வேளைகளில் தம்பலகமத்தின் பொருண்மிய நிலைமை களை மாமாவிடம் கேட்டுத் தெரிந்துகொள்வாள். இமையரசி பொருளிய லையும் தனது படிப்பில் ஒரு பாடமாக எடுத்திருந்தாள்.

தனது படிப்பினை தனதுமக்கள் பயன்படும் வகையில் செய்யவேண்டும் என்பது அவள் அடிமனது ஆசை. அதனை மாமாவிடம் கூறி மகிழ்வாள்.

தம்பலகமத்தில் அமைக்கப்பட்ட புறந்திரிஆறு என்றழைக்கப்படும் வடிச்சல் ஆற்றிலிருந்து கடலுடன் கலக்கும் மேலதிக நீரை மக்களுக்குப் பயன்படும்வகையில் மாற்றியமைக்க வேண்டும் மாமா என்று ஆதங்கப் படுவாள். மருமகளின் திட்டங்கள் மாமாவை மகிழ்ச்சியின் எல்லைக்குக் கொண்டு செல்லும்.

ஒரு நாள் இரவுஉணவிற்காக பொரியலை பொரித்து முடித்துவிட்டு அம்மா சாப்பிட அழைத்தாள்.

'முற்றத்தில இருந்து சாப்பிடுவம் அக்காச்சி' என்றான் சின்னத்தம்பி. மருமகளும் வழிமொழிந்தாள். தன்அக்காவை அக்காச்சி என்றுதான் சின்னத்தம்பி அழைப்பது வழக்கம்.

நான்கு பச்சைக்கோட்டு சாக்குகளை பிரித்து இணைத்த படங்கினை மகிழ்செண்ணி முற்றத்தில் விரித்தான். அம்மாவும் மகளும் இரவு உணவு களை கொண்டுவந்து சாக்குப்படங்கின் மேல் வைத்தார்கள். ஐந்துபேரும் வட்டமாக இருந்தார்கள். நடுவில் சாப்பாடு இருந்தது.

அப்பாவிற்கும் மாமாவிற்கும் வெண்கலச் செருவக்கால் கொண்டு வந்து கொடுத்தாள் இமையரசி. இருவரும் செருவக்காலில் உணவுத்தட்டை வைத்துத்தான் சாப்பிடுவது வழக்கம். இரண்டு செருவக் காலும் அம்மம்மாவின் அம்மம்மா ஆச்சிப்பெத்தா அம்மா பகவதிப்பிள்ளைக்கு என்று சிறுவயதில் கொடுத்தவையாம். இன்றுவரை அவையிரண்டும் பயன்பாட்டில் அவ்வீட்டில் நிலைத்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருவக்காலில் வைத்துச் சாப்பிட்டால்தான் சின்னத்தம்பிக்கு சாப்பிட்டது போல் ஒரு திருப்தியிருக்கும் என்பது மருமகளுக்குத் தெரியும்.

அன்றைய இரவு உணவாக பகல் சமைத்த சோறு, பகல் சமைத்த கறி, பகல் சமைத்த நெத்தலிப்பாலாணம், அதோடு இரவு அம்மா பொரித்த பலாக்கொட்டைப்பொரியல். நிறைவாக உண்பதற்கு எருமைத் தயிர்.

தம்பலகமத்தில் பகல் சமைத்த சோற்றைத்தான் இரவும் உண்டு மறுநாள் காலையிலும் உண்பார்கள். பச்சரிசிச்சோறு பழுதாகாமல் இரவுவரை இருக்கும். இரவு சாப்பிட்ட மிகுதிச்சோற்றை பானைக்குள் நீர்ஊற்றி வைப்பார்கள். காலையில் தயிரும் சோறும் உண்பார்கள்.

அப்பா சோற்றில் தேங்காய்ப்பால் விட்டு பச்சைமிளகாயும் சின்னவெங்காயமும் சேர்த்துச் சாப்பிடுவார்.

பிள்ளைகளுக்கும் தனக்கும் அம்மா ஏதாவது பொரியலுடன் சோற்றை காலையுணவாக்குவாள்.

அம்மா சோற்றை வைத்துவிட்டு பகல் சமைத்த பயற்றங்காய் பால்க்கறியும் பாவற்காய் குழம்புக்கறியும் இரவு பொரித்த பலாக்கொட்டைப் பொரியலையும் பச்சைமிளகாயப்பொரியலையும் எல்லோருக்கும் உணவுத் தட்டில் வைத்து தனித்தனியாகக் கொடுத்தாள்.

மாமா மெதுவாகத்தான் சாப்பிடுவார். "சாப்பாட்டை இரசித்துச் சாப்பிட வேண்டும்" என்று மருமகளிடம் அடிக்கடி சொல்வார்.

"நல்லாச் சப்பி சாப்பிடோணும் பிள்ள"

"சப்பாட்டி உள்ள போகாதா மாமா" வாயினுள் சோறு. கொடுப்பினுள் சிரிப்பு மருமகளுக்கு.

"இரப்பைக்கு வேலகுடுக்கக் கூடா பிள்ள. வயது போனப்பிறகு வயித்துக்குள்ள சிக்கல்வரும். அதால இப்பயே நாம வாய்க்குள்ளயே நல்லா சப்பித் தின்னோணும்பிள்ள"

"சரி மாமா.. சரி.. இத எத்தின தரம்தான் எங்களுக்கு சொல்லுவீங்க நீங்க?"

"எத்தின தரம் சொன்னாலும் உங்களுக்கு விளங்குதில்லயே. பார்அவன. ரெத்தம் குடுக்கப் போறவன் மாரி எவ்வளவு அவசரம் அவனுக்கு. நாம இன்னும் ஒருதரம் சாப்பிட்டு முடியல. ஆணம் விட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்டு, தயிரோடயும் திண்டு முடிச்சிற்றான். இப்பிடிச் சாப்பிட்டா தோல்ல ஒட்டுமா பிள்ள"

மருமகன் மாமாவின் கதைகளுக்கு சாப்பாட்டு விடயத்தில் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. சிரித்துக்கொண்டே சாப்பிடுவான். அநேகமாக மாமா சாப்பிடும் போது சென்னி அவருடன் இருந்து சாப்பிடுவது மிகக் குறைவு.

"மாமா.... நம்மட எருமை மாடுகள்ல கறக்கிற பால ஏன் நாம யாவாரிக்கு குடுக்கோணும்?"

'பின்ன என்ன செய்யிற. அவ்வளவத்தையும் கறக்காம விடுறதா... இல்லாட்டி கறந்து போட்டு ஊத்தி விடுறதா....."

"ஏன் கறக்காம விடோணும்? ஏன் கீழ ஊத்தோணும்?.. பால வாங்கி அவங்க என்ன செய்யிறாங்க. தயிர் உறைச்சித்தானே விக்கிறாங்க. அத நாம செய்தா நமக்கு கூடக்காசு வரும்தானே மாமா"

"வரும்தான். அதுக்கெல்லாம் ஆருக்குப் புள்ள நேரம் இருக்கு. கறுளோசு நல்ல மனுசன். எப்ப போய்க் கேட்டாலும் தேவையான நேரத்தில காசு தருவார். வாங்கிற்று வரலாம். இப்ப நமக்கு என்ன பிள்ள சிக்கல் இருக்கு. ஒண்டும் இல்லத்தானே பிள்ள"

பாலை பாலாக விற்கும் விலை கேட்டாள். தயிரின் விலை கேட்டாள். ஒரு போத்தல் பாலில் எவ்வளவு தயிர் செய்யலாம் என்பதனைக் கேட்டாள்.

மாமாவிற்கு தயிரில் உள்ள இலாபத்தினை எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் புரியவைத்தாள்.

"அம்மாடி... நாலுமடங்கு லாபம் இருக்கு எனடிபுள்ள... ம்ம்... இத யோசிக்கத்தாண்டி வேணும்... நீ படிப்ப முடிச்சிற்று வா. நம்மட வீடும் நல்ல இடத்திலதானே இருக்கு... இதுக்கு ஒரு முடிவு கட்டத்தான் வேணும்... எங்கேயோ இருந்து வந்தவனுவள் நமக்கு நன்மை செய்யிறமாரி கொஞ்சக் காசத் தந்துபோட்டு அவனுவள்தானே எல்லா லாபத்தையும் எடுத்திற்று இருக்கானுவள்..."

மாமாவின் புரிதல் மருமகளுக்கு மகிழ்ச்சியளித்தது.

"அக்காச்சி கொஞ்ச ஆணம் விடு..." உணவுத்தட்டை நீட்டினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பி. நெத்தலிமீன் பாலாணம். நாக்கைச் சுண்டிப்போட்டது.

பகவதிப்பிள்ளை நெத்தலிமீன் ஆணம் சமைத்தால் சாப்பிடாமல் இருக்கிறவர்களும் ஒரு பிடி பிடிப்பார்கள். அவ்வளவு சுவையாக இருக்கும்.

ஆணத்துடன் சாப்பிட்டு முடிந்த பின்னர் எல்லோரது கோப்பை களையும் தாங்க கழுவிற்று வாறன் என வாங்கிக் கொண்டு இமையரசி சென்று கழுவிவந்தாள். மகிழ்சென்னி சாப்பிட்டு முடிந்து வானொலியில் பழைய பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தான். "உள்ளம் கொள்ளை போகுதே.... என்னையறியாமலே....." என வானொலி பாடிக்கொண்டிருந்தது.

தயிருடன் சாப்பிடும் போது உணவுத் தட்டைக்கழுவி அதன் பின்னர் சோறு வைத்து சாப்பிடுவதே தம்பலகமத்தில் எல்லோர் வீடுகளிலும் உள்ள வழமை. கறிக் கோப்பையுடன் சாப்பிட்டால் (மாட்டின் முலையில் எரிவு ஏற்படும் என்பது அவ்வூர்க்காரர்களின் நம்பிக்கை. அதனால் தட்டைக் கழுவிய பின்னர்தான் தயிருடன் சாப்பிடுவார்கள்.)

சோற்றின் மேல் தயிரைவிட்டு பிசைய அதன்மேல் அம்மா சீனியைப் போட்டாள். பின்னேரம் வாங்கிவந்த கதலி வாழைப்பழத்தை உரித்துப் போட்டாள் மருமகள். நால்வரும் நன்றாக சோறு, தயிர், சீனி, வாழைப்பழம் நான்கையும் கலந்து கொஞ்ச தண்ணீரும் விட்டு பிசைந் தார்கள். பிசையும் போது வலது கைவிரல் இடுக்குகளால் சோற்றுக்கலவை கிறீச் என்ற சத்தத்துடன் மேலே வரும். அதனை நாக்கால் நக்குவார்கள். அவ்வாறு நக்குவதிலுள்ள சுவை இருக்கிறதே. அப்பப்பா அது ஒருதனிச்சுவை.

ஒவ்வொருநாளும் இரவில் தயிரும் சோறும் அவர்கள் வீட்டில் இருக்கும்.

ஒன்பதரை மணியளவில் மகிழ்சென்னி கண்களில் கண்ணீர் ஆறாக ஓடிக் கொண்டிருக்க தேம்பித்தேம்பி அழுதுகொண்டே ஈருருளியில் இருந்து இறங்கினான். இமையரசி ஓடிச்சென்று "மாமா எங்கடா தம்பி... மாமாக்கு என்னடா ஆச்சு...." தம்பியை கட்டியணைத்து அழுதாள்.

"மாமா நம்மளயெல்யெல்லாம் விட்டிற்றுப் போயிற்றார்டி அக்கா...."

இருவரின் ஓவென்ற அழுகையை அங்கு கூடியிருந்தவர்களால் கூடத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

சென்னியை நிமிர்ந்துபார்த்த இமையரசி மூச்சற்றநிலையில் தரையில் தொப்பென்று விழுந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்தவர்களும் அப்பாவும் பதைபதைத்து ஓடிவந்து மகளைத் தூக்கிக்கொண்டு வீட்டு விறாந்தையில்கிடத்தி அவளதுமுகத்தில் நீரைத் தெளித்தார்கள். மெதுமெதுவாகக் கண்களைத் திறந்தவள் மீண்டும் வீரிட்டுழுதாள்.

அழுதுகொண்டிருந்த சென்னியின் மனதில் வயலில் வேலை செய்தவர்கள் என்ன செய்தார்களோ என்ற கவலையும் சேர்ந்துகொண்டது.

ஐந்தரை மணிவரை ஆறுபேரும் வயலில் வேலைசெய்தனர். சின்னத்தம்பியின் வட்டத்தனை ஐந்துஏக்கர் வயல். பட்டிமேட்டு வேலிப்பிள்ளைச் சேர்மன்தான் உரிமையாளர். சின்னத்தம்பி தொடர்பான நல்லஅபிப்பிராயம் வேலுப்பிள்ளைச் சேர்மனுக்கு இருந்தமையினால் அவனுக்கு ஐந்து ஏக்கர் வயலை குத்தகைக்கு கொடுத்திருந்தார். வயல் அறுவடைசெய்து வீட்டுக்கு நெல் போய்ச் சேரமுன்பு வேலுப்பிள்ளைச் சேர்மன்வீட்டில் ஆயப்பணத்துடன் நிற்பான் சின்னத்தம்பி. இந்த நேர்மை யினால்தான் தொடர்ந்து நாலு ஆண்டுகளாக அவனுக்கே அந்தவயலைச் செய்கைக்காக ஆயத்திற்குக் கொடுத்துவருகிறார்.

வேலாயுதம் அண்ணன் நல்லூரைச் சேர்ந்தவர். நல்ல திடகாத்தி ரமானவர். வரம்பு வேலைகள் நன்றாகச் செய்வார். தன்னுடன் மூன்றுபேரை வேலைக்கு அழைத்துச்செல்வார். ஒருவர் பாட்டாளிபுரத்தைச் சேர்ந்த நகுலன். மற்றையவர் இத்திக்குளத்தைச் சேர்ந்த மாதுளன். நாலாவது ஆள் பள்ளிக்குடியிருப்பைச் சேர்ந்த சுதா. இந்தத் தடவை ஆபரன் தாங்களும் வாறம் என்று கேட்டமையினால் ஆபரனின் மூன்று நண்பர்களை யும் அவர்களுடன் அழைத்து வந்திருந்தார். ஆபரன் இடைக்கிடை நல்லூ ருக்கு வருவதனால் வேலாயுதம் அண்ணனுக்கு அறிமுகம் இருந்தது. ஆனால் அவன் படித்தவன் என்றோ அவனது பின்புலம் என்ன என்றோ வேலாயுதம் அண்ணனுடன் வந்திருந்த யாருக்கும் தெரியாது.

வந்த முதல்நாளில் சின்னத்தம்பியுடன் சேர்த்து ஒன்பது பேர் வரம்பு அருகு தறிக்கும் வேலை செய்தார்கள்.

முதல் நாள் வேலை முடிவில் சின்னத்தம்பியைப் பார்த்து வேலாயுதம் அண்ணன் சொன்னார்.

"பெருமிரி நல்லா அடிச்சிருக்காங்க தம்பி. அடுத்த முறையும் இவங்களக் கூப்பிட்டு அடியுங்க"

"தங்கவடிவேல் ஐயாட பெடியன்தான் அடிச்சவன். போனமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியில்ல எண்டு நீங்கதானே சொன்னனீங்க. அதான் தங்கவடிவேல் ஐயாட்டப் போய்க் கேட்டன். அவற்ற மெசின் போட் தானே. நல்லா அடிக்கும். பொடியனும் மனம் வச்சு வேல செய்திருக்கான். வரம்பு ஓரமெல்லாம் நல்லா அடிச்சிருக்கான். மூலையில பாத்தீங்களா... இப்பிடி மற்ற ஆக்கள் அடிக்க மாட்டாங்க அண்ண"

"ஓம் தம்பி. நீங்க சொல்றது உண்மதான்.... தம்பி அவங்க நாலு பேரும் புது ஆக்கள். அதுதான் வேல குறைவா இருக்கு"

"பரவாயில்ல அண்ண. பதினொரு மணிக்குத்தானே வேலயும் தொடங்கினனாம. நாளைக்கு முடிச்சிரலாம் அண்ண"

"நாங்க நாலும்பேரும் ரெண்டு நாளயில செய்யிறவேல தம்பி இது. அவங்க நாலு பேரும் தங்களுக்கு அரைக்கூலி தந்தா போதும் எண்டுதான் வந்தவங்க தம்பி."

"பரவாயில்ல அண்ண, ஏன் அரைக்கூலி அவங்கட வீட்டிலயும் அடுப்பு எரிய வேணாமா அண்ணன்?"

"அவங்க தங்கடஊர் விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டுப் பொருட்கள் வாங்கிறதுக்குத்தானாம் வேல செய்ய வந்தவங்களாம்"

"அப்படியெண்டா உங்களவிட அவங்களுக்குக் கூடத்தான் அண்ண குடுக்கோணும்." கூறிவிட்டுச் சிரித்தான் சின்னத்தம்பி.

"இந்த நாட்கள்ள ஆரண்ண ஊருக்காண்டி இப்பிடிவேலை செய்யிறாங்கள். அவங்களோட பிறகு தனியாக்கதைக்கத்தான் வேணும். அவங்கள நினைக்க மகிழ்ச்சியா இருக்கண்ண"

முதல்வேலை முடிந்தபின்னர் மகிழ்சென்னி எட்டுப்பேரையும் தங்களது வீட்டில் தங்குதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுத்திருந்தான். ஆபரன், மகிழ்சென்னியின் நண்பன் என்றோ சென்னிதான் ஆபரனை வயல்வேலைக்கு வரச்சொன்னான் என்றோ யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

மகிழ்சென்னி ஆபரனைவிட ஆறு வயது குறைந்தவன். பல்கலைக்கழகப் படிப்பு முடிந்து ஆறாண்டுகள் நிறைவடைந்திருந்தது ஆபரனுக்கு. தனது அமைப்பின் வேலை நிமிர்த்தமாக இளக்கந்தைப் பண்ணைக்குச் சென்றபோது மகிழ்சென்னியுடன் கட்டைப்பறிச்சானில் சந்தித்தமையினால் தொடர்பு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இரண்டு ஆண்டுகளாக இருவரினதும் தொடர்புகள் மகிழ்சென்னியை அமைப்பு வேலைகளில் முழுமனதுடன் ஈடுபடும் அளவிற்கு வளர்த்திருந்தது.

இரவுநேரத்தில் அமைப்பின் கொள்கைகளை தெரிவு செய்யப் பட்ட வாலிபர்களுக்கு பகிர்வதே ஆபரனின் வருகையின் முதன்மை நோக்காகும். பன்னிரண்டு வாலிபர்களை சென்னி தயார்படுத்தியிருந்தான். அவர்கள் தம்பலகமத்தில் உள்ள ஊர்களில் இருந்து தெரிவுசெய்யப் பட்டிருந்தார்கள்.

முதல்நாள் கலந்துரையாடல் கள்ளிமேட்டில்தான் நடைபெற்றது. முழுநிலா பாட்டுக்கச்சேரி முடிந்ததன் பின்னர் சம்மாந்துறை மாரியம்மன் கோவிலுக்கும் கண்ணாக்காட்டிற்கும் இடையே உள்ள சிறியதீவு போன்ற மணற்றிட்டில்தான் ஒன்று கூடினார்கள். பத்தரை மணிவரை வகுப்பு நடைபெற்றது.

ஆபரனின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அங்கிருந்தோரை வசியப்படுத்தியது. உழைக்கின்றமக்கள் எவ்வாறு தமதுழைப்பை தமக்குத் தெரியாமலே வீணாக்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனையும் முதலாளிகள் எப்படி தொழிலாளர்களின் உழைப்பினை உறுஞ்சுகின்றார்கள் என்பதனையும் எளிதாக ஆனால் விரிவாக தெளிவுபடுத்தினான். கலந்து கொண்ட அனைவருமே உயர்தரம்படித்த வாலிபர்கள். ஆபரனின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் உண்மையைச் சொல்லி நிற்பதனை எளிதில் புரிந்துகொண்டார்கள்.

இயங்கியல் தொடர்பாக தெளிவுபடுத்தினான். அறிவியல் ரீதியில் சிந்திக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினான்.

முதல்நாள் வகுப்பு அத்தோடு நிறைவடைந்தது.

அடுத்தநாள் சந்திப்போம் என ஒருவருக்கொருவர் நிலவொளியில் கைலாகு கொடுத்து விடைபெற்றனர்.

ஆபரனும் சென்னியும் சுவாமிமலையிலுள்ள வீட்டிற்கு இரவைக் கழிப்பதற்காக ஈருருளியில் புறப்பட்டுச் சென்றனர். ஏனையோர் மனநிறைவுடன் நாளை எப்போது வரும்என்ற மன அங்கலாய்ப்புடன் அவரவர்வீடு நோக்கிப் புறப்பட்டனர்.

இரண்டாம்நாள் வயலில் வரம்புகள் கட்டும் வேலையினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்தவர்கள் சுப்பையா அண்ணன் வீட்டில் இரவு தங்கினர். சென்னி அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தான். இரவு உணவினையும் ஒழுங்கு செய்திருந்தான். 'இவ்வளவு நெருக்கடியான நிலையிலும் மகழ்சென்னி நமக்காக தங்கிறதுக்கு இடம், சாப்பாடு எல்லாம் ஒழுங்கு செய்திற்றுத்தான் போயிருக்கிறார்' என எண்ணி மகிழ்வடைந்து கவலையடைந்தார்.

## - 5 -

ஆபரன் களைப்படைந்திருந்தான். காலில் பட்ட குண்டினால் ஏற்பட்ட விழுப்புண் வலியை ஏற்படுத்திக் கொண்டேயிருந்தது. அப்புண்ணிற்கு மருத்துவர் மருந்து கட்டி நோவின் வலிமையினைக் குறைப்பதற்கு மாத்திரை கொடுத்திருந்தாலும் அதனையெல்லாம் மீறி வலித்தது அவனுக்கு. கெண்டைக்கால் எலும்பு உடைந்து விட்டது என்பதனை உணர்ந்தான்.

என்னை என்ன செய்யப்போகின்றார்களோ தெரியாது. ஆனால் தங்களுக்கு ஏற்றவகையில் இரட்டை முகவராக மாற்ற முற்படுகின்றார்கள் என்பதனை சுரேஸ்காசிம் மற்றும் மருத்துவர் ஹசன் ஆகியோரின் செயற் பாடுகள் கூறிநிற்பதாக உணர்ந்தான். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என மனதில் எண்ணிக் கொண்டான்.

சுரேஸ்காசிம் மருத்துவருடன் வந்தான்.

"எனது முகாமிற்குப்போகாமல் இங்க வரவேண்டியதாகிப் போய்விட்டது. கொழும்பிலிருந்து சிறில்மத்தியூ வந்தவர். அவரைச் சந்திக்க வரச்சொல்லியிருந்தார்கள். உங்களப் பிடிச்சதனால எனக்குப் பெரிய பாராட்டுக் கிடைச்சிருக்கு. அதோட அரசு பதவிஉயர்வும் தந்திருக்கு."

ஆபரன் வாய் திறக்கவில்லை. சுரேஸ்காசிம்தான் தொடர்ந்தான்.

"பலஸ்தீனத்தில பயிற்சிஎடுத்து திருக்கோணமலை மாவட்டத்தில இருக்கிற ஆக்கள் ரெண்டு பேர்தான். அதில நீங்க ஒருவர். மற்றவர் சின்னவன். சின்னவன் இப்ப இஞ்ச இல்ல எண்டு எங்களுக்குத் தெரியும்."

நிறுத்திவிட்டு ஆபரனைப் பாரத்தான். எதுவித சலனமும் இன்றி இயல்பாக இருந்தான் ஆபரன்.

"நாம இப்ப என்ர முகாமுக்குப் போகப் போறம். அங்கதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கான விசாரணை நடக்கும்" கூறியவன் தனது வாகனச்சாரதியை அழைத்து ஏதோ சொன்னான்.

சாரதி வாகனத்தை எடுத்துக்கொண்டு விமானப் படைத்தளத்தின் வெளிவாசல் கதவினால் தனது வாகனத்தைக் கொண்டு செல்லும்வரை ஆபரன் அவதானித்தான். மீண்டும் இருபது நிமையங்களில் அந்த வாகனம் வந்தது.

அவன் இறங்கி வரும்போது கையில் ஓர்உமல் இருந்தது. அதனை சுரேஸ்காசிமிடம் கொடுத்தான். உமலில் இருந்து ஒருபொதியை ஆபரனுக்குக் கொடுத்துவிட்டு, தான் ஒன்றை எடுத்துக் கொண்டு மற்றயதை மருத்துவரிடம் கொடுத்தான்.

"மாமரங்களின் நிழலில் இருந்து சாப்பிடக் கொடுத்து வச்சிருக் கோணும்" சுரேஸ்காசிம் கூறிக்கொண்டே சாப்பாட்டுப் பொதியைப் பிரித்தான்.

ஆபரனையும் சாப்பிடுமாறு மருத்துவர் கூறினார். தான்மிகவும் எளிமையான அதிகாரி என்பதனை நிருபிப்பதற்காக சுரேஸ்காசிம் முயன்று கொண்டிருப்ப தனை ஆபரன் மனதில் அளந்து கொண்டிருந்தான்.

சிறிலங்காவின் படைகள் எவ்வாறு நன்கு பயிற்றப் பட்டிருக்கின் றார்கள் என்பதனை அளவிட்டுக் கொண்டிருந்தான்.

மூவருமாக சாப்பிட்டனர். மீன்பொரியல் சுவையாக இருந்தது ஆபரனுக்கு. களைத்துப் போயிருந்தவனுக்கு அந்த நேரத்தில் அது தேவாமிர்தம் என்று ஊரில் சொல்வார்களே அப்படித்தான் இருந்தது அவனுக்கு.

சாப்பிட்டு நீர் குடித்து முடிந்தபின் ஆபரனையும் அழைத்துக் கொண்டு இருபத்தியிரண்டாவது படைப்பிரிவு முகாமை நோக்கி சுரேஸ் காசிம் புறப்பட்டான். பிளான்ரன்பொயின்ற் என்றால் திருக்கோணமலை மாவட்டத்தில் வசிக்கும் தமிழ்மக்களுக்கு குலைநடுங்கும்.

அங்கு நடக்கும் சித்திரவதைகளை பிடிபட்டவர்கள் வந்து சொல்வார்கள். யாராவது அங்கு சென்றால் அங்கிருந்து வரும்போது எலும்பும் தோலுமாகத் தான் வருவார்கள். அடுத்த ஆறுமாத காலத்திற்கு தனியாளாக எந்த வேலையும் செய்ய முடியாதளவிற்கு கவனிப்புகள் அங்கு தாராளமாக கிடைக்கும்.

சுரேஸ்காசிம் தனது வாகனத்தை மாத்திரம் திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவமனை நோக்கி செல்லுமாறு பணித்தான். ஏனைய வாகனங்களை முகாமிற்கு போகும்படி கட்டளையிட்டான்.

மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவின் நுழைவாயில் வாகனம் தரித்தது. ஆபரனை வாகனத்திலிருந்து இறங்குமாறு கூறினான். இறங்கிய ஆபரனைத் தள்ளுவண்டியில் இருத்தி மருத்துவமனையினுள் தள்ளிக்கொண்டு சென்றார்கள்.

ஏற்கனவே சத்திரசிகிச்சை நிபுணரிடம் அறிவித்துவிட்டே சுரேஸ்காசிம் வந்திருக்க வேண்டும். அதனால்தான் சத்திரசிகிச்சை நிபுணரான தபேந்திரன் ஐயா மருத்துவமனையில் தயாராக காத்திருந்தார். எதுவித தாமதமும் இன்றி சத்திரசிகிச்சைக்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

ஆபரனுக்கு கணுக்காலில் குண்டடிபட்டிருந்தது. சத்திரிசிகிச்சை கூடத்திற்கு ஆபரனை அழைத்துச் சென்றார்கள். தபேந்திரன் ஐயாவும் உடன் சென்றார். இரு வீரர்கள் காவலுக்கு கூடத்திற்கு வெளியே நின்றார்கள்.

இரண்டு மணிநேரத்தின் பின்னர் சத்திரசிகிச்சை முடிவடைந்து மருத்துவர் தன் வீட்டிற்குப் போய் விட்டார்.

ஆபரனை பதின்னான்காம் களத்திற்கு மாற்றியிருந்தார்கள். மயக்கம் தெளிந்திருந்தது. காலில் நேற்றிருந்த நோவு குறைந்திருந்தது.

காலையில் காலைக்கடன்களை செய்து முடிப்பதற்கு களத்தில் இருந்த ஆண் தாதி உதவினார். ஆபரனிடம் விபரம் கேட்டார். அவன் எதுவும் சொல்லவில்லை. தாதிக்கு ஏமாற்றமாக இருந்தது.

காலை எட்டு மணியளவில் சுரேஸ்காசிம் வந்து பார்த்துவிட்டுப் போனான். ஆனால் ஆபரனுடன் எதுவும் கதைக்கவில்லை.

ஒன்பது மணியாகியிருந்தது. தபேந்திரன் ஐயாவுடன் சுரேஸ்காசிம் வந்திருந்தான். சிறிது நேரம் இருவரும் கதைத்தனர். ஆபரனை தன்னுடன் புறப்படுமாறு கூறினான் சுரேஸ்காசிம். படைவீரர்களின் தோளில் தனதுகைகளை இருபுறமும் போட்டுக்கொண்டு ஒற்றைக்காலால் கெந்திக் கெந்தி நடந்தான் ஆபரன். அதனைப் பார்த்த தபேந்திரன் ஐயா அவர்களை நிற்குமாறுகூறி உடனடியாக தள்ளுவண்டியை அழைத்து அதில் ஆபரனை இருக்கவைத்து தள்ளிச் செல்லவதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தார்.

சுரேஸ்காசிம் தனது வாகனத்தில் ஆபரனை ஏற்றிக்கொண்டு தனது முகாமிற்குச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு நாட்கள் எதுவுமே ஆபரனுடன் யாரும் கதைக்கவில்லை. சாப்பாடு மாத்திரம் கொடுத்தார்கள். அவனது பணிகளை தன்னால் செய்ய முடியாத போது ஆபரனுக்கு படைவீரர்கள் உதவினார்கள்.

ஆபரனுக்கு ஆச்சரியமாக அவை இருக்கவில்லை. தன்னை தங்கள் பிடிக்குள் கொண்டு வருவதற்கான பணிகளில் இறங்கியிருக்கிறார்கள் என்பதனை உணர அவனுக்கு எதுவும் தேவைப்படவில்லை.

எவ்வளவோ பயிற்சிகளைப் பெற்றவனுக்கு இவையெல்லாம் ஒரு தூசு. எப்படியாவது இங்கிருந்து தப்ப வேண்டும். ஆனால் அதற்கான வழிகள் சிறிதும் இல்லையே என எண்ணிக் கவலைப்பட்டான்.

வாய்ப்பு வரும்வரை காத்திருக்க வேண்டியதுதான். அதுவரை சந்திக்கும் துன்பங்களையும் துயரங்களையும் தாங்கிக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என மனதைத் தேற்றிக்கொள்வான்.

இரண்டாவது நாள் இரவு ஒன்பது மணியாகியிருந்தது. ஆபரன் இருந்த கூடாரத்தினுள் தோளில் ஆயுதம் ஏந்தியவாறு இரு படைவீரர்கள் வந்தனர். அவர்களது பார்வை கடுமையாக இருந்தது. இன்று தன்னை ஏதோ செய்யப் போகின்றார்கள் என ஆபரனின் மனது சொல்லியது.

தங்களுடன் எழுந்து வருமாறு கூறினார்கள். கைத்தடியின் உதவியுடன் நொண்டி நொண்டி நடந்தான். கடற்கரையை நோக்கி இருவரும் சென்றார்கள். தங்களைத் தொடர்ந்து வருமாறு கூறினான் ஒருவீரன். ஆபரன் அவர்களைப் பின் தொடர்ந்தான்.

கடற்கரை ஓரத்திலே சாய்மனைக்கதிரையில் சாய்ந்து படுத்திருந்தான் சுரேஸ்காசிம். முன்னால் இருந்த கதிரையை தன்கையால் சுட்டிக்காட்டி அமரும்படி சொன்னான். இருவீரர்களையும் திரும்பிச் செல்லுமாறு பணித்தான். இருவரும் தலையாட்டிமாடு மாதிரி தலையை ஆட்டி விட்டு இருளான பகுதியில் சென்று நின்றுகொண்டார்கள். ஆபரன் அவர்கள் நிற்பதனை நிலவொளியில் அவதானித்தான். மெலிதாகத் தெரிந்தார்கள்.

படுத்திருந்த சுரேஸ்காசிம் சாய்மனைக் கதிரையிலிருந்து எழுந்து தன்முன்னால் இருந்த சிறிய மேசையில் தயாராக வைக்கப்பட்டிருந்த மதுப்போத்தலை உடைத்தான்.

"பாவிக்கிறனீங்களா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை"

"இல்லையா?... ஏன் நீங்க யாருமே குடிக்க மாட்டீங்களா?..."

"........................"

"இண்டைக்கு என்னோட கொஞ்சம் குடியுங்களன்"

"குடிச்சுப் பழக்கமில்ல..."

"பரவாயில்ல... கொஞ்சம் குடியுங்க... கட்டாயப்படுத்தல்ல... விரும்பினா......என்னோட குடிச்சா எனக்கும் நல்லா இருக்கும்.."

"............................."

"சரி உங்கள கட்டாயப்படுத்தல்ல. கால் எப்பிடி இருக்கு?..."

"நோவு குறைஞ்சிருக்கு. சரியாகிரும் எண்டு நினைக்கிறன்...."

"உங்களுக்கு இதெல்லாம் பெரிய நோவு இல்லத்தானே. தப்பிறதுக்கு மட்டும் முயற்சி செய்திராதீங்க. இஞ்ச இருந்து தப்ப ஏலாது. கடும் பாதுகாப்பு இருக்கு. உங்கள நான் தனியத்தான் விசாரிப்பன். அதுக்கான அநுமதிய எடுத்திருக்கிறன். காயம் மாறமட்டும் நான் எதுவும் கேட்கமாட்டன். ஒத்துழைச்சிங்க எண்டா நீங்களும் நல்லா இருக்கலாம்..."

"............................"

மெது மெதுவாக ஆனால் நிதானமாக ஒவ்வொரு வார்த்தை களையும் உதிர்த்தான் சுரேஸ்காசிம். அரைப்போத்தல் விரைவாக முடிவடைந்திருந்தது. வெளிநாட்டு மதுவாக இருந்தது. உயரதிகாரிகளுக்கு கிடைக்கும் சலுகைகளில் இதுவும் ஒன்று என எண்ணிக்கொண்டான்.

படையினருக்கு பிளான்ரன்பொயின்ற் மிகவும் பாதுகாப்பான இடம் என்பதனை ஆபரன் அறிந்திருந்தான். அங்கிருந்து தப்புவதென்பது குதிரைக்கொம்புதான் என்பதனையும் உணர்ந்தான்.

போத்தலின் முக்கால்வாசி முடிவடைந்திருந்தது. சாய்மனைக் கதிரையில் சாய்ந்து நித்திரையாகிவிட்டான். ஆபரனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

நேரம் ஒருமணி இருக்கும் என ஊகித்தான். நிலவொளியில் தான் இருந்த இடத்தை நோட்டம் விட்டான். அருகில் காவலுக்கு நூறு மீற்றர்கள் தூரத்திற்கப்பால் மரநிழல் இருளில் நிற்கும் தன்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துவந்த இருவீரர்களையும் தவிர வேறுயாரும் இல்லை. முகாம் நுழைவாயிலுக்கு அந்த இடத்திலிருந்து ஏறத்தாள ஒரு கிலோமீற்றர்களாவது போகவேண்டும்.

நிலவொளியில் கடல் மினுங்கியது. இரவின் நிலவொளியில் அந்த இடத்தின் அழகினை இரசித்தான் ஆபரன். வேறு நேரமென்றால் மனக்கிடக்கைகளை பாடலாக வெளிப்படுத்தியிருப்பான். ஆபரன் சிறுவயதிலிருந்தே நன்றாகப் பாடுவான். அவனது நிலையோ கூண்டுக்கிளி போல் இருந்தது. எனினும் அந்த இடத்தைப் பார்த்தான். கடற்கரையில் பெரிய பாறைகளாக கற்கள் தெரிந்தன. 'இதுதான் கறுத்தக் கல்முனையோ' என மனதில் எண்ணினான்.

"தான் சிறு வயதாக இருக்கும்போது மீன் பிடிப்பதற்காக சிறிய வள்ளத்தில் அப்பாவுடன் சென்று பிளான்ரன் பொயின்ற் இல் இருக்கிற கறுத்தக்கல்முனை பகுதியில் உள்ள மர நிழலில் இருந்து சாப்பிடுவது வழக்கம்" என பள்ளத்தோட்டத்து யேசுதாசன் அண்ணன் சொன்னது இந்த நேரத்தில் நினைவிற்கு வந்தது ஆபரனுக்கு.

தூரத்தில் எங்கோ சேவல் கூவியது. நாலு மணியாகிவிட்டது என மனம் சொல்லியது. நித்திரை கண்களை இருட்டியது. தான் குடித்ததோடு அல்லாமல் என்னையும் கதிரையில் இப்பிடி இருத்திவிட்டானே பாதகன் என மனம் சுரேஸ்காசிமை நொந்தது. ஐந்தரை மணியிருக்கும் திடுக்கிட்டு எழுந்தவன் சுற்றுமுற்றும் பாரத்தான். ஆபரன் கதிரையில் அப்படியே இருந்தான்.

"நீங்க படுக்கல்லயா"

"இல்ல.."

"காமினி மெகெ எண்ட. மெயாவ எயாகே கட்டெக்கட்ட அறங் யண்ட- காமினி இஞ்ச வா. இவர அவர் இருக்கிற குடிலுக்கு கூட்டிற்றுப் போ"

தான் பிழை செய்துவிட்டதாக முகபாவனையால் தெரிவித்தான்.

அடுத்தநாளும் அவ்வாறுதான் நடந்துகொண்டான். ஆனால் அடுத்தநாள் படைவீரர்கள் அந்த இடத்தில் நிற்கவில்லை. அதனால் கதிரையில் இருந்து எழுந்து புற்தரையிலே ஆபரன் படுத்துக்கொண்டான்.

இவ்வாறு ஏழு நாட்கள் நடைபெற்றன. ஏழாவது நாள் இரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திப்பு சற்று இறுக்கமாக இருந்தது.

"இண்டைக்கு உங்கட அம்மா வந்தவ. உன்னைப் பாக்கவாம் எண்டு கேட்டா" இவ்வளவு நாளும் இருந்த உங்களை என்பது உன்னை என மாறியது.

"நாங்க பிடிக்கல்ல எண்டு சொல்லிப் போட்டம். காலயில வந்தவ. பின்னேரம் வரைக்கும் கிடந்திற்று போறா. எவ்வளவெண்டாலும் காசுதாறன் எண்டு சொன்னா. நிறயக் காசு வச்சிருக்கிறா போல"

"அவமகன் பாசத்தில சொல்லியிருப்பா. அவவுக்கு என்னைப் பற்றி எதுவும் தெரியாது."

"இந்த இடத்துக்கு நாங்கபிடிச்ச ஆரும் வந்ததில்ல. கறுத்தக் கல்முனைக்கு வந்த ஒரேயாள் நீதான். ஏன் உன்னக் கூட்டி வந்தனான் தெரியுமா"

"................................"

"நீ என்னோட சேர்ந்து ஒத்துழைக்கோணும். எங்கட நடவடிக்கைக்கு உதவோணும்.."

"...................................."

"என்ன சொல்றா..."

"................................."

அரைப்போத்தல் முடிவடைந்து விட்டது. கதை தடுமாறியது. இன்னும் அரை மணிநேரம்தான் கதைப்பான் அதன் பின் படுத்துவிடுவான் என்பதனை கடந்த ஆறுநாட்கள் பட்டறிவின் மூலம் தீர்மானித்துக்கொண்டான். எப்படி இப்படி இவன் ஒவ்வொருநாளும் குடிக்கிறான். அவனது உடல் என்னவாகப் போகிறது. அவனது குடல் எவ்வளவு நாளைக்குத்தான் இருக்கப் போகிறது. சாகிறபோது ஈரல் இல்லாமல்தான் சாவாகப்போறான் என ஆபரன் அவனைப் பற்றி கவலைப்பட்டான்.

கடைசிவார்த்தைகள் சற்றுக் கடுமையாக வந்தன. நிதானமாக எதுவும் கூறாது நின்றான் ஆபரன்.

முதல்நாளே தப்ப வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் நிலைநிறுத்தினான் ஆபரன். ஆனால் வழி தெரியவில்லை. தனக்கு இனிஇருக்கும் ஒவ்வொரு நாளும் ஆபத்து என்பதை உணர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரவதைப்பட்டு சாவதைப் பார்க்கிலும் சுடுபட்டுச் சாவதுமேல் என தன்னைத் தேற்றிக்கொண்டான்.

இன்றையநாள் தப்பிப் போவதற்கு வாய்ப்பானநாள் என அவனுக்குப் பட்டது. தான் எண்ணியது போல் அந்தஇடம் கறுத்தக் கல்முனைதான் என்பது சுரேஸ்காசிமினின் வாயினாலேயே உறுதியானது நிம்மதியாக இருந்தது.

அந்த இடத்தில் அவர்கள் இருவரையும் தவிர வேறுயாரும் இல்லை என்பதனை உறுதிப்படுத்திக்கொண்டான்.

கறுத்தக்கல்முனையிலிருந்து வடக்காக நேராக ஐநூறு மீற்றர் தூரமளவில் கடலை கடந்தால் இலிங்கநகரின் கடற்கரையோரமாக இருக்கும் நல்ல தண்ணிமுனைக்குப் போகலாம். வெறும் இருபது நிமையங்களில் கடந்து விடலாம். ஆபரனுக்கு மனம் சொல்லியது.

ஆபரன் மிக வேகமாக நீந்தக் கூடியவன். சிறுவயதில் இத்திக் குளத்தில் நீந்திப் பழகியவன். ஆழத்திற்குச் செல்லவிடமாட்டார்கள். முதலை இத்திக்குளத்தில் இருப்பது எல்லோருக்கும் தெரியும். பாலஸ்தீனத்தில் பயிற்சிகளை முடித்தபின்னர் இந்தியாவில் தங்கச்சிமடத்தில் இருந்தபோது கடலில் நீந்தக் கற்றிருந்தான்.

சல்லியில் அமைப்பு வேலையாக ஒன்பதுமாதங்கள் பணியாற்றிய போது திலகப்பாவுடன் ஒவ்வொருநாளும் கடலில் நீந்தப்போவான்.

திலகப்பா சல்லி மீனவர் சங்கத்தின் துணைத்தலைவராக இருந்தவர். பார்ப்பதற்கு கரடு முரடானவராகத் தோன்றினாலும் சின்னப்பிள்ளைக் குணமுள்ளவர். எல்லோருடனும் அன்பாகப் பழகுவார். நல்ல உயரம். எப்படியும் ஆறடி ஓரங்குலமாவது இருப்பார். மேலங்கி போடமாட்டார். அடர்ந்த கறுத்த நெஞ்சு மயிர்கள் அவருக்கு அழகு சேர்க்கும். தடித்த மீசையை அடிக்கடி முறுக்கி விட்டுக்கொள்வார். மீசை முறுக்குவதில் ஓர் ஆனந்தம் அவருக்கு.

ஆபரனின் செயற்பாடுகளினால் திலகப்பாவிற்கு அவனை நன்றாகப் பிடித்துப் போய்விட்டது. நீச்சல் நுணுக்கங்களை ஒன்றுவிடாமல் ஆபரனுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

நீந்தும் போது களைப்பாக இருந்தால் நீந்துவதனை நிறுத்தி மல்லாக்காக நீரில் மிதந்து மூச்சினை உள்ளெடுத்து சில நிமையங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே பிடித்துவைத்து எவ்வளவு நேரமானாலும் நீரிலே மிதந்து கிடக்கும் நுணுக்கத்தை ஆபரனுக்குச் சொல்லிக் கொடுத்தவரும் திலகப்பாதான்.

சல்லியிலிருந்து கெவுளியா பவுல்முனை ஏறத்தாள பதினைந்து கடல்மைல் தூரத்தில் இருந்தது. அதனை நீந்திக் கடப்பதற்கு ஆபரன் விரும்பினான். திலகப்பாவிற்கு அது மகிழ்ச்சியாக இருந்தது. சல்லி மீனவர் சங்கத்தினருக்கும் அறிவித்து ஆபரன் நீந்தும் போது பாதுகாப்பிற்காகச் அருகில் உடன் செல்வதற்கு இரண்டு இயந்திரப் படகுகளை ஒழுங்குசெய்து கொடுத்தார்.

அன்று அமாவாசை கடந்து நான்காவது நாள். சல்லியில் இருந்து இரவு ஏழரை மணிக்கு ஆபரன் நீந்தத்தொடங்கினான். சரியாக ஐந்து மணிநேரத்தில் பன்னிரண்டரை மணிக்கு கெவுளியா வெளிச்சவீட்டுக் கருகில் கரையைத் தொட்டான்.

அதன்பின்பல தடவைகள் கெவுளியாவிலிருந்து சல்லிக்கு நீத்திச் சென்றிருக்கிறான். நீந்துவது சிறந்த உடற்பயிற்சி என்பதனை ஆபரன் நன்கு தெரிந்து வைத்திருந்தான். ஒரு மனிதனின் அனைத்து உறுப்புகளும் தொழிற்படுகின்ற ஒரேயோரு உடற்பயிற்சி நீச்சல்தான் என எட்டாம் வகுப்பு படிக்கும் போது செல்வநாயகம் ஐயா சொல்லிக் கொடுத்ததனை நினைவில் வைத்துக்கொண்டே நீச்சலுக்கு முக்கியத்துவம் கொடுத்தான் ஆபரன்.

எப்படியான கடலிலும் நீந்தும் வல்லமை கொண்டவனாக ஆபரன் விளங்கினான். முழுநிலாக் காலங்களில் நீந்துவதைத் தவிர்ப்பான். அந்நாட்களில் கடலில் நீரோட்டவேகம் அதிகமாக இருக்கும் என்பதனை திலகப்பா அடிக்கடி சொல்லுவார். அதனை பட்டறிவின் மூலமாகவும் கண்டிருக்கிறான் ஆபரன்.

இலிங்கநகரில் கடற்கரை ஓரமாக நல்லதண்ணிமுனை இருக்கிறது. நல்லதண்ணிமுனைக்குச் சென்றால் இலிங்கநகரிலிருந்து தப்பிச்செல்ல முடியாது. படையினர் சுற்றிவளைத்தால் எங்கும் செல்லமுடியாது. தரைவழி பாதுகாப்பானதாக இருக்காது என்பதை கணப்பொழுதில் தீர்மானித்தான்.

சாண்டில்யன் எழுதிய "கடல் புறா" வில் கலிங்கதேசத்து கோதாவரி நதிக்கரையில் உள்ள தோப்பில் சோழப்படைத்தலைவன் கருணாகர பல்லவனும் கடாரத்தின் இளவரசியான காஞ்சனாதேவியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகிலிருக்க அமீரிடம் தப்பிச் செல்வதற்கு எந்தவழி சிறந்தது என்று அநபாயர் கேட்க "நிலத்தினால் செல்வது ஆபத்தானது, அழிவிற்கு வழிவகுக்கும். எனவே நீர்வழிதான் சிறந்ததாகும்" என்ற காட்சி ஆபரனுக்கு அந்த நேரத்தில் நினைவிற்கு வந்தது. கடல்புறா ஆபரன் நெஞ்சில் படமாக ஓடியது. அற்புதமான அந்த வரலாற்றுப் புதினம் அது என்பதால் மூன்று தடவை கடல்புறாவை ஆபரன் வாசித்திருக்கிறான்.

பிளான்ரன்பொயின்ற் முதன்மை நுழைவாயில் மூலமாகவும் தப்பிக்க முடியாது.

திருக்கோணமலை கடல் தோற்றத்தினை ஏற்கனவே அவன் திலகப்பா மூலமாக அறிந்திருந்தான். மனக்கண் முன் அவற்றைக் கொண்டு வந்தான்.

கறுத்தக்கல்முனையிலிருந்து தென்கிழக்காக உள்ள வட்டமுனைத் தளம் எப்படியும் ஐநூறு இல்லாட்டி அறுநூறுமீற்றர் தூரம்தான் வரும். அந்த இடத்திலிருந்து மேற்காக இருநூறுமீற்றரில்தான் பிறிமா இருக்கிறது. வட்டமுனைக்கு நீந்திச் செல்ல பத்து நிமையங்கள்தான் எடுக்கும். அங்கேயிருந்து தெற்காக சோபர்த்தீவு முந்நூறுமீற்றர் இடைவெளியில் இருக்கிறது. அவ்விடத்திலிருந்து நீந்திச் சோபர்த்தீவையடைவதற்கு பத்து நிமையங்கள் போதும். மனதால் கணக்கைப்போட்டான். அங்கு சென்றுவிட்டால் அங்கிருந்து எப்படியும் போய்விடலாம். இதுதான் பாதுகாப்பான வழி. இந்த வழியால் தப்புவேனென்று யாரும் எண்ணவும் மாட்டார்கள். நல்லதண்ணிமுனைக்கு சென்றிருப்பேன் என்றுதான் படையினர் நினைத்துத் தேடுவார்கள் என்ற அவனது எண்ணம் பொய்யாக வில்லை.

ஏறத்தாள நள்ளிரவு பன்னிரண்டு மணியாகியிருந்தது. சுரேஸ்காசிம் மதுவெறியில் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் தூங்கினால் காலை ஐந்தரைமணிக்குத்தான் எழுந்திருப்பான் என்பதனை கடந்தநாட்களில் ஆபரன் கண்டுகொண்டான்.

கதிரையிலிருந்து தரையிலே படுத்தஆபரன் மெதுவாக தரையிலே தவன்று தவன்றுசென்று பின்னர் நீரிலும் தவன்றான்.

இடுப்பளவிற்கு தண்ணீர் வந்தவுடன் சத்தமின்றி மல்லாக்காக நீரில் மிதந்து பின்பக்கமாக நீந்தத் தொடங்கினான். சத்தமின்றி நீந்துவதற்கு பின்பக்கமாக நீந்துதே பொருத்தம் என தீர்மானித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீந்திச் செல்லுகின்றபோது பிறீமாஆலை அதன் வெளிச்சத்தினால் அழகாகக் காட்சியளித்தது. வானில் நட்சத்திரங்கள் அவன் நீந்தும் அழகை இரசித்துக் கொண்டு கண்சிமிட்டிக்கொண்டிருந்தன. பிறீமா வெளிச்சம் அவன் செல்ல வேண்டிய இடத்திற்கான வழியினை சொல்லிக் கொண்டிருந்தது. வட்டமுனையினை அவன் கணித்தது போல் பத்து நிமையங்களில் சென்றடைந்துவிட்டான்.

சிறிதுநேரம் அந்த நள்ளிரவில் வட்டமுனையில் ஓய்வெடுத்தான். பிறிமா மா ஆலையில் இரவு வேலை நடந்துகொண்டிருந்தது. ஆலை வெளிச்சத்தினால் சுற்றியுள்ள பிரதேசம் பால்போன்று வெளிச்சமாக இருந்தது.

சோபர்த்தீவினை நோக்கி நீந்தினான். அந்தத்தீவில் கடற்படை யினர் இருப்பார்களோ என்னவோ தெரியாது. அப்படி இருந்தாலும் கரை ஓரத்தில் இருக்கமாட்டார்கள் என தானாகவே எண்ணிக்கொண்டு சோபர்த்தீவினை அடைந்தான்.

சோபர்த்தீவு ஆங்கிலேயர் காலத்தில் முக்கியமான ஓர் இடமாக றோயல் கடற்படை பாவித்தது என்பதனை இலங்கையர் அனைவரும் அறிவர்.

சுற்றிவர நீரால் சூழப்பட்ட அந்தக் குட்டித்தீவு மிகவும் அழகானது. பல காவல் பதுங்குகுழிகள் அந்தத்தீவினைச் சுற்றிவர அமைக்கப்பட்டிருந்தன. திருக்கோணமலை கடற்படைத்தளத்தின் பாதுகாப்பு சோபர்த் தீவின் பாதுகாப்பிலேயே தங்கியிருந்தது.

ஆபரன் நிற்கும் இடத்திலிருந்து தெற்குப் பக்கமாக தீவின் அடுத்த முனைக்குச் செல்வதற்கு கரையோரமாக இரண்டு கிலோமீற்றர் களாவது செல்ல வேண்டும்.

கரையினை அடைந்தவன் டொக்கியாட் பக்கத்திற்கு எதிர்ப் பக்கமாக கரைஓரத்தினால் சுற்றி தெற்குப் பக்கமாகத், தான் சேரவேண்டிய இடத்தைநோக்கி அந்த நடுச்சாமத்தில் மெதுமெதுவாக நொண்டி நொண்டி நடந்தான்.

மேற்குப் பக்கத்தில் இருக்கின்ற இடங்களை நிலவொளியில் நோட்டமிட்டான். கவட்டிக்குடா ஆயிரத்திஐநூறுமீற்றர் தூரத்திலும், நெடும்குடா ஒரு கிலோமீற்றர் தூரத்திலும், திருத்தல்குடா ஐநூறுமீற்றர் தூரத்திலும் இருக்கும். அவற்றின் நிலம் கடலுடன் தொடும்பரப்பு இருக்கும் என மனதால் கணித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மூன்று இடங்களுக்கும் நீந்திச் சென்று நிலத்தினை அடைவது எளிது. ஆனால் அங்கிருந்து தப்பிச் செல்வதற்கு வழிகள் இல்லை. விமானப்படைத்தளம் இருப்பதனால் அது சிக்கலானது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது.

எனவே கடலால்தான் செல்லவேண்டும் என்பதே ஆபரனின் தீர்மானம்.

சோபர்த்தீவின் மறுபக்கத்திற்கு நள்ளிரவு இரண்டு மணியளவில் வந்தடைந்தான். அங்கிருந்து தென்மேற்காக அறுநூறுமீற்றர் தூரத்தில் உள்ள பழையதுப்பாகி முனைக்குச் செல்வதா அல்லது மேற்குப் பக்கமாக முந்நூறுமீற்றர் தூரத்தில் உள்ள கழுகுக்குடாவிற்குச் செல்வதா அல்லது தெற்குப் பக்கமாக எண்ணூறு மீற்றர் தூரத்தில் உள்ள பாதாளமலைக்குச் செல்வதா என மனது அல்லாடியது.

பழையதுப்பாக்கிமுனையில்தான் ஆங்கிலேயர்களின் கடற் படையினர் சுடு பயிற்சி செய்வார்கள் என ஊரில் உள்ள பெரியவர்கள் கதைத்தது இந்த நேரத்தில் ஆபரனுக்கு நினைவில் வந்துபோனது.

பழையதுப்பாக்கிமுனைக்குச் செல்வதுதான் நல்லது என எண்ணி பதினைந்து நிமையங்களில் அந்த இடத்தின் நிலப்பகுதியை நீந்தித் தொட்டான்.

அங்கிருந்து தென்கிழக்காக உள்ள பாதாளமலைக்குச் சென்றால் அங்கிருந்து மூன்று மணிநேர நீச்சலில் கெவுளியாவிற்குச் சென்றுவிடலாம். ஆனால் கடற்படையினரின் காவல்நடவடிக்கை அந்தப்பிரதேசத்தில் அதிகமாக இருந்ததனால் அந்தவழி பாதுகாப்பானதாக அவனுக்குத் தோன்றவில்லை.

கிண்ணியாத்துறையடிக்குச் செல்ல வேண்டும் என்பதே அவனது திட்டம். ஆனால் நேரம் அதற்கு போதாது என்பதனை உணர்ந்தான். பகலில் நீந்திச் செல்வது ஆபத்து என்பதனை தெரிந்திருந்தான்.

தெற்காக உள்ள கடம் உரித்தகல்லில் பகல்பொழுதைக் கடத்துவது என தீர்மானித்தான். பழையதுப்பாக்கி முனையிலிருந்து கடம்உரித்த கல்லுவரை நடந்து சென்றான். அதிகாலை நாலரை மணிக்கு அவன் தீர்மானித்த இடத்தை அடைந்தான்.

நடந்து களைத்திருந்த ஆபரன் ஒருமணி நேரத்தின் பின் ஈரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுத்தியிருந்த சாரத்தையும் மேலங்கியினையும் கழற்றி அங்கிருந்த பாறைக்கல்லொன்றில் போட்டான். பிறந்த மேனியுடன் தன்னந்தனியாக களைப்புடன் பின்பக்கத்தில் பற்கள் குற்றாமல் இருப்பதற்கு வசதியாக மணல் உள்ள இடமாகப் பார்த்து அமர்ந்தான்.

காட்டு வாழ்க்கை அவனுக்கு புதிதான ஒன்றல்ல. ஆனாலும் இப்படித் தனியான காட்டு வாழ்க்கை இன்றுதான் அவனுக்கு அறிமுக மாகிறது. "திலகப்பா சொல்லிக் கொடுத்த இடங்களெல்லாம் மிகக்குறுகிய நேரத்தில் அவன் சென்று கடப்பான்" என்று ஆபரன் கனவிலும் நினைத் திருக்கவில்லை.

ஆபரன் கடம்உரித்தகல்லில் உடுப்புகளை கழற்றிக் காயவைத்த அதே ஐந்தரை மணிக்கு சுரேஸ்காசிம் நித்திரையிலிருந்து எழுந்தான். கதிரையைப் பார்த்தான். சுற்றிவரப் பார்த்தான். ஆபரனைக் காணவில்லை. பரபரப்பானான். விழிகள் அவனையறியாமலே அவனுக்கு விரிந்தன. நெஞ்சு என்றுமில்லாதவாறு படபடவென அடிக்கத் தொடங்கியது. ஆபரன் தங்க வைக்கப்பட்டிருந்த குடிலை நோக்கி ஓடினான். அங்கும் அவனைக் காணவில்லை. ஓடியோடித் தேடிப் பார்த்தான். எந்த இடத்திலும் ஆபரன் இல்லை.

இரவு முழுவதும் ஏற்றிய எதுவும் தற்போது தலைக்குள் இல்லை. ஆனால் வெறி மட்டும் பலமடங்கு ஏறியது.

கடற்கரைவரை ஓடிச்சென்று பார்த்தான். தவண்டு சென்ற அடையாளம் தெரிந்தது. நல்லதண்ணிமுனைக்குத்தான் போயிருப்பான், "சே... இந்த நாய் நமக்கு தண்ணி காட்டிற்று..." ஆத்திரத்தில் தன்னை நொந்து கொண்டான். இலிங்கநகரை வளைத்தால் எப்பிடியும் பிடித்து விடலாம் என தப்பாக மனக்கணக்குப் போட்டான்.

தனது மேலதிகாரியிடம் ஓடிச்சென்று சொன்னான். அவர் அவனைத் திட்டினார். மேலதிகாரி எவ்வளவோ சொல்லிப் பார்த்திருந்தார். சுரேஸ்காசிம் கேட்கவில்லை. பாதுகாப்புக் கூடத் தேவையில்லை என்று கூறியது எவ்வளவு மடத்தனம் என்று தற்போது விளங்கியது அவனுக்கு.

உடனடியாக செயலில் இறங்கியது படை. குரங்குப் பாலத்தி லிருந்தும் சிறப்புப் படை வரவளைக்கப்பட்டது. கடற்படை, விமானப் படையினரும் சுற்றி வளைப்பிற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

இலிங்கநகர் முழுமையாக சுற்றிவளைக்கப்பட்டது. காலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறரை மணிக்கெல்லாம் இலிங்கநகர் முழுமையாக படையினர் வசமானது. ஒவ்வொரு வீடுவீடாக சோதனை நடத்தினர். சுரேஸ்காசிம் நேரடியாக வீடுகளுக்குச் சென்று சோதனை நடத்தினான்.

இந்தவழியைத் தவிர வேறு எங்கும் செல்ல முடியாது என்றே படையினர் நம்பினர். சுரேஸ்காசிம் மாத்திரமல்ல. அனைத்து உயர் அதிகாரிகளும் அப்படித்தான் எண்ணினர். சல்லடை போட்டுத் தேடுமாறு கட்டளை பறந்தது.

மூன்று நாட்களுக்கு யாரும் வெளியேசெல்ல அனுமதிக்கப்பட வில்லை. வெளியிலிருந்தும் உள்ளேசெல்ல யாரையும் அனுமதிக்கவில்லை.

மூன்றாம்நாள் கடலில் தாண்டு செத்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர்.

ஆபரனை கதைப்பதற்கு அழைத்த இரண்டாவதுநாளன்று சுரேஸ்காசிம் கேட்டான், "உங்களுக்கு நீந்தத் தெரியுமா" என்று. அதற்கு "இல்லை" என்று ஆபரன் பதிலளித்திருந்ததே கடலில் தாண்டுசெத்திருப்பான் என்ற முடிவிற்கு வரக்கரணீயமானது.

சுரேஸ்காசிம் நிம்மதியிழந்தான். ஆபரன் இப்படிச் செய்வான் என்று கொஞ்சமும் நினைத்திருக்கவில்லை. இனிக் குடிக்கக்கூடாது என்று தனக்குள் எண்ணிக் கொண்டான். ஆனால் மறுநாளே அவ்வாறு எண்ணியதை அவன் மறந்தே போனான் என்பதே உண்மை.

ஆபரன் பகல் முழுவதும் கடம்உரித்தகல்லில் காத்திருந்தான். பசி அவனது வயிற்றைப் பிழிந்தெடுத்தது. உப்புநீரில் கிடந்தால் இயல்பாகவே பசியெடுக்கும்.

இன்றைய பகலை எப்படியாவது போக்கிவிட்டால் இரவைக்கு கிண்ணியாவிற்குப் போய்விடலாம். கிண்ணியா போனால் ஆலங்கேணிக்கு போய்விடலாம். இல்லாட்டி காக்காமுனைக்கு உவைஸ்வாத்தி வீட்டிற்குப் போகலாம் என மனதில் கணக்குப் போட்டுக்கொண்டான்.

ஒவ்வொரு நிமையங்களும் ஒவ்வொரு யுகமாக கரைந்தன. காலையில் காகங்களும் மற்றப்பறவைகளும் இரை தேடி ஊர்ப்பக்கமாக பறந்தன. பறவைகளின் பறக்கும் அழகு ஆபரனின் மனதை ஆட்கொண்டன. காலையில் படகுகளில் மீனவர்கள் கிண்ணியாவிலிருந்து ஆழ்கடலை நோக்கி தமது படகுகளில் செல்வதைப்பார்த்து ஒரு மரத்தின் நிழலின் கீழ் படுத்துக்கிடந்து இரசித்துக் கொண்டிருந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டினுள் ஏதாவது பழங்கள் இருக்கும் என்றெண்ணி காட்டிற்குள் நடந்தான். சிவத்துப் பழத்துப்போயிருந்த கொவ்வைப் பழங்கள் அவனை அழைத்தன. அந்த நேரத்துப்பசிக்கு அவை அமிர்தமாகின அவனுக்கு. கிளாப்பழங்களும் கறுப்பாகப் பழுத்திருந்தன. ஒவ்வொன்றாக பறித்துச் சாப்பிட்டான். சுவையாக இருந்தன. பசி பறந்து போனது போன்ற உணர்வுடன் அவனிருந்த இடத்திற்கு வந்துமர்ந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் நித்திரையாகிப் போனான். இரவு நித்திரையின்றி நீந்தியதும் நடந்ததும் அலுப்பாக இருந்திருக்க வேண்டும். அதுதான் நித்திரையாக மாறியிருக்க வேண்டும்.

கண் விழித்துப்பார்த்தபோது சூரியன் மறுதிசையில் சரிந்து கொண்டிருந்தான். பிந்நேரம் நான்குமணி இருக்கும் என நினைத்துக்கொண்டான்.

மாலையாகிக்கொண்டிருக்க பறவைகள் தங்கள் இருப்பிடங்களை நோக்கி மீண்டுகொண்டிருந்தன.

இரவு ஏழுமணியிருக்கும். கரையோரமாக நடந்தான். பளிங்குக் கடற்கரையின் ஓரத்தினால் நடந்துசென்று அங்கிருந்து கிண்ணியாத்துறைக்குப் போகலாம் என எண்ணினான்.

சிலவேளைகளில் விமானப்படையினர் கரையோரத்தில் நின்று விட்டால் என்ன செய்வது என நினைத்தவன், நீந்திப் போவது நல்லது என்று முடிவெடுத்த மறுகணம் அதனை செயலாக்கினான்.

ஒன்றரை மணிநேர வேகமான நீச்சல் ஆபரனை கிண்ணியாத் துறையடியில் கிண்ணியாப் பக்கமாகக் கொண்டு சேர்த்தது.

நிம்மதிப் பெருமூச்சுடன் கடற்கரையால் நடந்தான். காலில் வேதனை மெதுவாக அதிகரிக்கத் தொடங்கியது. தொடர்ந்து நடப்பது நல்லதல்ல என்று உணர்ந்தான். அப்போது நேரம் இரவு ஒன்பதரை மணியாகியிருந்தது. கடற்கரையோரமாக இருந்த தென்னைமரம் ஒன்றின் கீழ் அமர்ந்திருந்து என்ன செய்வது என சிந்தித்தான். என்ன செய்வதென அவனுக்குப் பிடிபடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## - 6 -

பகவதிப்பிள்ளையின் அழுகையினை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. கனகசிங்கத்தார் தனது சிற்றூர்தியை மெதுவாக பிள்ளையான் தம்பியரின் வீட்டு வாசலுக்குக் கொண்டு வந்து நிறுத்தினார். இபாதுள்ளா காஜியார் பன்னால் செய்யப்பட்ட பாய் ஒன்றினைக் கொண்டுவந்து கொடுத்தார். அந்த நேரத்தில் தேவையான உதவி அது. எப்படி நன்றி சொல்வது என்று கனகசிங்கத்தாருக்குத் தெரியவில்லை. 'ஞாலத்திலும் பெரிது' என மனதில் எண்ணிக்கொண்டார்.

சின்னத்தம்பியின் உடலத்தை மாதுளனும் கனகசிங்கத்தாருமாக தூக்கி பாயில் வைத்தார்கள். 'மச்சாள் உள்ள ஏறுங்க' என அன்பாகக் கூறி பின்புறமாக இரு கைகளையும் பிடித்துத் தூக்கிவிட்டார் கனகசிங்கத்தார். அழுதவாறு சிற்றூர்தியில் ஏறினாள் மச்சாள்.

சின்னத்தம்பியின் உடலத்தை இபாதுள்ளா காஜியாரும் கனகசிங்கத்தாரும் மாதுளனம் தூக்கி வந்தனர். சிற்றூர்தியின் பின்னிருக்கைக் கதவைத் திறந்து தலைப்பக்கத்தை முன்னால் செலுத்தி பகவதிப்பிள்ளையின் மடியில் வைத்தனர். மாதுளனை பின்னால் ஏறியமருமாறு கூறினார் கனகசிங்கத்தார். ஏறியவன் சின்னத்தம்பியின் கால்களை தனது மடியில் தூக்கி வைத்துக்கொண்டான்.

துறையடிவரை துணையாகவருமாறு காஜியாரை அழைத்த கனகசிங்கத்தார் அவரை முன்னிருக்கையில் ஏறும்படி கூறினார்.

அவரும் எறி அமர்ந்து கொண்டார். கனகசிங்கத்தார் பிள்ளையான் தம்பியரிடம் சென்று இருநூறு உருபா புதிய தாளினைக் கொடுத்தார். அந்தப் பணத்தை வாங்க பிள்ளையான்தம்பியருக்கு மனம் இடம்கொடுக்க வில்லை. மறுத்துவிட்டார். கனகசிங்கத்தார் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். மனுசன் மசியவில்லை. வேறு வழியின்றி அவர் கட்டியிருந்த வேட்டியை இழுத்து இடுப்பில் தாளை சொருகிவிட்டு பிள்ளையான்தம்பி யரின் வீட்டினர் அனைவரையும் கும்பிட்டு நன்றி கூறிவிட்டு சோகமேயான முகத்துடன் கண்களில் நீர்ததும்ப அவர்களிடமிருந்து விடைபெற்றார். ஜீவா வெறித்த முகத்தோடு கவலையுடன் சிற்றூர்தி போவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கனகசிங்கத்தார் ஏறியமர சிற்றூர்தி கிண்ணியாத்துறையை நோக்கிப் புறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மம்மக்கலின் பாதையில் தயாராக காத்திருந்தான். தலைவர் அதற்கான ஏற்பாடுகளை ஏலவே செய்திருந்தார். பாதையில் சிற்றூர்தி ஏறியவுடன் நான்கு சில்லுகளுக்கும் அடைக்கட்டைகளை மம்மக்கலின் வைத்தான். பாதையின் முன்பக்கத்தில் உள்ளதட்டில் போய்நின்று குதித்தான். அவனது பாரம் போதவில்லை. தலைவரும் சென்று குதித்தார். கனகசிங்கத்தாரும் சிற்றூர்தியில் இருந்து இறங்கிச்சென்று குதிப்பதற்கு இணைந்துகொண்டார். மூவரின் பாரத்தினால் பாதையின் முன்பக்கத்தட்டு கிறீச்என்ற சத்தத்துடன் கீழ்ப்பக்கமாகப் பதிந்தது.

மூவருமாக கயிற்றைப் பிடித்து மெதுமெதுவாக இழுக்க பாதை அசையத் தொடங்கியது.

பாதை ஆடி ஆடி நடுப்பகுதியைக் கடந்திருக்கும். கனகசிங்கத் தாரின் வாய் விருவிருத்துக் கொண்டிருந்தது. திறிறோஸ் ஒன்று அவருக்கு அந்த நேரத்தில் தேவைப்பட்டது. முள்ளியடிப் பத்தரின் கடையில் வாங்கிய மேலங்கிப் பையிலிருந்த திறிறோஸ் பெட்டியைஎடுத்து அதிலிருந்து ஒருசிகரட்டை எடுத்து தன்சொண்டு இடுக்கில் வைத்து தீப்பெட்டியை கையில் எடுத்தார்.

திறீரோசை கையில் எடுத்தவர் அதனைப்பற்ற வைக்கவில்லை என்பதைவிட பற்றவைக்க மனம் வரவில்லை அவருக்கு.

சின்னத்தம்பியைக் கொண்டுவரும்போது முள்ளியடியில் சிகரட் வாங்குவதற்கு ஐந்து நிமையங்கள் வரை செலவிட்டதுதான் சின்னத்தம்பியின் சாவிற்குக் கரணீயமானதோ என்று அவரது மனசு சொல்லியது.

அவர்கள் வரும்போது பாதை மற்றப்பக்கத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அங்கு தாமதிக்காமல் வந்திருந்தால் பாதையினைப் பிடித்திருப்பார்கள்.

முள்ளியடியில் தாமதிக்காமல் வந்திருந்தால் மச்சானைத்தப்ப வைத்திருக்கலாம் என்ற குற்றவுணர்வு அவரது தொண்டைவரை வந்து அடைத்தது. கண்களில் நீர் சுரந்தது. சிகரட்பெட்டியை வெளியே எடுத்தார். பிரித்துப் பார்த்தார். அதில் மூன்று சிகரட்டுகள் எஞ்சியிருந்தன. கையில் இருந்ததையும் பெட்டியினுள் போட்டார். பெட்டியை கடலில் எறிய முற்பட்டவர் மம்மக்கலினிடம் கேட்டார்

'நீ சிகரட் பிடிக்கிறனியா'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான் பீடிதான் ஐயா'

'சரி இந்தா இத நீ வச்சுக்கொள்' என்று தீப்பெட்டியையும் சேர்த்துக் கொடுத்தார். அன்றிலிருந்து கனகசிங்கத்தார் சிகரட்டினைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை.

பாதை கரையைத் தட்டியவுடன் காஜியாருக்கும் மம்மக்கலினுக்கும் நன்றி தெரிவித்துவிட்டு மம்மக்கலினுக்கு பத்து உருபா தாள் ஒன்றைக் கொடுத்து விட்டு சிற்றூர்தியில் ஏறியமர்ந்தார் கனகசிங்கத்தார்.

மச்சாள் நன்றாக அழட்டும். அவளது மனப்பாரம் குறைவதற்கு இருக்கும் ஒரேயொரு வழி அதுதான் என தீர்மானித்தார் போலும் கனகசிங்கத்தார்.

சிற்றூர்தி மணிக்கு நாற்பது கிலோமீற்றர் என்ற வேகத்தில் சென்று கொண்டிருந்தது. புகாரியடிச்சந்தியில் இடதுபக்கமாக திரும்பி குட்டிக்கரைச்சைச் சந்திவரை சென்று வலதுபுறமாக திரும்பி முனைச்சேனை குறிஞ்சாக்கேணிச்சந்தி, சூரங்கல் தாண்டி காலிபாஞ்சான் வெளி கடந்து சிவத்தப்பாலத்தில் வேகத்தைச் சற்றுக் குறைத்தும் முள்ளியடி, நடுப்பிரப்பன் திடல், நாயன்மார்திடல், குஞ்சடப்பன்திடல் தாண்டி கோவிலடியால் செல்லும் போது கோணேசரை யாருக்கும் கேட்காதவாறு மனதினுள் திட்டினாள் பகவதிப்பிள்ளை.

தமக்கு நன்மை விளையும் போது கடவுளால்தான் அது நடைபெற்றது என நம்புவதும் நாம் நினைப்பது நடக்காது போகும் போது கடவுளைத் திட்டுவதும் அறிவியலில் எவ்வளவு தூரம் நாம் பின்னிற்கு நிற்கிறோம் என்பதை தெளிவாக்கி நிற்கிறது.

ஆணைவெட்டுவான்பாலம் தாண்டி இலங்கைநேசன் அரிசிஆலை வளைவில் இடதுபக்கமாகத் திரும்பி புறந்திரி ஆற்றுப்பாலம் கடந்து நாலுவாசல் பிள்ளையாரடியால் சென்று தம்பலகமம் சந்தியில் இடதுபுறம் திரும்பிய சிற்றூர்தி இரண்டு நிமையத்தில் மெதுவாக நின்றது.

கனகசிங்கத்தார் தனது இடது கையில் கட்டியிருந்த 'சீக்கோ' மணிக்கூட்டின் மீது சிற்றூர்தியில் இருந்த மின்சூளை எடுத்துப் பிடித்துப்பார்த்தார். அது மணி பத்துமுப்பத்தைந்து எனக்காட்டியது.

சிற்றூர்தி வந்து நின்றதுதான் தாமதம் வீட்டுக்குந்தில் இருந்து அமைதியாக விம்மி விம்மி அழுதுகொண்டிருந்த இமையரசி "என்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா..." என்ற சத்தத்துடன் சிற்றூர்தியை நோக்கி ஓடினாள். அப்பாவும், சென்னியும் உறவினர்களும் அவளைத் தொடர்ந்தனர்.

சின்னத்தம்பியின் உடலத்தைத் தூக்கி வந்தனர். முற்றத்திலே சிறிய பந்தல் ஒன்று கட்டப்பட்டிருந்தது. நான்கு தடிகள் நடப்பட்டு அதன்மேலே தென்னோலையால் வேயப்பட்ட பன்னாங்கு போடப் பட்டிருந்தது. அதன் கீழ்ப்பகுதியில் வெள்ளைத்துணியினால் வெள்ளை கட்டப்பட்டு இருந்தது. பந்தலின் கீழே ஆறடி நீளமும் இரண்டரை அடி அகலமுமான முதிரை மரப்பலகையினால் செய்யப்பட்ட வாங்கு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அந்த வாங்கின் மேலே வெள்ளைத்துணி விரிக்கப்பட்டிருந்தது. அதன்மேல் தலையணை ஒன்றும் போடப்பட்டிருந்தது.

சின்னத்தம்பியின் தலையினை தலையணை மீது வைத்து, வாங்கிலே அவனைக் கிடத்தினர்.

கூடியிருந்த பெண்களின் ஒப்பாரி ஓலத்தை யாராலும் கட்டுப் படுத்த முடியவில்லை. பகவதிப்பிள்ளையை கட்டியணைத்து உறவினர்கள் அழுதார்கள். ஊரிலுள்ள அனைவரும் ஓடிவந்துவிட்டனர்.

அங்கிருந்த ஒருவரினது கண்ணில்கூட கண்ணீர் வராமலிருக்க வில்லை. மனதால் உணர்ந்தழுதார்கள்.

சின்னத்தம்பி அப்படித்தான் எல்லோருடனும் பழகியிருந்தான்.

சாவீட்டில் உறவினர்கள் அழுவதைப் பார்த்து சிலருக்கு அழுகைவரும். நெருங்கிய உறவினர்கள் சாவடைந்தவரின் நினைவுகளைச் சொல்லிச் சொல்லி அழுவதைப் பார்த்து சிலருக்கு அழுகை வரும். வேறு சிலருக்கு சாவடைந்தவர் தனக்குச் செய்த நன்மைகளை எண்ணும் போது அழுகை வரும். இன்னும் சிலருக்கோ அவரது நல்ல செயல்களை இனி யார் செய்யப் போகின்றார்கள் என்று எண்ணும்போது அழுகைவரும்.

சின்னத்தம்பியின் சாவீட்டில் அங்கு வந்திருந்த சிறுவர் முதல் பெரியோர்வரை ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி எல்லோருமே அழுதார்கள்.

சின்னத்தம்பி எல்லோர் வீட்டினதும் உறவினனாகவே வாழ்ந்தவன். எப்போதும் சிரித்தமுகம். கவலையென்பது சின்னத்தம்பிக்கு என்னவென்றே தெரியாது. தனியாகச் செல்லும்போது ஏதாவது பாடலை மனதில் நினைத்து விசில்அடித்து இரசித்துக்கொண்டே செல்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது பறக்கும்புறா ஈருருளி என்றுமே தனியாகச் சென்ற தில்லை. யாரும் தெருவில் நடந்துசென்றால் அவர்களை ஈருருளியின் சட்டகஇருக்கையிலே ஏற்றிக் கொள்வான். அவன் எவ்வளவுதான் முக்கியமான வேலையாகச் சென்றாலும் அவர்களை ஏற்றிச்சென்று அவர்கள் சேருமிடம் சேர்த்துவிட்டுத்தான் தனது வேலைக்குச் செல்வான்.

அப்படியான சின்னத்தம்பி இன்று உயிருடன் இல்லையென்றான போது யாருக்குத்தான் அழுகை வராது. அங்கு யார் யாரை ஆறுதல் படுத்துவது என்று தெரியவில்லை.

மகிழ்சென்னி மாமாவை கட்டிப்பிடித்து அழத்தொடங்கியவன் ஒரு மணி நேரமாகியும் அழுகையை நிறுத்தவில்லை....

இமையரசி தன் அம்மாவை கட்டிப்பிடித்தவள் விடாது அம்மாவும் மகளும் அழுது கொண்டிருக்கிறார்கள்.

முற்றத்திலே இருக்கும் மா மரத்திற்குக் கீழிருந்து மயில்வாகனம் தொண்டை கிழியக் கத்திக்கொண்டிருக்கிறார்.

கனகசிங்கத்தார் மயில்வாகனத்தாருக்கு அருகில் இருந்து விம்மி விம்மி அழுது கொண்டிருக்கிறார். எந்தத் தொடர்புமே இல்லாத இருநாள் பழக்கமே மாத்திரம் உள்ள மாதுளன் குனிந்ததலை நிமிராதவாறு தேம்பித் தேம்பி அழுது கொண்டிருக்கிறான்.

இப்படி எவ்வளவு நேரத்திற்கு எல்லோரும் அழப் போகிறார்கள்.... யாருக்குத் தெரியும்.....

நள்ளிரவு இரண்டு மணியாகிருக்கும், அழுகையொலி மெது மெதுவாகக் குறையத் தொடங்கியது. சென்னி மாத்திரம் எந்தவித வேறு பாடுமின்றி அதே சத்தத்துடன் அழுது கொண்டிருந்தான். மாமா என்றால் மகிழ்சென்னிக்கு உயிர். சின்னத்தம்பி இல்லாத வாழ்க்கையை சென்னியால் நினைத்துக் கூடப்பார்க்க முடியவில்லை.

சின்னத்தம்பியின் நினைவுகள் ஒவ்வொன்றாக சென்னிக்கு வந்து வந்து போயின. நினைவுகளை சென்னி அழுகையாக வெளிக்காட்டிக் கொண்டிருந்தான். அதிகாலை மூன்று மணியிருக்கும். சென்னி அழுது கொண்டுதான் இருந்தான். ஆனால் குரல் அடைத்து விட்டது. சத்தம் வரவில்லை. கனகசிங்கத்தார் எழுந்து வந்து சென்னியை கட்டியணைத்து தூக்கிவந்து ஆறுதல் படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாளைக்கு நீதான் தம்பி எல்லாம் செய்யவேணும். கொஞ்ச நேரமெண்டாலும் கத்தாம இரு சென்னி"

மா மரத்திற்குக் கீழ் இருந்து சின்னத்தம்பியை நோக்கி கையைக் காட்டிக் காட்டி ஏதோ சொன்னான் சென்னி. அவனது வாயிலிருந்து கரகர என்ற சத்தம் மாத்திரமே கேட்டது. அவன் என்ன சொல்கிறான் என்று யாருக்கும் புரியவில்லை. தனக்கு இயலாமல் போய்விட்டதே என எண்ணும்போது அழுகை பீறிட்டது அவனுக்கு. ஒருவாறு அடக்கிக்கொண்டு அமைதியாக இருந்தான்.

அங்கிருந்த வயதான பெண்கள் பகவதிப்பிள்ளையையும் இமையரசியையும் ஆறுதல் வார்த்தைகள் சொல்லி குடிப்பதற்கு நீர் கொடுத்து அமைதிப்படுத்திக் கொண்டிருந்தனர்.

தண்ணீர் குடித்த மருமகள் மாமனாரின் கால்விரல்களை தடவித் தடவி கண்களில் இருந்து கண்ணீரை ஆறாகச் சொரிந்து கொண்டிருந்தாள்.

பகவதிப்பிள்ளையால் இனி அழமுடியாது என்பது அங்கிருந்த பெண்களுக்கு விளங்கியது. தங்களது மடியில் படுக்குமாறு கூறி அவளைப் படுக்கவைத்தனர்.

ஒருவாறு சாவீடு அமைதியானது. மா மரத்தில் சாய்ந்தவாறு இருந்த சென்னி நித்திரையானான். சென்னியின் நண்பர்கள் அவனருகில் இருந்து அவனது நெஞ்சைத் தடவிக் கொண்டிருந்தனர்.

பக்கத்து வீட்டில் வசிக்கும் பார்வதியம்மா சாவீட்டில் இருந்தவர்களுக்கு தேநீர் ஊற்றிவந்து கொடுத்தார். அழுது களைத்திருந்த அனைவருக்கும் அந்த நேரத்தில் அந்தத்தேநீர் உண்மையில் தேவையானதாக இருந்தது. சென்னியின் நண்பர்கள் தேநீரை எல்லோருக்கும் பரிமாறினார்கள். சென்னியை எழுப்ப வேண்டாம் என்று கனகசிங்கத்தார் கூறிவிட்டார். ஏனையோருக்கு தேநீரைக் கொடுத்தார்கள்.

நாளை மாலை நான்கு மணிக்கு உடலத்தை இடுகாட்டிற்கு எடுத்துச் செல்வது நல்லது என அங்கிருந்த பெரியவர்கள் சொல்ல மயில்வாகனத்தார் 'ஓம்' என்று தலையசைத்தார்.

கீழ்வானம் வழமையைவிட சிவப்பாக இருந்தது. சூரியன் தன் கதிர்களை பரப்பிக்கொண்டு மெதுவாக வெளிவந்து கொண்டிருந்தான்.

தம்பலகமத்தின் அனைத்து ஊர்களில் இருந்தும் மக்கள் சாவீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

காலை ஆறு மணிக்கே வேலாயுதம் அண்ணனும் அவரோடு வயல்வேலைக்காக வந்தவர்களும் சின்னத்தம்பியைப் இறுதியாகப்பார்த்து வழியனுப்ப வந்துவிட்டனர்.

சண்முகலிங்கம்ஐயா கள்ளிமேட்டிலிருந்து காலை ஏழு மணிக்கே புறப்பட்டு விட்டார். பட்டிமேட்டில் சண்முகராசா அண்ணனையும் அழைத்துக் கொண்டு இருவரும் ஓரே ஈருருளியில் சின்னத்தம்பியை பார்ப்பதற்காக மனதில் தாங்கொணாக் கவலைகளைச் சுமந்தவாறு சென்றனர்.

கரைச்சல்திடலில் இருந்து திலகரெட்ணம் ஐயாவும் பட்டிமேட்டுச் சந்தியில் இணைந்துகொள்ள மூவருமாகச் சேர்ந்து சென்றனர்.

தெரு நெடுகிலும் சாவீடுநோக்கி மக்கள் சென்று கொண்டிருந்தனர். எவர் முகத்திலும் ஈ ஆடவில்லை. கவலை தோய்ந்த முகத்துடன் சென்று கொண்டிருந்தனர்.

சாவீட்டையடைந்த மூவரும் ஈருருளியை விட்டிறங்கி வளவினுள் சென்றனர். மகிழ்சென்னி சண்முகலிங்கம் ஐயாவைக் கண்டவுடன் அவரைக் கட்டியணைத்து ஓ.. வென்று அழத் தொடங்கிவிட்டான்.

"முந்தநாள் எப்பிடிப் பாட்டுப் படிச்சவர். இண்டைக்கு எப்பிடிக் கிடக்கிறார் எண்டு பாருங்க ஐயா.... என்ர மாமாவ பாருங்கஐயா.... இனி எங்க ஐயா நாம பாக்கப்போறம் மாமாவ......" வீரிட்டழுதான்.

அழுது கொண்டிருந்தவர்களுடன் வந்த மூவரும் இணைந்து கொண்டனர். சண்முகலிங்கம்ஐயாவின் வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. சென்னியின் தலையை தன் நெஞ்சோடு சேர்த்தணைத்துக் கொண்டார். கண்களில் இருந்து சாரைசாரையாக நீர் சொரிந்தது.

சண்முகராசா அண்ணன் தோளில் போட்டிருந்த சால்வையை எடுத்து வாயைப் பொத்திக் கொண்டு விம்மி விம்மி அழுதார்.

சாவீட்டு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. யாரும் தமது வீடுகளிற்குப் போகவில்லை. உடலம் எடுத்த பின்னர்தான் போவது என முடிவெடுத்தனர் போலும்.

கொட்டியாரத்திலிருந்தும் பதினொரு மணியின் பின்னர் மக்கள் வந்து சேர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்ணியா, வெள்ளைமணல், முள்ளிப்பொத்தானை, மீராநகர் என அயல் கிராமங்களில் இருந்து இஸ்லாமிய நண்பர்கள் சாவீட்டிற்கு வந்திருந்தனர். வந்த மக்கள் கூட்டத்தினால் வளவு நிரம்பி திருக்கோணமலை கண்டி முதன்மைத்தெரு ஓரங்களில் உள்ள மரநிழல்களில் சென்று அமர்ந்தனர்.

இவ்வளவு சனக்கூட்டம் தம்பலகமத்தில் யாரதும் சாவிற்கும் வந்திருக்கவில்லை. இன்றுவரையும் வரவுமில்லை.

இரண்டு மணியளவில் நினைவேந்தல் உரைகளுக்கான ஏற்பாடுகளை சுவாமிமலை ஊர்மக்கள் ஒழுங்கு செய்திருந்தனர்.

திலகரெத்தினம் ஐயாவை முதலாவதாக உரையாற்றுமாறு கேட்டுக்கொண்டார்கள். அழுதழுது அவர் உரையாற்றினார். சின்னத்தம்பியின் அருமை பெருமையெல்லாம் சொன்னார். வந்திருந்தவர்கள் அமைதியாக கண்களில் நீர் வழிந்தோடக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

ஊர்ப் பெரியோர்கள் பலர் நினைவு உரையாற்றினர். சண்முகலிங்கம்ஐயா தன்னால் உரையாற்ற முடியாது என மறுத்துவிட்டார். அவர் வந்த நேரத்திலிருந்து மயில்வாகனத்தாருக்கு அருகிலிருந்து அழுது கொண்டிருந்தார்.

மூன்றரை மணியாகிவிட்டது. மகிழ்சென்னி சண்முகலிங்கம் ஐயாவிற்கு அருகில் வந்து "ஐயா மாமா ஆசயா கடைசியாப்படிச்ச பாட்ட நீங்க இப்ப இஞ்ச பாடோணும்" என்றான்.

சண்முகலிங்கம்ஐயா வீரிட்டு அழுதார். "ஐயோ எனக்கு என்னப்பா சோதனை இது. எப்பிடிரா பிள்ள நான்பாடுவன். கதைச்சுக்கொள்ளவே முடியாம இருக்கிறன்டா செல்லம் நான்" சென்னியின் நாடியைத் தடவித் தடவி அழுதழுது சொன்னார்.

என்னவோ ஏதோவென்று அங்கிருந்தவர்கள் ஓடிவந்து அவர்களை சூழ்ந்துவிட்டனர்.

சண்முகலிங்கம்ஐயாவிடம் பாட்டினைப் பாடும்படி சத்தமே வெளியே வராத குரலினால் சென்னி கெஞ்சினான். சென்னியின் வற்புறுத் தலை அவரால் நிராகரிக்க முடியவில்லை.

தம்பலகமத்தில் பாட்டுப் பாடப்பட்ட ஒரேயொரு சாவீடு சின்னத்தம்பியின் சாவீடுதான். அதற்கு முன்பு யாரும் சாவீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுப்பாடவில்லை. அதற்குப் பின்பும் பாடவில்லை.

இவ்வளவு சனக்கூட்டம் தம்பலகமத்தில் யாருடைய சாவீட்டிற்கும் கூடியதும் இல்லை.

ஒலிவாங்கியை கையில் வாங்கியவரின் கைகள் நடுங்கின.

கண்கள் நீரைச் சொரிந்தன.

கண்ணிலே என்ன உண்டு கண்கள்தான் அறியும்...... ஐயோ என்னால முடியலப்பா அழுதார்.

சிறிது நேரம் ஒலிவாங்கியைக் கையில் தாங்கிப் பிடித்தவாறே அழுதவர் பாடலைத்தொடர்ந்தார் ...

கண்ணிலே என்ன உண்டு கண்கள் தான் அறியும்

கல்லிலே ஈரம் உண்டு கண்களா அறியும்..

கல்லிலே ஈரம் உண்டு கண்களா அறியும்..

........

கோடையில் ஓர்நாள் மழை வரக் கூடும்

கோவில் சிலைக்கும் உயிர் வரக் கூடும்

காலங்களாலே காரியம் பிறக்கும்..

காலங்களாலே காரியம் பிறக்கும்..

காரியம் பிறந்தால் காரணம் விளங்கும்

என்மனம் என்னவென்று என்னையன்றி யாருக்குத் தெரியும்......

என் மனம் என்னவென்று என்னையன்றி யாருக்குத் தெரியும்...... கண்கள் சிவந்து போக கண்களில் இருந்து வெளியேறிய நீர் கன்னத்தால் வழிந்து மேலங்கியை ஈரமாக்கிக்கொண்டிருக்க அழுதழுது பாடலைப் பாடி முடித்தார்..

"ஓண்டா தம்பி உன்ர மனசில என்ன இருக்கெண்டு ஆருக்கிடா தம்பி தெரியும். எல்லாரையும் ஏமாத்திற்றுப் போயிற்றியேடா சின்னத்தம்பி" என்று தேம்பித் தேம்பி அழுதார்.

சாவீட்டில் இருந்த அனைவர் கண்களும் குளமாகிக் காணப் பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடை மீது கிடத்தியிருந்த சின்னத்தம்பியைச் சுற்றியிருந்து அழுது கொண்டிருந்தவர்களை விலகியிருக்குமாறு கூறினார்கள். யாரும் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை.

சின்னத்தம்பியைச் சுற்றி ஆண்கள் கைகளைக் கோர்த்தவாறு வட்டமாக தடுப்பு வேலிபோன்று அமைத்தார்கள். அந்த தடுப்பினைத் தள்ளிக்கொண்டு மருமகள் வீரிட்டு அழுதுகொட்டித் தீர்த்தாள். கடைசி நிமையங்கள் அவை. இனி எங்கே சின்னத்தப்பியைப் பார்க்கப் போகிறோம் எனும் ஆதங்கம் அங்கிருந்தவர்கள் அனைவர் மனதிலும் எழுந்திருந்தது.

சரியாக நான்கு மணிக்கு வீட்டாரின் ஒப்பாரியுடன் புதுக் குடியிருப்பு இடுகாட்டை நோக்கித் தன் இறுதிப் பயணத்தைத் நாலுபேரின் உதவியுடன் தொடங்கினான் சின்னத்தம்பி. வீட்டிலிருந்த பெண்கள் சங்கடம்வரை அழுது கொண்டு வந்தார்கள். படலையை சங்கடம் அல்லது கடப்பு என்றுதான் தம்பலகமத்தில் உள்ள மக்கள் அழைத்தார்கள்.

புதுக்குடியிருப்பு இடுகாட்டில் அவ்வளவு எளிதில் சவக் குழிவெட்டவிட முடியாது. மண்வெட்டி மண்ணில் பட்டவுடன் டணார் எனத்தெறிக்கும். அவ்வளவிற்கு ஒருவிதமான கடினமான களிமண்தரை அது. வெயில் காலத்திலும் மழை காலத்திலும் குழி வெட்டமுடியாத இடுகாடு என்றால் அது புதக்குடியிருப்பு இடுகாடுதான்.

மழை காலத்தில் என்றால் மண்வெட்டியுடன் களி ஒட்டிப்பிடித்து கொள்ளும்.

ஆறடி நீளமான இரண்டடி அகலமான ஒரு சவக்குழி வெட்டு வதற்கு எப்படியும் ஆறு பேருக்கு ஆறு மணி நேரம் பிடிக்கும். அவ்வளவு சிக்கலான இடம் அது.

ஏன் இந்த இடத்தினை இடுகாட்டிற்குத் தெரிந்து எடுத்தார்கள் என்று இன்றுவரை அங்கு போகும் போதெல்லாம் அங்கு செல்பவர்கள் புறுபுறத்துத்தான் வருவார்கள்.

பாக்கியநாதன் தலைமையில் காலை பத்துமணிக்கு சென்ற ஆறுபேரும் நாலு மணியளவில் குழியை வெட்டி முடித்திருந்தார்கள்.

உடலம் கொண்டு செல்லும் போது சீனவெடி கொழுத்தவில்லை. சின்னத்தம்பியின் கோரிக்கை அது.

சின்னத்தம்பி ஏழை மக்களையும் சுற்றுச் சுழலையும் நேசித்த ஒரு மனிதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் சாவடைந்தால் எப்படி தனது சாவீட்டைச் செய்ய வேண்டும் என முன்பே கூறியிருந்தான். இப்படி திடீரென சாவடைந்து விடுவான் என்பது அவனுக்கு முன்பே தெரிந்திருந்ததனால்தான் அப்படிச் சொல்லி வைத்தானோ என்னவோ.

"நான் எந்த உடுப்புடன் சாகிறனோ அந்த உடுப்புடன் தான் என்னத் தாக்கோணும். ஆரும் வரல்ல எண்டு சவத்த காக்க வைக்கக் கூடா. தேவாரம் படிக்கக் கூடா. எந்தச் சடங்கும் செய்யக்கூடா. சீனவெடி கொழுத்தக் கூடா." என என்ன என்ன செய்யக் கூடாதவை என கூறியவன் என்ன செய்ய வேண்டும் என்றும் கூறியிருக்கிறான். "உடுப்பு வாங்கிற காச, பெட்டி வாங்குற காச ஆரும் வசதியில்லாத வயசானவங்களுக்கு விரும்பினாகுடுங்க. இடுகாட்டில சுற்றிவர பெரியநிழல்மரங்களாப் பாத்துநாட்டுங்க."

சின்னத்தம்பியின் உடலத்தை நாலரைமணியளவில் இடுகாட்டிற்குக் கொண்டு வந்தார்கள்.

"கடைசியாப் பாக்கிற ஆக்கள் பாருங்க" பாக்கியநாதன் கூறினான். பக்கத்தில் நின்றவர்களுக்கு அவனுடைய வாயிலிருந்துவந்த கசிப்புவாசனையைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

சவக்குழி வெட்டுபவர்களில் அநேகமானோர் கசிப்பு பாவித்து வெட்டுவது தம்பலகமத்தில் வழக்கம். குழிவெட்டுபவர்களை நன்றாகக் கவனிக்கும் பழக்கம் தம்பலகமத்தில் உள்ளது. குழிவெட்டுபவர்களுக்கு கூலி கொடுப்பதில்லை. இரண்டு போத்தல் கசிப்பு அல்லது இரு போத்தல் சீல் சாராயம் அதோடு ஒரு வேளை உணவும் கொடுப்பார்கள். கசிப்பு குடிக்காதவர்களுக்கு மென்பானங்களும் சிற்றுண்டிகளும் கொடுப்பார்கள். அது தவறான ஒரு செயலாகப் பார்க்கப்படுவதில்லை.

எல்லோரும் சின்னத்தம்பியை இறுதியாகப் பார்த்தபின்பு சின்னத்தம்பியை காரிக்கன் துணியினால் சுற்றி குழியினுள் இறக்கினார்கள்.

மகிழ்சென்னியை அழைத்து மண்போடுமாறு கேட்டுக் கொண்டார்கள். அழுதழுது களைத்துப்போயிருந்த சென்னி அழுதழுதே மூன்றுபிடி மண்ணையும் அள்ளிப் போட்டான். அதன்பின் அப்பா மயில்வாகனம் மண்போட்டார். அதனைத் தொடர்ந்து வந்திருந்தவர்கள் தங்களது கைகளாலும் மூன்றுபிடி மண்ணைப் போட குழி அரைப்பகுதிக்கும் மேல் நிரம்பிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுதிக் குழியை பாக்கியநாதன் குழுவினர் மண்வெட்டியால் மூடிய பின்னர் குழி இருந்த இடத்தில் ஓரடி உயரத்திற்கு திடலாக அமைத்து மண்வெட்டியின் பின்பக்கத்தால் அடித்து இறுக்கினார்கள். அதனைப் பார்க்கும்போது குழியின் மேல் ஒருவர் படுத்திருப்பது போல் இருந்தது.

புதுக்குடியிருப்பு வேலாயுதம்அண்ணன் இடுகாட்டில் இருந்த பூவரசு குழையினை முறித்து சின்னத்தம்பியை அடக்கம் இடத்தினை மூன்று தடவை சுற்றிச்சுற்றி இழுத்து வந்தார்.

எல்லோரும் சின்னத்தம்பியை மாத்திரம் அங்கு விட்டுவிட்டு மீண்டும் சின்னத்தம்பியின் வீட்டிற்குத் திரும்பினார்கள்.

இடுகாட்டில் உடலம் அடக்கம் செய்தபின்னர் சாவீடு நடைபெற்ற வீட்டிற்குச் சென்று அங்கு தேநீர் குடித்தபின்பு தங்களது வீட்டிற்குச்செல்வது தம்பலகமத்தில் உள்ள வழக்கம்.

மகிழ்செண்ணியும் மயில்வாகனத்தாரும் சங்கடத்தடியில் வைத்திருந்த வாளியில் உள்ள மஞ்சள்நீரால் கைகளைக் கழுவிக்கொண்டு அந்த இடத்தில் போடப்பட்டிருந்த உலக்கையினைத் தாண்டியபோது அம்மா அழுதுகொண்டு வந்தாள் "மாமாவ கொண்டுபோய் விட்டுற்று வந்திற்றியேடா சென்னி...." ஆறுதல் சொல்ல முடியாதளவிற்கு அழுதாள் பகவதிப்பிள்ளை.

அம்மாவின் பின்தலையைத் தடவிக் கொடுத்து தன்மார்புடன் தூக்கியணைத்து வீட்டு விறாந்தைக்குக் கூட்டிச்சென்று இருத்தினான்.

சென்னியின் நண்பர்களும் இமையரசியின் நண்பிகளும் தேநீர் கொடுப்பதில் உதவினர். கனகசிங்கத்தார் அனைவருக்கும் தேநீர் கொடுப் பதனை மேற்பார்வை செய்தார்.

தேநீர் குடித்தவர்கள் தங்கள் வீடுகளை நோக்கிப் புறப்பட்டனர். கொட்டியாரத்தில் இருந்து வந்தவர்கள் அவர்களது உறவினர்களின் வீடுகளுக்குச் சென்றனர். வயல்வேலைக்கு வந்த வேலாயுதம்அண்ணன் குழுவினரை "இரவு சாப்பிட்டுவிட்டு சுப்பையா அண்ணன்வீட்ட போய்த் தங்குமாறு" சென்னி கூற அவர்களும் அப்படியே செய்தார்கள்.

பக்கத்து வீட்டு பார்வதியம்மா இரவு உணவினைக் கொண்டு வந்திருந்தார். முதல்நாள் காலையில் சாப்பிட்ட உணவுடன் மாத்திரமே பகவதிப்பிள்ளை இருந்தாள். நேற்று மதியம், இரவு இன்று காலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் என உணவில்லாது இருந்ததனால் களைத்துப்போய் இருந்தாள்.

பார்வதியம்மா அவளுக்கு உணவுக்கோப்பையில் சோற்றினைப் போட்டுக் கொடுத்தாள். வைத்த சோற்றில் அரைவாசி மாத்திரமே உண்டாள் பகவதிப்பிள்ளை. அவளால் அதற்குமேல் ஒருபிடியேனும் உண்ண முடியவில்லை.

மகிழ்சென்னி, அப்பா என சாவீட்டில் இருந்த அனைவரும் கிணற்றடிக்குச் சென்று நன்றாக தலையில் நீர் ஊற்றி முழுகினர்.

குளித்து வந்தவர்களுக்கும் இரவுணவினை வைத்துக் கொடுத்தார்கள். வேலாயுதம்அண்ணன் குழுவினரும் சாப்பிட்டனர்.

விசித்திரமான சாவீட்டை தம்பலகமம் கண்டது. சடங்குகள் இல்லை, சம்பிரதாயங்கள், உடலம் குளிப்பாட்டப்படவில்லை, புதிய உடுப்புகள் போடப்படவில்லை. தேவாரம் பாடப்படவில்லை, உடலத்தைச் சுற்றிவந்து கிழவிகள் மாரடிக்கவில்லை இப்படி எதுவுமே நடைபெற்றிருக்க வில்லை. எட்டுச் சடங்குகள் நடைபெறும்வரை இளநீரோ பாலோ, தண்ணீரோ என இரவில் வீட்டினுள் எதுவும் வைக்கப்படவில்லை. இரவில் வைகுந்த அம்மானை பாடப்படவில்லை. சுருகங்கச் சொன்னால் தேவையற்ற எதுவுமே நடைபெற்றிருக்கவில்லை.

ஆனால் உடலத்தைக் கொண்டுசெல்வதற்கான பாடை மாத்திரம் அழகாக கட்டப்பட்டிருந்தது. அதோடு சிறிய கும்பம் ஒன்றும் கட்டப்பட்டி ருந்தது. தமிழர்களின் பண்பாட்டினை சின்னத்தம்பி நன்றாக அறிந்திருந்தான். தனது சாவீட்டிலாவது தமிழர்களின் பண்பாடு கடைப்பிடிக்கப்பட வேண்டும் என விரும்பியிருந்தான். அதனால் அக்காச்சியிடம் தன் சாவீடு எப்படிச் செய்யப்பட வேண்டும் என்பதைக் கூறியிருந்தான். அவன் சொன்னவாறுதான் அவனது சாவீட்டு பணிகள் நடைபெற்றன.

பாடையில் தென்னோலையினால் இழைக்கப்பட்ட பன்னாங்கு போடப்பட்டிருந்தது. பன்னாங்கின்மேல் பன்னினால் செய்யப்பட்ட பாய் போடப்பட்டு அதன்மேல் வெள்ளைத்துணி விரிக்கப்பட்டு அதற்கு மேல் சின்னத்தம்பி கிடத்தப்பட்டே இடுகாட்டிற்கு எடுத்துச்செல்லப்பட்டான்.

இடுகாடு செல்லும்போது சிறியகும்பத்தினை மயில்வாகனத் தாருடன் இன்னும் மூன்று பேருமாகத் தூக்கிச் சென்றனர். கும்பத்தின் அடியில் மண்பானை கட்டப்பட்டிருந்தது. அப்பானையினுள் நெல் உட்பட பயறு, உழுந்து என பல தானியங்கள் போடப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை இடுகாட்டில் வாழும் எறும்பு போன்ற நுண்ணுயிர்களுக்கு உணவு வழங்குவதற்காகவோ என்னவோ.

கும்பத்திற்குப் பின்னால் சின்னத்தம்பியை சென்னியுடன் இன்னும் மூன்றுபேர் இடுகாடுவரை தூக்கிச் சென்றனர்.

எட்டுச்சடங்கிற்காக இரவு அயலவர்கள் நூறுபேருக்கு குறை வில்லாது சாவீட்டிற்கு வந்து தங்கினர்.

தம்பலகமத்தில் வழக்கமாக எட்டு சடங்குகள் முடியும்வரை சாவு இடம்பெற்ற வீட்டில் அயலவர்கள், உறவினர்கள், வீட்டுக்காரர்களுக்கு நெருக்கமானவர்கள் சாவீடுநடைபெற்ற வீட்டாருக்கு ஆறுதல் கூறுவதற் காகவும் அவர்களது உதவிக்காகவும் என இரவில் வந்து தங்குவார்கள். அத்துடன் அந்தவீட்டில் சமையலுக்கென நெருப்பும் மூட்டமாட்டார்கள்.

உறவினர்களும் அயலவர்களுமே உணவு மற்றும் தேநீர் கொடுப் பார்கள். இரவில் மாத்திரம் பெரியகட்டைகள் போடப்பட்டு எரிப்பார்கள். சின்னத்தம்பி வீட்டிலும் இரவில் கட்டைகள் எரித்தார்கள். வெளிச்சமாக இருப்பதற்கும் குளிரில் கூதல்காய்வதற்கும் அது உதவும் என சின்னத்தம்பி கூறியிருந்தானாம்.

இரண்டு பெற்றோல்மக்ஸ் விளக்குகள் நிலவிலும் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன. விடிய விடியக் கண்விழித்து சிலர் கடதாசிக் கூட்டம் விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு இரண்டு மணிநேரத் திற்கு ஒருதடவை அயலவர்கள் தேநீர் கொடுத்து அவர்களது நித்திரையையும் அலுப்பினையும் போக்கிக் கொண்டிருந்தனர். எட்டுச் சடங்குகள்வரை இது தொடர்ந்தது.

எட்டுச் சடங்குவரை காலை, பகல், இரவு என மூன்று நேர உணவிற்கு உறவினர்கள், அயலவர்கள் உணவினைக் கொண்டுவந்து கொடுத்தனர். சில வேளை உணவுகளிற்கு பலர் உணவினைக் கொண்டு வந்தனர். இருப்பவர்கள் உண்டபின் உணவு அதிகளவில் மிகுதியாகும். என்ன செய்வதென்றே தெரியாது. சாவீட்டில் உள்ளவர்கள் திணறுவார்கள். கவலையோடு இருப்பவர்களுக்கு மேலதிகமான இந்த உணவு மேலதிக தலையிடியாகவே இருக்கும். உணவு கொண்டுவந்து கொடுப்பதற்கு சரியான ஒழுங்குமுறை தம்பலகமத்தில் இன்றுவரை இல்லை.

ஏழாவது நாளில் எட்டுக்கு வைத்தார்கள். இரவில் சாவீட்டில்வந்து தங்கியவர்களையும் உணவுகொண்டு வந்து கொடுத்தவர்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பியின் நெருங்கிய உறவினர்களையும் அழைத்திருந்தனர்.

சோற்றுடன் கோழிக்குழம்புக் கறியும் காக்காமுனை கத்தரிக்காய் பால்க்கறியும் புளியாணமும் பப்படப் பொரியிலும் எட்டுவீட்டில் இரவு உணவாகப் பரிமாறப் பட்டது.

வழக்கமாக சாவடைந்தவர்களை நினைத்துப் படைக்கும் படையல் எதுவும் வைக்கவில்லை. சாவடைந்தவருக்கு விருப்பமான உணவுகள் அனைத்தையும் வைத்து பெட்டியில் போட்டு தெருவில் உள்ள முச்சந்தியில் கொண்டு போய் வைக்கவுமில்லை.

வீணான செலவுகள் எதனையும் மகிழ்சென்னி அனுமதித்திருக் கவில்லை. மாமாவின் விருப்பிற்கு முரணாக எதுவுமே செய்யவில்லை. எளிமையாக எட்டு வீட்டுச் சடங்கு முடிவடைந்தது.

அடுத்தநாள் சமைப்பதற்கு வாங்கிய பாத்திரங்கள் எல்லாவற் றையும் உரியவர்களிடம் ஒப்படைத்தார்கள். மகிழ்சென்னி உட்பட அவன் வீட்டில் உள்ள அனைவரும் ஓரளவு பழைய நிலைக்குத் திரும்பி யிருந்தார்கள்.

## - 7 -

தென்னை மரத்திற்குக் கீழே அமர்ந்த ஆபரன் தனது ஈரமான மேலங்கியையும் சரத்தையும் கழற்றிப் பிழிந்து உதறினான். அவற்றை கடற்கரையில் விரித்துவிட்டு உடம்பில் ஒருதுண்டுத் துணியின்றி மீண்டும் தென்னை மரத்திற்குக் கீழ் அமர்ந்துகொண்டான். அங்கிருந்து இரவில் செல்வது அவனுக்குச் சரியாகப்படவில்லை. விடியும்வரை வழித்திருந்து விடிந்தபின் காக்காமுனைக்குச் செல்வது என தீர்மானித்துக்கொண்டான்.

கடலை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். சின்னத்தம்பிக்கு என்ன நடந்ததோ தெரியாது என நினைத்துப் பார்த்தான். அம்மா தன்னைத் தேடி வந்ததாக சுரேஸ்காசிம் கூறியது நினைவிற்கு வந்தது. வீட்டிற்குப் போயிருப்பார் என தன்னைத் தேற்றிக்கொண்டான். தன்னுடன் வயல் வேலைக்கு வந்தவர்கள் என்ன ஆனார்களோ? என்ன செய்தார்களோ தெரியாது. அவர்களை எண்ணிக் கவலைப்பட்டான்.

மறுநாள் சந்திப்போம் என கள்ளிமேட்டில் சந்தித்த வாலிபர் களிடம் கூறியதும் அவர்களுக்கு தான் பிடிபட்டசெய்தி தெரியவந்திருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியான மனநிலையுடன் அவர்கள் இருப்பார்களோ என எண்ணிக் கவலைப்பட்டான்.

இவ்வாறு பலதையும் பத்தையும் ஒவ்வொன்றாக அவனதுமனது அசை போட்டுக் கொண்டிருந்தது. நடுச்சாமம் கடந்தபின்னர் வானில் சந்திரன் மெதுவாக எட்டிப்பார்த்தான். சந்திரனின் ஒளியில் கடலலைகளின் நுரைகள் தெளிவாகத் மின்னின. சிறிய சிறிய அலைகள் மேலேழுந்து கீழ்ச்சென்று கரைகளைத் தொட்டுத் தொட்டு இல்லாது போயின. கரையி லிருந்து சற்றுத்தூரத்தில் சிறிய மீன்கள் கூட்டமாக துள்ளிச் சென்றன. அவன் இருந்த இடத்திலிருந்து தெற்குப் புறமாக அண்ணளவாக இருநூறு மீற்றர்கள் தூரத்தில் கரைவலை வளைத்தார்கள். அவர்களது கரைவலைப் பாடு இருந்த இடத்தில் இரண்டு பெரிய சூழ்விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. பெரிய திரிகளினூடாக அவற்றின் பெரிய சுவாலைகள் அந்த இடத்தினை பகலாக்கிக்கொண்டிருந்தன. வலையில் கட்டியிருந்த கயிற்றை ஏறத்தாள பதினைந்து பேருக்கும் மேற்பட்டோர் வரிசையாக நின்று பாட்டு பாடிக்கொண்டு இழுத்துக் கொண்டிருந்தார்கள். பாடல் தெளிவாகக் கேட்காவிட்டாலும் ஐலசா ஐலசா என்பது ஆபரனுக்கு மெல்லிய சத்தமாகக் கேட்டது. அலுப்பின்றி வேலை செய்வதற்கு அந்தப்பாடல்களை அவர்கள் பாடிக்கொண்டு இழுக்கிறார்கள் என்பதை அவன் அறிவான்.

இவற்றையெல்லாம் இருந்த இடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு நேரம் போனதே தெரியவில்லை. பொழுது பொலுபொலுவென விடியத் தொடங்கியது. ஐந்து மணியாகியிருக்கும் என்பதனை பெரிய கிண்ணியா பள்ளிவாசலில் வாங்கு அரை மணிநேரத் திற்கு முன்பு சொன்னதிலிருந்து கணித்துக் கொண்டான்.

இனிப்போவம் என எண்ணியவன் தரையிலிருந்து எழுந்து குண்டியில் இருந்த கடற்கரைமண்ணை இடது கையினால் நன்றாகத் தட்டினான். ஓரளவு காய்ந்திருந்த மேலங்கியைப் போட்டான். சரத்தையும் உடுத்தினான். கடற்கரை ஓரமாக நடந்தவன் கிண்ணியாவிலிருந்து மூதா ருக்குச் செல்லுகின்ற வீதியை நோக்கி தென்னந்தோப்புகளினூடாகச் சென்றான்.

வீதியையடைந்தவன் அந்த வீதியின் அருகில் இருந்த தேனீர்க்கடையில் தேநீர் குடித்தால் அந்நேரத்தில் வாய்க்கும் மனதுக்கும் நன்றாக இருக்கும் என நினைத்தாலும் கையில் பணம் இல்லாததனால் அந்த ஆசையை நிறுத்திவிட்டு மருத்துவமனைப் பக்கமாக நடந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசலில் தொழுகைக்குப் போனவர்கள் தொழுகை முடிந்து தங்கள் வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். சரத்தை நன்றாக மடித்துக் கட்டியவன் நடையில் சற்று வேகத்தைக் கூட்டி புகாரியடிச் சந்திவரை வந்து காக்காமுனைக்குச் செல்வதற்காக புகாரியடிச்சந்தியில் எந்தப் பக்கமும் திரும்பாமல் நேராக நடந்தான்.

தெருவால் சென்றவர்கள் யாரோ கடலுக்குச் சென்றவர்கள் வீட்டுக்குச் செல்லுகின்றார் என எண்ணினார்கள் போலும். யாரும் அவனிடம் எதுவும் கேட்கவில்லை.

குறிஞ்சாக்கேணிப்பாலத்தால் நடக்கும்போது காலில் நோ சற்று அதிகரித்திருப்பதனை உணர்ந்தான். மெதுவாக நடந்தான்.

அந்த இடத்திலிருந்து வளைந்து வளைந்து செல்லுகின்ற தெருவினால் நடந்து காக்காமுனைப் பள்ளிவாசல்வரை வந்து அரைஏக்கர் பக்கமாகத் திரும்பி நடந்தான். அந்த தெருவில்தான் உவைஸ்வாத்தியின் வீடு இருக்கிறது.

சரியாக ஆறுமணி ஐந்துநிமையங்கள் ஆகும்போது, தான் செல்லவேண்டிய வீட்டு முற்றத்தில் நின்றான்.

வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த உவைஸ்வாத்தி ஆபரனைக் கண்டதும் அவருக்கு இருப்புக்கொள்ளவில்லை. ஓடிச்சென்று கட்டியணைத்து இரு கன்னத்திலும் முத்தமிட்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

கட்டியணைத்தபோது அவனது உடுப்புகள் ஈரமாக இருப்பதனை உணர்ந்தவர் வீட்டிற்கு உள்ளே அழைத்துச்சென்று தனது சரம் ஒன்றையும் மேலங்கி ஒன்றையும் கொடுத்து உடுத்தி வருமாறு கூறிவிட்டு துணைவி சித்திகலிமாவிடம் தேநீர் வைக்குமாறு அன்பாகக் கூறினார்.

உவைஸ்வாத்திக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. ஆபரனும் உவைஸ்வாத்தியும் இந்தியாவில் தங்கச்சிமடத்தில் இரண்டாண்டு களுக்கு முன்பு சந்தித்தது. அதன்பின் சந்திக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை. அமைப்பு வேலைகள் விடயமாக இருவரும் மும்முரமாக இருந்ததனால் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

"வாத்தி சரியான பசி. சாப்பிடோணும்.."

"தேத்தண்ணி வைக்கச் செல்லியிருக்கிறன். தேத்தண்ணிய முதல்ல குடி. தண்ணிச்சோறும் தயிரும் இருக்கு. தரச்சொல்றன். பிறகு சாப்பிடு என"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்... அதுவும் நல்லது தான்."

உவைஸ்வாத்தியின் சொந்தஇடம் கிண்ணியாவில் காக்காமுனை. அரைஏக்கருக்குப் பக்கத்தில்தான் வீடு. அரைஏக்கர் என்பது காக்காமுனைக் குப் பக்கத்தில் இருக்கும் ஓர் ஊரின் பெயர். அரசினால் ஒரு குடும்பத்திற்கு அரைஏக்கர் என்ற அடிப்படையில் குடியிருப்புக்காணி வழங்கப்பட்டமை யினால் அந்த ஊருக்கு அரைஏக்கர் என்று பெயர் வந்ததாக உவைஸ்வாத்தி ஆபரனுக்குச் சொல்லியிருக்கிறார்.

ஆபரன் சார்ந்த அமைப்பில் ஆபரனுக்கு முன்பே உவைஸ் வாத்தி உறுப்பினராக சேர்ந்துவிட்டார். அன்னலிங்கம் ஐயாவின் தேடலில் அகப்பட்ட உடும்பு அவர். சிறந்த கொள்கைப் பிடிப்புள்ளவர். இஸ்லாமிய மக்களிடம் அமைப்பின் கொள்கைகளை கொண்டு செல்வதில் அவருக்கு நிகர் அவர்தான் எனப்பெயர் எடுத்தவர். கிண்ணியா மத்திய கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். அன்பாக அனைவரிடமும் பேசுகின்ற பண்பாளன் என்ற பெயர் ஊரில் அவருக்குள்ளது.

தேநீர் அருந்திய ஆபரனுக்கு சில நிமையங்களில் தண்ணிச் சோற்றினுள் தயிரும் சீனியும்போட்டு அதன்மேல் கதலி வாழைப்பழம் ஒன்றை உரித்துப் போட்டு உப்புப் போத்தலையும் கொண்டுவந்து கொடுத்தாள் சித்திகலிமா.

பசியிலிருந்த ஆபரன் கோப்பையில் இருந்தவற்றை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து பிசைந்தான்.

இடது கையால் உப்புப் போத்தலை எடுத்தவன் வலது கை விரல்களை இறுக்கி சேர்த்துப் பிடித்து விரல்களை உள்பக்கமாக சற்றுக்குவிக்க அது கிண்ணம் போல இருந்தது. அந்தக் கிண்ணத்தினுள் உப்புத்தண்ணீரை சிறியளவில் ஊற்றி சோற்றுக் கோப்பைக்குள் தெளித்து உப்பையும் சேர்த்துப் பிசைந்து வாயில் போட்டுக்கொண்டே "தம்பலகமத்திற்கு வயல்வேலைக்கு வந்ததிலிருந்து, தான் பிடிபட்டது, பிளான்ரன் பொயின்ரி லிருந்து தப்பிவந்து அவரது வீட்டுக்கு வந்து சேர்ந்தது வரை நடந்தவற்றை யெல்லாம் ஒன்றும் விடாமல் உவைஸ்வாத்தியிடம் ஒப்புவித்தான் ஆபரன்.

உவைஸ்வாத்தி தன் கண்புருவங்களை உயர்த்தி வியந்தவராக ஆபரன் கூறியவற்றைக் குறுக்கீடுகள் எதுவும் செய்யாது அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

ஆபரனை எண்ணி உண்மையில் வியப்படைந்தார். ஆபரனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிச்சலைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். ஆனால் இப்படியெல்லாம் செய்வான் என்று அவர் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவனை எண்ணிப் பெருமைப் பட்டார். 'சிறந்தவொரு மக்கள் செயற்பாட்டாளனுக்கு எடுத்துக்காட்டாக விளங்கக்கூடியவனாக எதிர்காலத்தில் மிளிருவான்' என மனதில் எண்ணிக்கொண்டார்.

"ஏன் தம்பலகமத்திற்கு வயல்வேல செய்ய வந்தனீங்க? இப்ப அமைப்பின் செயற்பாடுகள் எப்பிடி இருக்கு"

"தோழர், இளக்கந்தையில் ஒருபண்ணை செய்யிறதுக்கு ஏற்பாடு செய்திருக்கிறம். ஏழு தோழர்கள் அங்க இருக்கிறாங்க. சாவாத்தில மகாவலி ஆத்துக்குக் கிட்டயும் ஒரு தோட்டம் செய்ய ஒழுங்கு செய்திருக்கிறம். அதில தம்பலகமத்திலயும் ஆலங்கேணியிலயும் சேர்ந்த ஒன்பது தோழர்கள் இருக்கிறாங்க. அவங்களுக்கு நாளாந்த சாப்பாட்டுக்கு காசு வேணும்தானே. நாமளும் வயல்வேல பழகவும் வேணும்தானே எண்டுதான் என்னோட மூணுபேரத் தம்பலகமத்துக்கு கூட்டிப் போனனான். அதோட தம்பலகமத்தில கொஞ்சப் பேருக்கு வகுப்பும் எடுக்க வேண்டியிருந்தது."

"ஓ இவ்வளவு வேல நடக்குதா. கேட்க மகிழ்ச்சியா இருக்கு ஆபரன்.'

"தோழர் இனி ஆபரன் எண்ட பேர மாத்தணும். இந்தப்பேர் பாதுகாப்பாக இருக்காது. என்னபேர் வச்சுக் கொள்ளலாம்? நீங்கதான் இப்ப எனக்குப் பேர் வைக்கோணும்"

"அதுவும் நல்லதுதான்." சிறிதுநேரம் சிந்தித்தவர்

"நசீர் எண்டு இஸ்லாமிய பேர வைப்பமா..." என இழுத்தார்.

சிரித்துக்கொண்டே "நல்லது தோழர். நசீர் எண்டே என்ர பேர வச்சிருவம்" என மீண்டும் சிரித்தான் அக்கணத்தில் இருந்து நசீராகிப் போனான், ஆபரன்.

அமைப்புகளில் உள்ளவர்கள் அநேகமானோருக்கு வேறு பெயர்கள் வைத்து அழைப்பதே வழக்கமாக இருந்தது. ஒருசிலரே தமது சொந்தப் பெயர்களால் அழைக்கப்பட்டார்கள்.

அவர்களின் பாதுகாப்பு கருதியும் அவர்களது குடும்பத்தின் பாதுகாப்புக் கருதியுமே புனைபெயர்களால் போராடப் புறப்பட்டவர்கள் அழைக்கப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகிழ்சென்னியைச் சந்திக்க வேணும். அதுக்கு நீங்க தம்பலகமம் போய் வர வேணும்"

"அதுக்கென்ன பின்னேரம் போயிற்று வாறன். ஈருருளி காத்துப் போய்க்கிடக்கு. சரிசெய்திற்றுப் போறன்"

எவ்வாறு சென்னியை அணுக வேண்டும் என்ற உத்தியை நசீர் உவைஸ்வாத்திக்குச் சொல்லிக் கொடுத்தான். உவைஸ்வாத்தியை யாரென சென்னிக்குத் தெரியாது. நசீர் படையினரிடமிருந்து தப்பியதெல்லாம் சென்னிக்குத் தெரியாது. பயந்துவிடுவான். அதற்கேற்ற வகையில் இருவருமாக திட்டங்களைத் தீட்டினார்கள்.

பின்னேரம் நான்குமணியளவில் வீட்டிலிருந்து தனது ஈருருளியில் புறப்பட்ட உவைஸ்வாத்தி நான்கே முக்காலுக்கு சுவாமிமலையிலுள்ள மகிழ்சென்னி வீட்டினையடைந்தார்.

சென்னி வயலுக்குப் போயிருந்தான். அம்மாவும் இமையரசியும் மாத்திரமே வீட்டில் இருந்தனர். உவைஸ்வாத்தி தன்னை சின்னத்தம்பியின் நண்பர் என தனது நீண்ட தாடியினைத் தடவிக் கொண்டே அறிமுகப் படுத்திக்கொண்டார்.

"இப்பிடி இந்தக் குந்தில் இருங்க நானா" பகவதிப்பிள்ளை குந்தில் பாய் ஒன்றினை விரித்துவிட்டுக் கூறியவள் அருகில் இருந்த குந்தில் தானும் மகளுமாக அமர்ந்துகொண்டனர்.

அவர்கள் வீட்டுப் படலையடிக்குப் போகும்வரை சின்னத்தம்பி சாவடைந்தது உவைஸ்வாத்திக்கு தெரிந்திருக்கவில்லை. ஆனால் அங்கு கட்டியிருந்த ஒரு பதாதை மூலமாக தெரிந்து கொண்டவர் அதற்கேற்றவாறு நடந்துகொண்டார்.

'சாவீட்டன்று கண்டிக்குப் போயிருந்தனான். எனக்குத் தகவலும் கிடைக்கல்ல. நேற்று இரவு அரைஏக்கருக்குப் போகக்கொள்ள கனிபா சொன்னான். தூக்கி வாரிப்போட்டுது எனக்கு."

அவரது வார்த்தைகளைக் கேட்டு அம்மாவும். மகளும் அழுதார்கள்.

"எங்களுக்கு கொடுத்து வச்சது அவ்வளவுதான். அவனுக்குக் கொடுத்து வச்சதும் அவ்வளவுதான் நானா." அழுகையினூடே அம்மா கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அழாதீங்க. அழாதீங்க.." உவைஸ்வாத்தி தேற்றினார் இருவரையும்.

கண்களை தொங்கல்ச் சீலையால் துடைத்துக்கொண்டே

"தேத்தண்ணி வைபிள்ள" என்ற அம்மாவின் கட்டளையினை மகள் நிறைவேற்றினாள்.

சிறிது நேரத்தில் தேநீரையும் சக்கரையையும் இமையரசி உவைஸ்வாத்தியிடம் கொடுத்தாள்.

தேநீரைக் குடித்துக்கொண்டிருக்கும் போது சின்னத்தம்பியின் பெருமைகளை நசீர் சொல்லிக்கொடுத்தவாறு அம்மாவிடமும் மகளிடமும் கூறினான். இரு கன்னங் களினாலும் நீர் வழிந்தோட இருவரும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

ஐந்தரை மணியாகிவிட்டது. புறப்படுவதற்கு தயாரான உவைஸ்வாத்தியிடம் "கொஞ்சநேரம் இருங்கநானா செண்னி வந்தவிடுவான். அவனையும் ஒருக்கா பாத்திற்றுப் போங்களன்" எதிர்பார்த்திருந்த அந்த வார்த்தைகளை அவர் தட்டவில்லை. அம்மா கூறியதிலிருந்து அரைமணி நேரத்தில் செண்னி வீட்டிற்கு வந்தான்.

உவைஸ்வாத்தியை ஒருநாளும் செண்னி கண்டிருக்கவில்லை. மாமாவின் அநேகமான இஸ்லாமிய நண்பர்களை அவன் அறிந்திருந்தான். எனினும் வீடுதேடி சும்மா யார் வரப்போகின்றார்கள் என மனதை சமாதானப்படுத்தினான்.

சிறிதுநேரம் செண்னியுடன் கதைத்துவிட்டுப் புறப்படுவதற்கு தயாரான வேளையில் செண்னியை நோக்கி "தம்பி, சின்னத்தம்பி அண்டைக்கு காக்காமுனைக்கு வரக்கொள்ள அவன்ர பறக்கும்புறா காத்துப் போயிற்று. என்னட்ட இருந்த கையால காத்தடிக்கிற கைப்பம்பியக் குடுத்தனான் காத்தடிக்கிறதுக்கு. நான் அவசரமா கிண்ணியா போக வேண்டியிருந்ததால வாங்காமலே போயிற்றன். அது இஞ்ச வீட்ட இருக்கா தம்பி"

அவர் கேட்டபோதுதான் மாமாவின் பறக்கும்புறா மாக்கைத் திடலில் சுப்பையா அண்ணனின் வீட்டில் இருப்பது நினைவிற்கு வந்தது செண்னிக்கு. இன்றுவரை பறக்கும்புறாவினை அவன் உண்மையில் மறந்தே விட்டான்.

"அந்தப் பம்பி ஆபரன் கொடுத்ததாக அல்லவா மாமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னவர். இவர், தான் குடுத்த எண்டு சொல்றார். ஆபரன் குடுத்திருந்தா இவருக்கு என்னெண்டு தெரியப்போகுது. மாமா, ஏன் என்னட்ட பொய் சொன்னார்?" உவைஸ்வாத்தி கேட்டதற்கு பதிலளிக்காமல் அமைதியாக இருந்தவனை நினைவுலகிற்கு கொண்டு வந்தவராக "என்ன தம்பி இஞ்ச இல்லையா" எனக் கேட்டார்.

"மாமாட ஈருருளி போறவழியில மாக்கையிலதான் இருக்கு. வாங்க போகக்கொள்ள எடுத்துத்தாறன். அதிலதான் உங்கட காத்தடிக்கிற கைப்பம்பி இருக்கும்" என எழுந்தவனிடம் "இல்லத்தம்பி நீ களைச்சு வயலால வந்திருக்கிறா. காக்காமுனைப் பக்கம் வாற வேலயிருந்தா கொண்டு வந்து தாவன்"

"சரி ஐயா. அங்காலப்பக்கம் நாளைக்கு வருவன். கட்டாயம் நாளைக்குக் கொண்டு வந்துதாறன்"

அங்கிருந்தவர்களிடம் "போயிற்று வாறன்" எனக் கூறிவிட்டு "பிள்ள தேத்தண்ணி நல்ல சுவையா இருந்திச்சு" என இமையரசியிடம் நன்றிகூறிப் புறப்பட்டார் உவைஸ்வாத்தி.

நசீரின் நிதானமான திட்டத்தினை தான் நிறைவேற்றிய மகிழ்ச்சியில் வீடுசென்ற உவைஸ்வாத்தி மகிழ்சென்னியின் வீட்டில் நடந்தவற்றைக் கூறினார்.

சின்னத்தம்பியின் பிரிவு ஆபரனையும் கவலையடையச் செய்தது. ஒரு நல்ல மனிதரின் இழப்பு அனைவரையும் துயரடையச்செய்யும்.

"நாளை சென்னி இஞ்ச வருவான்." என்றான் நசீர்.

மறுநாள் நசீரின் எதிர்பார்ப்பு வீணாகவில்லை.

உவைஸ்வாத்தியின் வீட்டினை வரும் வழியில் வருவோர் போவோர் என விசாரித்து ஒருவாறாக வந்தடைந்தான் சென்னி. முட்கம்பி வேலிகளால் அடைக்கப்பட்டிருந்த வளவின் ஓரிடத்தில் மூன்றடி அகலத்தில் தகரத்தினால் செய்யப்பட்ட கதவு பொருத்தப்பட்டிருந்தது. படலையைத் திறந்து வீட்டு முற்றத்திற்கு வந்தவனை "வா தம்பி வா" என வாய் நிறையப்பல்லாக சிரித்தவாறே அழைத்தார் உவைஸ்வாத்தி.

காலை ஏழுமணிக்கெல்லாம் சென்னி காக்காமுனைக்கு வந்துவிட்டான். வெயில் ஏறுவதற்கு முன்னர் போய்வந்து விட்டால் நல்லது என எண்ணியிருப்பான் போல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றத்தில் இரு நாற்காலிகளைப் போட்ட உவைஸ்வாத்தி ஒன்றில் அமருமாறு கையால் காட்டினார்.

கையிலிருந்த காற்றடிக்கும் பம்பியைக் கொடுப்பதற்கு நீட்டினான். அத நீயே வச்சுக்கொள்ளு தம்பி. உன்னட்டயே அது இருக்கட்டும் என்றார்.

அவன் ஆச்சரியாமாக எதுவும் புரியாமல் அவரைப் பார்த்தான். நேற்று வீட்ட வரும்போது கொண்டுவந்து தரச்சொன்னவர். இப்ப என்னையே வச்சுக்கொள்ளச் சொல்றார். அத நேற்றே சொல்லியிருக்கலாமே. அப்படிச் சொல்லியிருந்தால் நான் அரக்கப்பரக்க ஓடிவரவேண்டிய தேவை எழுந்திருக்காதே என அவன் மனதில் எரிச்சல் ஓடியது.

"எப்பிடி சென்னி இருக்கிறாய்"

சத்தம் வந்த திசைப்பார்த்தான். வீட்டினுள் இருந்து நாடியில் ஒரு குறுந்தாடியுடன் ஒருவர் வந்தார். யார் இவர்? ஆபரன் போல இருக்கிறாரே. எதிர்பார்த்திருக்கவில்லை. விழி பிதுங்கியவனாக உற்றுப் பார்த்தான். ஓம். ஆபரன்தான். தன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. நாற் காலியிலிருந்து எழுந்து ஓடிச்சென்று ஆபரனண்ண என கட்டித்தழுவினான்.

"நான் ஆபரன் இல்ல. நசீர்" கட்டிப்பிடித்ததை விட்டு விலகி மீண்டும் அவனின் முகத்தைப் பார்த்தான். இல்லை ஆபரன்தான் என உறுதிப்படுத்திக் கொண்டான். மனமகிழ்ந்து புன்னகைத்தான்.

மகிழ்சென்னி கடந்த ஆண்டு சேனையூர் நாகதம்பிரான் கோயில் வேள்விக்கு தன் குடும்பத்தாருடன் சென்று கட்டைப்பறிச்சானில் உள்ள ரதிசீலன் வீட்டில் தங்கியிருந்தான். ரதிசீலனும் சென்னியும் உறவுக்காரர்கள். கிட்டத்தட்ட ஒரே வயதினர்.

வேள்வியன்று ரதிசீலனைச் சந்திப்பதற்காக அவன் வீட்டிற்கு ஆபரன் வந்திருந்தான். அந்த வேளையில் சென்னியை அறிமுகப்படுத்தி வைத்தான் ரதிசீலன். சிறிது நேரத்திலேயே ஆபரனின் கதையினால் கவரப் பட்டான். உயர்தரத்தில் பொருளியலை ஒரு பாடமாக எடுத்திருந்ததாலோ என்னவோ ஆபரனின் கருத்துகள் சென்னியை வெகுவாகக் கவர்ந்துவிட்டன.

ஊரில் உள்ள மக்களது பொருண்மிய மற்றும் கல்வி நிலையினை மேம்படுத்த வேண்டும் என்ற தன்னலமற்ற குமுகாய அக்றையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களால் ஈர்க்கப்பட்டான். ஆபரன் மீது அவனையறியாமலே பிடிப்பு ஏற்பட்டுவிட்டது அவனுக்கு.

அங்கு நின்ற மூன்று நாட்களில் ஆபரன் மக்களின் விடுதலைக் காகப் போராடும் அமைப்பின் முக்கியமான ஓர் உறுப்பினன் என்பதனை தெரிந்து கொண்டதுடன் அவ்வமைப்பின் கொள்கைகள் அவனுக்கு உடன் பாடானவையாக இருந்தமையினால் தானும் அமைப்பில் இணைந்து கொள்வதற்கான விருப்பத்தினை ரதிசீலன் மூலமாக ஆபரனுக்குத் தெரிவித்தான் சென்னி.

அன்று தொடங்கிய தொடர்புதான் இன்றுவரை ஆபரனையும் சென்னியையும் ஒரே அமைப்பின் உறுப்பினர்களாக செயற்படும் அளவில் வந்து நிற்கிறது.

ஆபரனைப் பார்த்ததும் சென்னியின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. மாமாவின் இழப்பின் கவலையுடன் ஆபரனைப்பற்றிய கவலை சென்னியின் மனதை நோகச் செய்துகொண்டிருந்ததை யாரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

பிடிபடும் போது ஆபரன் தப்பிவிடுவான் என அவன்மனம் சொன்னதை நினைத்தப் பார்த்தான்.

சிறிது நேரம் சென்னிக்கு 'கையும்ஓடவில்லை காலும் ஓடவில்லை' என்று சொல்வார்களே, அப்படியான நிலையில் கதைப்பதற்கு வார்த்தைகள் இன்றி தவித்தான் என்றுதான் சொல்ல வேண்டும்.

நசீர்தான் தொடங்கினான். நடந்தவற்றைச் சுருக்கமாகச் சொன்னான் சென்னிக்கு.

"நீங்க பிடிபட்டத கனகசிங்கம் மாமா மூலமா நான் உங்கடவீட்ட சொல்லி அனுப்பினனான்."

"ஓ... நீதானா வீட்ட சொல்லிவிட்டது. எப்பிடிரா வீட்ட தெரியும் எண்டு யோசிச்சித்திற்று இருந்தனான். அம்மா பிளான்ரன்பொயின்ருக்கு வந்து 'எவ்வளவு வேணு மெண்டாலும் காசு தாறன். என்ர பிள்ளய விட்டுருங்க எண்டு அழுதவையாம்' எண்டு சுரேஸ்காசிம் சொன்னான். வீட்ட சொல்லியிருக்கக் கூடாது சென்னி. வீட்டாக்களை அவங்கள் சிக்கலுக் குள்ளாக்குவார்கள். இப்படியான நேரத்தில நிதானமா நாம நடக்கோணும்"

"வீட்டாக்களுக்குத் தெரிஞ்சா நல்லது எண்டு நினைச்சது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு பிழையெண்டு இப்பதான் விளங்குது"

"ம்... சரி அத விடு. வேலைக்கு கூட்டி வந்த மூணு பேரும் வேல செய்யிறானுவளா... இல்லாட்டி இன்னும் பழகுறானுவள் தானா?"

"இல்ல... இப்ப நல்லா வேல செய்யிறாங்க. மாதுளன் மற்ற ரெண்டு பேரயும் விட திறமா செய்யிறான்"

"நல்லது சென்னி. சாவாத்தில நிக்கிற தோழர்கள் சாப்பாட்டுக்கு கொண்டு போன அரிசி முடிஞ்சிருக்கும். அவதிப்படுவாங்க. நீதான் அவங்களுக்கு அரிசி கொண்டுபோய்க் குடுத்திற்று வரோணும்."

"அதுக்கென்ன போயிற்றுவாறனே. அங்க கறி சிக்கல் இல்லத்தானே. கங்கையில மீன்பிடிச்சு ஆக்குவாங்க. பொன்னாங்காணி, வள்ளல் கீரையெல்லாம் அங்க தாராளமாக் கிடக்குது."

"அந்த பன்ரெண்டு பேரயும் திரும்பியும் தம்பலகமத்தில சந்திப்பம். இனி கள்ளிமேட்டில வேணாம். இண்டைக்கு சாவாத்துக்குப் போயிற்று வந்து நாளைக்கு இரவைக்கு அவங்களச் சந்திக்க ஒழுங்கு செய். இனி என்ர பேர் நசீர் சரியா. ஆபரன் எண்ட பேர மறந்திடுவம் என."

"ம்....... சரி.......... நசீர்......... நல்லாத்தான் இருக்கு பேர். நாளைக்கு மாவடித்தோட்டத்தில சந்திப்பமா?"

"அது எங்க இருக்கு எண்டு எனக்குத்தெரியாதே."

"உங்களுக்குத் தெரியும். நீங்க அங்க வந்திருக்கிறீங்க. நாயன்மார்திடல்ல இருந்து மாக்கைக்குப் போகக்கொள்ள நாயன்மார்திடல் முடியிற இடத்தில இருந்து இடதுகைப் பக்கமா இருக்கிற வயல்வெளிக் குள்ளால போனோமே"

"ஓ... நினைவிருக்கு நினைவிருக்கு. வீயன்னா கானாட வாழக்காட்டுத்திடலுக்குள்ளால போய் தம்பிமுத்தன்காட்டு வயலுக்குள்ள இருக்கிற திடல்தானே அது"

"ஓம்.....ஓம்.... அதுதான். அங்க எண்டா ஆரும் இரவில வரமாட்டாங்க. ஆறுதலாக் கதைக்கலாம்.. அங்கயே நாளைக்கு ராவைக்கு நிப்பம். 'சூழுக்குப் போற' எண்டு வீட்டில சொல்லிற்று வரச் சொல்றன் எல்லாரையும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரவு அங்க நிக்க வேணாம். கொஞ்ச நாளைக்குப் பிறகு இரவில நிப்பாட்டிக் கதைப்பம். ராவைக்கு பத்து மணிக்கெல்லாம் வீட்ட போகச்சொல்லுவம்"

நசீரின் கருத்துக்களை ஆமோதித்தான் சென்னி. அமைப்பின் எதிர்கால நடவடிக்கைகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை மூவரும் பகல்வரை கலந்துரையாடினர். நசீரின் ஆலோசனைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சென்னியும் சில யோசனைகளை முன்வைக்க அவையும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

உவைஸ்வாத்தியின் செயற்பாடுகளிற்கு வேறுவடிவம் கொடுப்பதற்கான திட்டங்களைத் தீட்டினான் நசீர்.

"சுரேஸ்காசிம் சிறந்த வீரன் மட்டுமல்ல நல்ல கெட்டிக்காரனும் கூட. அவன் செயற்பாட்டில் இருப்பதும் வளருவதும் நமது நடவடிக் கைகளுக்கு எதிர்காலத்தில் சிக்கல்களை நமக்கு உண்டாக்கும். அப்படியே அவனை விட்டுவைக்க ஏலாது. அரசு அவன்போல நல்ல ஆக்களப் பயன்படுத்தத்தான் பாப்பாங்க."

"இஸ்லாமியனாக இருக்கிறது அவனுக்கு நல்ல வாய்ப்பக் குடுக்குது" உவைஸ்வாத்தி.

என்ன செய்ய வேண்டும் என்ற தனது திட்டத்தினை உவைஸ் வாத்தியிடம் தெளிவுபடுத்தினான் நசீர். ஆனால் அதற்கு இன்னும் நாட்கள் தேவை. அதுவரைக்கும் தான் சொல்வதுபோல் செயற்படுமாறு கேட்டுக் கொண்டான்.

ஆபத்தான செயற்பாடு கொஞ்சம் பிசகினாலும் பலருக்கு ஆபத்து ஏற்படும் என்பதை உணராதவர்களாக அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானித்தார்கள். சுரேஸ்காசிமின் உண்மையான திறமைகளை தெரிந்திருந் தால் அந்தத்திட்டத்தை செய்வதற்குத் தீர்மானித்திருக்கமாட்டார்கள்.

"நான் இப்பிடியே சாவாத்துக்குப் போயிற்று வீட்ட போறன்"

எனக் கூறிவிட்டுப் புறப்பட்டு குறிஞ்சாக்கேணிச்சந்தியில் அரிசியும் கறிசமைக்கத் தேவையான சுவையூட்டிகளுடன் சீனி, தேயிலை, சக்கரை என பொருட்களை வாங்கிக் கொண்டு சாவாற்றினை நோக்கி தனது ஈருருளியில் புறப்பட்டான் சென்னி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னியை எதிர்பார்திருந்தவர்கள் போன்று அவனை சாவாற்றில் இருந்தவர்கள் வரவேற்றார்கள்.

"இண்டையோட அரிசி முடிஞ்சிற்று. நாளைக்குச் சோறாக்க என்ன செய்யிற எண்டு யோசிச்சிற்று இருந்தனாங்க. ஆபரன் தோழர் எங்க?" கேட்டான் கமல்.

நடந்தவற்றை தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறிவிட்டு அடுத்த கிழமை தானும் நசீரும் வருவதாகக் கூறிவிட்டு தம்பலகமம் நோக்கிப் பறப்பட்டான்.

பொழுது சாயத்தொடங்கியதும் மாவடித்தோட்டத்தை நோக்கி நகர்ந்தார்கள் சென்னி அழைத்தவர்கள். அவன் கூறியவாறே பொக்குறுணி தீபனும் புதுக்குடியிருப்பு வரதராசாவும் குஞ்சடப்பன்திடலில் தீபனின் அண்ணனின் வீட்டில் அவர்களுடைய ஈருருளிகளை வைத்துவிட்டு தாம் செல்ல வேண்டிய இடத்திற்குச் சென்றார்கள்.

சிப்பித்திடல் கோவிந்தனும் கள்ளிமேட்டு வெள்ளையனும் நாயன்மார்திடல் அகிலன் வீட்டில் இருவரினதும் ஈருருளிகளை வைத்துவிட்டு மூவருமாகச் சென்றார்கள். பட்டிமேட்டு ராசா கோவிலடியில் சேகர் வீட்டில் அவனது ஈருருளியை வைத்துவிடடு வயல்வெளியினால் மாக்கையின் பின்பக்கமாக இருவரும் நடந்தார்கள்.

பாலம்போட்டாறு பாலசிங்கமும் பாரதிபுரம் கந்தசாமியும் ஐயனார்திடலில் உள்ள மாயக்கண்ணன் வீட்டில் அவர்களது ஈருருளியை வைத்துவிட்டு அவனையும் அழைத்துகொண்டு சென்றனர்.

முள்ளியடி கோணேசும் வர்ணமேட்டு கிட்டுவும் குடமுருட்டிப் பாலத்தினால் வயல்வெளிக்கு இறங்கி வரம்புகளினால் நடந்து சென்று மாவடித்தோட்டத்தை அடைந்தார்கள்.

நசீரும் சென்னியும் உவைஸ்வாத்தியும் ஏற்கனவே அங்கு வருகின்றவர்களுக்காகக் காத்திருந்தனர்.

நசீர் உவைஸ்வாத்தியுடன் அவரது ஈருருளியில் வந்து நாயன்மார் திடலில் சென்னியைச் சந்தித்து ஐயனார் திடலில் உள்ள அவனது மாமா மகேந்திரன் வீட்டில் இரு ஈருருளிகளையும் வைத்துவிட்டு 'மாக்க ஆத்தில மீன் வெட்டப்போறம்' எனப் பொய்கூறிச் சென்றிருந்தனர்.

எல்லோரும் இரண்டும் மூன்றுமாக ஏழேகால் மணிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவடித்தோட்டத்தில் கூடினார்கள்.

எல்லோரையும் வரவேற்ற சென்னி உவைஸ்வாத்தியை அறிமுகம் செய்துவிட்டு ஆபரனை அவர்கள் அனைவரும் முன்னர் சந்திருந்தாலும்கூட தற்போது அவன் நாடியில் குறுந்தாடியுடன் இருந்தமையினாலும் இருள் நேரமென்பதனாலும் சம்மாந்துறையில் முன்னர் ஒருதடவையே சந்தித்திருந்த மையினாலும் அவனை அவர்களால் அடையாளம் காணமுடியவில்லை.

"இவர் நசீர்" என அறிமுகம் செய்துவைத்தான்.

பன்னிரண்டு பேரில் மூன்று பேர் பல்கலைக்கழகம் செல்வதற்குத் தகுதி பெற்றிருந்தனர். ஏனையோர் உயர்தரம் படித்து முடித்தவர்கள்.

நசீர் அவர்களுடன் சாதாரண விடயங்களைக் சிறிதுநேரம் கதைத்துவிட்டு "கருத்துமுதல்வாதமும் பொருள்முதல் வாதமும் கேள்விப் பட்டிருக்கிறீங்களா" என்றான். யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

"இந்த இரு சொற்களும் நமக்கு முக்கியமானவை. நமது சிந்தனையில் மாற்றம் வரவேண்டும். உங்கள் மூலமாக அதற்கான வழிகாட்டல்களை விதைப்பதே எங்களது முதலாவது பணியாக இருக்கும்."

"இலங்கையில் தேசியம் எனும் கருத்துருவாக்கம் தற்போது முதன்மையடைய வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கான முன்னெடுப்புகளை இந்தியாவே செய்கின்றது. இயற்கையாக வளர வேண்டிய பயிருக்கு அதிகளவு யூறியா உரத்தினை அள்ளி அள்ளிப்போட்டு திடீரென அதீத வளர்ச்சியை செயற்கையாக உருவாக்குவது போல் இந்தியாவின் செயற்பாடுகள் உள்ளன."

"தனது பூகோள ரீதியிலான பாதுகாப்பிற்கு ஈழத் தமிழர்களை பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறது இந்தியா. இது நாம் விரும்பி ஏற்கும் செயற்பாடு அல்ல. இந்தியா ஈழவிடுதலை அமைப்புகளிற்கு பயிற்சிகளும் கொடுத்து ஆயதமும் வழங்கியருக்கிறது. எதற்காக? தமிழ் மக்கள் மீதுள்ள பற்றிலா? இல்லை. தங்களது நலனிற்காக தமிழ்மக்களைப் பயன்படுத்தி சிங்கள ஆட்சியாளர்களை அச்சுறுத்தி தமது நலனை பாதுகாத்துக்கொள்வதே அவங்கட முதன்மை நோக்கம்."

"அப்ப எதற்காக நமது அமைப்பு பயிற்சியும் பெற்று இந்தியா விடம் சுடுகலங்களைளையும் பெற்றிருக்கின்றது? என்ற கேள்விகள் உங்களுக்கு எழலாம். நியாயமான கேள்வி அது. தற்போது தேசிய விடுதலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் கூர்மையடையத் தொடங்கியுள்ளது. இது சூறாவளி போன்று வேகமாக வளரும். எமது போராட்டமானது மனிதகுல வர்க்க விடுதலையை நோக்கியதாக இருந்தாலும் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தினைப் புறந்தள்ளிவிட்டு எம்மால் முன்நகர முடியாது. இன ரீதியிலான முரண்நிலைகளைக் களைந்து முன்செல்ல வேண்டிய நிலையில் நாமும் இருக்கிறோம். எம்மைநாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. தற்பாதுகாப்பிற்காக நாம் சுடுகலன்களை நமது கைகளில் ஏந்திப்பிடிப்பதற்கு பலவந்தமாகத் தள்ளப்பட்டுள்ளோம். தற்போதைக்கு நமக்கு சுடுகலன்கள் தேவை என்பதனை நீங்களும் உணருவீர்கள் என நம்புகிறேன்."

தெளிவுபடுத்திய நசீர் உவைஸ்வாத்தியைத் திரும்பி பார்த்தான்.

உவைஸ்வாத்தி "நமது அமைப்பு மக்களின் சக்தியை வலுவாக நம்புகிறது. கருத்துக்களை அவர்களுக்கு விதைக்க வேண்டும். தற்போது உங்களுக்கு நாங்கள் எவ்வாறு தெளிவுபடுத்துகிறோமோ அப்படி உங்களது செயற்பாடுகளும் இருக்க வேண்டும். நிறையப் புத்தகங்களை நீங்கள் படிக்கவேண்டும். சென்னியிடம் புத்தகங்கள் உள்ளன. எல்லாரும் அதெல்லாம் வாங்கிப்படியுங்க. அப்பத்தான் நீங்களாகவே பல விடயங்களை புரிந்து கொள்வீர்கள். அறிவியல் ரீதியாக நாம் சிந்திப்பதுடன் நசீர் சொன்னது போல நமது சிந்தனை வடிவம் மாற வேண்டும். பொருண்மிய ரீதியில் நாம் நமது சிந்தனையை வளர்த்தெடுக்க வேண்டும்."

"அதென்ன பொருண்மிய ரீதியிலான சிந்தனை?... நமது நாட்டில் மக்கள் கட்டுமானம் பொருண்மியத்தின் அடிப்படையில்தான் பிணைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள பொருண்மியமுறைமை தவறாக உள்ளமையினால்தான் மக்களிடையே பொருண்மிய ஏற்றத்தாழ்வுகளும் பொருண்மிய இடைவெளியும் பாரியளவில் காணப்படுகின்றன. இதனை நாம் விளங்கிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். நீங்கள் எல்லோரும் கல்வியறிவில் நல்ல நிலையில் இருப்பவர்கள். எளிதாக விளங்கக் கூடியவர்கள். தற்போது உடனடியாக எல்லாம் விளங்காட்டியும் போகப் போக விளங்கும். திருப்பியும் சொல்றன். நீங்க புத்தகங்கள் நல்லாப் படிக்கோணும்" என நிறுத்தினார்.

இருவரதும் கருத்துக்கள் எல்லோர் மனதிலும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. குழுகாயம் பற்றிய அக்கறையை அவர்கள் மனதில் தோற்றுவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னி அவர்களைத் தேர்ந்தெடுக்க எப்படியும் நான்கு மாதங்களாவது செலவிட்டிருப்பான். அவனது கடுமையான முயற்சியின் பலன்களே அவர்கள் பன்னிருவரும்.

தம்பலகமத்தின் நிலஅமைப்புகள் தொடர்பாகவும் தம்பலகமத்தில் சாதி எந்தளவிற்கு பண்பாட்டியல் ரீதியாக தாக்கம் செலுத்துகிறது என்பது தொடர்பாகவும் சென்னி சிறிது நேரம் கதைத்தான்.

சென்னியின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் தன் வயதிற்கேற்றாற் போல் சூடாக வந்துகொண்டிருப்பதனை நசீர் அவதானித்துக் கொண்டிருந்தான். ஆனால் எதுவும் கூறவில்லை.

பன்னிருவரின் நரம்புகளையும் தங்களையறிமாலே முறுக்கேற்றிக் கொண்டிருந்தன சென்னியின் கருத்துகள்.

அவன் வாயிலிருந்த வந்த வார்த்தைகள் எல்லாம் அறிவியல் ரீதியாக ஆராய்ந்த உண்மைகளின் அடிப்படையில் வந்துகொண்டிருந்ததனை உவைஸ்வாத்தி அவதானிக்கத் தவறவில்லை. ஓர் பொருளியல் மாணவனின் குமுகாயப் பார்வை அவனது கருத்துகளில் வெளிப்படையாகத் தெரிந்தன.

முதலாளித்துவத்தின் பிடியில் மக்களை தொடர்ந்து வைத்திருப் பதற்கு அரசு தன்னால் முடியுமான அனைத்தினையும் தனது உளவு அமைப்புகள் மூலமாக எவ்வாறு செயற்படுத்த நடவடிக்கைகளை எடுக்கும் என்பது பற்றி நாளைய கலந்துரையாடலில் தோழர் நசீர் விளக்குவார் எனக் கூறி தனது கருத்துகளை நிறைவு செய்தான்.

ஏறத்தாள ஒன்பது மணிவரை கதைத்திருப்பார்கள். "நாளைக்கு அண்ணன்மார்திடல்ல சந்திப்பமா" என சென்னி கேட்க "அது நல்ல இடம். ஆக்களும் ஆரும் அங்க இல்ல. எல்லாருக்கும் வாறது எளிது" என கோவிந்தன் கூற அண்ணன்மார்திடலில் சந்திப்பது என முடிவாகியது.

அண்ணன்மார்திடல் நடுப்பிரப்பன்திடலுக்கு வடக்காகவும் வர்ணமேட்டிற்கு மேற்காகவும் உள்ள வயல்களால் சூழப்பட்ட ஒரு சிறிய திடல். அதற்கு உரிமையாளர்கள் இருந்தாலும் அங்கு யாரும் குடியிருக்கவில்லை. ஆனால் சில தென்னைகள் உண்டு. அதில் தேங்காய் பறிப்பதற்கும் தென்னோலை எடுத்து கிடுகு பின்னுவதற்கும் உரிமை யாளர்கள் பகலில் எப்போதாவது சென்று வருவார்கள். அண்ணன்மார் திடலுக்குச் சென்று வருவதற்கு வழியில்லை. வயல் வரம்புகளால்தான் சென்றுவர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானிலிருந்து பார்த்தால் தம்பலகமத்தின் அழகினை இலங்கையின் எந்த இடத்திலும் காண முடியாது. வயல்வெளிகளின் நடுவே மண்திட்டுகள் மேடாகவும் திடலாகவும் அமையப்பெற்றிருந்தமை ஊரிற்கு அழகு சேர்த்திருந்தது. தம்பலகமத்தில் உள்ள ஒவ்வொரு ஊரும் ஆண்டில் ஒன்பது மாதங்களாவது வயல்வெளிகளில் நீர் நிறைந்திருப்பதனால் குளிர்மையாக இருக்கும்.

ஆனி உத்தரத்தில் கோணேசருக்கு கொடியேறிவிட்டால் தம்பலகமத்தில் வாழும் மக்களின் முகங்களில் ஒருவித பிரகாசம் தோன்றிவிடும். அவர்களை வேறு எங்காவது யாரும்கண்டால் அவர்கள் தம்பலகமத்தைச் சேர்ந்தவர்கள் என்பதனை அந்தப்பிரகாசமான முகம் காட்டிக் கொடுத்தவிடும்.

அதேநேரம் கோணேசர் கோவிலுக்கு நிருவாகசபை தெரிவு நடைபெறுவதற்கு முன்னுள்ள மூன்று மாதங்களுக்கும் தம்பலகமத்திலுள்ள மக்களின் முகங்கள் இறுக்கமாக இருக்கும். அந்தநேரத்தில் தம்பலகமம் மக்களை யாராவது கண்டால் தம்பலகமம் கோணேசர் கோவில் நிருவாகசபை தெரிவு நடைபெறப் போகின்றது என்பதனைப் புரிந்து கொள்வார்கள்.

இலங்கையில் இருக்கும் கோவில்களில் நிருவாக உறுப்பினர் தெரிவு நடைபெறுவதற்கு தற்போதைய காலத்திலும் சாதியடிப்டையில் தெரிவு நடைபெற வேண்டும் என யாப்பில் எழுதப்பட்டிருக்கும் ஒரேயொரு கோவில் தம்பலகமம் ஆதிகோணநாயகர் கோவில்தான்.

இதனை சென்னி கூறும்போதுதான் அவனது வாரத்தைகளில் சூட்டினை அவதானித்திருந்தான் நசீர்.

தம்பலகமம் ஆதிகோணநாயகர் கோவில் நிருவாக சபையில் ஏழுபேர் தெரிவு செய்யப்படுவார்கள். நால்வர் தம்பலகமப்பற்றிலிருந்தும் ஒருவர் கட்டுக்குளப்பற்றில் இருந்தும் இன்னுமொருவர் கொட்டியாரப்பற்றில் இருந்தும் ஏழாமவர் திருக்கோணமலை நகரத்தில் இருந்தும் தெரிவு செய்யப்படுவார்கள்.

தம்பலகமப் பற்றிலிருந்து தெரிவுசெய்யப்படும் நால்வரில் இருவர் வேளாளர் சாதியிலிருந்தும் இருவர் குருகுல சாதியிலிருந்தும் என யாப்பில் எழுதப்பட்டுள்ளது. தம்பலகமத்தில் இருக்கும் ஏனைய சாதியினர் கோவில் நிருவாகத்தில் உறுப்பினராகும் உரிமை மறுக்கப்பட்டுள்ளமையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னியின் கோபத்திற்கு முதன்மைக் கரணீயமாக இருந்தது.

கட்டுக்குளப்பற்று, கொட்டியாரப்பற்று என்ற நிருவாக நடைமுறை தற்போது நடைமுறையில் இல்லை. அவை வழக்கொழிந்து ஆண்டுகள் பலவாகிவிட்டன. ஆனால் தற்போதும் அதனை யாப்பினடிப்படையில் தூக்கிப் பிடித்துக் கொண்டிருப்பது சென்னியின் கோபத்திற்கு இன்னுமொரு கரணீயமாக இருந்தது.

இதற்கு ஏதிராக நீதிமன்றில் வழக்குவைத்து ஏழு நிருவாகசபை உறுப்பினர்களும் உறுப்புரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே சென்னியின் கருத்தாக இருந்தது. அந்த கருத்தை அங்கிருந்த அனைவரும் ஏற்றனர்.

பன்னிருவரும் மாவடித்தோட்டத்திலிருந்து புறப்பட்ட பின்னர் நசீர் சென்னியை நோக்கி இன்றைய கலந்துரையாடல் தொடர்பாக தனது கருத்துக்களைக் கூறினான்.

"ஒரு காத்திரமான கருத்தினை முன்வைக்கும் போது நாம் உணர்ச்சிவசப்படக் கூடாது. அவ்வாறு உணர்ச்சி வசப்பட்டால் நாம்கூற வருகின்ற கருத்தினை முழுமையாகவும் சரியாகவும் கூறமுடியாத நிலைக்கு நாம் சென்றுவிடுவோம். இன்று கோவில் விடயத்தினை கதைக்கும்போது உன்னை உன்னால் கட்டுப்படுத்த முடியாமல்போனது உனக்கே விளங்கியிருக்கும்"

"இல்லத் தோழர் அது பிழைதானே"

"நான் சரியென்று சொன்னேனா. இல்லையே. நமது பிழைகளை ஒருவர் சுட்டிக்காட்டும் போது அதனை ஏற்றுக்கொள்ளும் பண்பினை நாம் வளர்தெடுக்க வேண்டும். பிழையினை நாம் நியாயப்படுத்தினால் பின்னர் அவர்கள் நமது பிழைகளைச் சுட்டிக்காட்ட முன்வரமாட்டார்கள். அது நமது வளர்ச்சிக்கும் தடையாகிவிடும்"

"உண்மைதான். உங்களது கருத்துக்களை முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன்" பணிந்தான் சென்னி.

மறுநாள் அண்ணன்மார்திடலில் அனைவரும் சரியாக ஏழுமணியளவில் வந்து சேர்ந்தனர்.

இன்று உவைஸ்வாத்திதான் தொடங்கினார்.

"மக்கள் தாம் தமது வாழ்க்கையினை மகிழ்ச்சியாக வாழவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதே ஒவ்வொருவரினதும் எண்ணம். ஆனால் அப்படி அவங்களால வாழ முடியிறதில்ல. குறிப்பா யார் தமது உழைப்ப அதிகமாக வழங்குகின் றார்களோ அவங்களால மகிழ்ச்சியாக வாழ முடியிறதில்ல. அதற்கு கரணீயம் அவங்கட உழைப்பிட மகிமையினை அவங்க புரிஞ்சு கொள்ளா மையும் அவங்கட அறிவுமட்டம் குறைஞ்ச நிலையில் இருப்பதும்தான். உழைக்கிறவங்களுக்கு இந்த உண்மை புரிஞ்சுவிடக்கூடாது எண்டதில முதலாளித்துவ அரசுகள் கவனமாக இருக்கும்."

"அதுக்காக குமுகாயத்தில் எங்காவது இருக்கிற சின்னவிரிசலை இல்லாட்டி சிக்கலை அரசு தன்ர புலனாய்வுப்பணியாக்கள் மூலமா கண்டுபிடிச்சு, அதப் பெரிசாக்க தன்னால ஏலுமான எல்லாத்தையும்செஞ்சு தங்களுக்குத் தேவையானத நிறைவேற்றிக் கொள்ளுவாங்க. அந்த வகையிலதான் சிறிலங்கா அரசும் செயற்படுது. இனம், மதம், சாதி, பிரதேசம் போன்றவற்றில இருக்கிற முரண்நிலைகள சிக்கலாக மாத்திறதுக்கு தன்னாலான அனைத்துச் செயற்பாடுகளையம் அரசு அவங்க மூலமாகச் செய்ய எத்தனிப்பாங்க"

"சிறிலங்காவில் இப்ப இருக்கிற தேசிய இனவிடுதலைப் போராட்டத்திற்கு சிங்களவங்களா கரணீயம் எண்டு நினைக்கிறீங்க."

"அப்ப?" அகிலன் வியப்புடன் கேட்டான். சிரித்தவாறு தொடர்ந்தார் உவைஸ்வாத்தி. "பண்டாரநாயக்காதான் இந்தநாட்டில ஆயிரத்தி தொள்ளாயிரத்தி இருபத்தியேழாம் ஆண்டளவில சமஸ்டி முறையில் அரசியலமைப்பு சிறிலங்காவிற்குத் தேவை எண்டத வலியுறுத்தினவர். அதனை எதிர்த்தவர்கள் யார்? யாழ்ப்பாண பணமுதலைகளாயும் சாதியத்த தங்கட ஆயுதமாகவும் பயன்படுத்தின வேளாளசாதியினர் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? குறிப்பா சேர் பொன் அருணாச்சலம், சேர் பொன் இராமநாதன் போன்றவர்கள்தான் அதற்கு முதன்மை எதிர்ப்பாளர்களாக இருந்தவங்க எண்டா நம்ப ஏலுமா? ஆனா அதுதான் உண்மை"

கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு புதிய தகவல்களாக இருந்த துடன் வியப்பாகவும் இருந்தது. சிறிது நேரம் ஒருவரையொருவர் தமது முகங்களைப் பார்த்துக் கொண்டனர். உவைஸ்வாத்தியின் கருத்துகள் எல்லோரையும் கட்டிப் போட்டவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

குவளையில் இருந்த நீரைப் பருகிவிட்டு தொடர்ந்தார் உவைஸ்வாத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிழக்கு மாகாணத்தில நடைபெற்ற குடியேற்றங்கள் இன்று தமிழ் மக்களாலயும் விடுதலை அமைப்புகளாலயும் அதிகளவில் சிங்கள வர்களுக்கு எதிராகப் பேசப்படுது. சிங்களவங்கள் தமிழர்களுக்கு எதிராக செயற்படுகிறார்கள் எண்டதுக்கு எடுத்துக்காட்டாக கூறுகின்ற முதலாவது செயற்பாடாக கல்லோயா, கந்தளாய், அல்லைக் குடியேற்றங்களையே சொல்றாங்க என்பது உங்களுக்குத் தெரியும். ஆனா உண்மைநிலைய இப்ப கதைக்கிறதில்ல. ஏனெண்டா அதுபற்றி அனேகமான ஆக்களுக்குத் தெரியாது."

"பிரித்தானியா ஆட்சியாளர்கள்தான் கல்லோயா குடியேற்றத் திற்கான நிதிய முழுமையாக கொடுத்தாங்க. அந்தத் திட்டத்த நடைமுறைப் படுத்துறதுக்காக அஞ்சு பேரக் கொண்ட ஒருசபை அமைக்கப்பட்டது. அதன் தலைவரா அப்ப காணி ஆணையாளர் நாயகமாக கொழும்பிலே பணியாற்றிக் கொண்டிருந்த கனகசுந்தரம் எண்ட ஒரு தமிழர்தான் நியமிக்கப்பட்டார் எண்றத யாரும் சொல்றதில்ல. தமிழர்களுக்கு எதிரான ஒரு குடியேற்றத்திற்கு யாராவது ஒரு தமிழரை தலைவராக நியமிப்பாங்களா? கல்லோயாத்திட்டத்தில் குடியேற்றப்பட இருந்தவர்கள் யாழ்ப்பாணத்திலே மயிலணி போன்ற இடங்களில் வசிக்கிறதுக்கு ஒருதுண்டு நிலமேனும் இல்லாம வாழ்ந்து கொண்டிருந்த குறைஞ்ச சாதியினர் எனக் கருதப்பட்ட ஆக்கள்தான். அதத்தடுத்த பெருமைக்குரியவர் தந்தை செல்வா என்று அழைக்கப்படுற செல்வநாயகத்தார் எண்றது எவ்வளவு கசப்பான உண்மை தெரியுமா?"

எல்லோரும் நாடியில் கைவைத்து அசந்து போயினர். உண்மையான கதையா இது என்பது போன்றிருந்தது அவர்களது பார்வை.

"கல்லோயாத்திட்டம் தொடர்பான திட்டஅறிக்கை இது. இதனை நீங்க எல்லாரும் படிக்கோணும். அப்பதான் விரிவான விளக்கங்களை நீங்க பெறஏலும்" என உவைஸ்வாத்தி தன்னிடமிருந்த அந்த ஆவணத்தை கொடுக்க வரதராசா கைநீட்டி வாங்கிக்கொண்டான்.

"இனிக் கொஞ்சநாளைக்கு நாங்க வரமாட்டம். அமைப்பிட செயற்பாடுகளுக்குத் தேவையான பொருண்மியத்த அந்த அந்த மாவட்டத் தோழர்களே தேடிக்கொள்ள வேணும் எண்டு தீர்மானிச்சிருக்கம். அதுக்கான செயற்பாடுகளத் தொடங்கியிருக்கம். மற்ற அமைப்புகளைப் போல மக்களிட்ட பணம் எதுவும் வாங்கஏலா. அதோட எங்கயும் கொள்ளையும் அடிக்கஏலா. நாம போராடுறது அவங்களுக்கு வழிகாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றதுக்கே தவிர அவங்கள நசுக்கிறதுக்கு இல்ல என்றத நாம தெளிவா புரிஞ்சு கொள்ளோணும்."

"சில இடங்கள்ல பண்ணைகள் தொடங்கியிருக்கம். சல்லியில படகு வாங்கி கொடுத்திருக்கம். வேற சில பொருண்மிய திட்டங்களைச் செய்யிறதுக்கான திட்டங்களையும் வகுத்துக் கொண்டிருக்கிறம். பாப்பம்... நீங்களும் ஒத்துழைச்சா வேற திட்டங்கள இஞ்சயும் தொடங்கலாம். கந்தளாய்த்தீவு நல்ல பாதுகாப்பான இடம். யோசியுங்க. சென்னியுடன் கதையுங்க. இந்தப் புத்தகங்கள படியுங்க. சென்னியிட்ட இருக்கிற புத்தகங்கள மாறிமாறிப் படியுங்க." கூறி முடித்தான் நசீர்.

கலந்து கொணடவர்களுக்கு மனதில் புத்தூக்கம் ஏற்பட்டது அவர்கள் முகத்தில் தெரிந்தது. குமுகாயம் பற்றிய அறிவினை முதலில் வளர்க்க வேண்டும் என்பதனை உணர்ந்தார்கள். உணர்ச்சிக்கு முன்னுரிமை கொடுப்பதனைவிட அறிவியல் ரீதியாக தரவுகளினடிப்படையில் கதைக்கப் பழக வேண்டும். அதற்கு நிறையத் தேடல்தேவை. அதற்காக நிறையப் புத்தகங்கள் படிக்கவேண்டும் என்பதனை உணர்ந்தார்கள். கல்வி மற்றும் பொருண்மியம் பற்றிய அதிக அறிவு நமக்குத்தேவை என அவர்கள் உணர்ந்தார்கள்.

## - 8 -

வேலாயுதம் அண்ணனும் அவருடன் வந்தவர்களும் கடந்த சில நாட்களும் வேலுப்பிள்ளைத்தலைவரின் வயலில் வேலை செய்தனர். கனகசிங்கத்தார் மூலமாக அதற்கான ஏற்பாடுகளைச் சென்னி செய்திருந்தான்.

எட்டு வீட்டிற்கு அவர்களும் வந்து சாப்பிட்டுச் சென்றனர். "நாளை சின்னத்தம்பி மாமாவின் வயலில் முள்ளுக்கலப்பை அடித்து விதைக்கோணும்" என்று சென்னி சொல்லியனுப்பினான் அவர்களிடம்.

முள்ளுக்கலப்பையினை சுப்பையான அண்ணனிடம் கேட்டுவைக் கும்படி வேலாயுதம் அண்ணனிடம் கூறிவிட்டான்.

காலை ஐந்தரை மணிக்கே வேலாயுதம் அண்ணன் தனதுஆட்களை எழுப்பி காலைக்கடன்களை முடித்துவிட்டு வயலுக்குச் செல்வதற்கு ஆயத்தமாகுமாறு கூறினார்.

மாதுளன் சுப்பையா அண்ணனின் முள்ளுக்கலப்பையினை தோளில் சுமந்தவாறு சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாக அதனை ஒருவர் தூக்குவது சிக்கல். நாலுக்கு இரண்டு அங்குலம் என்ற அளவில் இருக்கும் ஆறடி நீளமான கை மரத்தில் அரையடிக்கு ஒன்று என்ற ஒழுங்கில் பதினாறு அங்குல தடிப்புள்ள ஒன்பதங்குல நீளமான பதினொரு கம்பித் துண்டுகளை முள்ளியடியில் இருக்கிற கமால்தீனின் கம்மாலையில் கொடுத்து செய்து வைத்திருந்தார். சரியாக நடுப்பகுதியில் எட்டடி நீளமான மூன்றுக்கு இரண்டு அங்குல தடிப்புள்ள மரச்சட்டம் கம்பிகள் பொருத்தப்பட்ட கைமரத்துடன் பொருத்தியிருந்தது. அதன் மற்றநுனியில் வண்டில்மாடு பூட்டுவதற்கான நுகம் பிணைக்கப்படும். அதற்குவசதியாக அந்தநுனியில் ஓரங்குல தடிப்புள்ள துளையிட்டு வட்டமான குச்சியினை இறுக்கியிருந் தார்கள். அது கிட்டி என அழைக்கப்படுகிறது. அது கயிறு வழுகாமல் இருப்பதற்கான தடுப்பாக இருந்தது.

கைமரத்தில் கம்பிகள் ஏற்றப்பட்ட பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் 'ப' வடிவில் மூன்றுக்கு இரண்டு அங்குல சட்டகத்தினைப் பொருத்தி யிருந்தார்கள். அதனைப் பிடித்துக்கொண்டே வயலில் வேலை செய்வார்கள். இதுதான் முள்ளுக்கலப்பை என தம்பலகமத்தில் அழைக்கப்படுகிறது.

இரட்டித்த வயலினை காலாவி மட்டப்படுத்துவதற்கு முன்னர் முள்ளுக்கலப்பையால் வயலை சமப்படுத்துவார்கள். வரவைகளைச் சமப்படுத்துவதற்கே இந்த முள்ளுக்கலப்பையினைத் தம்பலகமத்தின் வயல்களின் பயன்படுத்தினார்கள்.

சுப்பையா அண்ணனின் கருந்தோலன் மாடுகள் நல்ல வாட்டசாட்டமாக இருந்தன. தான் சாப்பிடுகிறாரோ இல்லையோ தனது மாடுகளை என்றுமே சுப்பையா அண்ணன் பட்டினிபோட்டது கிடையாது.

காலையில் அவற்றை மேய்ச்சலுக்கு கொண்டுபோய்க்கட்டுவதும் பகல் நேரத்தில் அவற்றிற்குத் தண்ணீர்காட்டி தாகம்தீர்ப்பதும் நடுப்பகலின் பின்னர் புல் இருக்கும் நல்ல இடத்தில் மாற்றிக்கட்டுவதும் இரவில் பத்துமணிபோல் தவிட்டுடன் புண்ணாக்கு கலந்துவைப்பதும் என தன்பிள்ளைகள் போல் கவனித்துக்கொண்டார். அதனால்தான் அந்த எருதுகள் நல்ல வாட்டசாட்டமாக இருந்தன.

பகலில் மாடுகளின் வயிறு நிரம்பாமல் இருந்தால் மனுசன் நித்திரை கொள்ளமாட்டார். இரவு முழுவதும் எதையோ பறிகொடுத்தவர் போல் கவலையுடன் அவ்விரவைக் கழிப்பார். மாடுகளில் அவ்வளவு அன்பாக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுப்பையா அண்ணனின் மாடுகளுக்கு வயல்விதைப்புக் காலங்களில் நல்ல மவுசு" என்று எல்லோரும் கூற வேலாயுதம் அண்ணன் கேட்டிருக்கிறார்.

அந்த எருதுகளைத்தான் முள்ளுக்கலப்பை அடிப்பதற்கு வயலை நோக்கி வேலாயுதம் அண்ணன் கொண்டுசென்றார். முன்பும் பலதடவைகள் சுப்பையா அண்ணனின் எருதுகளை வயலில் முள்ளுக்கலப்பை அடிப்பதற்கு அவர் பயன்படுத்தியிருந்ததனால் அந்த எருதுகள் அவருக்கு நன்கு பழக்கமாயிருந்தன.

சென்னி தங்களது வீட்டுக் கிணற்றடியில் தரையில் அமைக்கப் பட்டிருந்த ஆறடிக்கு மூன்றடி அளவிலான தாங்கியில் விதைப்பதற்குத் தேவையான பத்து மூடை விதைநெல்லினை ஊறப்போட்டிருந்தான்.

அப்பாவும் அவனும் நாலுமணிக்கே எழுந்து வக்கின் மேலால் மிதந்து கொண்டிருக்கும் பதக்கடை(பதர்) எல்லாவற்றையும் கைகளால் எடுத்து எடுத்து வெளியே போட்டனர். பதரை இயலுமானவரை வடித்து விட்டு விதைநெல்லினை பச்சைக்கோட்டுச் சாக்குகளில் அரைப்பங்கிற்கு மாத்திரமே நிரப்பினர். முழுமையாக நிரப்பினால் ஈரத்துடன் நிறை அதிகமாக இருப்பதால் தூக்குவது சிக்கல்.

ஆறு மணியாகும்போது விதைநெல்லினை மாட்டுவண்டிவில் இருவருமாக ஏற்றினர். விதைநெல்லினை ஏற்றிக்கொண்டு மயில்வாகனத்தார் வட்டத்தனை நோக்கிப்புறப்பட்டார்.

மகிழ்சென்னி தனது ஈருருளியில் தொண்ணீற்றியொன்பதாம் கட்டையிலிருக்கும் லத்தீப்பின் வெதுப்பகத்தில் காலை உணவிற்காக பாண் வாங்கி வந்தான்.

வீட்டில் சமைத்து வைத்திருந்த பருப்பு ஆணத்தை பானையில் ஊற்றிக்கொண்டு தேங்காய்ப்பூச் சம்பலையும் எடுத்துக்கொண்டு வட்டத்தனை நோக்கிப்புறப்பட்டான்.

மாக்கைத்திடலில் சுப்பையான அண்ணன் வீட்டில் தனது ஈருருளியை வைத்துவிட்டு மாக்கையாற்றினைக் கடந்து வட்டதனை வயல் நோக்கி நடந்தான்.

வள்ளிவயலில் கொக்குகள் கூட்டம் கூட்டமாக நின்று தங்கள் உணவிற்காக அங்குமிங்கும் நடந்து நடந்து வரவையினுள் கிடக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச்சி புழுக்களை கொத்திக் கொத்தி தமது சொண்டினூடாக வயிற்றுக்கு அனுப்பிக் கொண்டிருந்தன.

வள்ளிவயல் ஆறு ஏக்கர். கோணேசர் கோவிலின்சொத்து. கோயில்வயல் கூறுகின்றபோது யார் கூடுதலான தொகைக்கு கூறுகின் றார்களோ அவர்களே அந்தப் போகத்தில் வள்ளிவயலின் உரிமையாளர்கள். ஓர் ஆண்டில் கோணேசர் கோயில்வயல்கள் இரண்டு தடவைகள் ஏலத்தில் விடப்படும். கொழும்பிலிருந்து நம்பிக்கை நிதியப் பொறுப்பாளர் சபையி லிருந்து வருபவர்கள் ஏலத்தினை மேற்பார்வை செய்து நடத்துவார்கள். ஏலத்தின் மூலமாகக் கிடைக்கும் பணம் முழுவதையும் வைப்பகத்தில் கோணேசர்கோவிலின் கணக்கில் வைப்பிலிடுவார்கள். கோயில் தேவைக்கு அவ்வப்போது அவர்களின் அனுமதியுடன் பணத்தைப் பெற்றுச் செலவிடுவார்கள்.

இவையெல்லாம் சின்னத்தம்பி சென்னி சிறுவயதாக இருக்கும் போது சொல்லிக் கொடுத்தவை. வயலுக்குச் செல்லும்போது சென்னி பள்ளிக்குச் செல்லாது வீட்டில் நின்றால் தன்னுடன் அழைத்துச் செல்வான். அவ்வாறு ஒருநாள் செல்லுகின்றபோது மாக்கையாற்றிலிருந்து வட்டத்தனை செல்லும் வரையுள்ள வயல் விபரங்களை சென்னிக்குச் சொல்ல வேணடியதாகிவிட்டது. சென்னி தன் வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்கமாட்டான்.

"ஏன் மாமா அந்தக் கொக்குகள் எல்லாம் ஒண்டா நிக்குதுகள்?"

"ஏன் மாமா மாக்கயில இருந்து வட்டத்தன வரைக்கும் வரம்பால நடந்து போறம். ஆத்தருகால ஒரு தெருவப்போட்டா நாம ஈருருளியில அங்கவரைக்கும் போகலாம் தானே"

"மாமா இந்த வயல்கள் எல்லாத்துக்கும் வேலுப்பிள்ள ஐயாதான் சொந்தக்காரனா?"

"மாமா இதென்ன இடைக்கிடை ஆத்துக்குள்ள 'ப' போல ரெண்டு பக்கமும் கட்டியிருக்கிறாங்க"

"மாக்கையில இருந்து வட்டத்தன வரைக்கும் ஓடுற இந்த ஆத்துக்கு என்ன பேர்.... மாமா?

இப்படி எண்ணற்ற கேள்விகளை மாமாவின் பின்னால் ஓடியோடி கேட்டுக் கொண்டே வருவான் சென்னி. மாமாவும் மருமகனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகளுக்கு ஒன்றுவிடாது பதில் சொல்லிக் கொண்டுதான் செல்வார். ஒரு நாளேனும் மருமகன் கேள்வி கேட்டபோது கோபப்படவோ அவன் மீது சினந்துவிளவோ இல்லை சின்னத்தம்பி.

"பொடியா...இந்த வயலக்குப் பேர் குடும்பியன் வயல். இதில மூணுஏக்கர் இருக்கு. நடுப்பிரப்பன்திடல்ல இருக்கிற தம்பையா அதிபர் ஆக்கள்றதுதான் இந்த வயல்"

"இந்த வயலுக்குள்ளதானே ஒரேகொக்குகள் கிடக்கு. அவங்க அதுகளுக்கு இந்த வயல்ல தீனிபோட்டு வச்சிருக்கிறாங்களோ"

"இருக்கும் போல...இது பண்டாரிமோடு. தொழும்பு வயல். அஞ்சுஏக்கர் இருக்கு. கோணேசர் கோயில்ல திருவிழா காலத்தில தீவட்டி பிடிக்கும் தொழும்பு செய்யிற ஆக்களுக்கு செய்யிறதுக்கு குடுத்திருக்கு. குளக்கோட்டன் எழுதி வச்சதாம் எண்டு சொல்றாங்க"

"தொழும்பு ஆக்களுக்கு வேலயில்ல எண்டு நீங்க அண்டைக்கு பேசினீங்களே மாமா"

"கோயில வச்சிப் பிழைக்கிறாங்க பொடியா. சும்மா கையாட்டுற துக்கும், காலாட்டுறதுக்கும் எண்டு வயலக் குடுக்கிறாங்க. கேட்டாத் தொழும்பாம். எத்தனயோ சனம் வயல் செய்ய வயல் இல்லாம இருக்குதுகள்."

"அவங்களுக்கு சம்பளத்தக் குடுக்கிறதுதானே மாமா. ஏன் வயலக் குடுக்கிறாங்க."

"நீ சொல்றது சரி. உனக்கு இந்த சின்ன வயசில விளங்கிறது இந்தப் பெரிய ஆக்களுக்கு விளங்குதில்லயே. சரி அத விடு. அதுநமக்குத் தேவயில்லா கத. அதக் கதைக்கிறதால ஒண்டும் நடக்காது. இதில இருந்து நந்தியின்நாலுவரவ தொடங்குது. இது அரைஏக்கர்தான். இது கோயில் வயல். இதுக்குப் பக்கத்தோட இருக்கிறது சின்னஒண்ணரைஏக்கர் வயல். இதில ஒண்டரஏக்கர் இருக்கு. இதுவும் கோயில் வயல்தான்"

"என்ன இது அரைஏக்கர், ஒண்றஏக்கர் எண்டு சின்னச் சின்ன வயலா இருக்கு"

"ம்... சில வயல்கள் அப்பிடித்தான். இது தான் பொட்டிவயல். பொக்குறுணியில இருக்கிற சின்னத்தம்பி' அண்ணன்ர வயல் இது. இதுவும் ஒண்டரை ஏக்கர்தான் பொடியா."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ. பொக்குறுணியிலயும் சின்னத்தமபி இருக்கிறார் என. அங்க பாருங்க....என்ன மாமா அது கறுப்பா பிரப்பம் பத்தக்குள் ஓடிப்போய் பூருதுகள்?"

"அதுவா.... அதுதான் கானாங்கோழி. கானாங்கோழி இறைச்சி நல்ல சுவையா இருக்கும். ஒருநர்ளைக்கு அடிச்சு ஆக்குவம். சாப்பிட்டுப்பார். பொட்டிவயல் முடியிற இடத்தில இருந்து செந்தமிழன்கீத்து தொடங்குது. ரெண்டரைஏக்கர் வயல் அது. நல்லா விளையிற வயல்இது. இதுவும் கோயில் வயல்தான்"

"அப்ப கோயிலுக்கு தம்பலகமத்தில அரைவாசி வயல் வரும் போல கிடக்கு"

"ம்..கிட்டத்தட்ட நானூறு ஏக்கர் எண்டாலும் வரும். ஏலத்தில எப்படியும் முந்நூறு ஏக்கர் கூறுவாங்க. நூற்றியஞ்சு ஏக்கர் தொழும்பு செய்யிறவங்களுக்கு இருக்காம்."

"அம்மாடியோவ்... நூறு ஏக்கருக்கு மேல தொழும்பாக்களுக்கா?..... இனி வட்டத்தனை வரைக்கும் கோயில் வயல்தானா மாமா?"

"இல்ல செந்தமிழன்கீத்து முடியிற இடத்தில இருந்து விதானை யாற்ற வயல் தொடங்குது. மொத்தமா கிட்டத்தட்ட பதினாலு ஏக்கர் எண்டு சொல்றாங்க. அழகி வயல்ல தொடங்கி கொம்பனார்மேட்டுத்திடல் வரைக்கும் அவற்றது தான்."

"முள்ளியடியில் அரிசிஆலை வச்சிருக்கிற விதானையாற்றதா மாமா?"

"ஓம். அவற்றதுதான். அவர்தான் தம்பலகமம் பல நோக்குச் கூட்டுறவுச் சங்கத்திர முதலாவது தலைவராகவும் இருந்தவர். எப்பயும் வெள்ள வேட்டியும் வெள்ளை மேலங்கியும்தான் போட்டிருப்பாராம் எண்டு சொல்லுவாங்க. நல்ல மனுசன் எண்டு தம்பலகமத்தில பேர் எடுத்த ஆள் தம்பி அவர்."

"அதுக்கு அடுத்தது வயல்தான் வட்டத்தனையென...மாமா"

"ம்... வட்டத்தன வயல் முப்பத்திரெண்டு ஏக்கர். பட்டிமேட்டு வேலுப்பிள்ளைத்தலைவரும் கள்ளிமேட்டு மகாலிங்கத்தாரும்தான் எல்லாத்தையும் பாத்துக்கொள்றாங்க. வட்டத்தனவயல் சொந்தக்காரங்க யாழ்ப்பாணத்தில இருக்கிறாங்களாம். அதிலதான் வேலுப்பிள்ளஅண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கும் செய்யிறதுக்கு தந்திருக்கிறார்."

"இஞ்ச இருக்கிற எல்லா வயல்ற பேரும் உங்களுக்கு அத்துப்படி என மாமா..?

மருமகனின் கேள்வி மாமாவிற்கு மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுத்து கொடுப்பினுள் சிரிப்பை வரவழைத்தது. மருமகனின் அறியும் ஆற்றலை எண்ணி மனதுள் மகிழ்ந்து சிரித்தான் சின்னத்தம்பி.

'மருமகன் நல்ல கெட்டிக்காரனா' வருவான் என மனதினுள் வாழ்த்தினார். மருமகன் கேட்ட இன்னொரு கேள்விக்குப் பதிலளிக்க ஆயத்தமானார் மாமா.

'இந்த ஆறு, மாக்கயில இருந்து வட்டத்தன வரைக்கும் போகல்லத் தம்பி"

"அப்ப..."

"கந்தளாய்க் குளத்தில இருந்து வாற தண்ணி பொத்தானயில இருந்து குடமுருட்டிவெளிக்கு இஞ்சாலப் பக்கம் வாறதுக்கு இருக்கிற ஆத்துக்குப் பேர் பேராறு. கிட்டத்தட்ட மூண்டரை கிலோமீற்றர் நீளம்வரும். இந்த ஆறு சிவப்புப் பாலத்துக் கிட்டப்போய் முடியுது. மேலதிகமா வாற தண்ணியும் வடிச்சல்த் தண்ணியும் சிவத்தப்பாலத்து ஆத்தில சேந்து கடலுக்குப் போகுது. குடமுருட்டிப் பாலத்தாலயும் போய் அங்காலப் பக்கம் இருக்கிற வயலுக்கும் தண்ணி போகுது. குடமுருட்டிவெளி முழுதுக்கும் இந்த ஆத்தாலதான் பொடியா தண்ணி பாயுது."

"தம்பி ஆத்துக்க என்ன 'ப மாதிரி கட்டியிருக்கு எண்டு அண்டைக்கு கேட்டனியல்லவா? அது கன்னாவரம் எண்டு சொன்னனான்தானே. இண்டைக்கு கன்னாவரம் கட்டப்போறம். வயலுக்கு நீயும்வாறியா?"

"இண்டைக்கு சனிக்கிழமதானே, பள்ளி இல்ல. நானும் வாறன். என்ன விட்டிற்றுப் போயிடாதீங்க மாமா. அம்மாட்ட சொல்லுங்க. நீங்க சொன்னாத்தான் விடுவா" மாமாவிடம் கெஞ்சினான்.

தன் அக்காச்சியிடம் அனுமதி பெற்று சென்னியையும் மாட்டு வண்டியில் வயலுக்கு அழைத்துச் சென்றான். வண்டிலில் பத்தடிநீளமான தென்னங்குற்றியொன்றும் காட்டில் வெட்டி வந்த கதியால் கம்புகளும் வரிச்சுகளும் பனையோலைகளும் ஏற்றப்பட்டிருந்தன. அவற்றின் மேல் ஏறியிருந்தான் சென்னி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டத்தனை வயலுக்கருகில் உள்ள ஆற்றில் முகவணையடியில் வண்டிலை நிறுத்தி வந்தவற்றை வண்டிலிலிருந்து மாமாவும் கூலி வேலைக்கென வர்ணமேட்டிலிருந்து அழைத்து வரப்பட்ட தில்லையம்பல மும் இறக்கினார்கள்.

ஆற்றினை மறித்து நீரை வயலுக்குப் பாய்ச்சுவதற்கு ஆற்றினை மறிப்பதனையே கன்னாவரம் கட்டுதல் என்று தம்பலகமத்தில் அழைக்கிறார்கள். ஆற்றினை முழுமையாக மறிக்கமாட்டார்கள். ஆறு ஒடுங்கியிருக்கும் இடமாகப்பார்த்து கன்னாவரம் கட்டுவார்கள்.

கன்னாவரம் கட்டும் இடத்தில் இருமருங்கிலும் 'ப' வடிவில் கதியால்களை நடுமாறு தில்லையம்பலத்திடம் சின்னத்தம்பி சொன்னான். நான்கடி இடைவெளி இருக்கும் வகையில் தரையிலிருந்து மூன்றடி ஆற்றுப்பக்கம் வரை கதியால்களை நட்டான் அவன். பின்னர் இரண்டு முனைகளையும் இணைக்கும் வகையில் கதியால்களை நட்டான்.

கதியால்களை ஒன்றுடனொன்றினைப் பிணைத்து குறுக்காக மெல்லிய வரிச்சுகளை வைத்து கயிற்றினால் சின்னத்தம்பி வரிந்தான்.

இவ்வாறு ஆற்றின் மறுபக்கமும் சரியாக நேர்எதிராக 'ப' வடிவில் கதியால்களை நடும்படி தில்லையம்பலத்திடம் சொன்னான். ஆற்றிற்கு எதிர்ப்பக்கமாக 'ப' வடிவில் கதியால்களை நட்டான் அவன்.

வண்டிலிற்கு அருகில் கிடந்த கதியால்களை சென்னி இரண்டி ரண்டாகக் கொண்டு வந்து கொடுத்தான். ஒன்றரை மணிநேரத்தில் இரண்டு 'ப' வடிவங்களையும் கட்டி முடித்தார்கள். வீட்டிலிருந்து கொண்டு வந்த சுடுநீர்ப் போத்தலில் உள்ள தேநீரை மூன்று குவளைகளில் ஊற்றிக் கொடுத்தான் சின்னத்தம்பி. 'ஆவன்னா' கடையில் வாங்கி வந்த றசுக்குகளை யும் ஒருவருக்கு மூன்று என்ற வகையில் ஒவ்வொருவருக்கும் கொடுத்தான்.

தேநீரைக் குடித்து முடித்த பின் திடலான வரவையிலிருக்கும் மண்ணை வெட்டிக் கொண்டு வந்து பழைய சாக்குகளில் நிரப்பும்படி தில்லையம்பலத்திடம் கூறினான் சின்னத்தம்பி.

மண்வெட்டியால் வெட்டிய மண்ணை பிரம்பினால் செய்யப்பட்ட கூடையில் போட்டு கன்னாவரம் கட்டுகின்ற இடத்திற்கு அருகில் கொண்டு வந்துபோட்டான். அதற்குச் சின்னத்தம்பியும் உதவினான்.

போட்டமண்ணை பழையசாக்குகளில் இருவருமாக நிரப்பினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்நிரப்பப்பட்ட சாக்குகளை 'ப' வடிவ அமைப்பின் மேல்மட்டம் வரைக்கும் போட்டார்கள். வயலின் உயரத்தைவிட ஓரடி உயரமாகும் வரை மண்சாக்குகளைப் போட்டார்கள்.

சென்னியை அருகில் அழைத்து "இதனைத்தான் கன்னாவரக்கட்டு என்று சொல்றது சரியா" என்றான் மாமா. புரிந்துவிட்டது என்பதற்கு அடையாளமாக இருபுறமும் பக்கவாட்டாகத் தலையாட்டினான் மருமகன்.

இரு மருங்கிலும் உள்ள 'ப' அமைப்பிற்கு இடையிலுள்ள இடைவெளி ஏறத்தாள எட்டடியளவில் இருந்தது. அந்த இடைவெளி யினால்தான் மாட்டு வண்டில்கள் பயணிக்க வேண்டும். அந்த ஆற்றின் நடுப்பகுதியினாலேயே மாட்டு வண்டில்கள் செல்வது வழமை.

"தென்னங்குற்றியும் இந்தப் பனை ஓலைகளும் என்னத்துக்கு மாமா?"

"வயலுக்கு தண்ணீர் பாய்ச்சக்கொள்ள கன்னாவரக் கட்டுகள்ற முன்பக்கமாக தென்னங்குற்றியப் போட்டு இந்தப் பனையோலைகளை நிலைக்குத்தாக அடியில தலைகீழாவும் பிறது மாறியும் வச்சு ஆத்துக்குள்ள நாட்டுவம். தண்ணி அந்த ஆத்துக்குள்ளால கன்னாவரத்த தாண்டி மற்றப் பக்கமாக போக ஏலாதமாரி நல்லா பனையோலையால அடைப்பம். அப்ப தண்ணி கன்னாரவத்தடியில் சுரக்கும். பிறகு சுரக்கிற தண்ணி மேல எழும்பி ஒவ்வொரு வரவயா வயலுக்குள்ள பாயும்."

மாமா தெளிவுபடுத்த காது கொடுத்து அவதானமாகக் கேட்டுப் புரிந்துகொண்டான் மருமகன் சென்னி.

"ஒவ்வொரு ஆண்டும் கன்னாவரம் கட்டணுமா மாமா?"

"இல்லடா பொடியா. கன்னாவரக்கட்டில இருக்கிறகதியால், வரிச்சு, கட்டடியிருக்கிறகயிறு எல்லாம் இத்துப் போகும் வரைக்கும் புதுசா கன்னாவரக்கட்டு கட்டுறதில்ல. எப்படியும் அதுகள் இத்துப்போக நாலு இல்லாட்டி அஞ்சு ஆண்டுகள் ஆகும். அதுக்குப் புறகுதான் திரும்பியும் கட்டுவம்"

"அப்ப நல்ல உறுதியாத்தான் கட்டுவீங்க போல என மாமா"

மாமா சிரித்துக்கொண்டே "நல்லா கேள்வி கேட்கிறாடா பொடியா" எனக் கூற மருமகனும் சிரித்தான்.

"மாமா இந்த ஆத்தில தண்ணி கூட வந்தா ஆத்துக்குள்ளால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பிடி மாமா வண்டில் போகும்? போக ஏலாம போயிருமே"

"அப்பிடியும் நடக்கிறதுதான். மாரி காலத்தில மழை பெஞ்சு வெள்ளம் வரக்கொள்ள ஆத்தில எப்பிடியும் நெஞ்சளவுக்கு தண்ணி போகும். அந்த நேரத்தில வண்டில் கொண்டு போக ஏலாது. ஒருமுறை இப்பிடித்தான் நாங்க வெள்ளாம வெட்டி சூடடிச்சு முடிய மழை பிடிச்சிற்று. மழை விடவேயில்ல. எல்லா இடமும் வெள்ளம். ஆத்தால வண்டில் போகேலாமப் போயிற்று. சூடடிச்ச நெல்ல ஏத்தேலாம வைக்கலால நெல்ல மூடிற்று கிட்டத்தட்ட ஒரு மாதமா களத்தில வச்சிற்றுக் கிடந்திருக்கிறம் எண்டாப்பாரன்"

"இப்பிடியே ஒரே ஆத்துக்குள்ளால போக ஏலுமா மாமா?

"போகேலாது தான். என்ன செய்யிறது? அதுக்காண்டித்தான் நான் ஒரு முயற்சி எடுத்தன். போனஆண்டு மாக்க ஆத்தடியில் இருந்து வட்டத்தன வரைக்கும் இருக்கிற எல்லா வயல்கார ஆக்களயும் கூப்பிட்டுக் கதைச்சனான் பொடியா. ஆத்தருகால எல்லாரும் பத்தடி காணிய விட்டுத் தந்தா ஒரு வழிய உருவாக்கிரலாம். பிறகு அந்த வழியால எல்லாருமே வண்டில் கொண்டு போகலாம். ஆத்துக்குள்ளால போகத் தேவையில்ல எண்டு யோசனை சொன்னன். எல்லாரும் நல்ல யோசனை எண்டுதான் சொன்னாங்க. கோயில் காராக்கள் மட்டும் கோயில் நிருவாகத்திட்ட கேட்டுட்டுச் சொல்றமே எண்டு போனவங்க தான். இன்னும் முடிவு சொல்லல்ல பொடியா"

"அப்ப நீங்களும் சரியான வேலதான் செய்திருக்கீங்க என மாமா?"

மாமா மீண்டும் மருமகனின் கேள்வியினால் புன்னகைத்தார்.

"வயலுக்கு தண்ணி கட்டக்கொள்ள வண்டில் வந்தா என்னெண்டு மாமா போவாங்க"

"நீயும் என்ன துளைச்சு எடுக்கிற எண்டுதான் இருக்கா போல என. அநேகமா தண்ணிகட்டுற நேரத்தில வண்டில் கொண்டு வரமாட்டாங்க. அவசரம் எண்டா மட்டும்தான் வண்டில கொண்டு வருவாங்க. அப்பிடி வரக்கொள்ள கன்னாவரம் மறிச்சத எடுத்துவிட வேணும். வேற வழியில்லயே. வண்டில்கார ஆக்களும் வந்து எடுத்து விட்டிற்று வண்டில் அங்காலப் பக்கம் வந்தோண அவங்களும் சேந்து மறிச்சுக் குடுத்திற்றுத்தான் போவாங்க. அதுதான் நடமுற."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வயல்காராக்கள் எல்லாரிட்டயும் நல்ல புரிந்துணர்வு இருக்கு என மாமா"

இந்த வயதிலும் புரிந்துணர்வு பற்றி மருமகன் கதைக்கிறானே என எண்ணி மருமகனின் வார்த்தைகளால் மகிழ்ந்த மாமா மனதுள் சிரித்தார்.

"இஞ்ச இருந்து வண்டில் வரக்கொள்ள அங்க இருந்தும் வண்டில் வந்தா என்ன செய்வாங்க மாமா?"

"ஆத்துல இடைக்கிடை பார். சில இடங்கள்ல ஆறு அகலமா இருக்கு. அந்த இடத்தில ரெண்டு வண்டிலும் ஒண்டையொன்டு முந்திக் கொள்ளும். ஒடுக்கமான இடத்தில வரக்கொள்ளயே வண்டில கண்டு ருவாங்க. வெளிதானே. அதால சிக்கல் இல்ல."

"ஏன் மாமா வயல்வெளியில ஒரு மரத்தையும் காணல. மரம் இருந்தா நிழலுக்குள்ள இருந்து சாப்பிடலாம்தானே"

"உனக்கு எப்பயுமே சாப்பிடுற எண்ணம்தான். மரம் இருந்தா நிழல்மட்டும் வராது. குருவியெல்லாம் வந்து அதிலதான் இருக்கும். நெல் பால்பிடிக்கிற நேரத்தில தினையான் குருவிகள்ற அட்டகாசம் தாங்கேலா. மரம் இருந்தா தினையானெல்லாம் அந்தமரத்திலதான் இருக்கும். பிறகு வயல் செய்து வெட்டினமாரித்தான்."

வட்டத்தனையில் சுப்பையா அண்ணனின் கருந்தோல் மாடுகளை முள்ளுக் கலப்பையில் பூட்டி ஒவ்வொரு வரவையாகச் சமப்படுத்தி வர, வரவையின் உயரமான பகுதியிலிருந்து சற்று தாழ்வான பக்கத்தினை நோக்கி வரவையினுள் தங்கியிருக்கும் நீர் வழிந்தோடக்கூடியவாறு வாய்க்கால் போன்று மண்வெட்டியினால் அமைத்தார் வேலுச்சாமி அண்ணன். இதனை தம்பலகமத்தில் அளப்போடுதல் என அழைக்கிறார்கள். அளப்போடுவது ஒரு கலை. விரைவாகவும் சரியாகவும் கண் மதிப்பம் தெரிந்தவர்களால் மாத்திரமே போட முடியும்.

அள போடப்பட்ட வரவையினுள் அங்காங்கு சமனில்லாத இடங்களையும் அளப்போட்ட அருகிலிருக்கும் மண்ணையும் தங்களது காலால் தட்டி சமப்படுத்தினார்கள் ஏனைய நால்வரும். இதனை 'காலாவுதல்' என்று அழைக்கின்றார்கள்.

காலாவிய வரவையினுள் சென்னியின் அப்பா மயில்வாகனத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்கிலிருந்த விதைநெல்லை குட்டானுக்குள் எடுத்துக்கொடுக்க வேலாயுதம் அண்ணன் விதைநெல்லினை விதைத்தார். நெல்லினை எல்லோராலும் விதைக்க முடியாது. எல்லாவிடமும் நெல் சமமானஅளவில் விழவேண்டும். அப்போதுதான் நெல் அளவான இடைவெளிகளில் முளைத்து அதிக விளைச்சலைத்தரும். நெருங்கியிருந்தால் குட்டிவெடிப்பது குறைவாகி விளைச்சல்குறையும். நன்கு பயிற்றப்பட்டவர்களால்தான் நெல்லினை விதைக்கமுடியும். வேலாயுதம் அண்ணன் நெல்விதைப்பதில் விண்ணன் என்று பெயரெடுத்தவர்.

இரண்டு நாட்களில் வயல் முழுமையாக விதைத்து முடிந்து விட்டது. வேலை செய்த நாட்களுக்கான கூலியைக் கணக்குப்பார்த்து அதற்கான பணத்தைக் கொடுத்தார் மயில்வாகனத்தார்.

ஒவ்வொருநாள் காலையிலும் மயில்வாகனத்தாரும் சென்னியும் ஆள்மாறியாள் புறாக்காவல் பார்த்தார்கள். இவ்வாறு ஏழுநாட்களுக்கு விதைத்த வயலில் கிடந்த நெல்மணிகளைப் புறா தனது உணவிற்காகப் பொறுக்காமல் காவல்ப்பார்க்க வேண்டியதாகிவிட்டது.

மூன்று நாட்களிலேயே பயிர்கள் பச்சையாக துளிர்விடத் தொடங்கியது. புறாக்காவலுக்கு செல்லும் சென்னி பயிர்களின் அழகை இரசித்தான். கதிர்காமத்தில் உள்ள கந்தனுக்கு நேர்த்தி வைத்து மொட்டை யடித்த தலையில் மயிர்கள் முளைப்பது போன்று ஒரே உயரத்தில் அனைத்து நெற்பயிர்களும் வளர்ந்திருந்தன. ஏழாவதுநாளில் வயல் முழுவதும் பச்சைப்பாய் விரித்ததுபோல் அழகாக இருந்ததனை சென்னி இரசித்தான்..

காலையில் சூரியன் வருவதற்கு முன்பே சென்னி வயலுக்குச் சென்றுவிடுவான். ஒவ்வொரு நெற்பயிர்களின் நுனியிலும் பனித்துளிகள் பந்துகள்போல் குந்தியிருக்கும். தண்மை நிறைந்த காலையில் சூரியக்கதிர்கள் நுனிப்புல்லிலிருக்கும் பனித்துளியில் படுகின்றபோது அதன் ஒளிக்கதிர்கள் வெவ்வேறு பக்கமாகத் தெறிக்கும். இரவில் பாரியநகரங்களில் மின்குமிழ்கள் ஒரே நேரத்தில் ஒளிரவிடுவது போன்று மினுங்கும். அந்த அழகில் தன் மனதைப் பறிகொடுப்பான். மாமா சின்னத்தம்பியின் நினைவுகளும் அந்த வேளையில் வந்து தொலைக்கும். கண்களின் ஓரத்திலே கண்ணீர் சுரப்பதை அவனால் தடுக்க முடிவதில்லை. சென்னியின் ஒவ்வொரு செயற்பாடு களிலும் சின்னத்தம்பியின் தாக்கம் இருந்தமையே அதற்கான கரணீயம்.

ஏழாம்நாள் பயிர்களுக்கு நீர் பாய்ச்சவேண்டும். அந்த முதலாவது நீர்பாய்ச்சுதலை "கங்களவு தண்ணி கட்டுதல்" என்று தம்பலகமத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பார்கள். அப்பாவும் மகனுமாக கன்னாவரத்தை மறித்து நீர் பாச்சினார்கள்.

ஏழு நாட்களாக நீரின்றி வாடிய பயிர்கள் ஆற்றுநீரைக் கண்டு தலைநிமிர்த்தி மகிழும். அந்தப் பயிர்களின் மாலைநேரத் தோற்றம் சென்னிக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

வரம்புகளின் சிலஇடங்களை வயல்களில் உள்ள சிறியநண்டுகள் வரம்பின் ஒரு பக்கத்திலிருந்து அடுத்த பக்கத்திற்கு சிறிய துளைபோட்டு விடும். அந்த துளையூடாக நீர் செல்லச்செல்ல அந்தத்துளை பெரிய துளையாகிவிடும். மேற்பக்கமுள்ள வரவையிலுள்ள நீர் அடுத்தநாள் கீழ்ப் பகுதியில் உள்ள வரவைக்குள் சென்றுவிடும். அவ்வாறான துளைகளை "உமை" என்று அழைப்பார்கள்.

வயலுக்கு தண்ணீர்பாய்ச்சும் போது ஒவ்வொரு வரவையிலுள்ள வரம்புகளையும் கவனமாகப் பார்த்துப்பார்த்து நீரைப் பாய்ச்சினான் சென்னி. உமைகளைக் காணும்போது அதனை கால் பெருவிரலால் அமத்தி அடைத்தான். பெரிய உமையாக இருந்தால் மண்வெட்டியால் அந்தவிடத்தில் கொத்தி மண்ணைப் போட்டு உமையினை அடைத்தான்.

"நண்டுகளின் அட்டகாசம் தாங்கேலா" என சிலவேளைகளில் சின்னத்தம்பிமாமா அலுத்துக்கொள்வதுமுண்டு. உமைகளை மாமா அடைத்தவிட்டு கன்னாவரத்தடியில் வந்திருந்து ஒரு பாடலை வாயில் முணுமுணுப்பார். நாட்டுப்புற மெட்டில் இனிமையாக இருக்கும் அந்தப்பாடல். சென்னிக்கு அந்தப்பாட்டு நினைவில் இப்பவும் இருக்கிறது.

சென்னியும் சிலவேளைகளில் வரம்பில் நடந்து வருகின்றபோது இப்போதும் பாடுவது உண்டு.

சிறுநண்டு சிறுகாலால் பொந்தொண்டு தோண்டும்
நீரலைகள் அதைவந்து மண்கொண்டு மூடும்
ஓயாது உமைகாணா அயராத நண்டும்
விரலதனால் மூடிருவான் கமக்காரன் கண்டு

அலுக்காத நண்டதுவும் உமையதனைத் தோண்டும்
அம்மாடி கமக்காரன் கண்டிருவான் மீண்டும்
காத்திருந்து கண்விழித்து மண்ணதனைத் தோண்டும்
மண்வெட்டி கொண்டதனை மூடிருவான் மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்பினிலே நீர்மட்டம் குறைவதனைக் கண்டால்
வம்பானா நண்டதையும் பொந்தினிலே கண்டால்
வசமாக மாட்டிவிடும் கமக்காரன் கையில்
வாழ்வதுவும் முடிந்துவிடும் கமக்காரன் கையால்.

இரவு முழுவதும் கண்விழித்து கன்னாவரத்தடியில் காவலிருந்து கங்களவு தண்ணீரை அப்பாவும் மகனுமாகச் சேர்ந்து பாய்ச்சினார்கள். கங்களவு தண்ணீர் சரியான நேரத்தில் பாய்ச்சவேண்டும் என மாமா சொல்லியிருக்கிறார் சென்னிக்கு. "தாமதமாகினால் பயிரின் அடி பெருக்காது. பெருக்காவிட்டால் குட்டிவெடிக்கும் அளவு குறையும். குட்டிவெடிப்பது குறைந்தால் விளைச்சல் குறையும்" என விளங்கப்படுத்துவார். தற்போதுதான் அவனுக்கு மாமாகூறியது எவ்வளவு உண்மை என்பதனை புரிந்து கொண்டுள்ளான்.

களைகளைக் கட்டுப்படுத்த களைநாசினி இம்முறை பயன்படுத்துவதில்லை என்று சென்னி முடிவெடுத்து விட்டான். "எண்ண அடிக்கிறதாலயும் பசள போடுறதாலயும் நம்மட வயல்கள்தான் நஞ்சாகுது. அதோட நாமளும் நஞ்சத் திண்றதோட மற்ற ஆக்களுக்கும் நஞ்சக் குடுக்கிறம்" என மாமா சின்னத்தம்பி கவலையுடன் வயலில் களைநாசிகள், கிருமிநாசினிகள், உரம் என்பவற்றை வயலில் பயன்படுத்தும் போது அடிக்கடி கூறும் வார்த்தைகள் அவை.

"ஏன் நாமளும் அத தொடரோணும். களைகளையாவது பிடுங்குவமே. விவசாயத்திணைக்களமும் களைபிடுங்கிறதால விளைச்சலும் கூடும் எண்டுதானே சொல்றாங்க" என எண்ணியவன் கல்மெட்டியா சென்று சிங்களப் பெண்களைக் 'களை' பிடுங்குவதற்கு அழைத்து வந்தான். "சிங்களப் பெண்கள்தான் களை பிடுங்குதல் போன்ற வேலைகளுக்கு பொருத்தமானவர்கள்" என அவன் நினைத்தான்.

ஐம்பத்திரண்டாம் ஆண்டளவில் தம்பலகமத்தில் கல்மெட்டியா வடக்கு, கலமெட்டியா தெற்கு ஆகிய இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் மாத்தளை, மாத்தறைப் பகுதிகளில் உள்ள ஏழ்மை நிலையிலிருந்த சிங்கள மக்களைக் குடியேற்றி அங்கிருந்த உள்பத்தைக்குளத்தையும் தூர்வாரிக் கொடுத்து அதன்மூலம் நீர்பாய்ச்சி வயல் செய்வதற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் மூன்றுஏக்கர் வயல்நிலங்களையும் அவர்களுக்கு இலவசமாக உரிமையாக்கியது அரசு. அவர்களது ஏழ்மையினைப் போக்குவதற்காக அங்கு வசிக்கும் பெண்களும் கூலி வேலைகளுக்குச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வார்கள். அதனால் களை பிடுங்குதல், வேளாண்மை நடுதல் போன்ற வேலைகளில் அவர்கள் நுட்பமான திறனுடையவர்களாக இருந்தது என்னவோ உண்மைதான்.

நான்கு பெண்களை அழைத்துவந்து வயலில் களைபிடுங்குவதற்கு விட்டான். அவர்கள் குனிந்து களை பிடுங்கத் தொடங்கினார்கள் என்றால் அந்த வரவை முழுவதுமாக களை பிடிங்கி முடிந்த பின்னர்தான் நிமிருவார்கள். அந்தளவிற்கு களை பிடுங்குவதற்குச் சிறப்புத் தேர்ச்சி அடைந்திருந்தார்கள்.

"நமது பெண்கள புல்லுப்பிடுங்க விட்டா அவங்கட இடுப்பு முறிஞ்சிரும். வயல்ல இருந்து வீட்ட கூட்டிப்போக நாமதான் வண்டில் கொண்டுவர வேண்டியிருக்கும்" என மனதில் எண்ணி தனக்குள் சிரித்துக்கொண்டான் சென்னி.

இரண்டு நாட்களில் வட்டத்தனையில் களைபிடுங்கி முடிந்தது. களைநாசினி பயன்படுத்துவதனை விட ஒருசில நூறுஉருபா அதிகமாக செலவாகியது என்னவோ உண்மைதான். ஆனால் அது விளைச்சல் மூலமாகக் கிடைக்கும் என மனதைத் தேற்றிக்கொண்டான்.

சென்னி 'களை' பிடுங்குவதனைப் பார்த்த பக்கத்து வயல்காரர் களும் களை பிடுங்குவதற்கு விரும்பினார்கள். நால்வரையும் முன்னறிவித்தல் செய்து வைத்தார்கள். "இன்னும் ஆக்கள் ஊரில் இருக்கிறார்கள் தேவையெண்டா சொல்லுங்க கூட்டி வாறம்" என்று அவர்கள் கூறி மேலும் பல பெண்களை களை பிடுங்குதலில் ஈடுபட வைத்தார்கள்.

களை பிடுங்கியதிலிருந்து மூன்றாவது நாளில் பயிர்களில் வேறுபாட்டினை அவதானித்தான் சென்னி. திடகாத்திரமாக நெற்பயிர்கள் இருப்பதைக் கண்டான். அடிப்பகுதி சற்று அகன்று பெருத்திருப்பதோடு அடியிலிருந்து சுற்றிவர சிறிய குட்டிகள் வெடித்திருப்பதையும் கண்டுமகிழ்ந்தான். மாமா சொன்னதும் உண்மைதான் என மாமாவை நினைத்து அவருக்கு நன்றி தெரிவித்தான்.

இரண்டாவது தடவை வயலுக்கு நீர் பாய்ச்சி யூறியாஉரம் போட்டான். பூச்சிகள் விழுந்திருப்பதாக அப்பா கூற முள்ளிப்பொத்தானை சென்று கலீல்ரகுமானின் கடையில் 'பூச்சிகளுக்கு என்ன மருந்து பொருத்தம்' என அவர்களிடம் கேட்டு அவர்கள் கூறிய லங்கெம் தயாரிப்பு கிருமி நாசினியை வாங்கிவந்து அப்பாவும் மகனுமாக வயலில் தெளிகருவி மூலமாத் தெளித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்துக்கடைக்காரர்களே வயலில் உள்ள நோய்களுக்கான மருத்துவர்களாக இருந்தார்கள். மருந்துக்கடைக்காரர்கள் என்ன நாசினிகளைக் கூறுகின்றார்களோ அதுவே கமக்காரர்களுக்கு வேதவாக்காக இருந்தது. விவசாயத் திணைக்களத்தார் என்ன கூறினாலும் அவற்றை கமக்காரர்கள் பெரிதாக கணக்கெடுப்பதில்லை.

மாலை வேளைகளில் அப்பா பட்டிக்குப் போனால் சென்னி வயலுக்குப் போவான். அப்பா வயலுக்குப் போனால் அவன் பட்டிக்குப் போவான்.

வயலுக்குச் சென்று வரம்புகளினால் நடந்துசென்று ஒவ்வொரு வரவையாக உமைகள் இருக்கின்றதா என அவதானித்து அப்படி உமையிருந்தால் அவற்றை அடைப்பான். முழு வயலையும் தன்காலால் நடந்து பார்த்துவருவான். வரவைகளில் நிறைந்து கிடக்கும் நீரில்பட்டு வரும் மாலைநேரத்துத்தென்றல் அவன் தோல்தொட்டு குளிரான சுகம் கொடுத்துச்செல்வதை கண்மூடி இரசித்து அநுபவிப்பான். 'மார்கழி மழைத்தூறல் மயிர்நனையா தூறல்' என்பார்கள். மார்கழித்தூறல் கைகளில் படுகின்றபோது சுகம் எப்படியிருக்குமோ அப்படியான சுகமாக மாலைநேரத் தென்றல்ச்சுகமும் இருந்தது அவனுக்கு.

பால்போன்ற வெள்ளைநிறக் கொக்குகள் தன்வயலின் சில வரவைகளில் உணவுதேடித் திரியும். அந்தக் கொக்குகளை தூரத்திலுள்ள வரம்பிலே நின்று பார்த்து இரசிப்பான். ஆகா... என்ன அழகான கொக்குகள். அவை அவன் மனதைக் கொள்ளையிடும்.

வரம்பிலே நடக்கும் போது வரம்பு அருகிலே நிற்கும் நண்டுக் குஞ்சுகள் தம்மைக் காத்துக் கொள்வதற்கு தலைதெறிக்க ஓடிப்போய் நீரினுள் சென்று வரம்பின் அடிப்பகுதியிலே தான் துளைத்து வைத்திருக்கும் சிறிய பொந்துகளினுள் மறைந்து கொள்வதைப் பார்த்து இரசிப்பான். ஏதோ தன் திறமையினால்தான் ஓடிஒளிந்துகொண்டதாக அவை நினைத்துக் கொள்ளும் போலும். 'சென்னியால் தன்னைப் பிடிக்க முடியாமல் போய்விட்டது' என்று எண்ணி அவனைப் பார்த்து பொந்தினுள்ளிருந்து கிண்டலாகச் சிரித்தும் இருக்கும் அந்த நண்டுக்குஞ்சுகள்.

ஒவ்வொரு உயிரினங்களும் தங்களது உயிரைப் பாதுகாத்துக் கொள்ள எவ்வளவு பாடுபடுகின்றன. அவை அதற்காக தம்உயிர்மீது எவ்வளவு பற்று வைத்திருக்கின்றன என்பதை மனதால் உணருவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவம் வருகின்றார்கள் என்று யாராவது சொன்னால் தம்பலகமத்திலுள்ள ஆண்கள் ஓடுகின்ற ஓட்டம் இருக்கே. அப்பப்பா.... எங்கு ஓடுவதென்று தெரியாமல் தலைதெறிக்க ஓடுவார்கள். எப்படியாவது ஒருவாறு கண்ணாக்காட்டிற்குள் வந்து விடுவார்கள். அந்த நினைவுகளே நண்டுக்குஞ்சுகள் ஓடுவதைப் பார்க்கும்போதும் சென்னிக்கு வந்தது.

சிறிய வயதில் இந்தக் குஞ்சுநண்டுகளைப் பிடித்து பச்சையாகவே சென்னி சுவைத்து உண்டிருக்கிறான். வரம்பிலே இருக்கும் பொந்தினுள் தன்சிறிய கைவிரல்களை நிமிர்த்திப் பிடித்தவாறே உள்ளேவிடுவான். உள்ளேயிருந்து அவனது விரலை கொடுக்குஉள்ள காலினால் நண்டுகடிக்கும். நண்டு கடித்தால் அந்த இடத்திலிருந்து தன்கால்களின் பிடியினை விடாது அந்த நண்டுகள். கடிவாங்கிய வேதனையுடன் பல்லைக்கடித்துக்கொண்டு மெதுவாக கையினை வெளியே இழுப்பான். சிலநேரங்களில் கடித்த வேதனையில் கண்களில் இருந்து கண்ணீர் வந்ததும் உண்டு. கால்களை ஆட்டிஅசைத்துக்கொண்டு ஆடியாடி கையில் ஒட்டிப்பிடித்துக் கொண்டு நண்டுப்பிள்ளையார் வெளியே வருவார். நண்டு துடிப்பதைப் பார்க்க சுருளிராஜன் சில படங்களில் துடிதுடித்து கைகளை உதறுவது போலிக்கும் சென்னிக்கு.

தான் கடித்த வெற்றியில் மகிழ்ந்தே, நண்டு தன்கால்களால் நடனமாடுவதாக எண்ணுவான் சென்னி. கடித்துப் பிடித்திருந்த காலை முதலில் ஒடித்துவிடுவான். அதேகால் போன்று இன்னுமொரு காலும் அடுத்த தொங்கலில் நண்டில் இருக்கும். அதனையும் மற்றைய கையினால் முறித்துவிடுவான். நண்டின் மேல்பகுதியைப் ஒருகையால் பிடித்துக்கொண்டு எல்லாக் கால்களையும் மற்றைய கையால்ப் பிடித்திழுப்பான். நண்டின் கோது ஒரு கையிலும் காலுடனுள்ள சதைப் பகுதி மற்றைய கையிலும் இருக்கும். கால்களை பிய்த்து எறிந்துவிட்டு சதைப் பகுதியை பச்சையாக அப்படியே வாயில் போட்டுச் சப்பிச்சப்பி மொச்சடித்து உண்ணுவான். கடைவாயினால் பால்போன்று வடியும். இடதுகையால் துடைத்துக் கொண்டே சுவைத்து மகிழ்ந்து உண்பான். கடித்த நண்டிற்குத் தண்டனை யாகவே அந்தக்குஞ்சு நண்டை உண்பதாக அவன் எண்ணிக்கொள்வான். தற்போது அதனை நினைத்து மனதுள் சிரித்துக்கொள்வான். அதொரு பொற்காலம் என மனதால் எண்ணுவான்.

வட்டத்தனை விதைத்து ஏறத்தாள நாற்பத்தைந்து நாட்களாகி விட்டன. குடலைப்பருவத்தினை அடைந்திருந்தன வட்டத்தனை வயலில் உள்ள நெற்பயிர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளிப்பொத்தானை சென்று குடலைப்பசளை வாங்கி வந்து அப்பாவும் சென்னியும் சேர்ந்து வயலில் விசிறினார்கள்.

"பயிரப் பாக்கக்கொள்ள நல்ல விளைச்சல் விளையும் போலதான் இருக்கு" அப்பாகூற சென்னி மகிழ்ந்தான். சின்னத்தம்பிமாமா இல்லாது முதற்தடவை வயலைச் செய்கின்றார்கள் அப்பாவும் மகனும்.

பசளை விசிறயபின் ஆற்றுநீரில் கை, கால்களைக் கழுவினார்கள் அப்பாவும் மகனும். "இப்பிடி ஆத்துல கழுவிறது பிழையப்பா. ஓடுறு தண்ணியில இது கலந்து போய் கீழ்ப்பகுதியில குளிக்கிற ஆக்கள்ற மேல்ல போய் ஒட்டும்" என்றான் மகன்.

"இதுதான் போய் ஒட்டப்போகுது என." அப்பா

"இல்ல அப்பா. நாமமட்டும் கழுவிற இல்லயே. எத்தனபேர் கழுவுறம். மருந்து தெளிச்சுப்போட்டு பம்பிய ஆத்துலதானே எல்லாரும் கழுவுறம்"

"நீ சொல்றது சரிதான். அதுக்கு நாம மட்டும் கழுவாம விட்டு என்ன செய்யிறது. அப்பிடயெண்டா எல்லாரும் விடோணும்"

"நாம முதல்ல விடுவமே"

மகன் தன் கருத்தில் உறுதியாக இருக்கிறான். அதைவிட அவன் கூறுவது சரியாகவும் தோன்றியது அப்பாவுக்கு.

கால்களைக் கழுவியபின் ஆற்றுக்கு மேலே ஏறிய போது சென்னியின் காலில் நீர்அட்டை ஒன்று பிடித்திருந்தது. பிரப்பம் பற்றை மறைவில் சென்று தன் சரத்தை உயர்த்தி அட்டை பிடித்திருந்த இடத்தில் மூத்திரம் பெய்தான். அட்டை சுருண்டு விழுந்தது. மாமாவின் மருந்து அது. மாமாவை நினைத்துக்கொண்டான்.

மகிழ்ச்சென்னிக்கு ஏழு வயது நடந்துகொண்டிருந்தது. அப்பாவும் மாவாவும் பொன்னுச்சாமியிரின் வயலில் செங்கல் உற்பத்தி செய்வதற்காக 'கல்' அறுத்துக் கொண்டிருந்தார்கள். கோடையில் பொக்குறுணியில் வயல்கள் செய்வதில்லை. தண்ணீர் பற்றாக்குறையே அதற்கான கரணீயமாகும். பொன்னுச்சாமியரின் வயல் திடலாக இருந்தமையால் யாராவது விரும்பினால் செங்கல் அறுங்கள் என அவர் அப்பகுதி மக்களிடம் கூறியிருந்தார். அந்த வயலில் அப்பாவும் மாமாவும் கல்லறுத்து, சூழைவைத்து, விற்று வருவாயை அதிகரித்துக் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறந்திரி என்ற வடிச்சல் ஆறுவெட்டி ஆண்டொன்றாகி இருந்தது. பொக்குறுணி, புதுக்குடியிருப்பு, பாரதிபுரம், தெலுங்குநகர் போன்ற ஊர்களில் உள்ள பெடியன்கள் அந்தஆற்றில் குளித்து விளையாடு வார்கள். குளிப்பது விளையாட்டு அவர்களுக்கு. மணிக்கணக்காக குளிப்பார்கள். கண்கள் கொவ்வைப்பழமாகச் சிவக்கும் வரையில் மணிக் கணக்காகக் குளிப்பார்கள். எல்லோரும் காற்சட்டைகளை ஆற்றோரத்தில் கழற்றி வைத்துவிட்டு பிறந்த மேனியுடன்தான் குளிப்பார்கள். வெட்கம் என்பதெல்லாம் அவர்களிடையே இருந்ததில்லை.

சென்னி மாமாவுடன் கல்லறுப்பதற்கு அவர்களுடன் கூடவந்திருந் தான். வந்தவன் பெடியன்களுடன் குளிக்கப் போய்விட்டான். போனவன் அரை மணி நேரமாகியிருக்கும். பெரிய சத்தமாக வீரிட்டு அலறிக் கொண்டு ஓடிவந்தான் சென்னி. மருமகன் கையில் காற்சட்டையை கையில் தூக்கிக் கொண்டு ஓடி வருவதைக் கண்ட மாமா பதறிவிட்டான். கல்லறுத்ததை விட்டுவிட்டு மருமகனை நோக்கி ஓடினான் சின்னத்தம்பி. அப்பாவும் ஓடினார்.

அருகே வரும்போது உரத்த சத்தமாக "மாமா... மாமா... என்ர கொட்டயக் காணல்ல மாமா. கொட்டயக் காணல்ல மாமா. இஞ்ச பாருங்க மாமா" என காட்டினான். சென்னி கூறியதைக் கேட்டதும் மாமாவிற்குச் சிரிப்பு வந்து விட்டது. சிரிப்பை அடக்கிக் கொண்டு "காட்டுறா பொடியா" என கூறியவர் பார்த்தார்.

இரத்தம் தொடையினால் வடிந்து காலால் ஓடிக்கொண்டிருந்தது. மாமா உற்றுப்பார்த்தார். மருமகன் கூறியது உண்மைதான் என ஒரு கணம் பயந்தேவிட்டார். பின்னர் இரத்தத்தைத் துடைத்தார். நீர்அட்டை யொன்று சென்னியின் விதையில் ஒட்டிக்கொண்டிருந்தது.

கல்லறுத்த இடத்தில் கிடந்த தகரப்பேணியொன்றை எடுத்து வந்து "மூத்திரம் பெய்றா" என்றார். பெய்தான். அதை அட்டை மீது ஊற்றிவிட்டார். அட்டை கழன்று கீழே விழுந்தது.

தன்காலில் இருந்த அட்டைவிழுந்த போது தனது ஏழுவயது நினைவு வந்தபோது தனிமையில் தன்னை மறந்து சிரித்தேவிட்டான் சென்னி. அந்த மகிழ்ச்சியான நினைவுகளுடன் வீட்டை நோக்கிச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# - 9 -

சமயலறையில் சமைத்துக் கொண்டிருந்த அம்மா சந்தானம் "எடீயே சங்கெழில், கடப்படியப் பாரண்டி. ஏதோ வாகனம் வந்தமாரிச் சத்தம் கேட்டுது"

வீட்டிற்கு உள்ளே நின்றவள் அம்மாவின் சத்தம் கேட்டதும் வெளியேவந்து "என்ன அம்மா ஏதாவது சொன்னனீயா" என்றாள்.

"ஏன் உனக்கென்ன செவிடா. வெளியில ஏதோ வாகனச்சத்தம் கேட்டுதே. உனக்குக் கேக்கல்லயா. வானொலிய காது கிளிய சத்தத்தவச்சுக் கேட்டிற்று இருந்தா என்ன கேக்கப் போகுது உங்களுக்கு. போய்ப் பார்ரி கடப்படிய" என்று கூறி முடிப்பதற்குள் "அம்மா..." என்றாள் நடுநடுங்கிய குரலில் அச்சத்துடன் அம்மாவை பார்த்தவாறே. நிமிர்ந்து பார்த்த அம்மா உறைந்தே போய்விட்டாள்.

கடந்த வாரம் போய்ப்பார்த்த அதே ஆள்தான். ஆனால் இப்ப சீருடையில் வந்திருக்கிறார். அம்மாவிற்கு சுரேஸ்காசிமை இனங்காண்பது அவ்வளவு சிக்கலாக இருக்கவில்லை. காலையிலிருந்து மாலைவரை பிளான்ரன்பொயின்ற் படலையில் அழுதுதழுது கதைத்தபோது பலதடவை கள் அவளை அதட்டியவனை எப்படி அவளால் நினைவுபடுத்தாமல் மறந்திருக்கமுடியும்.

"ஐயா என்ரமகனயா கூட்டி வந்தனீங்க?" ஆர்வமாகக் கேட்டாள் அம்மா சந்தானம்.

'ஆபரன் வீட்டிற்கு வரவில்லை' என்பதை அம்மாவின் முகபாவ னையிலிருந்தும் அவளது வார்த்தைகளிலிருந்தும் அவன் அறிந்து கொண்டான்.

"நாங்க பிடிக்கல்ல எண்டுதானே அண்டைக்கும் சொன்னனான். ஆர் சொன்ன உங்களுக்கு நாங்க பிடிச்ச எண்டு? அதக் கேக்கத்தான் வந்தனான்."

அம்மாவிற்குத் தூக்கிவாரிப் போட்டது. "என்ன ஐயா சொல்றீங்க? 'அங்கதான் இருக்கார். விடுறதுக்கு காசு வேணும்' எண்டு ரெண்டு நாளைக்கு முதல்தானே இருந்த வண்டிலயும் மாட்டயும் வித்து ஐம்பதாயிரம் வசூர்தீனுட்ட கொடுத்தனாங்க" கண்கள் முழுவதும் நீராக அழுதழுது கைகள் நடுநடுங்க படபடத்துக் கூறினாள் சந்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேஸ்காசிம் குழம்பிவிட்டான். அவனுக்கு என்ன நடந்திருக்கும் என்று புரிந்துவிட்டது.

"தோப்பூர் வதூர்தீனா?"

"ஓம் ஐயா...... அவர்தான். ஒவ்வொருநாளும் வந்து ஆபரனப்பாத்து சாப்பாடெல்லாம் வாங்கிக்குடுத்தனான் எண்டு சொல்றவர். சாப்பாடு வாங்கிக் குடுத்ததுக்கெல்லாம் காசு குடுத்தமே ஐயா"

"ம்...சரி..அந்தக் காச தரச்சொல்றன் அவரிட்ட.."

"இல்லஐயா வேணாம்ஐயா. காசு காணாட்டி சொல்லுங்கஐயா... மகன எப்பிடியெண்டாலும் விட்டுருங்கஐயா.. காலப்பிடிச்சுக் கேக்கிறன் ஐயா.." என ஒவ்வொரு சொல்லுக்கும் ஐயா போட்டு கூறிக்கொண்டு அவனது காலைப்பிடிக்க ஓடிச்சென்றாள் அம்மா.

"கால்லயெல்லாம் விளவேணாம் சரியா. உண்மையா நாங்க பிடிக்கல்ல. சூரநகரில ஆபரன் எண்டு ஒருத்தர பிடிச்சனாங்க. உங்கட மகன்தான் அவர் எண்டு வதூர்தீன் நினைச்சிருக்கார்போல. அதுதான் உங்கட்ட காசு வாங்கியிருக்கார். நீங்ககுடுத்த காசத்தரச்சொல்றன்.." எனக் கூறிவிட்டு வதூர்தீன் மீது ஆத்திரம் அடைந்தவனாக தன்னுடன் வந்தவர்களையும் அழைத்துக் கொண்டு சமையலறைக் கதவருகில் நின்ற ஆபரனின் தங்கையின் கன்னத்தில் தன் விரல்களால் கிள்ளிக்கொண்டு கண்களைச் சிமிட்டிக்காட்டிவிட்டு பள்ளிக்குடியிருப்பிலிருந்து வந்த வாகனத்தில் வெளியேறினான் சுரேஸ்காசிம்.

"ஆபரன் தப்பியிருந்தால் எப்டியும் வீட்டிற்கு வந்திருப்பான். இரண்டு கிழமையாகி விட்டது. நீந்தத்தெரியாமல் கடலில்தாண்டு சாவடைந்திருப்பான்" என சுரேஸ்காசீம் முடிவெடுத்துவிட்டான். அந்த முடிவில் அவன் உறுதியானான்.

ஆபரன் தன்னிடமிருந்து தப்பியது தனக்கு ஏற்பட்ட அவமானமாக நினைத்தான். அவனது உயரதிகாரிகளிடம் வாங்கியபேச்சுக்கு அளவில்லை. ஆனால் சுரேஸ்காசீம் திறமையானவன் என்பதனால் அவனுக்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

ஆவனைப்பாவித்து பலவேறு நடவடிக்கைகள் செய்வதற்கு கொழும்பில் உள்ளவர்கள் திட்டமிட்டிருந்தமையே அதற்கான முதன்மைக் கரணீயமுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்குடியிருப்பிலிருந்து தோப்பூர் வந்தவன் வதூர்தீனைச் சந்தித்து பணம் பெற்றமைக்காக எச்சரித்துவிட்டு கிண்ணியாநோக்கி வாகனத்தைப் போகச் சொன்னான்.

சேருநுவரசென்று கந்தளாய் வழியூடாகச்சென்று ஜெயந்திநகர் ஊடாக வானாறு கடந்து ஆயிலியடிஊடாக சூரங்கல்தாண்டி கிண்ணியா குட்டிக்கரைச்சை சந்தியை அடைந்தார்கள்.

கிண்ணியா மையவாடிக்கு அண்மையில் அவன் வரச்சொன்ன வர்கள் ஆறுபேரும் நின்றனர். அவர்கள் எல்லோரும் ஊர்காவல்படையில் சேர்ந்து பணியாற்ற முழுமையாக தமது சம்மதத்தைத் தெரிவித்தனர். அது அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அவர்களுடன் ஊர்காவல்படையின் செயற்பாடுகள் எப்படியிருக்கு வேண்டும் என்பது தொடர்பாக நீண்ட நேரமாகக் கதைத்து தெளிவு படுத்தினான்.

விடுதலைப் போராளிகள் மீது வெறுப்பினை ஏற்படுத்தும் விதமாக அவனது கருத்துகள் இருந்தன. அடுத்தகிழமை ஊர்காவல்படைக்கான பயிற்சிகள் தொடங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதாக உறுதி யளித்தான். வேலைகள் எதுவுமின்றி ஊர்சுற்றித் திரிந்தவர்களுக்கு மாதாமாதம் சம்பளமும் கையில் அதிகாரமும் கிடைக்கப்போகின்றது என கனவிலும் அவர்கள் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

பத்துநாட்களுக்கு முன்னரும் அவர்களைச் சந்தித்திருந்தான். அவர்களைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை அவனது நண்பன் ஜெமீல்கபூர் செய்திருந்தான். கடந்தமாதம் ஜெமீல்கபூரை சுரேஸ்காசீம் சந்தித்த வேளையில் கிண்ணியாவில் ஊர்காவல்படை அமைக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிக்கதைத்தான்.

கிண்ணியா மத்தியகல்லூரிக்கு முன்பாகவுள்ள மரத்தின்கீழ் அந்தச்சந்திப்பு நடந்தது. அச்சந்திப்பு நடைபெற்றபோது உவைஸ்வாத்தியும் அவ்விடத்தில் இருந்தார். உவைஸ்வாத்தியும் ஜமீல்கபூரும் கதைத்துக் கொண்டிருந்த வேளையில்தான் சுரேஸ்காசீம் வந்திருந்தான். உவைஸ்வாத்தி இருப்பது சிக்கல் இல்லை என ஜமீல்கபூர் கூற அவனும் சம்மதித்தான்.

அன்றிலிருந்து உவைஸ்வாத்தியும் சுரேஸ்காசீமும் நண்பர்களா னார்கள். இந்தத் தொடர்புதான் பிந்நாட்களில் உவைஸ்வாத்திக்கு தொந்த ரவாக அமையப்போவது அவருக்கு அவ்வேளையில் தெரிந்திருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவல்படை அமைக்க வேண்டிய அவசியத்தை ஜமீல்கபூருக்கு பக்குவமாக எடுத்துச்சொன்னான் சுரேஸ்காசீம். நாட்டின் பிரிவினைக்கு எதிராக ஏன் முஸ்லிம்கள் இருக்க வேண்டும், பிரிவினையினை விரும்புப வர்களை முஸ்லிம்கள் ஏன் எதிர்க்கவேண்டும் என்பதற்கான காரணீயங்களை பக்குவமாக எடுத்துச் சொன்னான்.

"தமிழர்கள் முஸ்லிம்களை ஒருகாலமும் வாழவிட மாட்டார்கள். அவர்கள் நம்மை அழித்துவிடுவார்கள்" என்பதனை அவனது தலையில் வெறித்தனமாக பதியும் வகையில் அவனுக்கு விளங்கும்மொழியில் தெளிபடுத்தினான். ஜமீல்கபூருக்கு அவனது வார்த்தைகள் சரியென்றே தோன்றியது.

ஊர்காவல்படைக்கு சுடுகலன் பயிற்சியும் மாதாமாதம் கொடுப் பனவும் கிடைக்கும் என்பதனையும் அந்தப்படைக்கு ஜமீல்கபூரையே பொறுப்பாக நியமிப்பதாகவும் கூறியது அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

"ஊர்காவல்படைக்குப் பொருத்தமானவர்களைத் தான் ஒழுங்கு செய்வதாக" உறுதியளித்தான். ஜமீல்கபூர் ஒழுங்கு செய்தவர்களையே அவன் இருதடவைகளும் சந்தித்தான்.

சுரேஸ்காசிம் கிண்ணியா வரும்போதெல்லாம் உவைஸ்வாத்தி யையும் சந்தித்தான். உவைஸ்வாத்திக்கும் சுரேஸ்காசீமுக்கும் இடையே நட்பு மிக நெருக்கமாக வளர்ந்தது.

உவைஸ்வாத்தி வீட்டிற்கு வந்து சாப்பிட்டுச்செல்லும் அளவிற்கு அவர்கள் இருவரினதும் நட்பு வளர்ந்திருந்தது.

ஆபரனது காலில் உள்ளபுண் முழுமையாக ஆறவில்லை. இடைக்கிடை குத்துவலி ஏற்படும். தம்பலகமம் வருகின்றபோது வர்ணமேட்டில் யோகன் பரியாரியிடம் சென்று மருந்து கட்டிக்கொள்வான்.

சிலவேளைகளில் உள்ளே பழுத்துவிட்டதோ என் எண்ணுவான். அவ்வளவிற்கு குத்துவேதனை இருக்கும். பரியாரியார் புண்ணைச் சுத்தப்படுத்தி மருந்து கட்ட அது சுகமாகும்.

தம்பலகமத்தில் இருந்த தனது ஈருருளியை சென்னி மூலமாக பெற்றுக்கொண்டவன் சென்னியையும் அழைத்துக்கொண்டு உவைஸ்வாத்தி யிடம் விடைபெற்று சாவாற்றிற்குச் சென்றான் நசீர்.

அவர்கள் சாவாற்றினைச் சென்றடையும்போது பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்ந்திருந்தது. பண்ணையினுள் சென்றபோது அங்கிருந்தவர்கள் இவர்களின் வரவை எண்ணி மகிழ்ந்தனர் என்பதனை அங்கிருந்தவர்களின் முகங்கள் சொல்லின.

பண்ணையைச் சுற்றிப் பாரத்தவன் "எப்படியும் பத்து ஏக்கர் வரும் என பாச்சா" என்று கேட்டான்.

"போனகிழமை காண்டியும் நானும் அளந்தனாங்க. பதினொரு ஏக்கர் இருக்கு"

"சொஞ்ச ஊர்க்கோழியும் வளத்தா நல்லதுபோல. அதுகள்ற கழிவுகள் கூட்டெருவுக்கு பயன்படுத்தலாம் நைதரசனும் கூட இருக்கு அதில. பாப்பம். குணம் அண்ணன்ர தங்கச்சி கால்நடைத் திணைக்களத்தில தான் வேல செய்யிறா. அவரிட்டச்சொல்லி அம்பது குஞ்சாவது எடுத்துத்தரச் சொல்லுவம்"

"நீங்க வந்தோண நாங்களும் சொல்லத்தான் இருந்தனாங்க. நமக்கும் வேலை செய்யக்கொள்ள பச்சமுட்டை குடிச்சா நல்லதுதானே"

வாய்விட்டுச் சிரித்த நசீர் "எப்பயும் நீங்க உங்கட வயற வளக்கத்தான் பாருங்க". இருவரும் சிரித்தார்கள்.

"நான் நினைக்கல்லடாப்பா. இப்பிடி வடிவா செய்திருப்பீங்க எண்டு. தம்பலகமத்து ஆக்களுக்கு வயலத்தவிர ஒண்டும் செய்யத்தெரியா எண்டு ஜபார் தோழர் சொல்றவர். எனக்கும் முதல்ல பயம்தான். அதான் காண்டிய சம்புக்களியில ஒருமாதம் தோட்டம் செய்யிற இடத்தில போய்ப்பழகச் சொல்லி அனுப்பினனான்"

"ஜபார்தோழர் சொன்னது உண்மைதான். காண்டிதான் எங்கடகுரு. அவன் சொல்றதத்தான் நாங்கசெய்யிற. முதல்ல எங்களுக்கு எப்பிடிப் பாத்திபிடிக்கிற எண்டேதெரியாது. அவன்தான் எல்லாத்தையும் காட்டித் தந்தவன். இப்ப ஓரளவு எல்லாரும் வேலைகள் செய்யப்பழகியிருக்கம்"

"நல்லதுடாப்பா. இளக்கந்தைப்பண்ணையிலயும் இந்தப் பண்ணையிலயும் தான் நம்மட மாவட்டத்திட எதிர்காலம் தங்கியிருக்கு."

"சல்வியில படகு எப்பிடித் தோழர் ஓடுதா"

"வா...பசிக்குது. சாப்பிட்டிற்று அங்க மாலுக்குள்ள இருந்து எல்லாரோடயும் கதைப்பம் வா.... சரி... இண்டைக்கு என்ன கறி ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தளவாய்மடுவில வலைவிரிச்சி நீர்க்காகம் ரெண்டு பிடிச்சனாங்க. அதுகளத்தான் குழம்புக்கறி ஆக்கியிருக்கிறம். பகல் கணயான்மீன் ஆணமும் காய்ச்சினனாங்க. அதுவும் இருக்கு. ரெண்டும்தான் இருக்கு”

“இறைச்சியும் மீனும் இருக்கு. காணாதா? இப்பயும் நீ ரெண்டு கோப்பதான் சாப்புடுறியா?”

“இப்ப பண்ணயில வேலயும்கூடத் தோழர். ரெண்டு கோப்பச் சோறு காணுமா. மூண்டத் தாண்டும்” சொல்லிச் சிரித்தான். நசீரும் சிரிப்பில் பங்கெடுத்தான்.

“எட்டுப்பேருக்கும் இருக்கிறசோறு காணுமாசெந்தில்” கேட்டுக் கொண்டே மாலடிக்கு நசீரும் பாச்சாவும் வந்து சேர்ந்தனர். “காணாட்டி என்ன.... இருக்கிறத கொஞ்சம்கொஞ்சமா பிரிச்சுச் சாப்பிடுறதானே..” என்று கூறியவன் “நான் பகிடிக்குச் சொன்னனான்... நாளைக்கு காலமைக்கும் காணும்...” என்றான்.

கோப்பைகளைக்கழுவி சோற்றினை வைத்து குழம்புக்கறியையும் ஆணத்தினையும் உணவுத்தட்டில்வைத்து எடுத்துகொண்டு மாலுக்கு முன்னால் உள்ள இடத்தில் கீழேவிரித்திருந்த சாக்குகளில் வட்டவடிவமாக அமர்ந்திருந்து சாப்பிட்டார்கள்.

காண்டிதான் கேட்டான்.” எப்பிடித் தோழர் பிளான்ரன் பொயின்றில இருந்து தப்பின்னீங்க. எங்களப் போல ஆக்கள் மாட்டினா அம்போதான்”

“நீந்தித்தான்” “நீந்தியா” அனைவரும் வியந்தார்கள்.

நடந்தவற்றை விரிவாகக் கூறினான். நடைபெற்ற அனைத்தையும் ஒன்றுவிடாமல்க் கூறினான். அவ்வாறு அவர்களுக்குக் கூறவேண்டிய தேவையிருந்தது. பண்ணையில் இருப்பவர்கள் கூலிக்கு வேலைசெய்யும் வேலையாட்கள் அல்ல.

“எல்லாருக்கும் நாளைக்காலையில் கெங்கயில நீச்சல்பயிற்சி இருக்கு தயாரா இருங்க என. எல்லாருக்கும் நீச்சல் கட்டாயம் தெரிந்திருக்க வேணும்” நீர்க்காக இறைச்சியை வாய்க்குள் போட்டு அதன் சுவையில் மகிழ்ந்தவாறே கூறினான்.

ஆறுபேரும் மக்களின் விடுதலைக்காக, குமுகாயத்தின் போக்கினை மாற்றும் போராட்டத்தில் கருத்துகளையேற்று தங்களைத் தாங்களாகவே விரும்பி முழுமையாக இணைத்துக்கொண்டவர்கள். ஆயுத மோகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்தவர்கள் அல்ல. வீட்டு சிக்கல்களினால் இணைந்தவர்களுமல்ல. காதல் தோல்வியினால் சேர்ந்தவர்களுமல்ல. நன்றாக பாடசாலைகளில் கற்றவர்கள். மூவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகள். இந்தியாவில் அனைவரும் பயிற்சி பெற்றவர்கள். இனிவரும் காலத்தில் மக்களுக்கான புரட்சியில் அதிகளவு பங்களிப்புச் செய்யப்போகின்றவர்கள்.

இவ்வாறானவர்களுக்கு அனைத்து விடயங்களும் தெரிந்திருக்க வேண்டியது முக்கியம் என்று கருதினான் நசீர்.

"நசீர் .... பேர்...நல்லாருக்கு" பாச்சா கூற சாப்பிட்டுக் கொண்டே எல்லோரும் ஆமோதித்தனர்.

"நான் நினைக்கிறன் இந்த நாட்கள்ல இலங்கையில இப்பிடி வீரசாகசம் செஞ்சு தப்பிச்சஆள் எண்டா நீங்கமட்டும்தான்" பாச்சா கூற "இலங்கையில இல்ல உலகத்தில" என்று கூறினான் சின்னமாஸ்ரர்.

'இல்ல இதைவிட நிறையப்பேர் பலபோராட்டங்களில் சாகசம் செய்த போராளிகள் இருக்கிறார்கள். பலஸ்தீனம், பிலிப்பைன்ஸ், வியட்நாம் என பல போராட்டங்களில் தப்பித்தபோராளிகள் பலர்இருக்கி றார்கள். 'நசீர் தெளிவுபடுத்தி னான்.

"சல்லியில் படகொன்றினை வாங்கி சிவா அண்ணனிடம் கொடுத் திருக்கிறோம். அவர் நேர்மையானவர். அவருடன் நமது இரண்டுதோழர்களும் அந்தப்படகில் கடலுக்குச்சென்று மீன் பிடிக்கின்றார்கள். நேரடியாக கொழும்பிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளையும் சிவா அண்ணன் எடுத்துள்ளார். அந்தப்படகிலிருந்து வருகின்ற வருமானத்தைத்தான் இளக்கந்தைப் பண்ணையில் உள்ள தோழர்களின் செலவுகளுக்கு அனுப்புகின்றார்கள். அந்தப் பணியினை தோழர் சந்துருவை செய்யச்சொல்லி இருக்கிறன். இப்ப மீன் பிடிபடுறது குறைவு எண்டாலும் அவங்கட செலவையும் சமாளித்து மிகுதியை அனுப்பும் அளவிற்கு வருகிறது. இன்னும் ரெண்டு கிழமையில் கணவா பிடிபடத்தொடங்கும். அப்ப நமக்கு மாவட்டம் முழுவதும் தேவையான பணத்தினை அவர்களே பார்த்துக் கொள்ளுவார்கள். ஆனால் அப்படிச் செய்ய வேண்டிய தேவை வராது என எண்ணுகிறேன். இளக்கந்தைப்பண்ணை, இந்த சாவாத்துப் பண்ணை மூலமாக வருமானம் வரத்தொடங்கிரும்தானே" விரிவாக நசீர் தெளிவுபடுத்தினான்.

"தோழர் இந்தப்பண்ணையில பயிர் மட்டுமில்ல ஆடும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டு பசுவும் வாங்கோணும். நீங்க சொன்னமாரி ஊர்க்கோழியும் வளக்கோணும்" செந்தில் கருத்துகளைக் கூறினான்.

"ஆடும் பசுக்களும் வாங்கிறது நல்லதுதான். அடுத்த ஆண்டுதான் செய்ய ஏலும். அதுக்கு இப்ப காசு இல்லயே"

"கவலப்படாதீங்க தோழர், கமல் கடற்கரைச்சேனைக்குப் போய் வலை வாங்கிக்கொண்டு வந்தவன். அந்தவலைய பண்ணயில் வேல முடிஞ்ச பிறகு கெங்கையில கட்டி செல்வன், கணையான், மணலை, சுங்கான், விரால், யப்பான் எண்டு மீன்கள் ஒவ்வொருநாளும் புடிக்கிறனாங்க."

"செல்வன் கணையான், மணல மீன்கள ஒவ்வொருநாளும் விக்கிறனாங்க. ஈச்சந்தீவில இருந்து யாவாரிகள் வாறவங்க. அவங்களுக்குக் குடுக்கிறம். விரால், யப்பான், சுங்கான் மீன்கள கருவாடு போட்டு வச்சிருக்கிறம். எப்பிடியும் ஆயிரம் கிலோவுக்கு மேல வரும்"

நசீரும் சென்னியும் தங்களது தோழர்களை எண்ணி பிரமித்தார்கள். மனதில் மகிழ்ச்சியும் பெருமிதமும் கொண்டார்கள். உண்மையில் தமது தோழர்கள் இப்படிச் செய்திருப்பார்கள் என்று அவர்கள் கனவில்கூட நினைத் திருக்கவில்லை.

"கருவாடுகளை கந்தாளாய்சந்தைக்குக் கொண்டுபோய் விற்றால் அதிகவருவாய் கிடைக்கும்" என்ற சென்னியின் அந்நேர ஆலோசனை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"எம்.டி.90 உந்துருளி ஒண்டும் வாங்கினா நல்லது" என்ற கமலின் ஆலோசனையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. "கருவாடு விற்பதனால் வருகின்ற பணம் அஞ்சுஆடுகள், ரெண்டுபசுக்கள், உந்துருளி வாங்குறதுக்குப் போதுமானதாக இருக்கும் எண்டு நினைக்கிறன்" சென்னி கூறினான்.

அதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறு நசீர் சென்னியிடம் கேட்டுக்கொண்டான். "ஒரு மாதம் நான் இஞ்சதான் நிப்பன்" என நசீர் கூறியது எல்லோர் மனதையும் குளிரவைத்தது.

"அடுத்த மாதமளவில சல்லியில கணவா படும். அதில இருந்து ஓரளவுக்கு பணமும்வரும். அதவச்சு சின்னளவில சவக்காரம் செய்தா என்ன? தோழர்களிடம் கேட்டான் நசீர்

"நல்லதுதான். எங்க செய்யிறது" பாச்சா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கும்புருப்பிட்டியிலதான் தோழர் எழிலன் நிக்கிறார். அவர் யாழ்ப்பாணத்தில இருக்கிற மில்க்வைற் சவர்க்கார நிறுவனத்தில முதல் வேலசெய்தவர். அவர வச்சுச்செய்யலாம். இல்லாட்டி வெருகல்முகத்து வாரத்தில செய்யலாம். அங்கதான் தோழர் றீகன் அமைப்புவேலகளச் செய்திற்று இருக்கிறார். எழிலனை வெருகல்முகத்துவாரத்துக்கு வரச்சொல் லலாம். பாப்பம் எது சரிவருதோ அங்க செய்வம். கும்புருப்பிட்டியில செய்யிறதுதான் நல்லதெண்டு நான் எண்ணுறன். கும்புறுப்பிட்டியில இருந்து திருக்கோணமலைக்கு விக்கிறதுக்கு அனுப்புறது எளிதாவும் இருக்கும்"

"எங்கயெண்டாலும் செய்யுங்க. அது நல்லதுதான். ஆக்கள் காணாது எண்டுமட்டும் எங்கள இஞ்சயிருந்து அங்க அனுப்பாட்டிச் சரி" எல்லோரும் சிரித்தார்கள்.

"நீர்க்காக குழம்பு ஆர்ரா ஆக்கின? அந்தமாரி இருந்திச்சு" நசீர்.

"என்ன தோழர் சாப்பிட்டுச் செமிக்கும் முடியப் போகுது. இவ்வளவு நேரத்துக்குப் புறகு சொல்றீங்க" பாச்சா.

"இல்லடா... நானும் முதல் ஒருநாள் கதிரவெளியில ஆக்கினனான். ஆனா அதில காகத்திட மணம்வந்திச்சு. ஆனா நீங்க ஆக்கினதில அந்த மொச்சமணம் வராமா ஆக்கிருக்கியிருக்கிறீங்க. அதான் யோசிச்சிற்று இருந்தனான்."

"நீர்க்காக இறைச்சிய நாலஞ்சு தரம் நல்லா உப்புப் போட்டுக் கழுவோணும். அதோட குழம்புக்கறிக்கு கொஞ்சம் மஞ்சளும்போடோணும். வெடுக்கு கொஞ்சமும் மணக்காது"

"ஓ.. அப்பிடியா சங்கதி. இது எனக்கு தெரியாம போயிற்றுதே. வாய்க்குக் கிட்டக் கொண்டுபோக ஏலாம போயிற்றுடாப்பா அண்டைக்கு. மூக்கப் பொத்திற்றுத்தான் வாய்க்குள்ள அனுப்பினது." எல்லோரும் மீண்டும் சிரித்தார்கள்.

"அடுத்தமுறை சந்திக்கக்கொள்ள உற்பத்தி தொடர்பா வகுப்பெடுக்கிறன் எண்டு சொன்னனீங்க தோழர்" முதன்முறையாக கரன் வாய்திறந்தான்.

கரன் எப்போதும் சிரித்துக் கொண்டேயிருப்பான். அங்கிருந்த வர்களில் வயதில் குறைந்தவன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்துக்கொண்டிருந்த போது அமைப்பின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு இந்தியாவில் உத்தரப்பிரதேசத்தில் சுடுகலன் பயிற்சியெடுத்தவன். பௌதீக விஞ்ஞானம் படித்தவன். எதனையும் அறிவியல் ரீதியாக அணுகுவதில் ஆர்வமுள்ளவன். எப்போதாவதுதான் வாய் திறப்பான். கடினஉழைப்பாளி.

"நான் வரும்போது நினைத்துக்கொண்டுதான் வந்தனான். இண்டைக்குச் சாப்பிட்டிற்று உற்பத்தி தொடர்பாக உங்களோட கதைக் கோணும் எண்டு. நீயே நினைவுபடுத்திற்றா. வாறன் தண்ணி கொஞ்சம் குடிச்சிற்று." என்று குடத்தில் இருந்த தண்ணீரை குவளையிலெடுத்துக் குடித்துவிட்டு வந்தமர்ந்தவன் தொடர்ந்தான்.

"ஒரு பொருள உற்பத்தி செய்யிறதுக்கு அடிப்படையில நாலு விடயங்கள நாம கவனத்தில எடுக்கோணும். எடுத்துக்காட்டு மூலமா அத தெளிவுபடுத்தினா விளங்க உங்களுக்கு எளிதாகவிருக்கும். இப்ப நெற்செய்கைய எடுப்பம். நெற்செய்கை செய்யிறதுக்கு நிலம்வேணும். இந்தநிலத்த உழைப்பின் குறிப்பொருள் எண்டுசொல்லுவம். நிலம்மாதிரி நெல்லும் நமக்குத்தேவை. இதையும் உழைப்பின் குறிப்பொருள் எண்டுதான்சொல்றம். ஆனா ரெண்டையும் வேறவேற பேரால குறிப்பிடுறம். நிலத்த இயற்கை குறிப்பொருள் எண்டும் நெல்ல மனித ஆக்க மூலக்குறிப் பொருள் எண்டும் சொல்றம். நிலத்தில இருந்து விளைபொருட்கள் பெறும் வரைக்கும் கருவிகள்வேணும். அத உழைப்புக் கருவிகள் எண்டுறம். இது ரெண்டும் சும்மா இருந்தா உற்பத்தி நடக்காது. இந்த ரெண்டையும் தொடர்பு படுத்துறதுக்கு நாம வேலசெய்யோணும். அதத்தான் நாம உழைப்பு எண்டுறம். இதுக்கு குறித்த நேரம்வேணும். இந்த நாலும் இல்லாம உற்பத்தி நடக்காது."

"இது எல்லா இடத்திலயும் பொருந்தாது. மீனவர்களுட்டப் போய் கடல உங்களுக்கு சொந்தமாக்கப்போறம் எண்டு சொல்லிற்று இருக்கேலா. இடத்திற்கேற்ற மாதிரி உற்பத்தி மாறுபடும். அத நாம புரிஞ்சு வேறுபடுத்தி அறியோணும்"

"உழைப்பின் குறிப்பொருள், உழைப்புக் கருவி, உழைப்பு, நேரம் இந்த நாலுல ரெண்டு நம்மட கட்டுப்பாட்டில இருக்கு. ஒண்டு உழைப்பு. மற்றது நேரம். ஆனா மற்ற ரெண்டும் முதலாளிகளிட்ட இருக்கு. நிலமும் உழைப்புக் கருவிகளும். இந்த ரெண்டையும் வச்சிற்றுத்தான் முதலாளிகள் விளைபொருட்கள தங்கட கட்டுப்பாட்டில வச்சிருக்கிறாங்க. உண்மையில உழைப்பு இல்லாட்டி யாரும் எதுவும் செய்ய ஏலா. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் உழைக்கிற நம்மட தொழிலாளர்களுக்கு விளங்கிறதில்ல. உண்மையில நிலமும் உழைப்புக் கருவிகளும் ஒவ்வொரு தொழிலாளிர உடைமையாக இருந்தா முதலாளியெண்டு ஒருவன் உலகத்தில இருக்கவே ஏலாது. அதமாதிரி தொழிலாளியும் இருக்கஏலா. எல்லாரும் உழைக்கும் மக்களாத்தான் இருக்கேலும். ரெண்டு பிரிவாக உலகம் பிரிக்கப்பட்டுக் கிடக்கு. அதத்தான் நாம ரெண்டு வர்க்கங்கள் எண்டு சொல்றம். உண்மையில உழைப்பு யாருட்ட இருக்கோ அவங்கட்டதான் உற்பத்திக்கான அதிகாரம் இருக்கோணும். அப்பிடி இருந்தாத்தான் இந்த உலகத்தில் மனிதநேயம் வாழும். அப்பிடி இல்லாட்டி உழைப்பு முதலாளிகளால சுரண்டப்படும்."

"சுரண்டலப்பற்றி நாம விரிவா பிறகு கதைப்பம். மனிதநேயமும் சுரண்டலும் ஒண்டுக்கொண்டு தொடர்பு பட்டிருக்கு. இதத்தான் லெனின் சொல்றார். எப்பிடி எண்டா 'மனிதனை மனிதனாக மதிக்கும் மனிதப்பண்பு எப்போது மனிதனுக்கு உருவாகிறதோ அப்போதுதான் மனிதனை மனிதன் சுரண்டுவது என்பது இல்லாதொழியும்' லெனின்ர இந்தக் கூற்ற நாம ஒவ்வொருவரும் நமக்குள்ள ஆய்வுக்குட் படுத்திப்பாக்கோணும். ஆழமான கருத்துக்கள் பொதிஞ்சிருக்கிறத நீங்க உணருவீங்க."

"உண்மையில பொருண்மியத்தின் அடிப்படையில்தான் உறவுகள் கூட தீர்மானிக்கபடுகின்றன. நிலத்தை உழைக்கிறவங்களுக்கு உடைமையாக் குறதுக்கான வேலயத்தான் நாம செய்யப்போறம். அதாவது வர்க்க ரீதியிலான முரண்நிலைகளை இல்லாமச் செய்யிறதுதான் நம்மடவேல. இது எளிதான செயலில்ல என்றத நாம முதல்ல ஏற்றுக்கொள்ளோணும். முதலாளித்துவம் தன்ர இரும்புக்கை கொண்டு இதத் தடுக்கப்பாக்கும். இதுக்காக குமுகாயத்தில இருக்கிற முரண்நிலைகளைப் பயன்படுத்தும்."

"சிறிலங்காவைப் பொறுத்தளவில இனரீதியிலான முரண்நிலையை கையில் எடுத்திருக்காங்க. சிங்கள ஆக்களுக்கும் நமக்கும் என்னசிக்கல் இருக்கு? ரெண்டு பேருக்கும் இருக்கிற ஒரேசிக்கல் மொழி மட்டும்தான். ஆனா இந்த முதலாளித்துவ அரசு ரெண்டுஇனத்தையும் பிரிச்சுவச்சிருந்தா கொஞ்சக்காலம் தங்கட பிழைப்ப ஓட்டலாம் எண்ட அடிப்படையில் தொடர்ந்தும் தங்களால ஏலுமான வரைக்கும் பிரிச்சு வச்சிருக்கிறதுக்கான செயற்பாடுகள முன்னெடுப்பாங்க."

"ஆட்சியாளர்களப் பாருங்க என்ன செய்யிறாங்க எண்டு. சிங்களஆக்களக் கொண்டுவந்து குடியேற்றம் செய்யிறது. தமிழ்ஆக்கள் கூட இருக்கிற இடங்கள்ள குடியேற்றுறத்தால தமிழ் ஆக்கள்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகிதாசாரத்தக் குறைக்கிறாங்க. வடக்குக் கிழக்கில கல்லோயா, கந்தளாய், அல்லை மாத்திரமில்ல. இன்னும் கனக்க இடத்தில குடியேற்றம் தொடர்ந்து நடக்கும்.

"திருக்கோணமல மாவட்டம் அவங்களுக்கு ரெண்டு வகையில முக்கியமான இடம். ஒண்டு இயற்கையான பாதுகாப்பான துறைமுகம் இருக்கிறது. மற்றது வடக்கு கிழக்கு பிரதேசத்தில நடுவில இருக்கிறது. அதால திருக்கோணமலயிலதான் குடியேற்றங்களக் கூடச்செய்யிறதுக்கு முயற்சிப்பாங்க."

"அதிலயும் ரெண்டு இடத்தில அவங்க கவனம் செலுத்துவாங்க. ஒண்டு தென்னமரவாடி. இந்த இடத்தில இருந்து தமிழ்ஆக்கள துரத்திற்று அத அனுராதபுரத்தோட சேத்தா வடக்கு கிழக்குப் புவியியல் ரீதியாக பிரிஞ்சிரும். மற்றது உங்கட ஊர் தம்பலகமம். தம்பலகமத்த நீண்டகால திட்டமிடலோட செய்யத் தொடங்கிற்றாங்க. கல்மெட்டியா வடக்கு, கல்மெட்டியா தெற்கு இந்த ரெண்டு கிராமஉத்தியோகத்தர் பிரிவையும் குடியேற்றிப்போட்டாங்க. அதோட சாலியபுர கிராம உத்தியோகத்தர் பிரிவிலயும் குடியேற்றியிருக்கிறாங்க."

"பாருங்க இந்தப் பிரிவுகள சேருநுவரத் தொகுதியோட வேற சேர்த்திருக்காங்க. இதெல்லாம் எதுக்கு எண்டு நினைக்கிறீங்க? நிரந்தரமா வடக்குக் கிழக்கப் பிரிச்சு தமிழ் ஆக்கள்ற அரசியல் பலத்தக் குறைக்கிறது தான் நோக்கம். தமிழ் பேசுற ஒரு பகுதியா இருக்கிற இஸ்லாமியமக்களை துண்டாடுறதுக்கு இப்பதிட்டம் போடுறாங்க. அதுக்கு சுரேஸ்காசிம பயன்படுத்தப் போறாங்க எண்டு விளங்குது. இது பெரியசிக்கல நமக்கு எதிர்காலத்தில உருவாக்கும். இதுக்குள்ளால இதையெல்லாம் தெரிஞ்சுற்றுத் தான் நம்மட செயற்பாடுகள நாம முன்னெடுக்கோணும்."என நிறுத்தினான் நசீராகிப் போன ஆபரன்.

நசீரின் கருத்துகள் தொடர்பாக தோழர்களுக்கு இருந்த ஐயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினார்கள். கலந்துரையாடல் நடுஇரவு பன்னிரண்டு மணிவரை தொடர்ந்தது.

மறுநாள்காலையில் ஐந்தரைமணிக்கு எழுந்தவர்கள் உடற்பயிற்சி யில் ஈடுபட்டார்கள். நசீரும் அவர்களுடன் சேர்ந்துகொண்டான். பண்ணைக்கருகில் இருக்கும் பற்றைக்குள் யாருமே எளிதில் கண்டுபிடிக்க முடியாதவாறு மறைத்து வைத்திருந்த சுடுகலன்களை எடுத்துவந்தார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச்சாவும் செந்திலும். ஆறு சுடுகலன்களைக் காவி வந்தார்கள். அதில் ஒன்று வேட்டைத் துவக்கு(Shot Gun). இரண்டு இலகு இயந்திர சுடுகலன்கள் (S.M.G), ஒரு ஏ.கே.47 (A.K.47) இரண்டு எஸ்.எல்.ஆர் (S.L.R). அனைத்தையும் சுத்தப்படுத்துமாறு நசீர் கூற ஒவ்வொருவரும் ஒவ்வொரு சுடுகலனை நன்றாக துடைத்து சுடுகுழலை நன்றாகச் சுத்தப்படுத்தினார்கள். சுத்தப்படுத்தியவற்றை மீண்டும் அந்த இடத்திலேயே கொண்டுபோய் வைத்தார்கள். இரண்டு கிழமைக்கு ஒருதடவை இவ்வாறு செய்யும்படி நசீர் கூறினான். கரனை சுடுகலன்களுக்குப் பொறுப்பாக இருக்குமாறு அறிவுரை கூறினான்.

கருவாட்டினை கந்தளாய்ச் சந்தைக்குக் கொண்டுபோய் விற்பதற்கான வேலைகளைச் செய்யுமாறு சென்னியிடம்கூற அவனும் அவற்றைக் கொண்டு போவதற்காக தளவாய்க்குச் சென்று அறிவழகனின் மாட்டுவண்டிலை வாடகைக்கு எடுத்துவந்தான்.

"எல்லாக் கருவாட்டயும் கொண்டுபோக மூண்டுதரம் எண்டாலும் எடுக்கும்" அறிவழகன் கூற பரவாயில்லை என சென்னிகூறி ஒருதொகுதிக் கருவாட்டினை ஏற்றிச்சென்றான். மூன்றுநாட்களில் கருவாடு முழுவதையும் கந்தளாய்ச் சந்தையில் விற்றான்.

சென்னியின் கருவாட்டிற்கு கந்தளாயில் நல்ல வரவேற்பு இருந்தது. ஒருகிலோ விரால்கருவாடு தொண்ணூறு உருபாக்கும் ஒருகிலோ யப்பான்கருவாடு அறுபது உருபாக்கும் கொடுக்கக் கூடியதாக இருந்தது.

கருவாடு விற்ற பணத்தில் பதினைந்து ஆடுகளும் இரண்டுபசுக்கள் கன்றுகளுடனும் நூறுஊர்க்கோழிக்குஞ்சுகளும் ஒரு எம்.டீ-90 வகை உந்துருளியும் கொள்வனவு செய்யப் போதுமானதாக இருந்தது.

அனைத்தையும் கண்ட நசீர் தன் தோழர்களை எண்ணி பெருமிதம் கொண்டான். அவர்களது செயலை மெச்சினான். அவர்களது இயல்பான செயற்பாட்டினைத் தட்டிக்கொடுத்தான். அவர்களுக்கும் நசீரின் வார்த்தைகள் இதமாக இருந்தன.

## - 10 -

"இண்டைக்கு இரவைக்கு தோப்பூருக்குப் போறம். சென்னி தம்பலகமம் போகட்டும். என்னோட அஞ்சுபேர் வாங்க. மற்றாக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஞ்ச நிக்கட்டும்." நசீர் கூற "ஏன் தோழர் போறம்" கரன் கேட்டான்.

"தம்பலகமத்தில் தலையாட்டியாக வந்தவனப் பிடிக்கோணும்."

"அவன எப்பிடிப்பிடிக்கிற. ஆர் எண்டு தெரியாம ஆரப் போய்ப் பிடிக்கிற"

"எனக்குத் தெரியும். நான் பிடிபட்டு பிளான்ரன் பொயின்றில இருக்கக்கொள்ள மூணாவதுநாள் சுரேஸ்காசிம பாக்கப் போகக்கொள்ள தலையாட்டின ஆள் அவனிட்ட இருந்து போனவன்"

"அவன்தான் தலையாட்டி எண்டு எப்பிடித் தெரியும்?"

எப்படித் தெரியும் என்பதை அனைவருக்கும் புரியவைத்து யார் என்பதையும் கூறினான் நசீர்.

"அவனா? எனக்கும் அவனத் தெரியும். இத்திக்குளத்தில கண்டிருக்கன். ஆனா அவன் நமக்கு கனக்க உதவிசெய்த ஆளே" வாய்பிளந்து நம்பமுடியாமல் ஐயத்துடன் கூறினான் கமல்.

"உதவி செய்ததே நம்மளப்பிடிச்சுக் குடுக்கத்தான்எண்டு நான் பிடிபட்டதால தானே தெரிஞ்சிது"

கெங்கையைக் கடப்பதற்கு சாவாற்றில் தோட்டம் செய்பவர்கள் பயன்படுத்தும் வள்ளத்தில் நசீரும் பண்ணையிலிருந்த ஐந்துபேருமாக தோள்களிலே சுடுகலன்களைக் கொழுவிக்கொண்டு சூரியன் மறைந்து ஒரு மணிநேரத்தின் பின்னர் கங்கையைக் கடந்தார்கள்.

சாவாற்றிலிருந்து மல்லிகைத்தீவிற்கு செல்லும் காட்டுவழி சின்னண்ணனுக்கு அத்துப்படி. இரவிலும் துல்லியமாக திருக்கோணமலை மாவட்டத்தில் இருந்து முல்லைத்தீவு வரைக்கும் உள்ள காட்டுவழியால் கண்ணை மூடிக்கொண்டு சொல்லும் இடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும்திறன் அவரிடமிருந்தது.

சின்னண்ணனின் பின்னால் வரிசையாக ஒருவர் பின் ஒருவராக நடந்தார்கள்.

இரவு பதினொரு மணியிளவில் தோப்பூரில் அவர்கள் செல்ல வேண்டிய வீட்டினை அடைந்தார்கள். நசீர் பள்ளிக்குடியிருப்பைச் சேர்ந்தவன் என்பதனால் வதூர் என அழைக்கப்படுகின்ற வதூர்தீனின் வீட்டினை அடையாளம் காண்பதற்கு வேறுயாரும் அவனுக்குத் தேவைப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசூர்தீன் இளக்கந்தைப்பண்ணையில் உள்ளவர்களுக்கு தேவை யான பொருட்களையெல்லாம் தோப்பூரில் வாங்கிக் கொண்டுபோய்க் கொடுப்பவன். அதற்கான பணத்தினை சிலநாட்களில் சுணங்கியும் கொடுப்பது முண்டு. இளக்கந்தைப்பண்ணையில் இருப்பவர்களுக்கே பொருட்கள் என்பது வசூர்தீனுக்கு தெரியாது. அவனும் பலதடவைகள் கேட்டிருக்கிறான். ஆனால் வசூர்தீனுக்கு ஒருபோதும் உண்மையைச் சொல்லவில்லை. "பொருட்கள் நல்லூரில் உள்ள தோழர்களுக்கு" என்றே கூறும்படி வசூருடன் தொடர்புடன் இருக்கும் தோழர் 'சிறுநீ'யிடம் நசீர் கூறியிருந்தான்.

வசூர்தீன் அவனாகவே வந்து நசீரின் பள்ளித்தோழன் அனலரசு மூலமாக நசீரிடம் நட்பினை வலிந்து ஏற்படுத்திக்கொண்டவன். வசூர்தீன் ஏழ்மையான ஒரு கூலித்தொழிலாளி. ஆனால் கடின உழைப்பாளி. எந்த வேலையானாலும் செய்து முடிப்பதில் விண்ணன். பள்ளிக்குடியிருப்பு, இத்திக்குளம் ஆகிய ஊர்களில் அவனுக்கு நண்பர்கள் நிறையப்பேர் இருந்தார்கள். நசீருடன் தொடர்பு கிடைத்து ஒருசில மாதங்களிலேயே வசூர்தீன் கொண்டா சீ50 வகை உந்துருளி வாங்கியிருந்தான். ஒருகூலித் தொழிலாளி உந்துருளி வாங்குவதென்பது நினைத்துப்பார்க்க முடியாத நேரமது. 'சார்லி' என்ற வகை உந்துருளி பத்தாயிரம் உருபாவிற்கு மூன்று வாங்கும் காலமது. வசூர்தீனிடம் "எப்பிடி உந்துருளி வாங்கினாய்" என நசீர் கேட்டபோது அவன் கூறியபதில் ஏற்றுக்கொள்ளும்படியாக இருக்கவில்லை. அவனுடன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதனை உணர்ந்தே வசூர்தீனுடன் எச்சரிக்கையாக இருக்குமாறு சிறுநீயிடம் கூறியிருந்தான்.

வசூர்தீனின் வீட்டுக்கதவு பூட்டியிருந்தது. வளவைச் சுற்றிவர முட்கம்பிவேலி இருந்தது. தெருப்பக்கமாக படலையிருந்தது. படலையைத் திறந்துகொண்டு உள்ளேசெல்ல வசூர்தீனின் நாய் குரைத்தது. பக்கத்தில் நிற்பவர்களுக்குக் கூட பக்கத்தில் நிற்பவர்கள் யாரெனத்தெரியாத இருள் சூழ்ந்திருந்தது.

வீட்டின் கதவைத்தட்டினான் நசீர். உள்ளிருந்து சத்தமில்லை. மீண்டும் தட்டினான். சத்தமில்லை. மீண்டும்மீண்டும் தட்டினான். சிலநிமையங்களில் தன்வீட்டுக் கதவுதான் தட்டப்படுகின்றது என்பதை நித்திரையிலிருந்து திடீரென கண்விழித்த வசூர்தீன் உணர்ந்தவனாக துடித்துப் பதைத்துக் கதவருகே சென்று கண்களை கசக்கிக்கொண்டு "இந்த நேரத்தில் யார்தட்டுகிறார்கள்" என எண்ணிக் கொண்டு கதவைத்திறந்தான். தனது வாழ்க்கையில் ஏற்படப்போகும் மாற்றத்தினை உணராதவனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவு திறக்கப்பட்ட மறுகணம் பாச்சா வீட்டினுள்ளே சென்று விட்டான். மணியண்ணனும் கரனும் வசூர்தீனின் இரு கைகளையும் இறுக்கமாக பற்றிப் பிடித்துக்கொண்டனர்.

நசீர் தன்னை வசூர்தீனிடம் அறிமுகப்படுத்திக்கொண்டான். வசூரின் இருதயம் துடிதுடித்தது. தனதாயுள் இன்றுடன் முடிவடையப்போகிறது என்பதை அவன் மனது கவலையுடன் சொன்னது. பறித்துக்கொண்டு ஓடித் தப்பினால் என்ன? ஒருகணம் மனது எண்ணியது. அதுவே சரியென்றும் பட்டது. மறுகணமே "எதற்கும் இவர்களிடம் கதைத்துப் பார்த்தால் விட்டு விடுவார்கள். நசீர் வீட்டில்வாங்கிய காசுக்காகத்தான் வந்திருப்பார்கள். காசைக்கொடுத்து சமாளித்துவிடலாம்" என மனதை மறுபக்கம் கொண்டு போனான். "பணம் வாங்குவதாயின் இப்படி கனபேர் வந்திருக்கமாட்டார்களே" வசூர்தீனின்மனம் பதறியது. பாச்சா உள்ளே சென்றதனை இந்த கும்மிருட்டில் வசூர்தீன் கண்டு கொள்ளவில்லை.

'பறித்துக் கொண்டு ஓடுவதே சரி' என அவனதுமனம் தப்பிக்க மீண்டும் வழி சொன்னது. தன்துணைவிக்கு என்ன ஆகுமோ என அந்நேரத்தில் அவன் கவலைப்படவில்லை. தான் தப்புவதே அவனது தேவையாக இருந்தது. தனது மனம் இறுதியாகக் கூறியதைச் செயற்படுத்த முடிவெடுத்து தன்முழுப் பலத்தையும் இரு கைகளுக்குள் கொண்டுவந்தான். விரைந்து செயற்படு என வசூரின் மனது அவனுக்குச் சொன்னது. இருதயம் முன்பைவிட அதிகமான வேகம் கொண்டு அடித்தது. அதிரனலின் சுரப்பியின் சுரப்புகள் அவனுக்கு எல்லோரையும் விட அதிகம் போலும். மனது பதறியது. கால்கள் முழங்காலுக்குக் கீழ் நடுங்கிக்கொண்டிருந்தது. கைகளும்தான்.

மூச்சைப்பிடித்து கைகளை இருவரிடமிருந்து விடுவிப்பதற்காக ஓர் உந்து உன்னினான். மணியண்ணிடமிருந்து வசூரால் தன்கையை விடுவிக்க முடிந்தது. ஆனால் கரனின்கை உடும்பாகியிருந்தது.

தன் ஒற்றைக்கையால் வசூரைப் பிடித்திருந்த கரன் வசூரின் தப்பித்தல் செயற்பாட்டினால் உண்மையில் நிலைகுலைந்துதான் போனான். ஆனால் "இருவரும் இறுக்கமாகப் பிடிச்சு வைச்சிருக்கோணும். வசூர் தப்பிக்கப் பாப்பான்" என நசீர் ஏற்கனவே எச்சரிக்கை செய்திருந்தமையினால் எக்கணமும் வசூரின் மீதே கரனின் கரிசனை இருந்தது. மணியண்ணன் வசூரின் வலது கையினைப் பற்றியிருந்ததனாலோ என்னவோ அக்கணத்தில் வசூரின் பலத்திற்கு அவரால் ஈடுகொடுக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியண்ணனிடமிருந்து கை விடுவிக்கப்பட்டு விட்ட தென்பதனை உணர்ந்த கரன் வதூர்தீன் எதிர்பாராத வகையில் அவனது கழுத்தைத் தன் இடதுகையால் கோர்த்துப்பிடித்து தனக்கு முன்பக்கமாகக் கொண்டுவந்து வதூரின் தலைமுடியைப் பிடித்து கீழேயிருத்தி அமர்த்திப் பிடித்துச் சுழன்றான். வதூர் இதனை எதிர்பார்த்திருக்கவில்லை. மணியண்ணன் விரைந்து வதூரின் முகத்தில் பளார் பளார் என இரு கன்னங்களிலும் அறைந்தார். விரைந்து கரனுடன் இணைந்து செயற்பட்டார். இனியும் இவர்களிடமிருந்து தப்பிக்க முடியாது என்பதை தீர்மானித்து விட்டான் வதூர்தீன்.

வதூரின் துணைவியுடன் பாச்சா வெளியே வந்தான். கையில் குப்பிவிளக்கினை ஏந்திப்பிடித்தவாறு என்ன நடக்கிறது என்பது இம்மியளவும் தெரியாதவளாக வதூரின் துணைவி ஆபிதா தன் கண்களைக் கசக்கிக் கொண்டு முற்றத்திற்கு வந்தாள். தன்துணைவரை சுடுகலன்களைத் தோள்களில் ஏந்திய இருவர் தரையில் இருத்தி அமர்த்திப்பிடித்து வைத்திருப்பதைக் கண்டபோது உலகம் இருண்டது. "அல்லாவே" என சத்தமிட்டாள். அவளுக்கு முன்னால் துப்பாக்கியினை நீட்டி 'சத்தம் போடக்கூடாது' என்பதனை கை மூலமாகத் தெரிவித்தார் சின்னண்னன். ஆபிதா அக்கணத்திலிருந்து வாய்திறக்க வேயில்லை.

கமல் தன்முதுகிலே தொங்கிக் கொண்டிருந்த உமலிலேயிருந்த நைலோன் கயிற்றினை வெளியேயெடுத்து வதூரின் இரு கைகளையும் பின்பக்கமாக பிணைத்துக் கட்டினான். கறுத்தத்துணியினால் கண்களைக் கட்டினான்.

ஆபிதா அருகே சென்ற நசீர் "பயப்பிடவேணாம். அவர ஒண்டும் செய்யமாட்டம். சின்ன விசாரணைதான். அவர் ஒத்துழைச்சாசரி. உண்மயச் சொன்னாச்சரி. உங்கள்ல ஆசயிருந்தா, உயிரில ஆசயிருந்தா அவர் எங்களுக்கு ஒத்துழைப்பார் எண்டு நம்புறன்" எனக்கூறி ஆபிதாவையும் சத்தம்போடாது நடக்குமாறு கடினமான குரலில் கட்டளையிட்டான்.

"மென்மையான மனிதனாக இவ்வளவுநாளும் கண்ட நசீரா இவன்? அருகிலிருப்பவர்களுக்குக் கூடக்கதைக்கின்ற சத்தம் கேட்காத சத்தமுடைய நசீரா இவ்வளவு கடினமான சொற்களுக்குச் சொந்தக்காரன்" என அவனுடன் கூட வந்தவர்கள் ஆச்சரியத்துடன் வியப்புமடைந்தார்கள்.

எந்தநேரத்தில் எவ்வாறு நடக்கவேண்டும் என்பதையறிந்து நடந்து கொள்வதனால் தான் அவர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறான வழிகாட்டிகளை தனிப்பட்டவகையில் போற்று வதாலும் தலையில் தூக்கி மெச்சுவதாலும் அவர்கள் தலைவராகின்றார்கள். அவ்வாறு தலைவர்களாக ஆக்கப்படும்போது அவர்களை அறியாமலேயே அதிகார மனநிலை ஏற்பட்டு மற்றவர்களை தங்களுக்குக் கீழானவர்களாக எண்ணும் எண்ணம் தோன்றுகிறது. தனிநபர் வழிபாட்டினை அந்தத்தலைவர்கள் விரும்பி ஏற்கத் தோன்றுகின்றது. இந்தஇடத்தில்தான் ஒரு குழுகாயத்தில் சமனற்றநிலை உருவாவதற்கான வித்து இடப்படுகின்றது.

அந்தத்தலைவரை சுற்றிவர சிலர் சூழ்ந்து மெய்குளிரப்பொய் வார்த்தைகள்கூறி உச்சி மகிழவைப்பதனால் வால்பிடிக்கும் கூட்டத்தின் பசப்புவார்த்தைகளுக்கு பழகிவிடுகிறார்கள்."

ஏனையவர்கள் தலைவரிடமிருந்து தூரத்திற்குச் சென்றுவிடுவது டன் சிலருக்கு மாத்திரமே தலைவர் உரிமையானவராக மாற்றப்பட்டு விடுகின்றார். இதனால்தான் "தனிநபர் வழிபாடு என்பது இல்லாதொழிக் கப்பட வேண்டியது முதன்மையான செயற்பாடாகும்" என அனைவரும் புரியக்கூடிய வகையில் அன்னலிங்கம் ஐயா கூறியவற்றை நசீர் தோழர்களுக்கு வகுப்பெடுக்கும் வேளைகளில் கூறுவது வழக்கம்.

தோப்பூர் சந்திசென்று பள்ளிக்குடியிருப்பை நோக்கி நடந்தார்கள். கைகள் பின்பக்கமாக கட்டப்பட்டும் கண்கள்கட்டப்பட்டும் இருந்த வதூர்தீன் தெருவெங்கும் தட்டுத்தடுமாறி மெதுமெதுவாக நடந்தான். அவனது தோள்ப்பட்டையில் கரனது கைகள் உறுதியாகப்பற்றி வழிகாட்டிக் கொண்டிருந்தன. அவனது துணைவியும் சத்தமின்றி கண்களில் நீர் வழிந்தோடியவளாக மனதில் என்னென்னவோ எல்லாம் எண்ணிக்கொண்டு பின்னால் நடந்து கொண்டிருந்தாள்.

சிறிதுதூரம் சென்றவர்கள் இடதுபுறமாகத்திரும்பி உல்லைக் குளத்தையடைந்து சிறிதுநேரம் அவ்விடத்தில் நின்றார்கள். ஆபிதா களைத்திருப்பதனை நசீர் உணர்ந்திருந்தான். நல்லூருக்குச் செல்லும் வழியினால் சென்றவர்கள் இடதுபுறமாகவுள்ள காட்டிற்குள் சென்றார்கள். ஈச்சமரக்காடாக இருந்த அந்தப்பற்றைக்காடு சற்றுத்தூரம் உள்ளே சென்றதும் அடர்ந்தகாடாக இருந்தது. அந்தக்காட்டிலே கிடுகினால் வேயப்பட்ட இரண்டு சிறியகுடிசைகள் மரங்களின் கீழ் அமைக்கப்பட்டிருந்தன.

ஒரு குடிசையில் வதூரைக் கூட்டிச்சென்று கைகள் அவிழ்க்கப் படாமலேயே குடிசைமுன்னால் நடப்பட்டிருந்த பெரியதொரு மரக்கப்பிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டினான் கரன். ஆபிதாவையும் அந்தக்குடிசையில் இருக்குமாறு கூறினான். சுடுகலனை ஏந்தியவாறு குடிலின் முன்னால் கிடந்த ஒருகட்டையில் குந்தி விழித்திருந்தான் கரன்.

நேரம் அதிகாலை மூன்றைக் கடந்திருந்தது. கரனும் நசீரும் விழித்திருக்க ஏனையவர்கள் நித்திரையானார்கள். வதூர் நித்திரைக்கு அநுமதிக்கப்படவில்லை. எனினும் கட்டியிருந்த கப்பிலே சாய்ந்தவாறு இருந்தவன் நித்திரையாகிப் போனது அவனுக்கே தெரியாது. ஆனால் நாலரைமணிவரை விழித்திருந்திருப்பான்.

ஆபிதாவிற்கு அச்சத்திலும் கவலையிலும் நித்திரை வரவில்லை.

காலைக்கடன்களை காட்டிலுள்ள மரங்களின் மறைவிலே முடித்துவிட்டு உல்லைக்குள வாய்க்காலிலே கழுவ வேண்டியதையெல்லாம் கழுவி விட்டுவந்த நசீர், பாச்சா கொடுத்த தேநீரை குடித்தபின் வதூர்தீன் அருகிலே வந்தான்.

மூத்திரம் மாத்திரம் பெய்த வதூர் மீண்டும் கட்டப்பட்டிருந்தான். ஆனால் பின்னால் பிணைத்துக்கட்டியிருந்த கைகள் அவிழ்க்கப்பட்டிருந்தன. இருகைகளும் தனித்தனியாகக் கட்டப்பட்டு இருபுறமும் குடிசையில் அமைக்கப்படுவதற்காக நடப்பட்ட சிறியதடிகளிலே கட்டப்பட்டிருந்தன. அவ்வாறே கால்களும் தனித்தனியாகக் கயிற்றினால் கட்டப்பட்டு இருபுறமுமுள்ள தடிகளுடன் கட்டப்பட்டிருந்தன.

ஆபிதா அச்சத்தில் நடுங்கிக் கொண்டிருந்தாள்.

வதூர்தீன் அருகே வந்தநசீர் காயாவைப் பார்த்து சிரித்தான். வதூர்தீனுக்கு சிரிப்பு வரவில்லை. அவன்மனது அச்சத்தால் துடித்தது. நசீரது முகத்தை வெட்கத்தினால் அவனால் பார்க்கமுடியாது குனிந்து கொண்டான். நசீர் தன் வலதுகை விரல்களால் வதூரின் முகத்தை மேலே தூக்கிப் பார்த்து மீண்டும் சிரித்தான்.

"அண்ண அவங்கள ஒண்டும் செஞ்சராதீங்க.. அவர்என்ன பிழசெஞ்ச எண்டாலும் பொறுத்துக்கொள்ளுங்க. இனிஅவர் அப்பிடி செய்யாம நான் பாத்துக்கிடுவன்.." நசீரைப் பார்த்துக் சிறிபிள்ளை போல் தன்துணைவனுக்காக கெஞ்சினாள் ஆபிதா

மீண்டும் வதூரைப் பார்த்துச்சிரித்தான் நசீர். எதுவுமே கதைக்காது சிரித்த நசீரின் செயற்பாடு வதூரை அச்சமூட்டியதுடன் இன்றுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்வாழ்வு முடியப் போகின்றது, தன்னுடன் தன்துணைவியும் அநியாயமாக சாகப்போகிறாள் என்ற கவலையும் அவனை ஆட்கொள்ளத்தொடங்கியது.

ஒருவர் செய்தும் தவறுகளும் பிழைகளும் தன்னுடன் முடிந்து விடப் போவதில்லை என்பதனை ஆபிதாவின் மூலம் உலகிற்கு உணர்த்தப் பட்டுக்கொண்டிருந்தது. எதுவுமே தெரியாத ஓர்அப்பாவிப் பெண்ணான ஆபிதா இன்று முட்களும் கற்களும் நிறைந்த தெருக்களால் இரவிலே நடந்துவந்து அடர்ந்த காட்டினில் அந்நியர்களில் நடுவிலே பெருங்காட்டிலே புலிகளின்நடுவே அகப்பட்ட மானைப் போல தன்னந்தனியளாக, சுற்றியிருப்பவர்கள் என்ன செய்வார்களோ என்று சிறிதும் அறியாதநிலையில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறாள்.

உண்மையில் வதூரின் முகத்தையும் அவனது அந்நேரச் செயற்பாடுகளையும் அவதானித்து இரசித்துக் கொண்டிருந்தான் நசீர்.

"ஆபிதா கவனமாக்கேள். இவரயோ உன்னையோ நாங்க ஒண்டும் செய்யப் போறதில்ல. ஆனா நான் கேக்கிறதுக்கு பொய்யாகப்பதில் சொன்னால் இவர் உன்னோட வரமாட்டார். எங்கள ஏமாத்தோணும் எண்டு நினைச்சா அது அவர் தன்னைத்தானே ஏமாத்திறதுக்கு சமம். நாங்க வதூரை சும்மா கூட்டிவரல்ல எண்டது அவருக்குத்தெரியும். குடும்பம் எண்டா பொஞ்சாதிக்கும் புருசனுக்கும் ஒண்ணும்விடாம எல்லாம் தெரியணும். அதுதான் வாழ்க்கை. ஆனா வதூரிட்ட இன்னொரு பக்கமும் இருக்கு. அது உனக்குச் சொல்லியிருக்கமாட்டார். என்ன சொல்லுறா?"

"இல்ல அண்ண.. எனக்கு ஒண்டும் தெரியா அண்ண" தழுதழுத்த குரலில் கூறினாள்.

"மற்ற ஆம்பிளகள்ற முகத்த பாக்கிறதுக்கு இஸ்லாமியப் பொம்பிளகள் விரும்பிற இல்ல எண்டு எங்களுக்குத்தெரியும். ஆனா எங்களுக்கு வேற வழியில்லாமத் தான் உன்னக்கூட்டி வந்திருக்கிறம். என்னை உன்ர அண்ணனாவே நினைச்சுக் கொள். உனக்கு எந்தச்சிக்கலும் வராது. பயப்பிடாமஇரு."

ஆபிதாவின் மனதில் பால் வார்த்ததுபோன்று இருந்தது நசீரின் வார்த்தைகள். அவளதுமனதில் புதுத்தெம்பு ஏற்பட்டது. விழியோரத்தில் வந்து கொண்டிருந்த நீர் மெதுமெதுவாக இல்லாதுபோனதை நசீர் அவதானித்தான்.

"வதூர்தீன் சொல்லு. ஏன் என்னைக் காட்டிக்கொடுத்தனி?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப் படுத்துவதற்காக நேரடியாகவே கேட்டான். வசூரை நிலையகுலைய வைத்தது நசீரின்கேள்வி. உண்மைசொல்லுவதா பொய்சொல்லுவதா என சிந்தித்தவன் "நான் காட்டிக் கொடுக்கல்லயே" என்று அவனது வாயிலிருந்து வார்த்தைகள் வருவதற்கு முன்பே 'பளார்.. பளார்' என நசீரின்வலதுகை வசூரின் கன்னத்தைப் பதம் பார்த்தது.

'ஐயோ...செல்லித் தொலயுங்களன். அடி வேங்கியா சாவப்போறீங்க' ஆபிதா அழுதழுது கூறினாள்.

வேறு வழியின்றி உண்மைகளைச் சொல்லவேண்டிய நிலைக்கு வந்தான் வசூர்தீன். உண்மைகளைத் தெரிந்தே வந்திருக்கிறார்கள் என்பது வசூர்தீனுக்குப் புரிந்தது.

சுரேஸ்காசிம் திருக்கோணமலையில் தன்னைச்சந்தித்தது தொடக்கம் போராளிகளைப் பற்றிய தகவல்கொடுத்தால் அதற்காக கொடுப்பனவுகள் வழங்குவதுவரை ஒப்புவித்தான். தோப்பூரில் ஊர்காவல் படையொன்றை அமைத்திருப்பது பற்றிய புதுத்தகவலையும் கூறினான். அந்த ஊர்காவல்படைக்கு தான்தான் தலைவன் என்பதையும் ஆறுபேர் இதுவரை சேர்க்கப் பட்டிருக்கிறார்கள் என்பதையும் அவர்களின் பெயர் விபரங்களையும் ஒன்றுவிடாமல் கூறினான்.

சுரேஸ்காசீம் எவ்வாறு பயிற்சிகள் வழங்குகிறான், எவ்வாறு இஸ்லாமிய சகோதரர்களை தன்வலையில் வீழ்த்துகிறான், எப்படியான அணுகுமுறையினைக் கடைப்பிடிக்கிறான் என்பதையெல்லாம் வசூர்தீன் மூலமாக தெரிந்து கொண்டான்.

"உங்கள விடுறதுக்கு எண்டுசொல்லி உங்கடவீட்ட அடிக்கடி போய் உங்கட அம்மாட்ட ஐம்பதாயிரம் வாங்கினனான். அதோட உங்களுக்குச் சாப்பாடு வாங்கிக்கொடுக்கிறன் எனக்கூறி ஏழாயிரமும் வாங்கிருக்கிறன்" என்ற புதுத்தகவலையும் கூறினான். நசீருக்கு தூக்கி வாரிப் போட்டுவிட்டது.

அம்மாவின் அப்பாவித்தனம்தான் அவனது கண் முன்வந்துநின்றது.

அம்மாக்கள் தங்கள்பிள்ளைகள் என்றால் அப்படித்தான் இருப்பார்கள் என்று பிள்ளைமனம் எண்ணியது. தன்பிள்ளை போராடப் போய் பல ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதுகூட அறியாதவளாக அம்மா இருக்கிறாள். அதனால் அம்மா அப்படித்தான் தன்பிள்ளைக்காகச் செய்வாள் என்பதை உணர்ந்தான் நசீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் தம்பலகமம் போனது உனக்கு எப்பிடித்தெரியும்? அங்க சின்னத்தம்பி அண்ணன்ர வயல்லதான் வேலசெய்யிறம் எண்டு எப்பிடித்தெரியும்?"

நசீரின் கேள்வி வசூர்தீனை திக்குமுக்காடச் செய்துவிட்டது. அவன் எதிர்பார்த்திருக்காத கேள்வியது. என்ன சொல்வதென்பது தெரிய வில்லை அவனுக்கு. உண்மையைச் சொல்லமுடியாது. சொல்லாமலும் இருக்கமுடியாது. நிதானமான கேள்விகள் கேட்கப்படுகின்றன என்பதை உணர்ந்த வசூரின் கண்களில் இருந்து முதல்தடவையாக நீர் கசிந்தது.

பதில் கூறும்வரை அமைதியாகக் காத்திருந்தான் நசீர். தன் உதடுகளை சொல்வதற்கு உன்னுவதும் வாரத்தைகள் வராது அந்தஉதடுகளை மடிப்பதுமாக சிலநிமையங்கள் அவனதுமனம் அல்லோல கல்லோலப் பட்டது. மனதினைத் திடப்படுத்திக்கொண்டு ஒருவாறு ஒவ்வொரு எழுத்தாக யார் கூறியது என்பதைக் கூறிமுடித்தான்.

"அனலரசு"

அதிர்ந்தே போனான் நசீர். கனவிலும் எதிர்பார்த்திராத பெயர் அது அவனுக்கு.

அனலரசுவும், ஆபரனும் சிறுவயதிலிருந்தே நெருங்கிய தோழர்கள். எலும்பும் சதையும் என்று கூறுவார்களே. அதற்கு இலக்கணமாக பள்ளிக்குடியிருப்பில் விளங்கியவர்கள். இருவரும் பலஸ்தீனத்திற்கு பயிற்சிக்குச் செல்வதாக இருந்தது. ஆனால் அனலரசு தன்தாயின் சுகயீனத் தினால் அவரைக் கண்டி மருத்துவமனைக்கு குறிப்பிட்ட நாளில் கூட்டிச் செல்ல வேண்டியிருந்ததனால் போகமுடியாமல் போய்விட்டது. ஆபரன் பயிற்சிக்குச் சென்றுவிட்ட சில மாதங்களில் அனலரசு அமைப்பின் தொடர்புகளை முற்றாகத் துண்டித்துவிட்டான். தானுண்டு தன்பாடுண்டு என வாழத் தொடங்கிவிட்டான். தன்அம்மா படுத்த படுக்கையாகக் கிடந்தமையினால் அவரை மருத்துவமனைக்குக் கூட்டிச்செல்வதும் அவரை வீட்டில் வைத்துப் பராமரிப்பதுமே அவனது வேலையானது.

ஆபரன் மீண்டும் ஊர்திரும்பியதும் அனலரசைச் சந்தித்து கதைத்தபோது அனலரசு ஆபரனை முகம்பார்த்து கதைக்காதது ஆபரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. தன்தாயின் நிலையினைத் தெளிவுபடுத்தினான்.

ஆபரன் குமுகாயத்தைப்பற்றியும் போராட்டத்தைப்பற்றியும் கதைக்கத் தொடங்கியபோது இடைமறித்து அவற்றினைப்பற்றி தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கக்கூடிய மனநிலையில் இல்லை என்று கூறிவிட்டதுடன் இனியும் அமைப்புவேலைகளில் ஈடுபடும் எண்ணம் இல்லை என்பதையும் தெளிவாக தெரிவித்தமையினால் அவனிடமிருந்து விலகியிருந்தான் ஆபரன்.

எனினும் பள்ளிக்குடியிருப்பிற்கு செல்லும்போது தன் பள்ளித் தோழனிடம் சென்று அவனது சுகம் விசாரித்து ஒருகுவளைத் தேநீராவது அவன்வீட்டில் குடித்து விட்டுத்தான் போவான் ஆபரன்.

அப்படித்தான் அன்றும் தம்பலகமம் போவதற்கு முன்னர் அனலரசு வீட்டிற்குச் சென்று வயல்வேலைக்குத் தான் செல்வதாகவும் அமைப்பிலுள்ள தோழர்களின் நாளாந்த தேவைகளுக்கு நிதி தேவைப் படுவதனால் அதனைச் சமாளிப்பதற்கு சின்னத்தம்பிஅண்ணன் வயலில் வேலை செய்வதற்கு வேலாயுதம் அண்ணனுடன் போவதாகக் கூறிச் சென்றது நினைவிற்கு வந்தது நசீருக்கு.

நசீரால் நம்ப முடியவில்லை. விரிவாகக்கேட்டான். தன்னை சுரேஸ்காசீமுடன் தொடர்பினை திருக்கோணமலையில் வைத்து ஏற்படுத் தியதே அனலரசு எனக் கூறினான் காயாமுகைதீன்.

உயிருக்கு உயிராக பழகியவன் எப்படி இப்படி மாறினான். அவனுக்கு என்ன நடந்தது? கண்டுபிடிக்க முடியவில்லை. தன்பள்ளித் தோழனை எண்ணி மனம்நொந்தான். வெளிக்காட்டிக் கொள்ளாத நசீர் வசூரிடம் தொடர்ந்தான்.

"எங்கட போராட்டம் உங்களுக்கும் சேர்த்துத்தான். நாங்க உழைக்கிற மக்களுக்காக போராடுறம். நீங்களும் நாங்களும் வேறுவேறானவர்களில்லை. நாம் அனைவரும் ஒன்றாக இருக்கவேணும் என்றதுதான் எங்கட விரும்பம். வசூர் இனிமேல் நீ எமக்குப் பயன்படப்போவதில்லை. ஆனால் அவர்களுக்கும் நீ பயன்படக்கூடாது. கொஞ்சம் யோசிச்சிப்பார். நீ அவங்களுக்கு வேலை செய்யிறதால உனக்குக் காசு தருவாங்கதான். எவ்வளவு நாளைக்கு தருவாங்க? சுரேஸ்காசீம் இருக்கிற வரைக்கும்தான். அதுவரைக்கும் கிடைக்கும் எண்டும் சொல்லஏலா. பிறகு நடுத்தெருவில நிப்பாய் நீ. உழைக்காம வாழ்றதுக்கு இஸ்லாம் உன்ன சொல்லல்ல. சரிஆ சட்டத்த மதிச்சுநட. பார் உன்ர துணைவிட பேர் ஆபிதா. ஆபிதா எண்டா என்ன?"

"எனக்குச் சரியாத் தெரியல"

"ஆபிதா எண்டா 'வணங்கக் கூடியவள்' எண்டு பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பிடியான ஆளத்தான் நீ கட்டியிருக்கிறா. உழைச்சிவாழு. நீ போய் எங்கட அம்மாட்ட வேற காசு வாங்கியிருக்கா. உனக்குத் தெரியும், நான் அங்க இல்லையெண்டு. நான் செத்திற்றன் எண்டுதான் அவனுவள் சொல்லியிருப்பானுவள். இல்லயா?"

"ஓம்..." தலையாட்டினான்.

"எனக்குத் தெரியும். அவங்கள் அப்பிடித்தான் சொல்லியிருப்பாங்கள்." எனக் கூறியவன், தான் எப்படித்தப்பியது என்பதையும் எவ்வளவு துன்பங்களை தான் அனுபவித்தான் என்பதையும் இருவருக்கும் கூறினான்.

"உயிரின் பெறுமதி எங்களுக்குத்தெரியும். அம்மா தன்ர பிள்ளயப்பெத்து வளக்கிறதுக்கு படுறபாட்ட நாம எண்ணணும். நம்மட மக்கள் படுறபாட்ட நாம எண்ணணும். நாம இந்தமக்களோட வாழ்றஆள் என்றத நாமஉணரோணும். உன்னக்கொல்றதால எங்களுக்கு ஏதாவது நன்மை கிடைக்கும் எண்டா கொண்டு போட்டுப்போகலாம். ஆனா உனக்கெண்டு நீ உன்ர மனசில வளத்திருக்கிற ஆச யெல்லாம் ஆருக்கும் தெரியாது. அதுகள் உனக்கு மட்டும்தான் தெரியும். உன்ர துணைவிக்கும் நீ சொல்லி இருக்கமாட்டா. நீ மகிழ்ச்சியா வாழணும். அதால நீயேசொல்லு என்ன செய்யப்போறா எண்டு"

சிறிது நேரம் அமைதியானார்கள் மூவரும்.

காலையுணவு இளக்கந்தைப் பண்ணையிலிருந்து நாகேஸ்வரன் அண்ணன் கொண்டு வந்திருந்தார். அவர் மாலுக்குக்கிட்ட வரவில்லை. பாச்சா அவரிடம்சென்று வாங்கிவந்தான்.

நசீர் அவர் நிற்குமிடம் சென்று அவருடன் பண்ணை விடயமாக நீண்டநேரம் கதைத்துவிட்டு வந்தான். தான் நாளையிரவு அங்கு வருவதாக கூறி அவரிடமிருந்து விடைபெற்றதும் நாகேஸ்வரன்அண்ணன் பகல்ச் சாப்பாடு கொண்டுவாறன் எனக்கூறிப் பண்ணைக்குச் சென்றுவிட்டார்.

காலையுணவினை உண்ணுவதற்காக வசூரின் வலது கையினை அவிழ்த்து விட்டான் கரன். ஆபிதா சாப்பிடவில்லை. பசிக்கவில்லை என்றாள். மனதை அமைதிப்படுத்திக்கொண்டு சாப்பிடுமாறு நசீர்கூறச் சாப்பிட்டாள். சோறும் பருப்புப்போட்ட ஆணமும் தேங்காய்ப்பூச் சம்பலும் காலையுணவாகக் கொடுத்தார் கள்..

காலையுணவு முடிந்ததும் கைகள் கட்டப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் என்ன செய்யவேணுமெண்டு நீங்களே சொல்லுங்க" அருகில் நசீர் வந்தமர்ந்ததும் வசூர்தீன் கேட்டான். சிரித்தான் நசீர். "சுரேஸ்காசீமிடம் தொடர்ந்து பணியாற்றப் போறீயா?"

"இல்லை" என்பதை உணர்த்த வேகமாத் தலையாட்டினான். அவனது தலையாட்டல் உண்மையானதென்பதை நசீர் உணர்ந்தான்.

"சுரேஸ்காசீமின் தொடர்பு இல்லாமல் நீ போய்த்தோப்பூரில் இனி வாழஏலா. ஆப்பில மாட்டின குரங்குட நிலதான் உன்ரநில இப்ப. அவனுக்கு வேல செய்யாட்டி அவனால உனக்குச்சிக்கல். அவனுக்கு வேலசெய்தா எங்களாலசிக்கல். நான் ஒருயோசனை சொல்றன். உன்னால ஏலுமா எண்டு யோசி. தோப்பூர விட்டிற்று வேற எங்கயாவது தூரஇடத்தில போய் வாழ ஏலாதா?" வசூரிடம் பக்குவமாக நசீர் கேட்டான்.

"எங்கட தூரத்துச் சொந்தக்காரங்க குருணாகல்ல கிண்ணியம எண்டஇடத்தில இருக்காக. அங்கபோய் அவங்கட்ட நிலமயச் சென்னா உதவிசெய்வாங்க. அங்க நமக்கு ஏண்ட தொழிலச் செஞ்சிட்டு இரிக்கலாம்" ஆபிதா வழி சொன்னாள்.

வசூர்தீனுக்கும் ஏற்புடையதாகவே அபிதாவின் யோசனை தோன்றியது.

"அங்க போறதுக்கு முதல்ல உங்கடஅம்மாட்ட வேங்கின காசெல்லாம் குடுக்கோணும். அதுக்கு எனக்கு ரெண்டுநாள் அவகாசம்தாங்க. அல்லா சத்தியமா செல்றன். நான் தப்பிச்சிறதுக்காண்டி செல்லல்ல"

"எப்பிடிக் குடுப்பா?"

"அம்மாகுடுத்த காசில நாப்பத்தஞ்சாயிரம் மிச்சமாஇரிக்கு. மிச்சத்தக்கு என்ர உந்துருளிய வித்துப்போட்டு குடுப்பன்"

"என்ரசங்கிலிய வித்துப்போட்டு குடுங்களேன். உந்துருளி நாம தொழில் செஞ்சிறதுக்கு உதவும்" ஆபிதாவின் எண்ணங்களும் சிந்தனைகளும் ஆக்கபூர்வ மாக இருந்ததை நசீர் அவதானித்தான்.

உடனடியாக விரைந்து சில நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டிய அவசியத்தை உணர்ந்தான் நசீர்.

தோழர்கள் இருந்த மாலுக்குள் வந்தநசீர் தன்தோழர்கள் எல்லோரையும் மாலுக்குள் அழைத்தான். வசூரின் வாக்குமூலத்தைப் பகிர்ந்து கொண்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தோப்பூரில் ஊர்காவல்படை ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது'.

'தன் ஆருயிர்த்தோழன் அனலரசு படையின் முகவராகச் செயற்படுகிறான்'.

'சுரேஸ்காசீம் வேகமாகச் செயற்படுகிறான். இது ஆபத்தினை நமக்கு ஏற்படுத்தும்'.

'வதூர்தீன் திருந்தி தன்துணைவியுடன் வேறிடம்சென்று வாழ்வதற்கு விரும்புகிறான்'.

நான்கு விடயங்களைப் பற்றியும் கலந்துரையாடினார்கள்.

"அனலரசை போடுவமா?" கரன் ஆவேசப்பட்டான். நசீர் சாவாற்றுப் பண்ணையில் ஓய்வான நேரங்களில் கரனிடம் தனது சிறுபராயத்து செயற்பாடுகளை பகிர்ந்துகொள்வான் அவ்வேளைகளில் அனலரசுவும் தானும் சிறுவயதிலிருந்து எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதைக் கூறுவான். நசீரின் கதைகள் மூலமாக அனலரசு மீது தன்னையறியாமலேயே மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டிருந்தது கரனுக்கு.

"அனலரசு சும்மா அகப்பட்டிருக்கமாட்டான். அதற்காக சும்மா வாளாதிருக்க ஏலாது. என்ன செய்யவேண்டுமென யோசித்து ஒரு முடிவுக்கு வருவம்." நசீர் பதிலளித்தான்.

"வதூரின் துணைவிஆபிதா கூறியது சரியானயோசனை. அவங்கள அங்கபோய் இருக்கச் சொல்றதுதான் நல்லது. தேவையெண்டா நாமளும் சின்னதா உதவி செய்துவிடலாம் அவங்களுக்கு" மணியண்ணன் தனது மனிதாபிமானத்தை வெளிக்காட்டினார்.

"தோப்பூரில ஊர்காவல்படை உருவாக்கப்பட்டிருப்பது நமக்கும் நம்மட செயற்பாடுகளுக்கும் சிக்கலஏற்படுத்தும். அதால அவங்கள இல்லாம ஆக்கோணும்" பாச்சா கூறிவிட்டு அதனை எப்படிச்செய்ய வேண்டும் என்றும் கூறினான்.

"அனலரச நாம பிடிச்சுக்கொண்டு போறதுதான் நல்லது என எனக்குப்படுது" நசீர் கூற ஏனையோர் விளித்துப் பார்த்தனர்.

"நமது இடங்களையெல்லாம் பார்த்துவிட்டு ஓடிப்போய் சொல்லி விடுவானே" என அவர்களதுமனம் சொல்லியதை நசீரின்மனம் புரிந்து கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அனலரசு ஏதோ சிக்கலில் இருக்கவேண்டும். அவன் அப்படிச் செய்யிறஆள் இல்ல. பாப்பம். நான் அத தனியா கையாள்றன்" கூறிய நசீரின் கருத்தை அரை மனதுடன் ஏற்றனர்.

கரனை மறுநாள் அதிகாலை ஐந்துமணியளவில் தனது கைத்துப்பாக்கியையும் கொடுத்து வதூரையும்ஆபிதா வையும் தோப்பூருக்கு அனுப்பி வைத்தான் நசீர்.

மாலையில் தனியாளாகத் திரும்பிவந்தான் கரன். ஆபிதாவின் சங்கிலியை விற்று நடுப்பகலளவில் பள்ளிக்குடியிருப்பிலே உள்ள நசீரின் வீட்டிற்குச்சென்று அம்மாவிடம் வாங்கியபணம் முழுவதையும் கொண்டுபோய் வதூர்தீன் கொடுத்திற்று வந்தான் என்பதையும் அடுத்த கிழமை இருவரும் கிண்ணியம போகப்போவதாகக் கூறியதாகவும் கரன் நசீரிடம் சொன்னான்.

"வதூர் மூலமாகப் பலதகவல்கள் கிடைத்திருப்பது நல்லது" என நினைத்துக்கொண்டான் நசீர்.

தன்னுடன் வந்த தோழர்களை சாவாற்றுக்குச் செல்லுமாறு கூறியவன் மூன்றுநாள் கழித்து மீண்டும் தோப்பூர் வருமாறும்கூறி அனுப்பிவிட்டு இளக்கந்தைப்பண்ணை நோக்கி நடந்தான் நசீர்.

"எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டையே..." என்ற கருத்தாளம் கொண்ட இனிமையான திரைப்படப்பாடல் அவன் மனதில் இசைத்துக்கொண்டிருந்தது.

இளக்கந்தைப்பண்ணை பார்ப்பதற்கு அழகாக இருந்தது. சல்லியில் இருந்து தேவையான உணவுப்பொருட்கள் வருவதாக தெரிவித்தனர். தூர நோக்குடனான திட்டங்கள் பாதுகாப்பான முறையில் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதில் அமைப்பின் தோழர்கள் உறுதியாக இருந்தனர். நசீர் பம்பரமாக மாவட்டம் முழுவதும் சுழன்று வருவது அவர்களுக்கு மகிழ்சியைக் கொடுத்தது.

இரண்டுநாட்களும் மூதூர்பிரதேசத்தில் செயற்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகளைப் பற்றியே கதைத்தார்கள். கதிரவெளியினையும் திருக்கோணமலை மாவட்டத்துடன் இணைத்துச் செயற்படுமாறு மட்டக்களப்பு நிருவாகத்தினர் கோரியிருப்பதை சாதகமாகப் பரிசீலித்தனர்.

"கதிரவெளியில் மகாவலிகங்கை ஓரமாக ஒருபண்ணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கிறதோட மீன்பிடித்தொழிலிலயும் கவனம் செலுத்த வேணும். அதோட பிரத்தியேகக்கல்வி நிலையம் ஒண்டயும் அங்க அமைக்கவேணும். இந்தமூணு செயற்பாடுகளையும் வச்சித்தான் பிறகு அங்க நமது செயற்பாடு களச் செய்யோணும்." நசீர் அறிவுரை வழங்கினான்.

"வெருகல் முகத்துவாரத்திலதானே தோழர் சிவாநந்தம் நிக்கிறார். அவர கதிரவெளியிலயும் வேல செய்யச்சொல்லுவம்." நாகேஸ்வரன் அண்ணனின் கருத்தை முடிவாக ஏற்றுக்கொண்டார்கள்.

மூன்றாவதுநாள் காலையில் சல்லிக்கு படகில் போனான் நசீர். உதயப்பா நசீரைப் பார்த்து மகிழ்ந்தார். பிளான்ரன் பொயின்றில இருந்து தப்பியதை முழுமையாகக் கூறியவன் "நீங்க அங்காலப் பக்கத்தப் பற்றிச் சொல்லித் தந்ததுதான் அண்ண எனக்கு தப்பிறநேரத்தில பெரிய உதவியா இருந்திச்சு" என்றுகூற அவருக்கு உச்சிகுளிர்ந்தது.

"இந்தமுறை கணவா நல்லாப்பிடிபடும் தம்பி. உங்கட வேலை களுக்கு பிரயோசனமா இருக்கும்" என உதயப்பா நம்பிக்கை ஊட்டினார்.

உதயப்பா கொடுத்த பணத்தைப் பெற்றுக்கொண்டு மீண்டும் மீன் பிடிப்பவர்கள் போன்று படகில் சூடைக்குடாவில் கரையேறி அங்கிருந்து இளக்கந்தைக்கு மாலை ஆறுமணிக்கெல்லாம் வந்துவிட்டான்.

இளக்கந்தை வந்தவன் தாமதிக்கவில்லை. உடனடியாக இளக்கந்தைப் பண்ணையில் தங்கியிருந்த குகன், சக்தி இருவரையும் அழைத்துக்கொண்டு உல்லைக்குளக் காட்டில் அவர்களது இடத்திற்கு ஒன்பது மணியளவில் போய்ச் சேர்ந்தான். அங்கு சாவாற்றுப் பண்யில் இருந்து கரன், கமல், மணியண்ணன் மூவரும் வந்திருந்தனர்.

ஆறுபேரும் வசூர்தீன் வீட்டிற்குச் சென்றபோது மணி பத்தரை ஆகியிருந்தது.

வசூர்தீன் தன் வீட்டுமுற்றத்துத் தரையில் பாய்விரித்து படுத்திருந்து 'அன்ரன்சன்யோ' வானொலியில் பழைய காதல்பாடல்களைக் கேட்டு இரசித்துக் கொண்டிருந்தான். கால்மாட்டில் ஆபிதா வசூரின் காலைப்பிடித்து அமத்தி விட்டுக் கொண்டிருந்தாள்.

முற்றத்தில் ஆறுபேரும் இருளில் போய்நின்றவுடன் தலையை நிமிர்த்திப் பாரத்தவன் திடீரென எழுந்தான். பயந்தும்விட்டான். அவளும்தான். வீட்டு விறாந்தையினுள் நசீரும் வசூரும் சென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைத்தார்கள். சிலநிமையங்களில் வெளியே வரும்போது வசூரின்முகம் அந்த குப்பிவிளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் மலர்ச்சியாக இருந்தது தெரிந்தது.

ஊர்காவல்படைவீரர்களின் வீடுகளுக்கு அழைத்துச்சென்றான் வசூர்தீன். எல்லோரிடமும் இருந்த வேட்டைத் துவக்குகளை நசீரிடம் வாங்கிக் கொடுத்தான்.

தானும் தன்துணைவியும் அவர்களுடன் போய் அவர்களுடன் சேர்ந்து இயங்கப் போவதாகவும் நீங்களும் விரும்பினா இவங்களோட வந்துசேருங்க எனவும் கூறினான். "நாளைக்காலையில் வந்து விரிவாகக் கதைக்கிறன்" என ஒவ்வொருவரிடமும் கூறிவிட்டு வந்தான் வசூர்தீன்.

ஆறு துவக்குகளையும் பெற்றுக்கொண்டு வசூர்வீட்டிற்கு வந்தவர்கள் ஆபிதாவின் தேநீரைக் குடித்துக்கொண்டே வசூரின் வீட்டுமுற்றத்தில் இருந்து சிறிதுநேரம் உரையாடினார்கள்.

"எப்பிடி இருக்கிறீங்க."

"உசிர் பேயித்து வந்த அண்ணன் அண்டைக்கு. நான் சரியாத்தான் பேசின இவருக்கு. இதெல்லாம் தேவல்லாத வேலதானே நமக்கெண்டு. அல்லா நல்லாத்தானே காலயும் கையையம் நமக்கு குடுத்திருக்கான். பின்ன என்னாத்துக்கு இந்த வேலயெல்லாம்எண்டு நல்லாத்தான் நான்ஏசின. உங்கள அந்தா அல்லாதான் காக்கோணும் வாப்பா" சொல்லி முடிக்கும் போது குரல் தழுதழுத்தது ஆபிதாவிற்கு.

"ஆறுபேரில் அஞ்சாவதாகப்போன ஆள்றகத சரியில்ல. எல்லாருக்கும் பயம்வந்திருக்கு. சுரேஸ்காசிமுக்கு என்ன சொல்றதெண்டு யோசிச்சிற்றுத்தான் இருப்பாங்க. உன்னிலதான் பழியப்போடுவாங்க எல்லாரும். நாளைக்கு காலயில எல்லாருட்டயும் வடிவாக்கதச்சிற்று நீங்க நாளைக்கு பின்னேரமே வெளிக்கிட்டுப் போங்க." எனக் கூறிய நசீர் சல்லியில் உதயப்பா கொடுத்துவிட்ட பணத்தில் மேற்சட்டைப் பையிலிருந்து ஒரு தொகைப்பணத்தை எடுத்து "இதில பத்தாயிரம் இருக்கு. எங்கடஉதவியா வச்சிக்கொள்ளுங்க." எனக் கூறிக்கொடுத்தான்.

நசீரின் கைகளைப் பற்றிய வசூர்தீன் சில நிமையங்கள் தேம்பியழுதான். உங்களப்போய்க் காட்டிக்குடுத்தனே நான். அல்லா என்ன ஒருக்காலும் பொறுக்கமாட்டான்" கண்ணீருடன் கூறினான். ஆபிதாவின் மனம் நெகிழ்ந்தது. அவளது கண்களும் தன்பாட்டிற்கு ஆனந்தக்கண்ணீரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகுத்தது. "சுவையான தேநீர்" என கரன் கூறினான். ஆபிதா மனதுள் மகிழ்ந்தாள். சிறிதாக புன்னகைத்து கரனது பாராட்டை ஏற்றுக்கொண்டாள்.

தன் முதுகிலே தொங்கிக்கொண்ருந்த உமலில் இருந்து புத்தகம் ஒன்றை எடுத்தான் நசீர். அதனை ஆபிதாவிடம் நீட்டி "என் நினைவாக வச்சிக்கொள்" எனக் கொடுத்தான். புன்முறுவலுடன் யாரும் காணாத இருளில் பெற்றுக் கொண்டாள்.

வந்தவர்கள் புறப்பட்டனர். நான்குதுவக்குகளை குகனிடமும் சக்தியிடமும் கொடுத்து விட்டு இரண்டுதுவக்குகளில் ஒன்றைக்கரனிடம் மற்றையதை கமலிடமும் கொடுத்த நசீர் வதூர்தீனிடமும் ஆபிதாவிடமும் இருந்து விடைபெற்றார்கள்.

"எதிரிகளாக இருந்தவர்கள் குடும்ப உறவினர்கள்போல் மாறிவிட்டார்களே.. வேறு யாரும் என்றால் வதூரைச் சுட்டுக்கொன்றல்லவா இருப்பார்கள்." கரன் நடந்தவற்றை நினைத்து மனதால் மகிழ்ந்தான்.

பள்ளிக்குடியிருப்பினை நோக்கி நடந்தனர் நசீர் குழுவினர். குகனும் சக்தியும் இளக்கந்தை நோக்கி நடந்தனர்.

பள்ளிக்குடியிருப்பில் அனலரசன் வீட்டிற்குச் சென்றனர். மணி இரண்டாகியிருந்தது. நசீர் உள்ளே செல்லவில்லை. படலையில் நின்று கொண்டான்.

கமல் வீட்டுக்கதவைத் தட்டினான். கதவுதட்டப்பட்ட சத்தத்தி னால் எழும்பிய அனலரசு சுரேஸ்காசீம்தான் வந்திருக்கிறான் என்றுதான் உண்மையில் எண்ணினான்.

அனேகமாக இரவில் பன்னிரண்டு மணியின் பின்னர்தான் அனலரசை சந்திப்பதற்கு அவன் வருவான்.

கதவிற்கு வெளியே அனலரசு வந்தவுடன் "எங்களோட வாங்க" என கையில் ஏ.கே.47 உடன் நின்றிருந்த கரன் கூற திகைத்துப்போனான் அவன். அச்சத்தினால் விழி பிதுங்கியது. "தனது தொடர்புகளை அறிந்து விட்டார்கள். தன்கதை இனிமுடிந்துவிடும்" எனப் பயந்தான். தப்பிக்க அவன் முயலவில்லை. அவர்கள் கூறியபடிசெய்தான். "ஒருகிழமைக்குத் தேவையான உடுப்புகள் எடுத்து வாங்க" என்ற கமலின் கட்டளையினை செயலாக்கினான் அனலரசு. உள்ளே நடப்பவற்றை படலையிலிருந்தபடியே கவலையான மனதுடன் அவதானித்துக் கொண்டிருந்தான் நசீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே கலந்துரையாடியபடி செய்துகொண்டிருந்தார்கள் தோழர்கள். தான் இல்லாவிட்டாலும் அவர்களாகவே செயற்படுவார்கள் என்றநம்பிக்கை நசீர் மனதில்த்தோன்றியது.

அனலரசிடமிருந்த உடுப்புஉமலை கமல் வாங்கி தன்தோளில் போட்டுக்கொண்டான். அனலரசின் இரு கைகளையும் பின்பக்கமாக வைத்துகட்டினான் கரன்.

கையில் சுடுகலனை ஏந்தியவாறு கரன் முன்னால்நடக்க பின்னால் அனலரசு அதன்பின்னால் ஏனையவர்கள். அவர்கள் பின்னால் நசீர்.

கனத்தமனதுடன் தன் இளமைக்கால நினைவுகளை மீட்டியவாறு தன் பள்ளித்தோழனை எண்ணிக் கவலைதோய்ந்த முகத்துடன் யாருமே கண்டுவிட முடியாத இருளில் தன்பாட்டுக்குச் சென்றுகொண்டிருந்த கால்களின் எண்ணத் திற்கேற்றாற் போல் சாவாற்றினை அடையும் வரை நடந்துகொண்டிருந்தான் நசீர்.

சாவாற்றில் கைகளை அவிழ்த்து விட்ட சிறிது நேரத்தில் நசீர் அனலரசு அருகில் வந்தான். இருளான நேரத்தில் நாடியில் இருந்த குறுந்தாடி பள்ளித் தோழனை அடையாளம் காண இடம்கொடுக்கவில்லை.

"எப்பிடி மச்சான்?" மச்சான் என்றுதான் அனலரசை அழைப்பான் நசீர். கட்டியணைத்தழுதான் அனலரசு. நசீர் எதுவுமே கதைக்கவில்லை. சிறிது நேரத்தின்பின்னர் 'அஞ்சு மணியாகிற்று. இரவும் நித்திரையில்ல. எழும்பிக் கதைப்பம். நித்திரைகொள் என்றுகூறி படுக்கைக்குச் சென்று விட்டான் நசீர்.

நிம்மதியிழந்த அனலரசுக்கு நித்திரை வரமறுத்தது. அவன் படுத்திருந்து கண்விழித்திருந்தான். அவனதுமனதில் என்னவெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தான் என்பது அவனுக்கு மாத்திரமே தெரிந்த உண்மையான உண்மைகள்.

காலையில் பள்ளித்தோழன் எழுந்தவுடன் எப்படி முகம் கொடுத்துப் பேசப் போகிறேன் என்று திணறியது அவன்மனம். தனதுபக்க நியாயங்களை தன் பள்ளித்தோழன் ஏற்றுக்கொள்வானா? மாட்டானா? தெரியவில்லை. பொய் சொல்வதாக எண்ணி எனதுவாழ்விற்கு முடிவுகட்டுவானா? இளகியமனம் உள்ளவனென்றாலும் இறுக்கமானவன் என்பதை அனலரசு அறிவான். தன் பள்ளித்தோழனின் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைவினையும் அக்குவேறு ஆணிவேறாக அறிந்திருந்தவன் அனலரசு மாத்திரமே.

ஒருநாள் பள்ளிவிட்ட பின்னர் தங்கபுரத்தில் உள்ள பொதுக் கிணற்றடியில் தென்னைமட்டையால் செய்த மாட்டுவண்டில் இழுத்து விளையாடிக் கொண்டிருந்தபோது அந்த மட்டைமாடுகளை அனலரசுவிடம் இருந்து பறித்ததற்காக தியாகுவை தான்வைத்திருந்த கேட்டிக்கம்பினால் துவைத்த எடுத்த நிகழ்வு இந்தநேரத்தில் நினைவிற்கு வந்துதொலைத்தது.

ஐந்தரைமணிக்கு நித்திரையாகிய நசீர் கண்விழிக்கும் போது மணி பதினொன்றைத் தாண்டியிருந்தது. கண்களை கசக்கிக்கொண்டு எழுந்தவன் தன் கையில் கட்டியிருந்த மணிக்கூட்டைப் பார்த்துவிட்டு "இவ்வளவு நேரம் எழுப் பாமல் விட்டிருக்கிறீங்களே." என மணியண் ணனைக் கடிந்துகொண்டான்.

எழுந்து தன்காலைக்கடன்களை முடித்துவிட்டு தனக்காக வைத்திருந்த பழஞ்சோற்றில் தேங்காய்ப்பால்விட்டு சின்னவெங்காயமும் பச்சைமிளகாயும் போட்டு வைத்திருந்த சாப்பாட்டுத்தட்டினை கையில் எடுத்து பொரித்து வைத்திருந்த விரால்கருவாட்டினையும் கையிலெடுத்துச் சாப்பிட்டான். பசியில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவனுக்கு அப்போதுதான் அனலரசுவின் நினைவு வந்தது. மாலைச் சுற்றிவரப்பார்த்தான். அவனைக் காணவில்லை. அவன் பண்ணையில் பயிர்களிடையே புல் கொத்திக் கொண்டிருந்தான். மனதில் சிரித்துக்கொண்டு அனலரசை அழைத்துவரும்படி கரனிடம் கூற அவனும் அனலரசை அழைத்து வந்தான்.

பயிற்சி முடிந்து வந்து அனலரசைச் சந்தித்தபோது எப்படி தன்தோழனை முகம்கொடுத்துப் பேசவில்லையோ அவ்வாறுதான் இன்றும் இருந்தான். நசீரின் முகத்தைப் பார்க்கவில்லை என்பதைவிட அவனால் பார்க்க முடியவில்லை என்பதே பொருந்தும். அப்போதும் இப்போதும் அனலரசின் மனது அப்படித்தான் இருந்தது என்பதே யாருமறியா உண்மை.

"சாப்பிட்டியா மச்சான்?"

"ஓம்"

"உன்ன ஆரும் புல்லுக்கொத்தச் சொன்னவனுகளா?"

"இல்ல"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப ஏன் புல்லைக் கொத்திற்று இருக்கிறா?"

"..............."

"நித்திரை கொண்டியா?"

"இல்ல"

ஒரு சொல்லில்தான் பதில் சொல்லிக் கொண்டிருந்தான். கலகல என்று வாய் திறந்தால் மூடாதவன் இன்று ஒருசொல்லில் தன்தோழனிடம் அந்நியன் ஒருவனிடம் கதைப்பது போல் பதிலளித்துக் கொண்டிருக்கிறான்.

"இன்னும் சிலநிமையங்களிலோ அல்லது ஓரிருநாட்களிலோ சாகப் போகின்றவனால் எப்படி முன்புபோல் பேசமுடியும்" என தன்மனதிடம் கூறிக்கொண்டான் அனலரசு.

சாப்பிட்டு கோப்பையைக் கழுவியவன் அனலரசு அருகில் வந்து அமர்ந்தான். அனலரசின் அம்மாவைப் பற்றியே தொடர்ந்து கதைத்துக் கொண்டிருந்தான்.

தன்வீட்டில் சாப்பிட்டதை விட அதிகளவான நாட்கள் அனலரசு வீட்டில்தான் நசீர் உண்டிருக்கிறான். அன்னப்பாக்கியம் ஆபரனில் அன்பானவள். சிறுவயதில் அன்னப்பாக்கியத்தைப் போய்ப்பார்த்து விட்டுத்தான் ஆபரன் பள்ளிக்குச் செல்வான். அவனைப்பார்க்காது எங்காவது போனால் ஆபரனுக்கு பத்தியமாக இருக்காது.

அன்னப்பாக்கியம் பார்த்தவர்களை கவர்ந்திழுக்கும் நிறமுடையவள். அழகிய முகவெட்டு அவளுக்கு. கன்னமும் நெற்றியும் சந்திக்குமிடத்தில் இடதுபக்கமாக குண்டு மணியளவான மச்சம் அவளதுமுகத்தில் வடிவாக இருக்கும். கதைக்கும்போதும் சிரிக்கும்போதும் குழிவிழும் அவளதுகன்னம் ஆபரனுக்குப் பிடிக்கும். அன்னப்பாக்கியம் கதைக்கும்போது சிரித்துக்கொண்டே கதைப்பாள். வாயிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு சொல்லும் சிரிப்புடன்தான் வரும். முன்னால் இருப்பவர் கதைக்கும்போது அவள்முகம் எந்நேரமும் புன்னகையில் மிதக்கும்.

அவர்களின் சிறுவயதில் இருவர் வீட்டிலும் கழிப்பறைகள் இருக்கவில்லை. பள்ளிக்குடியிருப்பில் உள்ள பிள்ளையார்கோவிலுக்குப் பின்பக்கமுள்ள சண்முகராசா அண்ணனின் பீச்சேனைவயலிலும் சேனையூர் சின்னத்துரை ஐயாவின் போட்டாவயலிலும் சேனையூர் ராசாஅண்ணனின் நாசம்பள்ள வயலிலும் பொழுது புலர்வதற்குமுன் பள்ளித்தோழர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் ஓடிச்சென்று வயிற்றில் உள்ளவற்றை இறக்கிவிட்டு கட்டாடியார் பள்ளத்தில் இடதுகையால் பின்பக்கங்களை நன்றாகக் கழுவிட்டு அனலரசு வீட்டிற்கு வந்தவுடன் "டேய் இஞ்ச கிணற்றடிக்கு வாங்கடா" என இருவரையும் அழைத்து மில்க்வைற் சவர்க்காரத்தினைப் போட்டு கைகளை நன்றாகக் கழுவிவிடுவாள்.

கழுவும் போது சிலவேளைகளில் "என்ன ஆபரா இண்டைக்கு ஆம வந்து சூத்த விறாண்டல்லயாடா" கேட்பாள் அன்னப் பாக்கியம். வெட்கத்தால் தலை குனிவான் ஆபரன்.

ஒருநாள் வயிற்றுக் கழிவுகளை குந்தியிருந்து இறக்கிக் கொண்டிருக்கும்போது பின்பக்கமாக வந்த ஆமையொன்று ஆபரனின் பின்பக்கத்தை சுரண்டியிருக்கிறது. பயந்த ஆபரன் எழும்பிப் பார்த்தபோது பீயாமையொன்று அவனது கழிவுகளை தன்வாயால் மென்று கொண்டிருந் திருக்கிறது. அச்சமடைந்தவன் அனலரசையும் அழைத்துக் கொண்டு ஒரேஓட்டமாய் வீட்டிற்குப்போய் அன்னப்பாக்கியத்திடம் கூறினான். அன்னப்பாக்கியம் சிரித்த சிரிப்பிற்கு அளவேயில்லை. நினைக்கும் போதெல்லாம் சிரிப்பாள். ஆனாலும் வேறு எவரிடமும் அன்னப்பாக்கியம் இதனை சாவடையும்வரை பகிர்ந்து கொள்ளவில்லை.

நான்கு நாட்களாக அனலரசுவிடம் தன்னை அழைத்து வந்த கரணீயத்தைக் கூறவில்லை. அது அவனுக்கு பெரும்துன்பமாக இருந்தது. பண்ணையிலிருந்த தோழர்களுக்கும் வியப்பாகவும் இருந்தது.

ஆனால் கரன் மாத்திரம் "ஏதோ பெரிதாக திட்டம் போடுகிறார். அனலரசு தானாகவே கூறவேண்டும் என்பதே அவரின் திட்டம். அதற்காகவே பொறுமையாக இருக்கிறார். சிலவேளை அனலரசு தப்பிப் போனால் அவரை சுடுவதற்கு இரு தோழர்களை இரவுபகலாக அனலரசுவுக்குத் தெரியாமல் காவலுக்கு நிறுத்தியிருக்கிறார்" என்பதனை சரியாக உய்த்தறிந்திருந்தான்.

அனலரசுவும் பண்ணையில் உள்ளதோழர்கள் போன்று செயற் பட்டான். அவர்களுடன் இணைந்து வேலைசெய்தான். ஆபரன் பலஸ்தீனத்திற்குப் பயிற்சிக்குச் செல்லுவதற்கு முன்பு குறவன்வெட்டுவன் மலையருகில் இருந்த பண்ணைக்குப் பொறுப்பாக அனலரசுதான் இருந்தவன். பண்ணையில் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதனை வடிவமைத்தவன் அவன்தான். பண்ணையில் யாரும் யாருக்கும் கட்டளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிடுவதில்லை. ஆனால் தெரியாத வேலைகளை கேட்பார்கள் அல்லது பிழையாகச் செய்யும்போது அதனைத் திருத்திச்சொல்லிக் கொடுப்பார்கள். புரிந்துணர்வு சிறந்த விளைவினை அதிகரிக்கும் என்பது தோழர்கள் அனைவருக்கும் தெரிந்திருந்தமையினால் அவர்களிடையே சிக்கல்கள் எப்போதுமே எழுவதில்லை.

அனலரசு சாவாற்றுக்கு வந்து ஏழாவதுநாள் மாலைநேரமது. வெட்கைகுறைந்து சூடுகுறைந்து சிவந்தகதிர்கள் மேற்குப்புறமாக மெதுமெதுவாக இல்லாது போய்க் கொண்டிருந்தது. பறவைகள் கூட்டம்கூட்டமாக தங்கள் இருப்பிடங்களை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன.

கங்கைக்கரை ஓரத்தில் இறந்து விழுந்துபோன நாவல்மரத்தின் அடிப்பகுதியில் நசீர் ஏறியமர்ந்திருந்து இரவுக்கறிக்காக மீன் பிடிப்பதற்கு தூண்டில் போடுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தான்.

ஆறடி நீளமான விண்ணாங்குத்தடியின் ஒரு முனையின் நுனியிலிருந்து இரண்டு அங்குலதூரத்தில் வில்லுக்கத்தியால் சுற்றிவர சிறியளவில் தோண்டி மரத்துகள்கள் அகற்றப்பட்ட இடத்தினைச்சுற்றி தங்கூசி கட்டப்பட்டு அண்ணளவாக எட்டடி நீளமான தங்கூசியின் மறுமுனையில் தூண்டில்ஊசி கட்டப்பட்டு ஊசியிலிருந்து இரண்டடி உயரத்தில் காய்ந்த சாப்பைப்புல்லினால் மிதப்புக்கட்டியிருந்த தூண்டல் களயை நசீர் கையிலெடுத்து தோட்டத்துமண் போடப்பட்ட பெரிய தேங்காய்ச்சிரட்டையில் நெளிந்து கொண்டிருந்த நாக்கிளிப்புழுவில் ஒன்றையெடுத்து ஒன்றரையங்குலம் அளவிலான துண்டாகும் வகையில் பெருவிரலினதும் ஆட்காட்டி விரலினதும் நுனியில் வைத்து ஆட்காட்டி விரல் நிகத்தினால் அமத்தி துண்டாக்கிய அந்தத் நாக்கிளிப்புழுத் துண்டை தூண்டில் ஊசியில் ஊசியின் வளைவிற்கேற்றாற் போல் வளைத்துக்குற்றி ஆற்று நீரில் போட்டான்.

அந்த இடம் கங்கையின் வளைவானபகுதி. தண்ணீர் சுழன்று சுழன்று வந்து நின்றது. அது தூண்டில் போடுவதற்கு சிறந்த இடம் என்பதை மணியண்ணன்தான் ஏனைய தோழர்களுக்குச் சொன்னவராம். அவ்விடம் எப்படியும் ஐந்து தொடக்கம் ஏழு அடி ஆழமாக இருந்தது. யப்பான், பனையான், கெழுத்தி, பொட்டியான், கணையான் போன்ற மீன்கள் பிடிபடும். சில வேளைகளில் செல்வன்மீனும் பிடிபடும். விரால் மீனும் பிடித்திருக்கிறார்கள். அந்த இடத்தில்தான் நசீர் மீன் பிடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது இரையைக் குத்தி நீரில் போட்டிருக்கிறான்.

நீரில் மேல் உள்ள தூண்டிலின் மிதப்பிலேயே அவனதுகண் குறியாக இருந்தது. சிறிது நேரத்திலேயே மிதப்பு சுண்டிச் சுண்டி இழுப்பதுபோல் நீரின் உள் செல்வதும் வெளியே வருவதுமாக இருந்தது. சில நொடிகள் இது தொடர்ந்தது. "இது பனையானாத்தான் இருக்கும். வெட்டு.....வெட்டு....." குரல் வந்த பக்கத்திற்கு தலையை நிமிர்த்திப் பார்த்தான், அனலரசு நின்றிருந்தான். மேல்நோக்கி சடக்கென்று தூண்டிலை இழுத்தான். அவன் கூறியதுபோல் பனையான்மீன் தான். தோழனைப் பார்த்துச் சிரித்தவன் மீனைக்கழற்றி உமலில் போடுமாறுகூற அப்படியே செய்து அடுத்தமீனைப் பிடிப்பதற்காக இரையைக் குற்றிவிட்டான் அனலரசு.

"உன்னோட தனிய நான் நிறையக் கதைக்கவேணும் ஆபரா. என்னால் இனியும் தாங்கமுடியாது" கரகரத்த குரலில் தட்டுத்தடுமாறிக் கூறிமுடித்தான்.

"ஏன் இஞ்ச இருக்க விருப்பமில்லயா? இல்லாட்டி இந்த இடம் பிடிக்கல்லயா உனக்கு?" ஒன்றுமே அறியாதவன் போல் கேட்டான் நசீர்.

"ஆறதலா நான் உன்னோட கதைக்கோணும். இண்டைக்கே கதைக்கோணும்"

"அதுக்கென்ன கதைப்பமே. சொல்லன். இப்ப தனியத்தானே ரெண்டுபேரும் இருக்கிறம்"

"இல்ல........ இப்ப இப்பிடி இருந்து கதைக்கேலா. ஆறுதலா இருந்து கதைக்கோணும்."

"ராவைக்கு சாப்பிடக்கொள்ள கதைப்பமா?"

"சாப்பிட்ட பிறகு கதைப்பமா? ரெண்டுபேரும் மட்டும்"

"அதுக்கென்ன. கதைப்பமே. பார் அடுத்தமீன் செத்தல்தான்"

தூண்டலில் அவன் கவனம் முழுவதும் இருப்பதும் தனது கோரிக்கையினை அவன் பெரிதாக பொருட்படுத்தவில்லை என்றும் நினைத்தான், இந்த கேள்விக் காகத்தான் நசீர் கடந்த ஏழுநாட்களும் காத்திருக்கிறான் என்பதை அறியாத அனலரசு.

அன்று நசீருக்கு மகிழ்ச்சியானநாள். எப்படியும் மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலோநிறையுடைய செல்வன் மீனொன்றும் பிடிபட்டிருந்தது. "பனையான் மீன்களையும் யப்பான் மீன்களையும் பொரிச்சா என்ன என்று கேட்டார்" சின்னண்ணன். "செல்வன் மீனை குழம்புக் கறி ஆக்குறன்" பாச்சா உற்சாகமாகச் சொன்னான். 'பகல் காய்ச்சிய பாலாணம் இருக்கிறதால ஆணம் தேவையில்லை' என்றான்.

பண்ணையில் காலை தவிர்ந்த ஒவ்வொருவேளை உணவிலும் ஏதாவது ஒரு வகை 'ஆணம்' இருக்கும். பொன்னாங்காணி ஆணம் ஆக்கினால் பகலுடன் முடித்துவிடுவார்கள். இரவில் கீரை உண்ணக்கூடாது என்பதை அறிந்திருந்தார்கள்.

முழுநிலா முடிந்து இரண்டு நாளாகியிருந்தது அன்று. இரவு உணவு உண்ட பின் கங்கைக் கரையோரமாக தன் பள்ளித் தோழனை அழைத்துச் சென்றான் நசீர். சந்திரன் தன்கதிர்களை தாராளமாக வழங்கிக் கொண்டிருந்தான். இப்படியான நிலவு நேரத்தில்தான் சின்னத்தம்பிஅண்ணன் பாடிய "கண்ணிலே என்ன உண்டு...." பாடல் வரிகள் இந்தநேரத்தில் நசீரின் மனதைக் கனமாக்கியது.

"சொல்லு மச்சான். ஏதோ தனியக் கதைக்கவேணும் எண்டா..."

ஆபரனின் இரண்டு கைகளையும் பற்றிப்பிடித்தவன் குலுங்கிக் குலுங்கி அழுதான்.

"என்னச் சுட்டுக்கொல்லு மச்சான்...... சுட்டுக்கொல்லு......."

"ஏன் உனக்கு என்ன விசரா பிடிச்சிற்று? என்ன நடந்தது உனக்கு. சொல்லு சொல்லு" எதுவுமே அறியாதவன் போல் பதற்றத்துடன் தன்தோழனிடம் கேட்டான்.

அனலரசு சற்று தடுமாற்றமானான். இவனுக்கு சுரேஸ்காசீம் உடனான எனது தொடர்புகள் தெரியாதோ என எண்ணியவன் "ஏன் என்ன பிடிச்சு வந்தனீங்க?" என்றான்.

"பிடிச்சு வந்ததா? நாங்க ஏண்டா உன்ன பிடிச்சுவாறம்? உன்ர அம்மா சாவடைஞ்சிற்றா. அவவாலதான் எங்களோட நீ வராம இருக்கிறா எண்டு நினைச்சன். அவயும் இப்ப இல்லத்தானே. அதுதான் உன்னக் கூட்டிவரச் சொன்னனான்."

"அப்ப நீ பள்ளிக்குடியிருப்புக்கு வரலல்லயா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லயே. ஏன்"

"என்ர கைகளக்கட்டித்தானே கொண்டு வந்தவங்க"

"ஆ.. அப்பிடியா."

"கைகள பின்னால வச்சுக் கட்டித்தானே கொண்டு வந்தவங்க"

"தோழனின் கைகளைப் பற்றிப்பிடித்து எனக்காண்டி பொறுத்துக் கொள் மச்சான். நான் நாளைக்கு கேக்குறன்"

"இல்லவேணாம். கேக்கவேணாம்..."

"உனக்கு என்னோட இருக்க விருப்பமில்லயா?"

""நான் உன்னட்ட வரத்தான் ஆபரா இருந்தனான். நீ பிடிபட்டதெல்லாம் எனக்குத் தெரியும்."

"அம்மாவா சொன்னவ"

"அவவும் சொன்னவதான். ஆனா அதுக்கு முதலே எனக்குத் தெரியும். "

"எப்பிடி" தெரியாதவன் போல் போலிஆச்சரியத்துடன் கேட்டான் ஆபரன்.

"நீ பிடிபடுறதுக்கே நான்தான் கரணீயம்..." குரல் வெறுமையாக உயிரில்லாது வந்தது.

"என்னடா மச்சான் சொல்றா?.... நீ எப்பிடிடா..?"

"சுரேஸ்காசீமோட நான் தொடர்பில இருந்தனான். நான்தான் வதூர்தீனுக்கு சொன்னனான். நீ தம்பலகமம் போறா எண்டு"

"நீயாடா மச்சான்...உனக்கென்ன விசரா பிடிச்சிற்று?" கோபத்தை செயற்கையாக வரவழைத்துக் கேட்டான்.

தலைகுனிந்த அனலரசு "நான் சொல்றதச் சொல்றன். முடிய நீ தீர்மானி என்ன செய்யவேணுமெண்டு. நான் என்னைப் பொறுத்தளவில உயிர் வாழ்றதுக்கு பொருத்தமில்லாதவன். உன்ர கையால சாகிறத விரும்புறன். வேற ஆரயும் சுட விடாத. அதுதான் என்னப்போல ஆக்களுக்கு சரியான பாடமாக இருக்கும்." அழுதழுது கூறினான். அனலரசு எளிதில் அழுபவன் அல்ல. என்னதுன்பம் என்றாலும் தாங்கிக்கொள்வான். ஏன் அவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரான அம்மா சாவடைந்த போதுகூட ஒருசொட்டு கண்ணீர் அவனது கண்ணிலிருந்து வரவில்லை.

தோழனின்தோளில் கையை வைத்தவன் "சொல்லு மச்சான் என்ன நடந்ததெண்டு. நீ சொல்றது எனக்கு வியப்பா இருக்கு. என்ன செய்யவேணுமெண்டு நான் தீர்மானிக்கிறன்"

மனதைத் திடப்படுத்திக் கொண்டு தனதுவாழ்க்கை எப்படி திசைமாறிப் போனது என்பதனை தன்பள்ளித்தோழனுக்கு கூறத்தொடங் கினான் அனலரசு.

## - 11 -

வட்டத்தனையிலுள்ள நெற்பயிர்களின் நெல்மணிகள் நிறைமாத பிள்ளைத்தாச்சிகள் போல் இன்றோ நாளையோ என்ற நிலையில் முற்றி தகதகவென தங்க நிறத்தில் மின்னிக்கொண்டிருந்தன.

கதிரவன் மெதுவாக மேலந்து வரும்நேரம் சென்னி வட்டத்தனை வரம்புகளில் நடந்துகொண்டிருந்தான். நீர் இன்றி வரவைகள் வரண்டு கிடந்தன. சென்றகிழமை அவன் வரவையினுள் இருந்த நீரை வெளியேற்றி யிருந்தான் அறுவடைக்குத் தயாராகுவதற்காக.

வரவையினுள் உணவுதேடி வந்திருந்த இரண்டு கானாங்கோளிகள் சென்னியின் காலடிஓசை கேட்டு தம்மைக்காத்துக்கொள்ள குடுகுடவென சிறிதுதூரம் ஓடி சற்று மேலெந்து பறந்து நெற்பயிர்களில் மறைந்து தாம் தப்பிவிட்டோம் என்பதை உறுதிப்படுத்திய பின்னர் நடந்துசென்றன. கானாங்கோழிகளால் அதிக தூரத்திற்கு பறந்துசெல்ல முடிவதில்லை. அதன் உடலில் அதிகளவு இறைச்சி இருப்பதே அதற்குக் கரணீயமாகும்.

கானாங்கோழி பிடிச்சி ஆக்கித்தாறன் என சின்னத்தம்பிமாமா கூறியது நினைவுக்குவந்தது அவனுக்கு. ஆனால் அவரோ கானாங்கோழி இறைச்சி சமைத்து அதன்சுவையினைக் அவனுக்கு காட்டவில்லை. அப்படிக் காட்டியிருந்தால் அந்த வயல்வெளிகளில் ஒரு கானாங்கோழியினை யும் விட்டு வைத்திருக்கமாட்டான் சென்னி.

இன்னும் இரண்டுநாட்களில் அறுவடை செய்யவேணும் என நினைத்தவன் வேலாயுதம் அண்ணனுக்கு வியளம் அனுப்பி வரச்சொல்ல வேணும் என நினைத்தவனாக வீடு திரும்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுதம் அண்ணன் பதினாறு பேருடன் மறுநாளே வந்துவிட்டார். வட்டத்தனை வயலில் கடந்த நூறுநாட்களாக மெதுமெதுவாக வளர்ந்து கம்பீரமாக நின்று என்னை யாரும் எதுவும் செய்துவிடமுடியாது என்ற தலைக்கனத்துடன் நிமிர்ந்து நின்று வருவோர் போவோருக்கெல்லாம் சொல்லிக்கொண்டிருந்த அம்பலாந்தோட்டை நெல் ஆராய்ச்சி நிலையத் தினால் புதிதாக அறிமுகப் படுத்தப் பட்ட ஏ.ரீ.முந்நூற்றி ஐம்பத்தி மூன்று இன சிவப்பரிசி நெற்பயிர்களை வெட்டிவீழ்த்திக் கொண்டிருந்தனர் வேலாயுதம் அண்ணனின் குழுவினர்.

ஏ.ரீ.என்பது சொல்வதற்குத் தெரியாமலோ என்னவோ இந்தஇன நெல்லினை ஆட்டி நெல் என்றுதான் தம்பலகமத்தில் அழைக்கின்றார்கள்.

கள்ளிமேட்டு வட்டவிதான் கனகசிங்கத்தாரிடம் சென்று இரு நூறு உப்பட்டிக் கயிறுகள் வாங்கி வந்த அப்பா "தங்கவடிவேல் அண்ணனிட்ட இண்டைக்கே சூடடிக்கிறதுக்கு சொல்லிவிடு தம்பி. அப்பத்தான் நேரத்தோட வருவாங்கள்" என்றார். ஏற்றுக்கொண்டான் மகன்.

"சூடடிக்க அஞ்சு பேரெண்டாலும் வேணும். நானும் இருக்கிறன் தானே. இன்னும்நாலு பேர் வேணும்தம்பி. கோவிலடி வசந்தனக் கேள். அவன் எண்டா வேலகாரன் கம்புவேல நல்லாச்செய்வான். அதோட பொற்கேணி சந்திரனையும் புதுக்குடியிருப்பில சவானையும் மகாலிங்கத்தை யும் வரச்சொல். கட்டாயம் வருவாங்கள். அவங்களத்தான் மாமா வழக்கமா கூப்பிடுறவன்." அப்பா கூறி முடித்தார்.

வயலில் அறுவடைசெய்த நெற்கதிர்களை ஒட்டின்மேலே போட்டார்கள். ஒட்டு என்பது நெற்பர் அறுவடை செய்தபின்னர் நிலத்தில் எஞ்சியிருக்கும் பகுதி. வெட்டிய பகுதியை உப்பட்டி என அழைத்தார்கள். உப்பட்டிகளை இரண்டு கைகளாலும் பிடிக்கக்கூடியளவில் சேர்த்து அள்ளினார்கள். அதனை மாவக்கை என்று அழைப்பார்கள். மாவக்கைகளை ஒவ்வொருவருமாக தூக்கிவர வேலாயுதம் அண்ணன் வரவையினுள் கயிற்றைக் கிடையாகப்போட்டு கயிற்றின் முடிச்சுப் போட்டிருந்த நுனியை தன்கையில்வைத்துக் கொண்டார். ஆறு அல்லது ஏழு மாவக்கைகளைக் கயிற்றில் வைத்தவுடன் அடுத்தநுனியை ஒருவர் வேலாயுதம் அண்ணனிடம் எடுத்துக்கொடுக்க இருநுனிகளையும் இணைத்து முறுக்கி எளிதாக அவிழ்க்கக் கூடியதாக இளஞ்சுருக்குப்போட்டு கட்டுக்கட்டுகளாகக் கட்டினார். வரவையினுள் கட்டுகள் ஒரேநேராகவே இருக்கும். அவை அங்கொன்றும் இங்கொன்றுமாக வரிசையில் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் இரண்டுமணியளவில் வசந்தன் களத்திற்கு வந்துவிட்டான். வந்தவன் கோலத்தையெடுத்து களம் முழுவதையும் கூட்டினான். வசந்தன் வேலை செய்வதில் கெட்டிக்காரன். ஒரு நிமையமேனும் சும்மா இருக்க மாட்டான். அவனுடன் வேலைசெய்வது கடும்சிக்கல் என்பதால் அவனுடன் களத்தில் வேலைக்கு வந்தால் அடுத்ததடவை பலர் வேலைக்கே வரமாட்டார்கள். வயலில் களத்தைக் கூட்டிச் சுத்தப்படுத்துவதற்கு கோலத்துக்குழைகளை ஒன்றாக்கி ஒரு தடியில் கட்டுவார்கள். அதனை கோலத்து என அழைப்பார்கள்.

"அஞ்சு ஏக்கர் வயல் எப்படியும் மூணுசூடு வைக்கோணும். ஒரு மிரிய களத்தில போட்டிற்று நாளைக்கு மற்றதையும் சூடு அடிக்கிறதால ரெண்டு மிரியயும் ரெண்டு சூடுகளாக வையுங்க அண்ணன்." வசந்தன், மயில்வாகனத்தாரிடம் கூறினான்.

"அப்பிடிச் செய்யத்தான் நானும் யோசிச்சனான்"

சுத்தமாகவிருந்த களத்திலே வயலில்கட்டிய கட்டுகளை தலையில்வைத்து தூக்கிவந்து பத்துப்பேர் களத்தில் போட்டார்கள். களத்தில் போட்ட கட்டுக்களில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து நெற்கதிர்களை களத்தின் நடுவிலே உழவு இயந்திரத்தால் சூடடிப்பதற்கு வசதியாக விசிறி விசிறிக் குவியலாகக் குவித்தார்கள் சூடடிக்க வந்தவர்கள். நூற்றியிருபது கட்டுக்கள் போட்டிருப்பார்கள். ஒரு மிரிக்கு சாதாரணமாக நூறு கட்டுகள் தொடக்கம் நூற்றியம்பது கட்டுகள் போடுவார்கள். உழவு இயந்திரஓட்டுனர் தேர்ச்சி பெற்றவராக இருந்தால் நூற்றியம்பது கட்டுகள் ஒருமிரியில் போடுவார்கள். வேலை செய்யிற ஆக்களும் நல்லா வேலை செய்பவர்களாகவும் இருந்தால் மட்டும்தான் பெரியமிரி போடுவார்கள். முழுமிரி என்பது நூற்றியம்பது கட்டுக்கள் போட்டமிரியாகும். ஒருதடவை யில் சூடு அடிப்பதனை ஒரு மிரி என்பார்கள்.

நேரத்தைக் கருத்தில்கொண்டு சூடடிக்க வந்தவர்கள் கொண்டு வரும் கட்டுகளை களத்தின் ஓரத்தில் இரண்டு சூடுகளை வைப்பதற்கு உதவினார்கள்.

சவானும் வசந்தனும் சூடுவைப்பதில் திறன்வாய்ந்தவர்கள். அது ஒரு கலை. கொண்டு வரும் கட்டுகளை சந்திரனும் மகாலிங்கமும் அவிழ்த்து உப்பட்டிகளாக் கொடுக்க அண்ணளவாக பன்னிரண்டடி விட்டத்தில் வட்டமாக நான்கரையடி உயரத்திற்கு அடுக்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் வசந்தன் மாத்திரம் உப்பட்டிகளால் அமைத்த தளத்திலே நின்று கூம்பு வடிவமாகும் வகையில் சூட்டினை அமைத்தான்.

இருளாகிக் கொண்டிருந்தது. எப்படியாவது எல்லாக் கட்டுக் களையும் தூக்கி முடித்துவிட வேண்டும் என்பதில் வேலாயுதம்அண்ணன் குறியாக இருந்தார். ஒருவாறு ஏழுமணியளவில் எல்லாக் கட்டுக்களையும் தூக்கி முடித்தார்கள். எட்டு மணியளவில் இரண்டு சூடுகளையும் வைத்து முடித்தார்கள். சூடுகளுக்கு அருகில் மூன்றுகட்டுகள் வைக்குமாறு மயில்வாகனத்தார் கூறினார்.

ஏழு மணியளவில் சென்னி ஒளிரவைத்த இரண்டு பெற்றோல் மக்ஸ்களும் களத்தடியினை இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன.

ஒன்பது மணியளவில் தங்கவடிவேல் அண்ணனின் உழவு இயந்திரம் வந்து சேர்ந்தது. வயல் அறுவடை செய்யத்தொடங்கிவிட்டால் தங்கவடிவேல் அண்ணனுக்கு மவுசு கூடிவிடும். இரவுபகலாக வயல் வெளிகளில்தான் அவரது வாழ்வும் கழியும். வயல் செய்தவர்கள் அவரிடம் வந்து கெஞ்சுவார்கள். உழவினை தனது உழவு இயந்திரம் மூலம் அடித்தவர்களிற்கு சூடடித்த பின்னர்தான் ஏனையவர்களுக்கு என்பது அவரது நிலைப்பாடு. அவ்வாறுதான் அவரின் செயலும் இருந்தது.

களத்திலே வட்டமாகக் கிடக்கும் உப்பட்டிகளை வெளியோரமாக சுற்றிச்சுற்றி வட்டமாக தொடக்கத்திலே முன்பக்கமாக உழவு இயந்திரத்தைச் செலுத்துவதன் மூலமாகவும் கூடுதலான நிமையங்களில் பின்பக்கமாகவும் செலுத்தியும் சூடு அடித்தான் ஓட்டுனர். நடுவிலே உயரமாக குவிக்கப் பட்டிருந்த உப்பட்டிகளை பின்பக்கமாக உழவு இயந்திரத்தை லாவகமாகச் செலுத்தி சரித்துக் கொண்டிருந் தான் ஓட்டுனரான சுதாகர். வசந்தன் களத்தின் நடுவில்வந்து வேலைகாரன் கம்பினால் இறுக்கமாக இருக்கும் உப்பட்டிகளை கிளறிவிட்டு உழவு இயந்திரத்திற்கு எளிதுபடுத்தினான்.

முக்கால் மணிநேரத்தில் ஒருவாட்டி அடித்து முடிந்திருந்தது. எல்லா உப்பட்டிகளும் உழவுஇயந்திரத்தால் சமப்படுத்தப்பட்டது போல் இருந்தது. மகாலிங்கத்தார் களத்தின் அரக்குக் கதிரைப் பார்த்தார். அரக்கு என்பது நெற்கதிர்கள் கிடக்கும் களத்தின் நடுப்பகுதியாகும். களத்தின் அடிப்பகுதியில் அரக்கிலும் கிடந்த நெற்கதிர்களிலும் நெல்மணிகள் உதிராமல் இருந்தன.

அட்டத்துக் கதிர்களையும் பார்த்தார். மேற்பக்கத்தில் கிடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்கதிர்களிலும் அட்டத்தில் (வெளிப்புற ஓரமாக) கிடந்த நெற்கதிர்களிலும் நெல் மணிகள் உதிர்ந்திருந்தன.

நெல்மணிகள் இல்லாதிருந்த வைக்கோலை வேலைகாரன் கம்பின் நுனியிலே இருக்கும் வளைந்த சிறியபகுதியினால் தட்டித்தட்டி களத்திற்கு வெளியே போட்டார்கள் சூடடிக்கும் ஐந்து பேரும்.

அரக்கிலே கிடந்த கதிர்களை தமது வேலகாரன் கம்புகளால் கிளிறிக் கிளறி உதறி உதறி மேலே கொண்டுவந்தார்கள். இதனை வாட்டுதல் என்று அழைத்தார்கள்.

முதலாவது மிரி அடித்துமுடிய சுதாகர் உழவுஇயந்திரத்துடன் "அழகி வயல்ல சூடு போட்டிருக்கிறாங்க. நீங்க வாட்டுங்க. நான் அங்க போய் அத அடிச்சிற்று ஓடி வாறன்" எனக் கூறிச் சென்றான்.

களத்தில் அடித்தவற்றையெல்லாம் வாட்டினார்கள். ஒன்றரை மணிநேரத்தில் வாட்டி முடிக்கும்போது சரியாக சுதாகரும் வந்துசேர்ந்தான்.

களைப்பைப் போக்குவதற்காக சென்னி ஊற்றிய தேநீரை சக்கரையுடன் குடித்தனர் களத்தில் வேலைசெய்த அனைவரும். சுதாகரும் சுவைத்துக் குடித்து விட்டு சூடடித்தான்.

சூடடித்து முடித்த பின்னர் ஐந்துபேரும் வைக்கோலை வேலைகாரன் கம்புகளால் வாட்டி களத்திற்கு வெளியேபோட்டனர். வைக்கோல் முழுவதுமாக வாட்டிய பின்னர் "மாலுக்குள்ள கிடக்கிற மட்டப்பலகய எடுத்துவா சந்திரா, பொலிய குவிப்பம்" மகாலிங்கம் கூற அவன் எடுத்து வந்தான். களத்தில் கிடக்கும் நெல்லை பொலி என்றுதான் கூறுவார்கள்.

நாலரை மணியளவில் பொலியைக் குவித்தவர்கள் நித்திரைக்குப் போனார்கள்.

காலையில் எழுந்த மகாலிங்கமும் மயில்வாகனத்தாரும் அவிரி கட்டும் வேலையில் மும்முரமானர்கள். வைக்கலை புரியாகத்திரித்தார் மயில்வாகனத்தார். அண்ணளவா எல்லாமே ஏழடி நீளமான நான்கு கதியால்க் கம்புகளை எடுத்து வந்தான் மகாலிங்கம்.

"ஆத்திநார் கிடக்கு நாரால அவிரியக்கட்டுவமா அண்ண"

"நாரால கட்டினா ஏறி நண்டு பொலியத் தூத்த ஏலாது. கால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாருக்குள்ள போய்ப் பூரும். நிண்டுதூத்துறது சரியானசிக்கல். கொஞ்சம் பொறன். இப்ப புரியத் தாறன். வைக்கல்புரியெண்டா மெத்தயில நிண்டு தூத்துறமாறி இருக்கும்"

"என்ன அண்ணன் காத்தயே காணல்ல. எத்தினமணிக்குத் தூ த்துறதோ தெரியல்ல"

"பாரன், பகல் ரெண்டுமணிக்கெல்லாம் காத்தடிக்கும். வயல் நல்லா விளைஞ்சிருக்கு. பொலியப்பார். எப்பிடியும் நாலு மணித்தியாலம் எண்டாலும் வேணும் தூத்துறத்துக்கு."

"ஓம் அண்ண, பொலியப் பாக்கக்கொள்ள கிழல போகாது போலத்தான் கிடக்கு. நான் கையில தூக்கிப்பாத்தனான். சரியான பாரமாத் தான் இருந்திச்சு. எப்பிடியும் அம்பது சாக்கு எண்டாலும்வரும் போலதான் கிடக்கு"

"சே.. அம்பது சாக்கு வராது. சாக்கெண்டா என்ன கொஞ்சமா. முப்பத்தி மூணு நாழிரா தம்பி"

"அப்ப எத்தன சாக்குவரும்எண்டு அண்ண நீங்க நினைக்கிறீங்க?"

"ஒரு... முப்பத்தைஞ்சு நாப்பது சாக்கு வரும்.."

"எண்டாலும் நல்ல விளைச்சல்தானே அண்ண"

"ஓம்.ஓம்."

"அண்ண நாழி கொண்டு வந்தனீங்களா?"

"அதத்தாண்டா மறந்திற்றன். இவன் சென்னியிற்றயும் சொல்ல மறந்திற்றன். அவனும் எடுத்துவர மறந்திற்றான். ஆனா பூசல் கிடக்கு. அதால அளப்பம்"

"ஒரு பூசல் பதினொரு நாழிதானே என அண்ண"

"ம்...ம்.. அதில உனக்கென்ன ஐயம்?"

"இல்லண்ண பத்து நாழியா பதினொரு நாழியா எண்டு கொஞ்சம் ஐயம். அதுதான் கேட்டனான்."

"மகா, சரி இந்தா புரிவேல முடிஞ்சுது. நீ அவிரியக்கட்டு என. நான் தேத்தண்ணிக்கு பானயில தண்ணி வச்சிற்றுவாறன். இனி எல்லாரும் எழும்புவாங்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியவர் மாலை நோக்கிப்போனார்.

மாகாலிங்கம் அவிரி செய்வதற்காக நான்கு கதியால்களையும் நான்கு கால்களாக இருக்குமாறு ஒவ்வொன்றையும் குறுக்காக வைத்தான். நான்கு கதியால்களும் இணையும்பகுதி மேல்நுனியிலிருந்து ஒன்றரை அடியாகும் வகையில் வைத்தான். நான்குகதியால்களும் இணைந்த இடத்தினை வைக்கோல் புரியினால் சுற்றிச்சுற்றி இணைத்துப்பின்னினான். மேல்ப்பகுதி ஒருதளம் போன்று இருந்தது. அத்தளத்திலே ஏறிநின்றால் நிலத்தில் நிற்பது போலவே இருகால்களையும் வைத்து நிற்கமுடியும்.

அவிரி செய்துமுடிய தேநீர் தயாராக இருந்தது. எல்லோரும் எழுந்து தேநீர்குடித்துவிட்டு சென்னி வீட்டிலிருந்து கொண்டு வந்த பிட்டை தேங்காயப்பூச் சம்பலுடனும் கீரிமீன் ஆணத்துடனும் சாப்பிட்டார்கள்.

காற்று வீசுவதற்காகக் காத்திருந்தார்கள். பதினொரு மணியளவில் மெதுவாக காற்று வீசியது. ஆனால் நெல் தூற்றுவதற்கு அது பொதுமானதாக இருக்கவில்லை.

பகல் உணவிற்காக சோற்றினை களத்திலேயே அப்பா சமைத்திருந்தார். கறியாக பூசணிக்காய்குள் இறால்கூனி போட்டு ஆக்கியிருந்தார். வெருகலில் வாங்கிவந்த புளியை நன்றாகப்போட்டு புளியாணமும் காய்ச்சியிருந்தார். புளியாணத்திற்கு புளி சுள் எனறிருந்தது.

ஒரு மணியளவில் சாப்பிட்டார்கள். இரண்டு மணியளவில் மயில்வாகனத்தார் கூறியதுபோல் காற்று நன்றாக வீசத்தொடங்கியது.

வசந்தன் அவிரிமேலே ஏற சந்திரன் வாளியிலும் குட்டானிலுமாக நெல்லை அள்ளி அள்ளிக் கொடுக்க சவான் அதைவாங்கி அவிரியில் நிற்கும் வசந்தனிடம் தூக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தான். மகாலிங்கம் சுளகினால் தூற்றப்பட்டுக் கொண்டிருக்கும் நெல் விழுகின்ற பகுதியில் தொங்கல் பகுதியில் விசிறிக் கொண்டிருந்தார். மேலே கிடக்கும் துகள்கள் சுளகிலிருந்து வருகின்ற காற்றினால் அகன்று போனது.

"பாத்தியா மகா, கிழல போறது குறைவாத்தான் இருக்கு."

கிழல போறது என்றால் பாரம்குறைந்த நெல்மணிகள் காற்றில் அடிபட்டு பொலியுடன் கிடக்காமல் தூரத்தில் போய்க்கிடக்கும். பதரையே கிழல போகின்றது என்பார்கள்.

காலையில் சாப்பாடு கொண்டுவரும்போது நாழியை சென்னி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்திருந்தான். கால்வாசி தூற்றியபின் அவிரியை இடம் மாற்றினார்கள். பொலியை மகாலிங்கம் நாழியினால் அளந்து அளந்து போட பச்சைக்கோட்டுச் சாக்கினை அப்பாவும் மகனும் பிடித்தார்கள். சரியாக பதினொரு சாக்குகள் இருந்தது முதலாவது பொலி. நெல் நிரம்பிய சாக்கினை கோணியல் ஊசியில் சணலைக்கோற்று சென்னியும் அப்பாவும் தைத்து சாக்கின் வாய்ப்பகுதியை மூடினார்கள்.

முழுவதுமாக தூற்றி முடிந்தபோது மணிஐந்தரை ஆகியிருந்தது. நாற்பத்தியொரு சாக்குகளில் நெல்லைக் கட்டியிருந்தார்கள்.

நெல்சாக்குகளில் பத்துமூடைகளை வண்டிலில்ஏற்றி சவானையும் அழைத்தக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான். தான் வரும்போது இரவுச்சாப்பாடு கொண்டு வருவதாகக் கூறிச்சென்றான்.

இரவு இரண்டாவது சூட்டையும் மறுநாள் மூன்றாவது சூட்டையும் அடித்து முடித்தார்கள்.

இரண்டாவது நாள் பகலானபோது புண்ணியன் வந்தான்.

"அந்தா இருக்குடாப்பா உன்ரகட்டு. நேற்று வருவா எண்டு பாத்தம். இண்டைக்குத்தான் வந்திருக்கா. சரி எடுத்திற்றுப் போ. அவன் கிட்ணனையும் காணல்ல காத்தியையும் காணல்ல. எப்ப வாறானுகளோ தெரியா. நாளைக்கு வராட்டி கட்டு இஞ்சதான் கிடந்து மாடுதான் தின்னும். கண்டா சொல்லிவிடு சரியா" மயில்வாகனத்தார் சற்றுக் குரலை உயர்த்திக்கூறினார்.

"இஞ்ச வந்து ஒருகை பிடிச்சு உயத்தி விடுங்களன்"

"சவான் அத உயத்தி விடு தம்பி"

தலையில் அவரது பங்கு கட்டினை தலையில் சுமந்தபடியே "கண்டா சொல்லிவிடுறன். நானாப் போகமாட்டன். எனக்கு நேரமுமில்ல" என கூறிவிட்டுப் புறப்பட்டார் புண்ணியன்.

"ஏன் மாமா மூணு கட்டுகள களத்துக்கு அருகில வச்சிருக்கிறீங்க" சிறு வயதில் மகிழ்சென்னி மாமா சின்னத்தம்பியிடம் கேட்டபோது "அது தம்பலகமத்தில வழங்கம். நம்மட உடுப்பெல்லாம் எடுத்துப் போய் வெழுத்து வாற கிட்ணனுக்கு ஒரு கட்டு. நமட்ட வீட்டு ஆக்களுக்கு தலைமுடி வெட்டுற புண்ணியனுக்கு ஒரு கட்டு. மூணாவது கட்டு நம்மட வீட்ட ஆராவது செத்தா மோளம் அடிக்கிற காத்திக்கு ஒரு கட்டு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவங்களுக்கு கூலி குடுக்கிறதானே. ஏன் கட்டும் குடுக்கோணும்?"

"..............."

"என்ன சிரிக்கிறீங்க. சொல்லுங்களன் மாமா"

தனக்கும் கரணீயம் தெரியாது என்று எப்படிச்சொல்வது? "அவங்க பாவம் தானே. இத வச்சுத்தான் அவங்க ஓரளவுக்கு வீட்டில சாப்பிடுவாங்க. அதான் அவங்களுக்கு குடுக்கிற"

மீண்டும் கேள்விகேட்காததால் ஒருவாறு தப்பித்தோம் என மாமா நினைத்துக்கொண்டான்.

காத்தி அடுத்தநாள் நொண்டி நொண்டி வந்தார். புண்ணியனுக்கு ஒரு கால் சிறியது. அதனால் நொண்டித்தான் நடப்பார். ஆனால் பலசாலி. எவ்வளவு பாரத்தையும் எளிதாகத்தூக்கும் வல்லமை கொண்டவர். அவரும் தனக்கு உரித்தான "கட்டை" எடுத்துக்கொண்டு போனார்.

புண்ணியன் போய் சிறிது நேரத்தில் கிட்ணனும் வந்து தனது "கட்டை" எடுத்துப் போனார்.

இவ்வாறு இவர்கள் கட்டுகளை வாங்கி தங்களது வீட்டுக்குக் கொண்டு போவது இன்னும் சில ஆண்டுகளே நடைமுறையிலிருக்கப்போகிறது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இரண்டாம் நாள் கோவிலடியிலிருந்து பெண்களும் சிறுவர்களும் அதிகாலையில் வயலில் கதிர்ப்பொறுக்கினார்கள். அந்தவேளையில் நெற்கதிர்கள் கண்களுக்கு நன்றாகத் தெரியும். இரவுபெய்த பனியில்நனைந்த கதிரகளின்மேல் படும் சூரியக்கதிர்கள் மின்னுவதனால் அவை எளிதாகத் தெரியும். அக்கதிர்களை பனிக்கதிர்கள் என்று சொன்னார்கள். வேலாயுத மண்ணன் குழு வயல் வெட்டிக்கட்டினால் அந்தவயலுக்கு கதிர்பொறுக்கப் போவதில் பலனில்லை என்பது கதிர் பொறுக்குபவர்களின் பட்டறிவு. அவ்வளவு நேர்த்தியாக வேலைக்குப் பழக்கியிருந்தார் வேலாயுதமண்ணன். அவர் குழுவிற்கு கூலியும் அரை மூடை அதிகமாகத்தான் கொடுப்பார்கள்.

எல்லா நெல்லும் தூற்றி முடிந்ததும் வயல்வெட்டியவர்கள் ஒவ்வொருவருக்கும் நெல்லினை மயில்வாகனத்தார் அளந்து கொடுத்தார். சூடு அடித்தவர்களும் தங்களுக்கான கூலியை நெல்லாகப் பெற்றார்கள்.

வயலில் அறுவடையின் பின்னர் வேலை செய்பவர்களுக்கு கூலியாக நெல் கொடுப்பதே தம்பலகமத்தில் வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களத்தை விட்டுச்செல்லும் வேளையில் களத்தில் கற்பூரம் கொழுத்தி கோணேசரைப் பார்த்து கண்மூடிக் கும்பிட்டார்கள் சென்னியைத் தவிர்ந்த களத்தில் வேலைசெய்த எல்லோரும்.

கும்பிட்டு முடிந்ததும் மாலுக்குள் இருந்த பொருட்களையெல்லாம் மாட்டுவண்டிலில் ஏற்றிக்கொண்டு வெளியில்கிடந்த பொருட்களையும் ஏற்றிக் கொண்டு வீடுநோக்கிச் சென்றது சென்னியின் மாட்டுவண்டில்.

## - 12 -

அம்மாவை கண்டியில் மருத்துமனையில பதினாறு நாட்கள் வச்சிருந்தன். அம்மாட உடல்நலம் ஓரளவு தேறிற்றுது. வீட்டுக்கு கொண்டு போகலாமெண்டு மருத்துவர் சொல்ல வீட்ட கூட்டிவந்திற்றன். நீ அப்ப பயிற்சிக்குப் போயிற்றா. வீட்ட மூணுதரம் இராணுவம்வந்து தேடிதெண்டு தங்கச்சி சொன்னாள். உன்னக் கேக்கத்தான் வந்திருப்பாங்களெண்டு நினைச்சிற்று இருந்திற்றன். அடுத்தநாள் ராவு பதினொரு மணிக்கு இராணுவவாகனம் வந்து எங்கட வீட்டுவாசல்ல நிண்டுது.

என்னக் கூட்டிற்று போயிற்றாங்க. நான் எவ்வளவோ சொல்லிப் பாத்தன். அம்மாவப்பாக்க நிக்கோணும் எண்டு. அதுதான் நான்செய்த பெரியபிழை. அம்மாவ பாக்கணும் எண்டு சொன்னது எவ்வளவுபிழை எண்டு பிறகு தெரிஞ்சுது.

பிளான்ரன் பொயின்ரில கொண்டுபோய் உன்னக் கேட்டு அடிச்சாங்க. நீ எங்க போனதெண்டு எனக்குத்தெரியா எண்டு நான் சொல்லச்சொல்ல அடிச்சாங்கள். இரவிரவா வாறவன் போறவன் எல்லாரும் காலாலயும் கையாலயும் அடிச்சானுவள். சிலபேர் எனக்குப் பக்கத்தால வரக்கொள்ள கையில் வச்சிருந்த துவக்கால குத்தினாவனுவள்.

சுரேஸ்காசீம் எண்டு தன்ரபேர அடுத்தநாள் காலயிலதான் சொன்னான். உண்மயச் சொன்னா விட்டிருவம் எண்டான். எனக்கு என்ன உண்ம தெரியும். நீ பயிற்சிக்கு பலஸ்தீனம் போன மட்டும்தான் எனக்குத் தெரியும். அடிதாங்கேலாம நீ பயிற்சிக்கு போயிற்றா எண்டு சொன்னன். ஏன் நீ போகல்ல எண்டு கேட்டான். எனக்குப் போராட்டத்தில விருப்பமில்ல எண்டு சொன்னன். நாம யாழ்ப்பாணத்தில நாயன்மார்கட்டுல நடந்த வகுப்புக்குப் போன நிழற்படத்தக் காட்டி "பொய்யாடா சொல்றா நாயே" எண்டு காலால உதைச்சான். பிறகு ஒண்டும் கேக்காம போயிற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சநேரத்தில ரெண்டுபேர் வந்து கூட்டிப் போனானுவள்.

இஞ்ச பார் என்ர கால என நசீரிடம் தன் கணுக்கால்களைக் காட்டினான். இரண்டு கணுக்கால்களையும் சுற்றி காயமாறிய தடம் தெரிந்தது.

அமைதியாக ஆனால் மனதால் மிகவும் வருந்திக்கொண்டு பள்ளித்தோழனின் கதைகளைக் கேட்டுக் கொண்டிருந்தான் ஆபரன்.

ரெண்டுகால்களையும் இரும்புக்கம்பியால் கட்டினாங்கள். தலைகீழாக் கட்டித் தொங்கவிட்டு குதிகாலில் அடிச்சாங்க. நான் கத்த வில்லை. அது அவனுகளுக்கு சரியானகோபம். அதாலதான் சித்திரவதயக் கூட்டினவனுவள் எண்டு பிறகு தெரிஞ்சிது.

தலைகீழா தொங்கிக்கிடந்த என்ரமுகத்துக் கீழ நெருப்புமூட்டி கொச்சிக்காத்தூளப் போட்டானுவள். உயிர் போய்ப்போய் வந்திச்சு. நெருப்பு வெக்கை ஒருபக்கம். கொச்சிக்காப்புகையிட காந்தல் ஒரு பக்கம். சுட்டுக் கொல்ல மாட்டானுவளா எண்டமாரி இருந்திச்சு. சுட்டக் கொல்லுங்கடா நாய்களே எண்டு கத்தினன். அவங்களுக்கு நான் சொன்னது விளங்கல்ல. எல்லாரும் சிங்கள நாய்கள். ஆனா ஏதோ அவனுவளுக்கு ஏசுறன் எண்டு நினைச்சு மாறி மாறி அடிச்சாங்கள். பல்லக் கடிச்சிற்று இருந்தன். தாங்க முடியல்ல மச்சான் என்னால. ஐயோ... அத இப்ப நினைச்சாலும் என்னட்ட உயிர் இருக்கிறல்ல.

ஒண்டுமே கேட்காம ஒருகிழமையா அடிச்சானுவள். ஏன் அடிக்கிறானுவள் என்னத்துக்கு அடிக்கிறானுவள் எண்டே தெரியல்ல. அடிச்சவனுகளுக்கும் ஏன் அடிக்கிறம் எண்டுதெரியாமத்தான் இருந்திருக்கும்.

திருப்பியும் சுரேஸ்காசிம் வந்தான். கொழும்புக்குப்போய் வந்ததாகச் சொன்னான். உண்மயச் சொன்னா விடுவம் எண்டான். இல்லாட்டி நீ மட்டுமிலல் உன்ர குடும்பதிலயும் ஒருத்தரும் உயிரோட இருக்கமாட்டீங்க எண்டு விரட்டினான்.

நானும் பயிற்சிக்குப்போகத்தான் இருந்தனான். ஆனா அம்மாக்கு சுகமில்லாததால போகல்ல எண்டு வேறவழியில்லாததால உண்மையச் சொன்னன். அப்ப திருப்பியும் போவா என எண்டு கேட்டான். இனிப் போற எண்ணம் எனக்கு இல்ல. அம்மாவப் பாக்கணும் எண்டு சொன்னன்.

சரி எங்களுக்காக நீ வேல செய்யோணும். காசும் தருவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு சொன்னான். என்னால ஏலாது எண்டன். அவன் ஒண்டும் சொல்லாம போயிற்றான். ஆனா எனக்கு அண்டயிலயிருந்து அடிக்கல்ல. நல்ல சாப்பாடும் தந்தாங்க.

ஒரு மாசம் கழிச்சு தங்கச்சிய பிளான்ரன் பொயின்ருக்குக் கொண்டுவந்தான் சுரேஸ்காசீம். அவள்ற முகத்தப் பாக்க ஏலா. எனக்கருகில் விட்டிற்றுப் போயிற்றான்.

தங்கச்சிக்கு அடிச்சிருக்கான். கன்னம் வீங்கிப் போயிருந்திச்சு. தங்கச்சிய கொண்டு வரக்கொள்ள அம்மா காலப் பிடிச்சி கெஞ்சியிருக்கிறா. புடிச்சுத்தள்ளி விட்டிருக்கிறான். அவ தலஅடிபடவிழுந்து ரெத்தம் ஓடிக் கொண்டிருந்திருக்கு. தங்கச்சி சரியாக்கத்தியிருக்காள். அம்மாவ தூக்குங்க தூக்குங்க எண்டு கத்தியிருக்கிறாள். மிருகம் அம்மாவ அப்பிடியே விட்டுற்று தங்கச்சிய மட்டும் வாகனத்தில ஏத்திற்று வந்திற்றான். இதெல்லாம் தங்கச்சி கத்திக் கத்திச் சொன்னாள்.

நசீரின்மனம் உண்மையில் அனலரசுக்காக அழுதது. தன்னால் எவ்வளவு துன்பங்களையும் வேதனைகளையும் அநுபவித்திருக்கிறான் என்று அவன்மனம் வேதனைப்பட்டது.

அம்மாக்கு என்ன ஆச்சோ எண்ட கவலதான் எனக்கு அந்தநேரத்தில இருந்திச்சு. இப்பதான் கண்டிக்குக் கொண்டுபோய் வந்த. திருப்பியும் இப்பிடி எண்டா என்ன செய்யிற எண்டு நினைக்க ஏலாம இருந்திச்சு. அவனுவள சுட்டுக் கொல்லோணும் போல வெறிதான் வந்திச்சு.

அடுத்தநாள் காலயில மிருகம் போலத்தான் வந்துநிண்டான். எங்களுக்கு ஒத்துழைக்காட்டி என்ன நடக்கும் தெரியுமா?. நேற்று தங்கச்சிக்கு ஒண்டும் செய்யாம கொண்டு வந்து விட்டிருக்கம். உன்ரஅம்மாட கத என்னவோ தெரியா. நீ உன்ர வீட்டோட இருக்கோணுமெண்டா நான் கேட்டதச் செய்யவேணும் சரியா என்று சொன்னான். அவன் சொன்ன அனைத்தையும் செய்யக்கூடியஆள் எண்டு விளங்கிச்சு. நான் என்ன செய்யவேணும் எண்டு கேட்டன். நான் சொல்ற வேலகள செய்யோணும் எண்டான். வேற வழியில்லாம ஓம் எண்டு சொன்னன்.

பின்னேரம் போல ரெண்டுபேரயும் எங்கட வீட்டில் கொண்டு வந்து விட்டுத்துப் போனானுவள். அம்மாவ அப்பா மூதூர்மருத்துவமனைக்கு கொண்டு போயிருக்கிறார். கீழ விழக்கொள்ள தல அடிபட்டதால கனக்க ரெத்தம் ஓடிற்று. மயங்கிற்றா. மூதூரில இருந்து மலைக்கு அனுப்பிற்றாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்க போயும் அம்மாக்கு நினைவு திரும்பல்ல. அங்கயிருந்து கண்டிக்கு அனுப்பிற்றாங்க. அவயோட நிக்கிறதுக்கு ஆரும்போகல்ல. நம்மட ஊரில ஆர் மச்சான் கண்டிக்குப் போறதுக்கு இருக்காங்க? என கேட்டு பெருமூச்சொன்றை விட்டு நிறுத்தினான். சில நிமையங்கள் அமைதியாக இருந்தவன் தொடர்ந்தான்.

கண்டிக்குப் போறதுக்கு காசுமில்ல. வீட்ட நிண்ட கிடாஆட்ட தோப்பூர் சலீம் காக்காவுக்கு வித்துப்போட்டு அந்தக்காச எடுத்திற்றுக் கண்டிக்குப் போனன். அம்மாக்கு நினைவு திரும்பியிருந்திச்சு. ஆனா அம்மாக்கு இடது பக்கம் இழுத்திற்று மச்சான். இடது கையையோ காலையோ அசைக்கேலாம அம்மா இருந்தா". அனலரசுவுக்கு குரல் தழுதழுத்தது. எப்பிடியெல்லாம் நம்மளயெல்லாம் பாத்த அம்மாவ இனி காலம்முழுக்க நான் பார்க்க வேண்டிவரும் எண்டு எனக்கு அப்ப தெரியாது. என்னால என்னமச்சான் செய்யேலும். ஒரு கிழம வச்சிருந்திற்று ஊருக்கு படுத்தபடுக்கையாகக் கொண்டு வந்து சேத்தன். ஆம்மா சாவடையும்வரைக்கும் அவவ நான்தான் ஆபரா பாத்தன். தங்கச்சி பல்கலைக்கழகத்தில படிக்கிறதால நான்தான் எல்லாத்தையும் பாக்க வேண்டியதாகிற்று.

இரவில சாமத்தில வருவான். வந்து இயக்கம் ஆரும் வந்தா சொல்லோணும் எண்டு சொல்லுவான். ஆரும் புதுசா வந்தா சொல்லவேணும் எண்டு சொல்லுவான்.

வயல்வேலக்கு ஆக்கள் வாறநேரம் புதுசாஆக்கள் வந்திருக்காங்க எண்டு சொல்லியிருக்கன். அவன்வந்து விசாரிச்சு அவங்க வயல்வேலைக்கு வந்திருக்காங்க எண்டு என்னட்ட சொல்லிற்றுப் போவான்.

இப்பிடி அடிக்கடி வந்துதொல்ல குடுக்கத் தொடங்கிற்றான். ஒவ்வொரு தரமும் வரக்கொள்ள ரெண்டாயிரம் எண்டாலும் தருவான். நான் வேணாம் எண்டு சொன்னாலும் தந்திற்றுத்தான் போவான்.

எப்பிடியாவது இவன்ர தொல்லையில இருந்து விடுபடோணும் எண்டதுக்காக அம்மாவ சாட்டச் சொல்லி வேற ஓராள அறிமுகப்படுத்தித் தாறன் எண்டு சொல்லி மலையில வச்சு தோப்பூர் வசூர்தீன அறிமுகப் படுத்திவிட்டன். அதுக்குப்பிறகு அவன் வீட்ட வரல்ல.

ஆனா நீ வந்தது எப்பிடியோ அவனுக்கு தெரிஞ்சிருக்கு. நீ வந்து ஒரு மாதத்தால் வசூரயும் கூட்டிற்று வந்தவன். உன்னட்ட எப்பிடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவான். வசூருக்கு அறிமுகப்படுத்தி விடச்சொன்னான். அதாலதான் உனக்கு வசூர அறிமுகப்படுத்தி விட்டனான். அறிமுகப்படுத்தினத்துக்காக இருபத்தைஞ்சாயிரம் உருபா கொண்டு வந்து தந்தவன்.

உன்னை எப்பிடியெண்டாலும் பிடிக்கவேணும் என்றதுதான் அவன்ர ஆச.

நீ தம்பலகமம் போற எண்டு சொல்லிற்றுப் போகக்கொள்ள வசூர்தீன் எங்கட வீட்டுக்குள்ளதான் இருந்தவன். வசூர் முழுமையாக சுரேஸ்காசீமுக்காண்டித்தான் வேல செய்யிறான். நீ தம்பலகமம் போன அடுத்தநாள் நான் தம்பலகமம் போனனான். நீ மாக்கயிலதான் நிக்கிறா எண்டத அங்க விசாரிச்சதில அறிஞ்சனான். சின்னத்தம்பிவீட்ட பகல்ல நீ வரமாட்டா என்றத உறுதிப்படுத்திப் போட்டுத்தான் வசூருக்கு சென்னியின் வீட்டைக் காட்டினனான். உன்ர கூடாதகாலமோ என்ர கூடாதகாலமோ அந்தநேரத்தில நீ அங்க வந்தது.

உன்னப் பிடிச்சப்பிறகு என்னட்டவந்து ஒண்டரை லெட்சம் உருபா கொண்டு வந்து தந்திற்று இனி உனக்கு சிக்கல் தரமாட்டம் எண்டு சொல்லிற்றுப் போனவன். பிறகுவந்து நீ கடல்ல தாண்டு செத்திற்றா எண்டு சொன்னான். நான் அஞ்சாறு நாள் சாப்பிடல்ல. இஞ்சவாற வரைக்கும் குற்ற உணர்வோடதான் இருந்தனான். உன்னக்கண்டதும் எனக்கு சரியான மகிழ்ச்சி. ஆனா வெளிக்காட்ட முடியல்ல. இனி நான் செத்தாலும் பரவாயில்ல. உன்னட்ட என்ர மனசில ஆரிட்டயும் சொல்ல ஏலாம இருந்த எல்லாத்தையும் சொல்லிற்றன்.

இனி நீ என்னச் சுட்டுக்கொண்டாலும் பரவாயில்ல. நான் வாழ்றதுக்கு கொஞ்சமும் தகுதியில்லாத ஆள்தான். என்ர உயிர்த்தோழனக் காட்டிக்குடுத்த பாவிநான். அதால நீ என்ன முடிவெடுத்தாலும் பரவாயில்ல. அவன் தந்தகாசு அவ்வளவும் இதில் இருக்கு என நீட்டினான்.

கூறி முடித்தான் அனலரசு. அடித்தபுயல் ஓய்ந்தது போலிருந்தது ஆபரனுக்கு. என்ன கதைப்பது என்று தெரியவில்லை என்பதைவிட ஒருவார்த்தையும் ஆபரன் வாயிலிருந்து வரவில்லை என்பதே பொருத்த மாயிருக்கும். சில நிமையங்கள் அமைதியுடன் தொடர்ந்தன.

ஆபரன் அந்தநிலவில் பணத்தை எண்ணிப்பார்த்தான். இரண்டு லெட்சத்து பதின்னான்காயிரம் உருபா இருந்தது. தன்பள்ளித்தோழனிடம் தொடர்ந்து கதைக்க அவனால் முடியவில்லை. மணிக்கூட்டைப் பார்த்தான். மணி நடுச்சாமம் பன்னிரண்டு நாற்பத்தைந்து எனக் காட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எழும்பு மச்சான் படுப்பம். நாளைக்குக் கதைப்பம்" எனக்கூறி அனலரசுவின் கைகளைப் பிடித்துத் தூக்கியவன் அவனதுதோளில் தன் வலதுகையை வைத்து அழுத்தினான். அந்த ஆளமான அழுத்தத்தின் அர்த்தம் அனைத்தையும் புரிய வைத்தது அனலரசுவுக்கு. குடிலை நோக்கி நடந்தான் ஆபரன். பின்னால் அனலரசுவும் நடந்தான்.

நான் கூறியவற்றை நம்பினானா இல்லையா என்பதை அனலரசுவால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் ஆபரன் தன்தோள்மீது கைவைத்து விரல்களால் அழுத்தியமத்தியது தன்னை நம்புகிறான் என்பதை உணர்த்தியதாக அவன் எண்ணினான்.

தன்பள்ளித்தோழனை முழுமையாக நம்பினான் என்பது உண்மைதான். அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தைகளும் அவனது அடிமனதிலிருந்து வந்தவை என்பதை ஆபரன் நம்பினான். ஓராண்டு ஈராண்டு நட்பல்ல அவர்களதுநட்பு.

சித்திரவதையின் தன்மையினை அறிந்தவர்களுக்குதான் தெரியும் அதன் வலியும் வேதனையும். சொற்களால் விபரிக்க முடியாதவையவை. தன்தங்கையின் நிலையினை எண்ணி தன்அம்மாவின் நிலையினையெண்ணி அவன் தன்மனதால் எவ்வளவு அழுதிருப்பான் என்பதை நன்றாகஉணர்ந்தான் ஆபரன். தனக்காகத்தானே அவனது வேதனைகளை தன்மனதிலே அமிழ்த்திக் கொண்டு வேதனைகளை அநுபவித்து எவ்வளவோ பணத்தேவைகள் ஏற்பட்டபோதும் சுரேஸ்காசீம் கொடுத்தபணத்தில் ஒருசதமேனும் செலவிடாது அப்படியே பொத்தினாற்போல் ஒப்படைத்தமனதை என்ன வென்றுசொல்வது என பெருமையடைந்தான் ஆபரன்.

இனி பள்ளித்தோழன் தன்னுடன் இருக்கட்டும். ஆனால் சுரேஸ்காசீமை தொடர்ந்து விட்டுவைப்பது போராடும் அனைவருக்கும் ஆபத்து என்பதை உணர்ந்து உவைஸ்வாத்தியிடம் கூறிய திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நாட்கள் நெருங்கிவிட்டதாக உணர்ந்தான் நசீரான ஆபரன்.

அனலரசு மனதில் இருந்த பாரத்தினை இறக்கிவிட்ட நிம்மதி யுடன் பண்ணையில் வேலைசெய்தான். ஓய்வான நேரத்தில் அல்லது வேலைமுடிந்த நேரங்களில் அங்கிருந்த புத்தகங்களை வாசித்து தன் அறிவைப் பெருக்கினான்.

தோழர்கள் கதைத்து ஒருகிழமை கடந்திருந்தது. நசீரின் மனதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய ஐயம் உருவாகியிருந்தது. நேரடியாகக் கேட்டுத்தெரிந்து கொள்வதே சரி என எண்ணிய நசீர் அனலரசு அருகில் செல்லும்போது 'தாய்' நாவலை வாசித்துக்கொண்டிருந்தான்.

"உன்னட்ட ஒண்டு கேக்கணும் எண்டு நினைச்சனான். மறந்திற்றன். இப்பதான் நினைவுக்கு வந்திச்சு"

"சொல்லு ஆபரா"

"அம்மா ரெண்டாவதுதரம் கண்டிக்குக் கொண்டுபோன பிறகு போனதெண்டு சொன்னனீதானே. எப்பிடிநீ போனனீ?"

தன் தோழனின் மனதில் கீறல் விழுந்திருக்கிறது. எதையோ அறிவதற்காக வேறு விதமாக கேள்விகேக்கிறான் என அனலரசு புரிந்து கொண்டான். ஆனால் உண்மையைச் சொன்னால் அவன் புரிந்துகொள்வான் என நம்பினான். அதுதான் நடந்தது.

"அத ஏன்கேக்கிறா. பிளான்ரன் பொயின்றில இருந்து கொண்டு வந்து விடக்கொள்ள என்னால நடக்கவே ஏலாது. ரெண்டு கால்லயும் இருந்தகாயம் மாறல்ல. அவங்கள் மருந்து கட்டிவிட்டவங்கள்தான். ஆனாலும் அது மாறல்ல. புண் பெரிதாகிற்று. பழுத்தும்விட்டுது. ஓரே குத்துவேதனை. அத வாயால சொல்ல ஏலா.

நடக்கயும் ஏலாஎனக்கு. கொச்சிக்கா புகை போட்டதால முகமெல்லாம் ஓரே எரிவுவேற. அடித்த அடிகளால உடம்பெல்லாம் நோவு. வீட்டவந்தா அம்மா கண்டியில. அப்பாக்கு எப்பிடி, எங்க போற எண்டு ஒண்டும் தெரியா. என்ன செய்யிற? வேறவழி ஒண்டுமே எனக்கு இருக்கல்ல. நம்மளோட படிச்ச செல்வரெத்தினத்த வரச்சொல்லி வியளம் அனுப்பினன். அவன்தான் என்னோட கண்டிக்கு வந்தவன். எனக்கு பேருந்தில ஏறயும் ஏலா. இறங்கயும் ஏலா. அவன்தான் தன்ர கைகளால என்னத்தூக்கி ஏத்தி இறக்கினவன். பாவம் அவன். என்னால சரியான துன்பங்கள அநுபவிச்சிற்றான். கண்டியிலஇருந்து அம்மாவக் கூட்டிவந்த பிறகும் ரெண்டுகிழமை வரைக்கும் அவன்தான் அம்மாவையும் என்னையும் பாத்தவன். அம்மா செத்தோண்ண எப்பிடித் துடிதுடிச்சு கத்தினான் தெரியுமா. பாக்கிறாக்கள் எல்லாம் 'செத்தது என்ரஅம்மாவா? அவன்ர அம்மாவா' எண்டு கதைச்சது என்ரகாதிலயே கேட்டிச்சு. எப்பிடித்தான் அவனுக்கெல்லாம் கைமாறு செய்யப்போறனோ தெரியாஆபரா" பதில் கூறிமுடித்தான் அனலரசு. தெளிவடைந்தான் நசீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கவலப்படாத எல்லாத்தக்கும் நேரம்வரும். நீ புத்தகத்தப் படி" கூறியவன் எழுந்து மாலுக்குள் சென்றுவிட்டான். 'தன்தோழனை இனி ஐயப்பட எதுவுமில்லை' என அவன்மனம் உறுதியாகச் சொன்னது.

நீண்ட நாளின்பின்னர் பண்ணைக்குவந்த சென்னியிடம் உவைஸ்வாத்தியைக் கூட்டிவருமாறு காலையில் கூறியனுப்பினான். இரவு எட்டுமணியளவில் இருவரும் புதிதாக வாங்கிய உந்துருளியில் வந்தார்கள்.

இரவுச்சாப்பாட்டை முடித்துவிட்டு மாலுக்கு வெளியே இருவரும் கீழே விரித்திருந்த பன்பாயில் அமர்ந்திருந்து கதைத்தார்கள்.

உவைஸ்வாத்தி கடிதமொன்றைக் கொடுத்தார். பிரித்துப் படித்தான். சிரித்தான்.

"உண்மையில் நீ கெட்டிக்காரன்தான் நசீர்" பாராட்டினார் வாத்தி. பதிலுக்கு அவன் எதுவும் சொல்லவில்லை.

கடிதத்தில் வசூர்தீனும் ஆபிதாவும் தங்கள் நன்றியைத் தெரிவித்திருந்தார்கள். உவைஸ்வாத்தியின் முகவரியை அவன்கொடுத்த புத்தகத்தினுள் வைத்தே கொடுத்திருந்தான் ஆபரன்.

புறப்படுவதற்கு தயாரான வாத்தியிடம் அடுத்தநாள் காலையில் செல்லுமாறு கூறினான் நசீர். "இந்தநேரத்தில் நீங்க வந்ததேபிழை. தளாவாய்க்குக் கிட்ட தனியன்யானை ஒண்டுகிடக்கு. நாளைக்குத்தானே வரச் சொன்னனான்" எனகடிந்து கொண்டான் வாத்தியை.

எப்படியான விளைவுகள் ஏற்படப் போகின்றது என்பதை அறியாமல் அவர்கள் இருவரும் போட்டதிட்டத்தினை செயற்படுத்துவதில் குறியாக இருந்தார்கள். பண்ணையில் இருந்த தோழர்களுக்கோ சென்னிக்கோ அந்தத் திட்டத்தினை அவன் கூறவில்லை. நேரம் வரும் போது சொல்லலாம் என அவர்களுக்குச் சொல்லாது விட்டுவிட்டான் நசீர்.

மறுநாள்காலை ஐந்துமணிக்கெல்லாம் சென்னியும் வாத்தியும் புறப்படத் தயாரானார்கள் அடுத்த வெள்ளிக்கிழமை இரவுக்கு, தான் தயாராக இருப்பதாக நசீரின் அருகில்வந்து அவனுக்கு மாத்திரமே கேட்கும் விதமாக கூற, படுத்துக் கிடந்த நசீர் எழுந்து உவைஸ்வாத்தியை தனியாக அழைத்துச்சென்று தனது கைத்துப்பாக்கியை அவரிடம் கொடுத்தான். அதனைப் பெற்று தனது இடுப்பில் சொருகிக் கொண்ட வாத்தி சென்னியுடன் புறப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக்கிழமை வந்தது. காலையில் சற்றுப் பரபரப்பானான் நசீர். யார் யாரை அழைத்துச் செல்வது என்று சிந்தித்தான்.

கரன், பாச்சா, கமல், செந்தில் நால்வரும் போதும் என எண்ணியவன் அவர்களை மாத்திரம் அழைத்தான். இண்டைக்கு பின்னேரம் தயாராக இருங்க தம்பலகமம் போறம். அவ்வளவுதான் கூறினான். குரலில் தெரிந்த கண்டிப்பினால் 'ஏன் போகிறோம்' என கேட்பதற்கு யாருக்கும் தோன்றவில்லை. ஆனால் ஏதோ சிக்கலான வேலைக்குப் போகப்போகிறோம் என்பது விளங்கியது.

மாலுக்கு வந்து ராதாரவியிடம் "ராதா, இண்டைக்கு நாங்க தம்பலகமம் போறம். ஒரு சின்ன வேல. ராவைக்கே வந்திருவம். இல்லாட்டி நாளைக்கு வருவம்" எனக் கூறியது ஏனையோருக்கும் கேட்டது.

மாலை ஐந்தரை மணியளவில் புறப்படும்போது அனலரசு அருகில் வந்தவன் இண்டைக்கு நாங்க வரக்கொள்ள உனக்கு ஆச்சரியம் ஒண்டு இருக்கு" எனக் கூறியவன் விறுவிறு என நடந்தான். அவன் கையில் எஸ்.எம்.ஜீ சிரித்துக் கொண்டிருந்தது.

எல்லோரும் கையில் சுடுகலன்களை ஏந்தியிருந்தார்கள். சுடுகலனுக்குத் தேவையான குண்டுகள் நிரப்பப்பட்ட மூன்று மகசீன்களைத் தாங்கிய பட்டிகள் மார்போடு கொழுவியிருந்தார்கள்.

பூவரசந்தீவினூடாக ஆலங்கேணி வந்து பைசல்நகரையடைந் தார்கள். இருட்டில் ஒருவர் பின் ஒருவராக நடந்தார்கள். பைசல்நகரில் இருந்து கிண்ணியாத்துறையடி நோக்கி வளைந்து வளைந்து செல்லுகின்ற மணல் தெருக்களிலும் கிரவல்போட்ட தெருக்களிலும் தார்ஊற்றி கற்கள் கிளம்பிக்கொண்டிருக்கும் தெருக்களிலும் வேகமாக நடந்தார்கள். செந்திலுக்கு சென்று கொண்டிருக்கும் வழி அத்துப்படி. அவனைத் தொடர்ந்து நால்வரும் நடந்தார்கள்.

இரவு எட்டரை மணியளவில் துறையடியைச் சென்றடைந் திருந்தார்கள்.

தம்பலகமம் என்று கூறி வந்தவர்கள் பைசல்நகரால் வந்துகொண் டிருக்கும் போது உவைஸ்வாத்தியின் வீட்டில் நாடகம் அரங்கேறிக் கொண்டிருந்தது.

சாவாற்றிலிருந்து திரும்பிய உவைஸ்வாத்தி பள்ளிக்கூடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று வீட்டுக்கு வந்து சாப்பிட்டபின் பெரிய கிண்ணியாவிற்கு சென்றார். தற்செயலாகச் சந்திப்பது போல் ஜமீல்கபூரைச் சந்தித்தார். சிறிதுநேரம் உரையாடினார். வெள்ளிக்கிழமை சுரேஸ்காசீம் வருவார். இரவு சாப்பாடு ஒழுங்கு செய்யச்சொன்னவர். "அவர் தாற காசு அவருக்குப் போத்தல் வாங்கிறதுக்கே செலவாகிரும்போல கிடக்கு வாத்தி" என்று சலித்துக் கொண்டான்.

பழம்நழுவிப் பாலில்விழுந்தது போலிருந்தது உவைஸ்வாத்திக்கு. அவர் எதற்காக வந்தாரோ அதையே ஜமீல்கபூர் எளிதாக்கியது ஆச்சரிய மகிழ்ச்சியாகியது வாத்திக்கு..

"அப்ப நான் சாப்பாட்டு ஒழுங்குச் செய்யட்டா. அவர் வீட்ட வந்துசாப்பிட்டும் மிச்சநாளாச்சுத்தான்"

"உண்மையாவா"

"ஓ..ஏன்? எனக்கு சிக்கல் இல்ல. "

"அவர் போத்தல் கொண்டு வாறன் எண்டாரே"

"அதுக்கென்ன வீட்டுக்கு பின்பக்கமா இருந்து அடிக்கிறததானே"

"நீங்க குடிப்பீங்களா?"

"ஏன் நான் குடிக்காட்டி அவர்குடிக்கமாட்டாரா?"

"அவருக்கு மட்டிய தேங்காயப்பால் பொரியிலும் செஞ்சி மாட்டிறச்சிய குழம்பும் ஆக்கினாச்சரி. ஒரு வெட்டுவெட்டுவார்"

"நீயும் வாவன்" வந்துவிடக்கூடாது என்று மனதில் நினைத்தபடி கேட்டார்.

"இல்லவாத்தி நான் எங்கட ஆக்களோட அண்டைக்கு சமையலுக்கு வாறன் எண்டு செல்லியிருக்கன்."

"எங்க?"

"உப்பாத்துத்துறையடியில"

"ம். நடத்துங்க... சரி அப்ப நான் வாறன் பேயித்து சரியா. அவருக்கு சாப்பாடு ஒழங்கு செய்யிறன் எண்டு செல்லிவிடு என"

மனதில் மகிழ்வுடன் வீட்டிற்குப் புறப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாழக்கிழமை காலையில் வாத்திவீட்டிற்கு சென்னிவந்தான். "ஓம்" எண்டு சொல் என்று சொல்லிவிட்டார். சென்னி சாவாறுசென்று நசீரிடம் தகவலைப் பரிமாறியிருந்தான்.

வெள்ளிக்கிழமைமாலை ஆறேமுக்கால் மணியிருக்கும். சுரேஸ் காசீம் தனியாளாக உந்துருளியில் சரத்துடன் வந்திறங்கினான் உவைஸ்வாத்தி வீட்டிற்கு.

எங்காவது உணவு இரவில் உண்ணப் போவதென்றால் தனியாளாகவே அவன் செல்வது வழக்கம். ஓர் உயர்படையதிகாரியாக இருந்தாலும் அவனுக்கு சிறப்புப் பணிகள் வழங்கப்பட்டிருந்தமையால் அவனை யாரும் கேள்வி கேட்பதில்லை. அவன் விரும்பியவாறு செயற்பட்டான்.

வீட்டின் பின்பக்கத்தில் கிணற்றுக்கு அருகில் நிற்கும் தென்னை மரத்தின் கீழ் இரண்டுநாற்காலிகள் போடப்பட்டு நடுவிலே சிறிய மரத்தாலான முக்காலி வைக்கப்பட்டிருந்தது. முக்காலியின் மேல் யானைச் சோடா தனியாக இருந்தது.

சிரித்தபடியே நாற்காலியில் அமர்ந்தான் சுரேஸ்காசீம் அங்கு நடக்கப் போவது தெரியாமல்.

மட்டித் தேங்காய்ப்பால் பொரியலையும் இரண்டு கண்ணாடிக் குவளைகளையும் கொண்டுவைத்தார் உவைஸ் வாத்தி.

ஒரு குவளையில் யானைச் சோடாவால் நிரப்பினார். மட்டித் துண்டொன்றை எடுத்து வாயில் வைத்தார் உவைஸ்வாத்தி. தான் கொண்டு வந்த சூடான பானத்தின் மூடியைத் திறந்து வெறுமையாக இருந்த குவளையில் கால்வாசிக்கு ஊற்றி யானைச்சோடாவால் முக்கால்வாசிக்கு நிரப்பினான் சுரேஸ்காசீம்.

இருவரும் கிண்ணியாவின் கல்விநிலை பற்றி கதைத்துக் கொண்டிருந்தனர். மூன்றாவது குவளையினை முடித்துவிட்டிருந்தான் சுரேஸ்காசீம். அவனது கண்களின் இமைகள் சற்றுச் சுருங்கத் தொடங்கி யிருந்தன. வார்த்தைகள் சற்று தடுமாறி வரத்தொடங்கின. பேச்சின் வேகம் சற்றுக் குறைவடையத் தொடங்கியது.

ஏழரைமணியாகிவிட்டது. உவைஸ்வாத்தியின் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. ஆனால் முகத்தில் பதற்றம் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் எடுத்த பயிற்சியை மட்டும் நம்பியே கைத்துப்பாக்கியை கொண்டு வந்தவர்.

'சாப்பிடுவமா' என்றார். 'ஓம்' என்றான் அவன். வீட்டின் உள்ளே சென்றவர் உணவு கொண்டு வரவில்லை. கைகளை பின்னால் வைத்தவாறு அவனுக்கு அருகில் வந்தார். அவரை நிமிர்ந்து பார்த்தவன் என்ன என்பதுபோல் தலையை மேலும் கீழும் அசைத்துக் கேட்டான்.

கையைமுன்னால் எடுத்தவர் தன்வலதுகையில் வைத்திருந்த கைத்துப்பாக்கியை அவன் கன்னத்திற்கு அருகில் நீட்டி 'அசையவேணாம்' என்றார். நிறை வெறியில் இருந்தவனுக்கு அஞ்சும்கெட்டு அறிவும்கெட்டது. வெறி போன இடம் தெரியவில்லை. அடுத்தகணம் 'அசையவேணாம்' என்று கூறிய உவைஸ்வாத்தியின் கையிலிருந்த கைத்துப்பாக்கி சுரேஸ்காசீமின் கையில் இருந்தது.

தன்கையால் அவரின் கழுத்தை வளைத்துப் பிடித்தவன் தலைமயிரைப் பிடித்து கீழே இருத்தினான். செய்வதறியாது தவித்தார் வாத்தி. குரல்வளையை நசுக்கினான். மூச்சுவாங்கியது அவருக்கு. அவனது உடும்புப் பிடியிலிருந்து அவரால் விடுபடவோ பிடியை விடுவிக்கவோ முடியவில்லை. சத்தம்கேட்டு அவரின் துணைவி சித்திகலிமா ஓடிவந்தாள். அவளுக்கு கன்னத்தில் சரமாரியாக மற்றைய கையால் அறைந்தவன் என்னட்டயா உங்கட விளையாட்டு. எந்தப்புத்தில எந்தப்பாம்பு இருக்கும் எண்டு தெரியாமப் போச்சு என்று கூறித் தள்ளிவிட்டான். 'அல்லா' என்றலறி கீழே விழுந்தாள் அவள்.

தரையில் இருந்தவரை தரதரவென வீட்டுமுற்றம்வரை இழுத்துச் சென்றவன் முற்றத்தில் உடுப்புகள் காயப்போடுவதற்குக் கட்டியிருந்த நைலோன் கயிற்றை அறுத்து வாத்தியின் கைகள் இரண்டையும் பின்பக்கமாக் கட்டினான். கட்டியபின் காலால் கீழேபோட்டு உதைத்தான். வாத்தி வாய்விட்டுக் கத்தினார். பக்கத்து வீட்டார்ஓடிவந்தனர். தன்னை அறிமுகப்படுத்தியவன் 'இவன் புலி. இதில ஒருவரும் நிக்கவேணாம்' என வாத்தியிடமிருந்து பறித்த துப்பாக்கியை காட்டி வெருட்டினான். வந்தவர்கள் சென்றுவிட்டார்கள். படலையருகில் கிடந்த விறகுக் கட்டையால் அடித்தான். ஐயோ என அலறினார் உவைஸ்வாத்தி. கன்னமருகால் குருதி ஆறாகஓடியது.

உந்துருளியில் ஏறியவன் தனக்கு முதுகுப்பக்கத்தைக்காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுமாறு கூற செயலறு நிலையிலிருந்த வாத்தி அவன் கூறியதுபோல் செய்தார்.

நசீர் எத்தனை தடவை திரும்பத்திரும்பக் கூறினான். அவன் சரியான கெட்டிக்காரன். அவனோடு விளையாடுவது ஏலாத செயல். வேறமாதிரிப் பாப்பம் எண்டு. நான்தானே இப்பிடிச் செய்யிறது நல்லது எண்டு சொன்னன். சே. என்ன மடத்தனத்தச் செய்தன் என தன்னை எண்ணி நொந்தார் உவைஸ்வாத்தி.

சுரேஸ்காசீமின் உந்துருளி பின்பக்கமாக கைகள் கட்டப்பட்ட உவைஸ்வாத்தியுடன் வேகமாக புகாரியடிச்சந்தி கடந்து பெரியகிண்ணியா பள்ளிவாசலடியினால் செல்லும்போது என்னென்ன கெட்டவார்த்தைகள் அவனுக்குத் தெரியுமோ அவ்வளவு கெட்டவார்த்தைகளாலும் திட்டித்திட்டி உந்துருளியை ஓட்டினான்.

ஒன்பதரை மணியளவில் கிண்ணியா துறையடியில் வந்து நின்றது உந்துருளி.

துறையடியில் இருக்கும் ஊற்றடிப்பிள்ளையார் கோவில் வளவில் மறைந்திருந்த நசீரும் தோழர்களும் மின்னல்வேகத்தில் தொழிற்பட்டார்கள். உந்துருளியிலிருந்து இறங்கும் முன்பே கரனது ஏ.கே.47 சுரேஸ்காசீமின் தலையில் இருந்தது. கைகளை மேலேஉயர்த்துமாறு கட்டளையிட்டான். கையை மேலே உயர்த்தினான் சுரேஸ்காசீம். இடுப்பிலே இருந்த இரண்டு கைத்துப்பாக் கியைத் தடவிஎடுத்தான் பாச்சா. "நல்லா இடுப்பத்தடவு" என்றான் நசீர். தடவிய செந்தில் அவனது இடுப்பிலிருந்து இரண்டு கூரான கத்திகளை எடுத்தான். உவைஸ்வாத்தியின் கைகளைப் பிடித்து மெதுவாக உந்துருளியில் இருந்து இறக்கி அவரது கைகளை அவிழ்த்ததும் அந்தக் கயிற்றினால் சுரேஸ்காசீமின் கைகளை பின்பக்கமாக வைத்துக் கட்டினான்.

சுரேஸ்காசீமிற்கு என்னநடக்கிறது என்று புரியவில்லை. கச்சிதமாகத் திட்டமிட்டிருக்கிறார்கள். இவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள் என்று அவன் மனம் சொல்லியது.

கமலிடம் துப்பாக்கியை வாங்கிய நசீர் உவைஸ்வாத்தியை கூட்டிச்சென்று மருத்துவமனையில் மருந்துகட்டி ஆலங்கேணிச் சந்திக்கு கூட்டிவருமாறு கூறியவன் சுரேஸ்காசீமின் உந்துருளியைக் கொண்டு போகுமாறு கூறினான்.

எந்தவழியால் செல்வதென யோசித்தவன் வந்தவழியே நல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என தீர்மானித்தான். விரைவாக செல்லுமாறு தோழர்களிடம் கூறினான்.

"தப்ப நினைச்சா உயர இழக்க வேண்டிரும்" என கரன் கூறினான். சுரேஸ்காசீம் தப்பிக் முயற்சிக்கவில்லை. "திறமாகத் திட்டமிட்டே செய்திருக்கிறார்கள். இன்னும் எத்தனைபேர் எங்க இருக்கிறார்களோ தெரியாது" என மனதில் நினைத்துக்கொண்டான். ஒருவர் கைகூட அவன்மேல் விழவில்லை. பின்னர் பார்ப்போம், தப்பிக்க வழிகிடைத்தால் முயலுவோம். இப்ப தப்பிப்பது சாவதற்குச் சமம் என்பதை ஊகித்தறிந்தான்.

மருந்துகட்டிய உவைஸ்வாத்தியை ஏற்றிக்கொண்டுசென்ற கமலிடம் நடந்தவற்றை ஒன்றுவிடாமல் கூறியவாத்தி தன்வீட்டிற்கு போகும்படி கூறினார். சித்திகலிமாவிடம் கூறிவிட்டு போவதே நல்லது என்பதே உவைஸ்வாத்தியின் யோசனை. ஏற்பட்ட காயங்களுக்கு கட்டுப்போட்டுக்கொண்டு வீட்டிற்குச் சென்றவரைக் கண்டதும் துணைவி அழுதாள். ஆறுதல் கூறியவர் துணைவியிடம் பின்னர் நடந்தவற்றைக் கூறி "கண்டியில் உள்ள அவளது சாச்சா வீட்டிற்குப் போய் இருக்குமாறும் தான் பின்னர் அங்கு வருவதாகவும்" கூறினார். அதிகாலையிலேயே கண்டிக்குப்போகுமாறு கூறிவிட்டு கமல் அருகில் வந்தவர் போவம் என்றார். இருவரும் புறப்பட்டு ஆலங்கேணியை வந்தடைந்தனர். தோழர்கள் அனைவரும், இருவரின் வருகைக்காகக் காத்துக்கொண்டு மரமொன்றின் அருகில் மறைந்து இருந்தனர்.

இருவரும் வந்தபின்னர் அவர்கள் அருகில் சென்ற நசீர், "நீ அவரக் கூட்டிற்றுப் போ. நாங்க வாறம். அஞ்சு மணிபோல அறிவழகன்ர மாலுக்கு ராதாரவியையும் சின்னண்ணனையும் வரச்சொல்லு. கையில சாமான் கொண்டு வரச்சொல்ல" என கமலிடம் கூறினான். இருவரும் உந்துருளியில் புறப்பட சுரேஸ்காசீமும் மற்றைய நால்வரும் நடந்து சென்றார்கள் சாவாறிற்கு.

இவர்களது அமைப்பில் இஸ்லாமியர்கள் அதிகளவில் இருப்பதாக அவர்கள் கதைகளிலிருந்து சுரேஸ்காசீமுக்கு விளங்கியது. உவைஸ்வாத்தி நன்கு பயிற்சி எடுத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் என்னை பிடிக்கத் துணிந்திருக்க மாட்டார். நசீர் இந்தக்குழுவிற்கு தலைமைதாங்கும் அளவிற்கு முக்கியமானவனாக இருக்கிறான். போராடும் அமைப்புகளில் இவர்கள் வேறுபாடானவர்கள் என்பதை உணர்ந்தான். இவர்களைப்பற்றி எனக்கு எதுவுமே தெரியாமல் போய்விட்டதே. இவர்களின் அமைப்பில்தான் ஆபரனும் இருந்தானோ தெரியாது என தன்னை நொந்துகொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை நாலரைமணிக்கு தளவாய்க்கு வந்துசேர்ந்தார்கள். தன்மாலில் அறிவழகள் இரவில் தங்குவதில்லை. அறிவழகனின் மாலிற்குச் சென்றார்கள். மாலின் முன்கப்புடன் சுரேஸ்காசீமைக் கட்டிப்போட்டார்கள். பின்னால் கட்டிய கைகள் அவிழ்க்கவில்லை. கால்கள் இரண்டையும் இணைத்துக் கட்டினார்கள். திமிருடன் துள்ளித்திரிந்த தளபதி செய்நிலை யறியாது கவலையுடன் நித்திரையின்றி இருந்தான் கைதியாக. ராதாரவியும் சின்னண்ணனும் நித்திரை விழித்துக் காவலுக்கு இருந்தார்கள். மற்றை யவர்கள் பண்ணைக்குச் சென்று நித்திரையானார்கள்.

அடுத்தநாள் காலையில் அனலரசுவையும் அழைத்துக்கொண்டு தளவாய்க்கு வந்தான் நசீர்.

"ஓர் ஆச்சிரியம் இருக்கு எண்டு நேற்று சொன்னான் அல்லவா. வந்துதான் பாரேன் தெரியும்" என்னவென்று கூறாது சுரேஸ்காசீமின் முன்னால் கொண்டு வந்து விட்டான்.

இருவருக்கும் வியப்பு. அதனை இருவர் கண்களிலும் கண்டான் நசீர்.

எப்படி சுரேஸ்காசீமப் பிடித்தார்கள் என்று அனலரசுவுக்கு வியப்பு.

சுரேஸ்காசீமிற்கு இரட்டை வியப்பு. கடலில் தாண்டு சாவடைந்து விட்டான் என எண்ணியிருந்த ஆபரன் தன்கண் முன்னே நிற்கிறான். அவன் சாகவில்லை. அந்தக் கடலில் எப்பிடித் தப்பித்தான் என்று ஒரு வியப்பு.

அனலரசு எப்பிடி இவர்களோட நிக்கிறான். எப்ப இஞ்ச வந்தான். இவனும் இவங்கட அமைப்பில இருக்கிறானோ. என்னட்ட பொய்தான் சொல்லி நடித்திருக்கிறானோ என நினைத்தது சுரேஸ்காசீமுக்கு இரண்டாவது வியப்பு.

இவர்கள் மிகவும் திறன்வாய்ந்தவர்கள்தான் என்பதை உணர்ந்து கொண்டான். தனது கதை இன்றோ நாளையோ முடிந்துவிடும். தப்பிக்க முடியாது என்பதில் உறுதியானான்.

"என்ன காசீம், எப்பிடி இருக்கிறா? கனவிலயும் நினைச்சுப் பாத்திருக்கமாட்டாயென என்னை திரும்பியும் சந்திப்பன் எண்டு. காலம் உருண்டு கொண்டிருக்கிறது. வரலாறு தன்னைத்தானே திரும்பிச் சொல்லும் என்றது கொஞ்ச நாள்ளயே உண்மையாகிற்று பாத்தியா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"............."

"உனக்கு இன்னும் ஒருமணி நேரம்தான் இருக்கு. அதுக்குப்பிறகு உன்னை வச்சிருந்து உனக்கு காவல்காத்து உனக்கு சாப்பாடுதந்து நேரத்த வீணாக்க நாங்க விரும்பல்ல. நீ எவ்வளவு கெட்டிக்காரன் எண்டது எங்களுக்குத் தெரியும். உன்ர திறமய நீ என்னப்பிடிச்ச அண்டைக்கே நான் நேரில கண்டனான். சொல்லு என்ன உன்ர கடைசிஆசை?"

உடம்பில் அடியேதும் விழாமலே கண்களில் நீர் வழிந்தது.

"அனலரசை எவ்வளவு துன்பப்படுத்தினாய். எவ்வளவு சித்திரவத செஞ்சீங்க எல்லாரும் சேர்ந்து. எவ்வளவு கொடுமைப்படுத்தினீங்க. அவன்ர கண்ணில இருந்து ஒரு சொட்டுக் கண்ணர் வரல்ல. நாங்க உனக்கு அடிக்கயுமில்ல. துன்புறுத்தயுமில்ல. ஆனா உனக்கு கண்ணீர் வழியுது." சிரித்தான்.

சுரேஸ்காசீமினால் எதுவும் கதைக்க முடியவில்லை. கதைப் பதற்கும் அவன் விரும்பவுமில்லை. எதனை இவர்களிடம் கதைப்பது. ஏன் ஓர் அடிகூட அடிக்காமல் இக்கணம் வரை வைத்திருக்கிறார்கள் என்பதே அவன் மண்டையை குடைந்து கொண்டிருந்தது.

"அனலரசு நான் சாப்பிட்டிற்றுவாறன். அதுவரைக்கு நீ இவனுக்கு என்ன செய்யோணுமோ அதையெல்லாம் செய்" நண்பனின் கோபம் ஆறும்வரை ஆத்திரம் அடங்கும்வரை ஏதாவது செய்யட்டும். பிறகு வந்து நாம்பார்ப்பம் என்று நினைத்தவனாக பண்ணை நோக்கிச் சென்றான்.

பண்ணையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். சாப்பிட்டு முடிய சுரேஸ்காசீமுக்கும் சாப்பாடு கொண்டு போய்க்கொடுக்குமாறு கரனிடம் கூறி தானும் சாப்பிட்டான் நசீர்.

ராதாரவிக்கும் சின்னண்ணனுக்கும் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு தளவாய்க்கு பதினொரு மணியளவில் சென்றான் நசீர்.

"என்ன மச்சான் ஆச தீரவெளுத்தியா"

"இல்ல........, இவனுக்கு அடிக்கிறதால இவனுவள் எனக்கு செய்ததெல்லாம் என்ர உடம்பிலயா வந்து சேரப்போகுது.? பொம்பிள எண்டும் பாக்காம அம்மாவ தள்ளி விட்டத நினைக்கக்கொள்ள துண்டு துண்டா வெட்டோணும் போலதான இருக்கு. அப்படிச் செய்யிறதால நமக்குத்தான் வாழ்நாள் முழுதும் துன்பம். நாம என்ன இவனமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகமா. வேதனையில இன்பம் காண்றதுக்கு." அனலரசுவின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் சுரேஸ்காசீமின் மனதைத் தைத்தன. நசீரின் மனதை மகிழ்ச்சிப்படுத்தின.

ஒரேவிடயம் இருவருக்கு வெவ்வேறாக பொருள் கொள்ளப் படுகின்ற உலகில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதே இயற்கையின் உண்மை.

சாப்பிடாமல் இருந்தான் சுரேஸ்காசீம். பின்னால் கட்டப்பட்ட வலதுகையை அவிழ்த்துவிட்டு இடதுகையை மாத்திரம் கப்புடன் இணைத்துக் கட்டியிருந்தான் கரன்.

சாப்பிடுமாறு நசீர் கூற தட்டில் இருந்த சாப்பாட்டைஉண்டு நீர்குடிக்கும்வரை பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தான். மாலுக்கு வெளியே சென்ற கரனை தன்னருகில் இருக்குமாறு கூறினான்.

சுரேஸ்காசீம், நசீர், அனலரசு, கரன் ஆகியோர் மாலிற்குள் இருந்தனர்.

வெளியே ராதாரவியும் சின்னண்ணனும் சுடுகலன்களுடன் காவலுக்கு நின்றனர்.

சாப்பிட்டு முடிந்தது அவனருகில் வந்தான் நசீர். அவனது முகத்தை தன்கையால் தூக்கி நிமிர்த்திப் பார்தான். சுரேஸ்காசீமினால் நசீரை முகம் கொடுத்துப் பார்க்க முடியவில்லை. அவ்வேளையில் உவைஸ்வாத்தியும் அங்கு வந்துசேர்ந்தார். சுரேஸ்காசீமைப் பார்த்து புன்னகைத்தார். அவன் குனிந்துவிட்டான். தன் தோல்வியை ஒத்துக் கொண்டது அவன்மனம். தான் ஒரு மகாவீரன் என்பது எவ்வளவு பொய்யானது என்பதை அவனுக்கு அடித்துச் சொன்னது அவன்மனம்.

"நீங்க ஓர் இஸ்லாமியன். யாவாமுஸ்லிம். உங்களுக்கும் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற இஸ்லாமியர்களுக்கும் எந்தத்தொடர்பும் கிடையாது. என்றாலும் நீங்களும் இந்தநாட்டில வாழ்ற ஆக்கள்தான். நாங்க போராடுறது உழைக்கிற மக்களுக்காக. இனம், மதம், சாதி, பிரதேசம் என்ற எந்த வேறுபாடும் எங்கட்ட இல்ல. நாங்க மதிக்கிறது மனிதத்த. அதாலதான் இவ்வளவு நேரமும் உங்கட மேலில ஒருகை வைக்கல்ல நாங்க. இனியும் வைக்கமாட்டம்." சுரேஸ்காசீமின் மனதில் நிம்மதி வந்தது. மனம் உள்ளூர மகிழ்ந்தது. அவன் உண்மை பேசுகிறான் என்ற உணர்வு சுரேஸ்காசீமின்மனதில் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கடகையில நாங்க சுடுகலன் வச்சிருக்கிறது எங்கட பாதுகாப்புக்கு மாத்திரம்தான். நாங்க யாரையும் சுடுறதுக்காகஇல்ல. உங்களையும் நாங்க சுடுறதுக்குப் பிடிக்கல்ல என்றது நீங்க முதல்ல விளங்கோணும்."

"கொஞ்சம் முதல்தானே இன்னும்கொஞ்ச நேரம்தான் உன்ரஉயிர் உன்னட்ட இருக்கும் எண்டு சொன்னானே. இப்ப இப்பிடிச் சொல்றான். இதிலே எது உண்மை" என பிரித்தறிய முடியாமல் குழம்பினான் சுரேஸ்காசீம்.

"எங்களுக்கு உயரினது மதிப்புத்தெரியும். நீங்க சம்பளத்துக்கு மாரடிக்கிற ஆக்கள். ஆனா நாங்க ஒருகொள்கைக்காக எங்கட வாழ்க்கைய துச்சமாக மதிச்சு எல்லாருமே மனிதத்தை மதிக்கவைக்கவேணும் என்றதுக் காக போராடுறம். ஒரு வர்க்க ரீதியிலான மாற்றத்தை நோக்கி பயணிக்கிறம். இதல்லாம் இப்ப உங்களுக்கு விளங்காமஇருக்கலாம். ஆனா அதுதான் உண்மை. நீங்க எவ்வளவு கனவுகளோட வாழுவீங்க. உங்கடகுடும்பத்தில் எவ்வளவு ஆசயா இருப்பீங்க. நாங்க போய் உங்கட துணைவியக் பொடுக்கெண்டு சுட்டுக்கொண்டா உங்கடமனம் எவ்வளவு பாடுபடும். அதெல்லாம செய்யிறது எங்களுக்குப் பெரிய வேலயில்ல. ஆனா அதெல்லாம் எங்கட வேலயுமில்ல. சுருக்கமாச் சொல்றண்டா உங்களுக்கும் சேத்துத்தான் நாங்க போராடுறம் என்றத நீங்க உணரோணும்"

"................................"

"இந்த அரசு முதலாளித்துவ அரசு. உங்கடமூளைய சலவசெய்து வச்சிருக்காங்கள். அவங்கள் தங்கட இருப்பிற்காக இப்பகையில எடுத்திருக்கிற ஆயுதம் தமிழ்-சிங்களம் என்ற இன முரண்பாடு. அதற்காகத் தான் தமிழ்பேசும் மக்களையும் பிரிக்கிறதுக்கு உங்களைப் பயன்படுத்துறாங் கள். அதுக்கு நீங்க பொருத்தமான ஆள் என்றது அவங்களுக்குத் தெரியும். நீங்க திறமையானவர், கெட்டிக்காரன் என்றது எங்களுக்கும் தெரியும்."

"................................" தொடர்ந்து கதைத்த நசீர் "தண்ணி குடிச்சிற்று வாறன். நீங்க அவரோட கதையுங்க வாத்தி எனக்கூறி அவ்விடத்திலிருந்து நகர்ந்தான் நசீரான ஆபரன்.

உவைஸ்வாத்தி, சுரேஸ்காசீமுடன் கதைக்கத் தொடங்கினார்.

"எங்கட அமைப்பு நடைமுறை ரீதியில பொருளாதாரத்தயும் கல்வியையும் எல்லாரும் சமமாகப் பெறவேண்டும் என்றதில உறுதியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறோம். அத நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். உங்கட செயற்பாடு எங்களுக்கு இடையூறாகயும் அச்சுறுத்தலாகயும் இருக்கு. அதாலதான் உங்களை அழைத்து உங்களுக்கு எங்கட நிலையைத் தெளிவு படுத்தி உங்கள இதில இருந்து இல்லாம செய்யவேணும் என்றதுதான் எங்கடநோக்கம். அதுக்கு நீங்க ஒத்துழைக்கோணும். எங்கடகொள்கையும் எங்கடசெயற்பாடுகளும் உங்களுக்கு சொல்லியிருக்கிறம். இப்ப உங்கட கருத்த எதிர்பாக்கிறம்" என கூறி முடிக்கும் போது நசீரும் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தான்.

கரன் அவதானத்துடன் நடப்பதை அவதானித்துக் கொண்டு இருந்தான். எவ்வளவு கொடுரமான மிருகத்தை பக்குவமாக இருத்திக் கதைத்துக் கொண்டிருப்பதை எண்ணி வியந்து கொண்டிருந்தான் கரன். சுட்டுத் தள்ளாம சும்மா கதைச்சுக் கொண்டு இருக்கிறாங்கள் என கோபமும் வந்தது அவனுக்கு.

"நீங்க இவ்வளவு நல்லவர்களாக இருப்பீர்கள் என்று நான் துளியும் நினைத்திருக்கவில்லை. உங்கட கதைகளை நான் முதல் அறிஞ்சி இருக்கல்ல. அதால தான் கொஞ்சம் மோசமா நடந்தனான். இப்ப உங்கட பக்கத்தில இருக்கிற நியாயம் எனக்கு நல்லா விளங்குது. நீங்க என்ன விடுதலை செய்தா நான்இனி இராணுவத்தில போய் வேல செய்யமாட்டன்."

"அப்ப எங்க போய் என்ன செய்வீங்க" நசீர்

"நான் வீட்டபோய் வேற ஏதாவது வேல செய்வன்"

"அதுக்கா அவ்வளவு செலவுசெய்து மொசாட் உளவாளிகளக் கூப்பிட்டு உங்களுக்கெல்லாம் பயிற்சி தந்திருக்கிறாங்கள். சின்னப்பிள்ள மாதிரி கதைக்கிறீங்க" சிரிப்புடன் கூறினான் நசீர்.

"நீங்க சொல்றது சரி. நான் என்ன செய்யவேண்டும் என்று நீங்க எதிர்பார்க்கிறீங்க?"

"உங்களுக்கு விருப்பமான வெளிநாட்டில போய் வாழுங்க. அதுக்குத் தேவையான எல்லா ஒழுங்குகளையும் நாங்க செய்றம்."

"சரி, நான் வீட்ட போய் இவவோடயும் கதைச்சிற்று சொல்றன். எப்பிடி தொடர்பு கொள்றது?"

"உங்கள முழுமையா நாங்க நம்பலாமா"

"அல்லா மேல சத்தியமாச் சொல்றன். நான் இனி இராணுவத்தில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க மாட்டன். உங்கட இலட்சியத்தக்கு குறுக்காகயும் வரமாட்டன். உங்களுக்கு ஏதும் உதவி எண்டா செய்யிறன்."

"எங்கட கொள்கைகளை நாங்க தாற புத்தகங்கள வாசிச்சு தெரியுங்க. ரெண்டு நாளைக்கு எங்களோட இருங்க" எனக் கூறி கட்டுக்களை அவிழ்த்தான் நசீர்.

மொக்குத்தனமான வேல நசீர் செய்யிறான் என கரன் தன் மனதில் எண்ணினான்.

இரண்டு நாட்களும் கழிவகற்றலுக்கு மாத்திரமே இருந்த இடத்திலிருந்து வெளியே சென்றான். கொடுத்த புத்தகங்களை படிப்பது, சாப்பிடுவது, பகலில் சிறிதுநேரம் தூங்குவது என அவன் பொழுது கழிந்தது. கரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனால் நடந்தவற்றை நம்பவே முடியவில்லை.

மூன்றாவதுநாள் காலையில் "எங்களுக்கு நீங்க ஓர்உதவி செய்யோணும். கிண்ணியாவில ஊர்காவல்படைக்கு நீங்க குடுத்திருக்கிற வேட்டைத்துவக்குகளைப் பெற்றுத் தரவேண்டும்" எனக் கோரினான் நசீர்

"ஓம். தாராளமா. எப்பபோவம்? தப்புகின்ற எண்ணம் உண்மையில் அவன் மனதில் இல்லாது போனது. தன்னால் முடிந்தளவிற்கு ஏதாவது உதவிகளைச் செய்துவிட்டு போகலாம் என நினைத்தான் போலும்.

அன்றுமாலையில் அவனைப் பிடிப்பதற்கப் புறப்பட்ட அதேஅணி அதே சுடுகலன்களுடன் சென்றது. மேலதிகமாக சுரேஸ்காசீமும் இணைந்து கொண்டான். சுரேஸ்காசீமின் இரு கண்களையும் இறுகக்கட்டி, கைகள் இரண்டையும் பின்னால்கட்டியபின் அவனை உந்துருளியில் ஏற்றி மெதுமெதுவாக அவனை கரன் அழைத்துச்சென்று பைசல்நகர் சந்தியில் காத்திருந்தான். கரனுக்கு உள்ளூர நம்பிக்கையில்லை. தன்னையும் அடித்துப் போட்டு ஓடிவிடுவானோ என நினைத்தான். ஆனால் சுரேஸ்காசீமுக்குத் தப்புகின்ற எண்ணம் துளிகூட ஏற்படவில்லை. எந்தவித அசைவுகளும் அவனிடமிருந்து வரவில்லை என்பதால் கரனுக்கும் சுரேஸ்காசீம் மீது நம்பிக்கை ஏற்பட்டது.

நசீருடன் அவன் தோழர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்திலிருந்து சுரேஸ்காசீம் அவர்களை ஊர்காவல்ப்படைக்குத் தலைவர் ஜமீல்கபூரின் வீட்டிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துச் சென்றான். சுரேஸ்காசீம் மாத்திரம் வளவின் உள்ளே செல்லுமாறு நசீர் கூறினான். "எப்படி என்னை நம்புகிறார்கள்?" என தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டு தன்மீதான நம்பிக்கைக்கு மனதால் நன்றிகூறி உள்ளேசென்றான்.

ஜமீல்கபூரிடம் ஏனைய ஊர்காவல் வீரர்களையும் அவர்களது ஆயுதங்களுடன் வருமாறுகூறி விரைந்து அழைத்துவருமாறு அனுப்பினான்.

ஒவ்வொருவராக ஜமீல்கபூர் வீட்டிற்கு வந்தார்கள். வந்தவர்களிடம் வேட்டைத்துவக்கினை வாங்கிக்கொண்டு நாளைஇரவு எட்டுமணிக்கு வருமாறு கூறியனுப்பினான்.

அனைவரது துவக்குகளையும் வாங்கிக்கொண்டு கடைசியாக ஜமீல்கபூரின் துவக்கினையும் வாங்கியவன் "வீட்டினுள்சென்று கதவைப் பூட்டுமாறு" கட்டளையிட்டான்.

ஜமீல்கபூர் வீட்டினுள்சென்று கதவைப்பூட்டியவுடன் மறைந்து நின்ற நசீருக்கு அருகில்வந்து துவக்குகளை எடுத்துக்கொள்ளுமாறு கூறினான்.

நசீரும் தோழர்களும் முற்றத்தில் அடுக்கி வைத்திருந்த துப்பாக்கிளை ஆளுக்கொன்றாக எடுத்துக்கொண்டார்கள்.

"நீங்கள் வெளிநாடு செல்லும் ஒழுங்குகளைச் செய்யுங்கள். வெளிநாட்டில் வசிப்பதற்காக நிதியிலிருந்து சகல வசதிகளையும் நாமே செய்துதருகிறோம். நீங்க எங்களோட வரத்தேவையில்ல. நீங்கள் அப்படியே போகலாம்" என சுரேஸ்காசீமிடம் நசீர் கூற மனம் மகிழ்ந்தவனாக நசீருக்கு நன்றி கூறியவன் அனலரசு அருகில் வந்து அவனது இரு கைகளையும் பற்றிப்பிடித்து கைகளை முத்தமிட்டு "நான் செய்தபிழைகள் எல்லாத்தையும் பொறுத்துக் கொள்ளுங்க. மிருகமாக இருந்த என்னை மனிதனாக மாற்றினதில உங்கட வார்த்தைகளுக்கும் பங்கிருக்கு. உங்கட அம்மாவை நினைச்சு இப்பநான் கவலப்படுறன். உங்களப் போலஆக்கள இப்பதான் முதன்முதலா சந்திக்கிறன். உங்கள ஒருநாளும் மறக்கமாட்டன்" என கண்களில் கசிந்தநீருடன் முகத்தில் கவலையுடன் கூறினான்.

எல்லோருக்கும் நன்றி கூறினான். வாழ்த்துச் சொன்னான். உவைஸ்வாத்தியிடம் பொறுத்துக்கொள்ளுமாறு தான் கூறியதாகக் கூறுமாறு நசீரிடம் கோரிக்கை வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நசீரும் தோழர்களும் சாவாற்றினை நோக்கி புதிய ஏழுவேட்டைத் துப்பாக்கிகளுடன் புறப்பட சுரேஸ்காசீம் தன் உந்துருளியில் ஏறி புறப்பட ஆயத்தமானபோது நசீர் அவனருகே சென்று "நீங்கள் கேட்பீர்கள் என்று நினைத்தேன். ஆனால் கேட்கவில்லை. உங்களது மேலதிகாரியிடம் மாட்டிக்கொள்ளாமல் இருப்பதற்காக இந்தாங்க" என அவனது கைத்துப் பாக்கியினை நீட்டினான் நசீர். உண்மையில் சுரேஸ் காசீமின் கண்களில் இருந்து மீண்டும் கண்ணீர் ததும்பியது. வாங்கிக்கொண்டவன் அதனை தன் இடுப்பினுள் செருகிக் கொண்டு உந்துருளியைப் பிடித்திருந்த வலதுகையினை ஒருமுறுக்கு முறுக்க உந்துருளி கிண்ணியா பாதையடியை நோக்கி விரைந்தது.

முதலும் இறுதியுமான தவறினை செய்கொண்டிருந்தான் என்பதை நசீர் எனும் ஆபரன் பின் நாட்களில் உணர்ந்து கொள்ளும் போது காலம் மீளச்சுற்றிவரத் தயாராக இருக்கவுமில்லை ஆபரன் கவலை யடைந்திருப்பதை தடுக்கவுமில்லை.

## - 13 -

அரைவாசி நரைத்த தலை மயிருடனும் மீசையின் மேற்பகுதியோ ரங்கள் நரைத்த நிலையிலும் வீட்டு விறாந்தையில் போடப்பட்ட கதிரையில் அமர்ந்திருந்து நான்கு வயது அருசை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு பாத்திமா பீ பீயின் வாப்பாவை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

குதிரையின் முன்னாலுள்ள முக்காலி ஒன்றில் புத்தகம் ஒன்று கிடந்தது. அதனை எட்டி எடுத்தான். "வால்காவில் இருந்து கங்கை வரை" என்ற தலைப்புடன் அது அவனைப் பார்த்துச்சிரித்தது. ஆச்சரியத் துடன் மேல்மட்டையைப் தூக்கி உள்ளே பார்த்தான். "அன்புடன் ஆபரன்"என்பதைப் பார்த்தவுடன் நெகிழ்ந்து போனான்.

இவ்வளவு காலமும் பாதுகாத்து வைத்திருக்கிறார்களே. தன்மீது அன்புடன் இருக்கிறார்கள் என்பதை புரிந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் "ஆரத்தேடி வந்திருக்கிறீங்களோ தெரியல" என்றாள் வீட்டினுள் வந்தவள்.

வந்தவளின் தலை நரைத்திருந்தது. வயதும் நன்றாகப்போயிருந்தது. கிழவியாகியிருந்தாள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்தவர் பதில் கூற முன்பாகவே முற்றத்தில் உந்துருளி வந்துநின்றது. அழகான மொட்டைத்தலையில் சிறிய ஒரு தொப்பியணிந்து வெள்ளை சரத்தை உடுத்தியிருந்த கிழவியின் துணைவர் வீட்டிற்குள் இருந்தவர்களைக் கண்டவுடன் ஓடிவந்து "ஆபரன் ஐயா, எப்பிடி இருக்கிறீங்க. என்ன கோலம் இது?" வதூர்தீன் ஆனந்தக் கண்ணீர் மல்கினான்.

ஆபிதாவிற்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவளதுமனம் ஆனந்தக் கடலில் அக்கணமே தத்தளித்தது. சேலைக்கூந்தலை பிடித்தெடுத்து வாயில்வைத்தாள். ஆனந்தக்கண்ணீர் அவளை முந்திக்கொண்டு கண்களை ஆறாக்கியது.

மடியிலிருந்த அருசை அவளது அம்மா பாத்திமா பீ பீ ஓடிவந்து தூக்கிக்கொண்டாள். ஆபரனைக் கட்டியணைத்து அன்புசொரிந்து அழத் தொடங்கிய வதூர் விடுவதாக இல்லை.

கதவருகே சாய்ந்து நின்றவாறு நிற்கும் ஆபிதாவின் விழிகளிலி ருந்து நீர் தாரை தாரையாக ஓடிக்கொண்டிருந்தது.

இத்தனை ஆண்டுகளின் பின்னர் தாங்கள் உயிர்வாழ்வதற்கே வழிவிட்டவர்களைக் காணும்போது மகிழ்ச்சி கண்ணீராய்ப் பீறிடாதா என்ன.

ஒருவாறு வதூரை அவனது முதுகிலே தட்டித்தட்டித் தேற்றிய ஆபரன் அவனது பிடியிலிருந்து விடுபட அரைமணிநேரத்திற்கு மேலாகியது. பேரப்பிள்ளைகள் ஓடிவந்து தாத்தா அழுவதைப் பார்த்துச் சிரித்து இரசித்துக் கொண்டு தங்களை ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

ஆபிதாவும் தன் அழுகையை நிறுத்திக் கொண்டாள்.

"நான் கொஞ்சமும் எதிர்பாக்கலியே. உங்களையெலாம் திரும்பி யும் சந்திப்பம் எண்டு" ஆபிதாவின் வாயிலிருந்து வார்த்தைகள் வராமல் வந்துதிர்த்தன.

"நாங்களும் தான்" ஆபரன்

"உங்கட புண்ணியத்தில வாழ்றம். கிண்ணியா போன புறவு சுரேஸ்காசீம் வந்து சரியா கஸ்ரப்படுத்தினயாம். கனஆண்டுக்குப் புறவு அவரநாங்க கொழும்பில கண்ட. சிரிச்சித்துப் போனார். அப்ப அவர் ஆமியில இல்லயாம் எண்டார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானும் நோர்வேக்குப் போகக்கொள்ள வெள்ளவத்தயில கண்டனான். நீங்க சொன்னதக் கேட்டிருந்தா இந்தநிலைக்கு நான் வந்திருக்கமாட்டன் எண்டு சொல்லிக்கவலைப்பட்டார். ரெண்டு நாள்ல கேள்விப்பட்டன் தெகிவளையில அவர யாரோ சுட்டுக்கொண்டு போட்டாங்க எண்டு. அவரப் பயன்படுத்தி திருக்கோணமல மாவட்டத்தில மட்டுமில்ல முழு இலங்கையிலுமே ரெண்டு மக்கள் கூட்டத்திலயும் ஒட்டமுடியா விரிசலை உண்டாக்கிப் போட்டாங்க சிறிலங்காஅரசு. "

"நீங்க நோர்வேயிலயா இப்ப இருக்கீங்க?"

"ம்..ம்.. இது என்ர துணைவி பரிமளா. இவ கட்டைப்பறிச்சான் சிற்றம்பலம் அவர்ர மகள்."

"ஓ.. அவர நல்லாத் தெரியுமே எனக்கு. எள்ளு போடுறவர். எனக்குத்தான் விக்கிறவர். நல்ல மனுசன்"

"பிள்ளைகள் பள்ளிக்குடியிருப்பில நிக்கிறாங்கள். பிறகு கூட்டி வாறன். நீங்க இருக்கிறிங்களோ இல்லையோ தெரியாதுதானே. அதான் கூட்டி வரல்ல."

"நாங்க நாளைக்கு வீட்டவாறம்" ஆபிதா முந்திக் கொண்டாள்.

வதூர்தீன் குடும்பத்திற்கென கொண்டுவந்த இனிப்புகளாலும் பழங்களாலும் நிறைந்த உமலை பரிமளா கொடுக்க ஆபிதாவின் மகள் பாத்திமா பீ பீ பெற்றுக்கொண்டாள்.

"எப்ப திரும்ப நோர்வே போறீங்க?"

"நாங்க இனிப்போகல்ல. இஞ்சதான் இருக்கப்போறம். என்னத்துக்காக நாங்க போராடினமோ அத திருப்பியும் செய்யிறதுதான் நோக்கம். ஆனா சுடுகலன்களைப் பயன்படுத்திற நோக்கம் இல்ல. கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் அது சக்தியாய் உருவெடுக்கும் தானே. என ஆபிதா"

"அப்ப சொன்ன அதத்தான் இப்பயும் சொல்றீங்க. நீங்க மாறவே இல்ல. நீங்க தந்த புத்தகத்த எப்பபாத்தாலும் இவர் ஒரே எடுத்துப்படிப்பார். பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுக்கு எல்லாம் படிக்கச்சொல்லுவார் உங்கட பேரச் சொல்லாத நாளே இல்லயே" கண்களில் மீண்டும் நீர் சுரந்தது.

முதன்முதலாக தன் துணைவனின் கெட்டித்தனத்தை நேரில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விப்பட்டு பூரிப்படைந்தாள் பரிமாளா. ஆபரன் என்றுமே தன்னைப் புகழ்ந்து தற்பெருமை பேசியதில்லை. அதனால் அவனது உண்மையான செயற்பாடுகள் அவன் வீட்டாருக்குத் தெரியாது போனது.

வந்தவர்களுக்கு கடிப்பதற்கும் குடிப்பதற்கும் கொடுத்தார்கள். மகிழ்ச்சியுடன் கடித்துக் குடித்தார்கள்.

விடைபெற்றார்கள்.

தன்பயணம் முற்றுப்பெறாதவை என்பதை உலகம் சொல்லிக் கொண்டேயிருக்கும். மகிழ்ச்சியான வாழ்வைநோக்கி மக்களை வழிநடத்தும் பயணத்தில் ஒருவழிகாட்டியாக செல்லப்போகிறான் ஆபரன்.

தம்பலகமம், சல்லி என திருக்கோணமலை மாவட்டம் முழுவதும் சென்று தன் தோழர்களைச் சந்திக்கவேண்டும். அவர்கள் வாழ்க்கை முறையினை அறியவேண்டும். மீண்டும் அவர்களை ஒன்றிணைக்க வேண்டும்.

உவைஸ்வாத்தியை கண்டிக்குப் போய்ப் பார்க்கவேண்டும். அவர்தான் தற்போது முக்கியமானவர். அவருக்குப் பணிகள் அதிகம் இருக்கு. மீண்டும் உறவுகளை ஒட்டவைக்கும் வேலைகளை முன்னின்று செய்வதற்கு அவருக்கு நிகர் அவராகத்தான் இருக்க முடியும் என கணக்குப்போட்டான்.

தற்போது உள்ளவர்கள் புத்தகங்கள் படிப்பதில்லை என்பதனை இலங்கை வந்தபின்னர் தெரிந்துகொண்டான். அனைத்துஊர்களிலும் முதலில் படிப்பகங்களை மக்கள் நாடும்நிலையினை உருவாக்கவேண்டும். படிப்பகங்கள் இல்லாத இடங்களில் புதிதாக படிப்பகங்களை உருவாக்க வேண்டும். எல்லா வேலைகளுக்கும் முன்பு படிப்பகத்தில் கவனம் செலுத்தவேண்டும்.

அதற்கு முன்பு தன்னுடன் இணைந்து பணியாற்றிய தோழர்களை சந்திப்பதற்குத் தயாரானான் ஆபரன்.

[நிறைவடைந்தது.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்செல்வம் ஒரு புலமைத்துவ மரபின் வாரிசு. அவரது இரண்டு நூல்கள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. திருச்செல்வம் கவிதை, சிறுகதை சிறுவர் கதைகள் என ஒரு இலக்கியப் படைப்பாளியாக அறியப்பட்டவர். இன்று நாவல் துறையிலும் காலடி எடுத்து வைத்திருக்கிறார். இது ஒரு கனதியான காலடி என்றுதான் நான் சொல்வேன்.

- பேரா.பால.சுகுமார்

புனைகதைகளுக்குப் பெயர்போன திருக்கோணமலை மாவட்டத்தின் அண்மைய வீழ்ச்சியைக் கருத்திற்கொண்டு, அதனை மீளக்கட்டமைக்கும் முயற்சியைக் காத்திரமாக முன்னெடுத்துவருபவர் கதிர். திருச்செல்வம். அவரது முயற்சி வரவேற்கத்தக்கதோடு பாராட்டுக்கும் உரியது. இயல்பான அவரது இலக்கிய தாகம் அவரைத் தொடர்ந்தேர்ச்சியாக இயங்கச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

- கலாநிதி அ.ப.மு. அஷ்ரஃப்



மகுடம்
ISBN: 978-624-5849-21-5
750.00
Design & Print : Wanasinghe Printers, Batticaloa. 065-2227170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org